உதயன்



www.onlineuthayan.com

50பக்கங்கள் சுடர் 27 கதிர் 358 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 03 ஞாயிற்றுக்கிழமை (18/11/2012)UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 20.00

# கூடங்குளம் அணு உலையை மூடு யாழ்.நகரில் நேற்றுப் போராட்டம்

### அணுக் கழிவை மன்னார் கடலில் கொட்டி நாசப்படுத்தத் திட்டம் எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவம்பர் 18

தமிழ்நாடு, கூடங்குளத்தில் அமைக்கப்பட்டு வரும் அணு உலை மின் நிலையத்தை உடனடியாக மூட வலியுறுத்தியும், இந்தத் திட்டத்தை எதிர்த்து இடிந்தகரை மக்கள் நடத்தி வரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் யாழ். நகரில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

புதிய ஜனநாயக மார்க்சிய லெனினிசக் கட்சி இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. கூடங்குளம் அணு உலையில் ஏதாவது விபத்து ஏற்பட்டால் அது இலங்கையின் பல பகுதிகளில் கதிர் வீச்சுப் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவதே போராட்டத்தின் நோக்கம் என்று ஏற்பாட்டாளர்கள் கூறினர்.

அனைத்துக் கட்சிகளுக்கும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாக மார்க்சிய-லெனினிசக் கட்சியின் தலைவர் சி.கா.செந்தில்வேல் தெரிவித்தார். எனினும் சுமார் நூறு பேர் வரையிலானோரே போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர். ஏனைய கட்சிகளின் பிரமுகர்களைக் காணமுடியவில்லை.

''எமது போராட்டத்துக்குத் தமிழக மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் நாம், இடிந்தகரை மக்கள் நீண்ட நாள்களாகத் தொடர்ந்து நடத்திவரும் போராட்டத்துக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று இதுவரை நினைக்காதது எவ்வளவு பெரிய துரோகம்'' என்று சுற்றுச் சூழலியலாளர் பொ.ஐங்கரநேசன் அங்கு தெரிவித்தார்.

''கூடங்குளம் அணு உலையால் வரும் அணுக் கழிவுகளை, மன்னார் வளைகுடாவில் எண்ணெய் அகழ்வுக்காகத் தோண்டிய குழிகளில் போட்டு மூடிவிட எத்தணிக்கிறார்கள். இதனால் இலங்கையின் அதிகளவு மீன் வளத்

பார்க்க பக்கம் 4




கூடங்குளம் அணு உலையை மூடுமாறு கோரி யாழ். நகரில் போராட்டக்காரர்கள் கோஷம் எழுப்புகின்றனர்

## ஆசியாவின் மற்றொரு மியன்மாராக இலங்கை

### சபையில் மங்கள விமர்சனம்

கொழும்பு, நவ.18

இலங்கை இன்று சர்வ தேச சமூகத்திடமிருந்து அந்நியப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆசியாவில் மற்றும் ஒரு மியன்மாராக உருவாகி வருகின்றது என ஐக்கிய தேசியக் கட்சி நாடாளு மன்ற உறுப்பினர் மங்கள சமரவீர நேற்று விமர்சித்தார்.

நாடாளுமன்றில் வரவு-செலவுத்திட்ட உரை மீதான எட்டாவது நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே மங்கள சமவீர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியினால் முன் வைக்கப்பட்டுள்ள வரவு -

பார்க்க பக்கம் 4

## வரவு – செலவுத் திட்டம் –2013 நிறைவேறியது

**ஐ.தே.க. எதிர்ப்பு**

கொழும்பு, நவ. 18.

வரவு - செலவுத் திட்டத்தின் 2 ஆவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்து வாக்களித்தது.

இரான் விக்கிரமரட்ண நிதி ஒதுக்கீட்டுச் சட்ட வரைவு தொடர்பான உயர்

பார்க்க பக்கம் 4

## தமிழகம் வழங்கிய சைக்கிள்கள் பெரும்பான்மை இன மக்களுக்கு

### போரால் பாதிக்கப்பட்ட மக்கள் விசனம்

வவுனியா,நவ.18

தமிழக மக்களால் இடம் பெயர்ந்த மக்களுக்கென வழங்கப்பட்ட சைக்கிள்கள் தற்போது பெரும்பான்மை இன மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இறுதிக் கட்டப் போர் இடர்களால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கென இந்திய அரசின் அனுசரணையுடன் தமிழக மக்களால் சைக்கிள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

அவற்றில் ஒரு தொகுதி சைக்கிள்கள் வவுனியாவைச் சேர்ந்த பெரும்பான்மை இன மக்களுக்கு பிரதேச செயலகத்தின் மூலம் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கடந்த வாரம் ஒரு தொகுதி சைக்கிள்களும் கடந்த வெள்ளிக்கிழமை ஒரு தொகுதி சைக்கிள்களும்

பார்க்க பக்கம் 4



இராணுவத்திடம் தமது பிள்ளைகளை ஒப்படைத்தமைக்கான சான்றிதழை, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் பெற்றோரிடம் கையளிக்கின்றார்.

## 109 தமிழ்ப் பெண்கள் இராணுவத்தில் இணைவு

கிளிநொச்சி, நவ.18

இராணுவத்தில் தமிழ்ப் பெண்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி கிருஷ்ணபுரத்தில் இடம்பெற்றது. 109 தமிழ்ப் பெண்கள் நேற்று அவர்களது பெற்றோரால் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பிள்ளைகளை இராணுவத்தில் இணைத்துக்கொண்டமைக்கான சான்றிதழ் பெற்றோருக்கு வழங்கப்பட்டது. நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னதாக கண்டிய, இன்னிசை நடனங்கள் இடம்

பார்க்க பக்கம் 4

## மனிக் பாமில் மேலும் 10 ஏக்கர் இராணுவத்திடம்

வவுனியா, நவ. 18

இறுதிப் போரில் தப்பி வந்த தமிழ் மக்களைத் தடுத்து வைக்கப் பயன்படுத்தப்பட்ட வவுனியா, மனிக் பாமில் 10 ஏக்கர் நிலத்தை இராணுவம் கையகப்படுத்திக் கொண்டுள்ளது. அதில் பழமரச் செய்கையை நேற்று

பார்க்க பக்கம் 4

## 8 பேர் திரும்பினர்

நௌரு, நவ. 18

படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று புகலிடம் கோரிய 8 இலங்கையர்கள் சுயவிருப்பின் பேரில் மீண்டும் நாடு திரும்பியுள்ளனர்.

இதன்படி நௌரு முகாமில் உள்ள 5 பேர் அடங்கலாக 8 இலங்கையர்கள்

பார்க்க பக்கம் 4

## பேச்சு தோல்வி: டிசெம்பர் 4 இல் போராட்டம்

கொழும்பு, நவ. 18

கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று முந்தினம் நடத்திய பேச்சு சாதகமாக அமையவில்லை, என்பதால் முன்னரே திட்டமிட்டிருந்தவாறு எதிர்வரும்

பார்க்க பக்கம் 4

## உலக வங்கிப் பணிப்பாளர் வலி. வடக்குக்கு வருகை

யாழ்ப்பாணம், நவ.18

வலி.வடக்குப் பிரதேசத்தில் 27 ஆயிரம் மக்கள் இன்னும் மீளக்குடியமரவேண்டி உள்ளனர். இந்தப் பகுதிகளில் மீளக்குடியமர்வு நடைபெற்ற பின்னர் அந்த மக்களுக்கு உலக வங்கி உதவிகளை வழங்க வேண்டும் என வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சோ. சுகிர்தன் உலகவங்கி முகாமைத்துவப் பணிப்பாளர் முலியானி இந்திராவதியிடம் கோரிக்கை விடுத்தார்.

உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி மீனவரின் வலைகள் இந்தியப் படகுகளால் குதறல்

**இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளின் அத்துமீறல்கள் வடமராட்சி கடற்பிரதேசத்தில் வருடக்கணக்காக தொடர்ந்த வண்ணமே உள்ளது.**

வடமராட்சி,நவ.18

வடமராட்சிக் கடற்பரப்பில் நுழைந்த இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் அங்கு போடப்பட்டிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான மீன் பிடிவலைகளை நேற்று அதிகாலை அறுத்து நாசமாக்கியுள்ளன.

பருத்தித்துறை முனைப் பகுதியைச் சேர்ந்த மீனவர்களினதும் மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து வியாபாரிமூலையில் தங்கியிருந்து தொழில் புரியும் மீனவர்களினதும் மீன்பிடி வலைகளே அறுந்து கடலோடு போயுள்ளன.

கடந்த சில தினங்களாக வடமராட்சி கடற்பரப்பில் கடும் காற்றும், கடல் கொந்தளிப்பும் உள்ளதால் கடற்றொழில் செய்ய முடியாத நிலை இருந்து வந்தது.

இந்த நிலையில் ஜீவனோபாயத்தைக் கருத்தில் கொண்டு இந்த மீனவர்கள் கரையோரமாக மீன்பிடிப்பதற்காகக் கடலில் வலைகளை வீசி இருந்தனர். இவ்வேளை கரையோரம் மிக நெருங்கி வந்த இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் உள்ளூர் மீனவர்களின் வலைகளை அறுத்து நாசமாக்கிவிட்டுச் சென்றுள்ளன.

இதனால் தாம் வலைகளை இழந்துள்ளதுடன் பல இலட்சம் ரூபா வரை நட்டத்தையும் எதிர்கொண்டுள்ளனர் என அவர்கள் வேதனை தெரிவித்தனர்.

இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளின் அத்துமீறல்கள் வடமராட்சி கடற்பிரதேசத்தில் வருடக்கணக்காக தொடர்ந்த வண்ணமே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-8)

# இலங்கை-ஜப்பான் உறவுகள் வலுப்படும்

## யாழில் தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.18

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான 60 வருடகால உறவை மேலும் வலுப்படுத்தவே இசை நிகழ்வை யாழ்ப்பாணத்தில் அரங்கேற்ற ஏற்பாடு செய்தோம். இலங்கைக்கான தூதுவர் நொபுஹிதோ ஹொபோ தெரிவித்தார்.

ஜப்பான்- இலங்கைக்கு இடையிலான 60 வருட கால உறவின் நிறைவுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு 'உலகெங்கும் இருந்து இசை' என்ற சிம்பொனி இசை நிகழ்வு நேற்று சனிக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்திய தூதுவர் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்துக்கு வந்து இங்குள்ள மக்களைச் சந்தித்து எமது சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்வடைகின்றேன். இதே போன்ற நிகழ்வை இன்னொரு முறை நடத்தவும் தீர்மானித்துள்ளோம். தொடர்ந்தும் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு நாட்டின் அபிவிருத்திப் பாதைகளை இலக்காக வைத்து இடம்பெறும் என்றார்.

இந்த நிகழ்வில் இந்தியா, ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ், அமெரிக்கா, ஜப்பான் இலங்கை நாடுகளின் இசைகள் அடங்கிய பல்லின இசை நிகழ்வு இடம்பெற்றது. நரம்புக் கருவிகள், தாள வாத்தியங்கள், தோல்க்கருவிகள் இசைக்காகப் பயன்படுத்தப்பட்டன.

நிகழ்வில் வன்னி மாவட்ட பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (த-14)

# உயர்தரப் பெறுபேறுகள் ஜனவரி இறுதியில்

**விரிவுரையாளர்கள் பணிப்புறக்கணிப்பே தாமதத்துக்குக் காரணம்.**

கொழும்பு, நவ. 18

இந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்தாண்டு ஜனவரி 30 ஆம் திகதி வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

வழமையாகவே உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் டிசெம்பர் மாதங்களில் வெளியிடப்படும். இம்முறை பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பணிப் புறக்கணிப்புக் காரணமாக விடைத்தாள் திருத்தும் பணிகளில் தாமதம் ஏற்பட்டது.

இதுவே பரீட்சை முடிவுகள் தாமதமாவதற்கான காரணம் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த ஆண்டு நடைபெற்று முடிந்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்கு பரீட்சைகள் திணைக்களத்தினால் சான்றிதழ்கள் வழங்கவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

# சிறுமியைச் சிதைத்த காமுகன் பொதுமக்களால் நையப்புடைப்பு

யாழ்ப்பாணம், நவ.18

16 வயதுச் சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்திய நபர் ஒருவர் பொது மக்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார்.

செய்த குற்றத்துக்காக அவரை மக்களே வீதி வழியாக இழுத்துச் சென்று சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை சுன்னாகம் பகுதியில் இடம்பெற்றது. இந்தப் பகுதியைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமி ஒருவரை குறித்த நபர் வன்புணர்வுக்கு உட்படுத்திய போது பொதுமக்களிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

பின்னர் பாதிக்கப்பட்ட சிறுமியை மீட்ட பொது மக்கள் வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

நையப்புடைக்கப்பட்ட நபர் அடிகாயங்களுடன் சுன்னாகம் பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் குடும்பஸ்தர் என்றும் அவருக்கு ஏற்கனவே திருமணமாகி இரு பிள்ளைகள் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.' (ஐ-16-86)

# கொழும்பில் இருந்து பயங்கரக் கைதிகள் மட்டக்களப்புக்கு விரைவில் மாற்றம்

கொழும்பு, நவ. 18

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள தூக்குத் தண்டனைக் கைதிகளையும், ஆயுள்தண்டனைக் கைதிகளையும், மட்டக்களப்பில் உள்ள தனியான தீவுக்கு மாற்ற சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற கலவரம் காரணமாக 27 கைதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்தக் கலவரம் ஏற்படுவதற்கு முன்னதாகவே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெலிக்கடை சிறைச்சாலை தொடர்பில் சில பரிந்துரைகளை வழங்கியிருந்தது.

அதில் முக்கியமாக தூக்குத் தண்டனைக் கைதிகளையும், ஆயுள் தண்டனைக் கைதிகளையும் ஏனைய கைதிகளிலிருந்து பிரித்து வேறு இடத்திற்கு மாற்றுதல், மேலும் வெலிக்கடைச் சிறைச்சாலையை கொழும்புக்கு வெளியே மாற்றுதல் என்பன அடங்கும்.

அதற்கமைய சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு இப்போது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

மட்டக்களப்பு வாவியில் அமைந்துள்ள மாந்தீவுக்கு முதல் கட்டமாக 1,000 பயங்கரக் கைதிகள் மாற்றப்படவுள்ளனர்.

மாந்தீவில் தொழுநோயாளர்களைப் பராமரிப்பதற்கான மருத்துவமனை உள்ளது. இங்குள்ள பெரும்பகுதி கட்டடங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளன.

இந்தக் கட்டடங்களை சுகாதார அமைச்சிடம் இருந்து பொறுப்பேற்கவுள்ள சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, அங்கே தூக்குத் தண்டனை, ஆயுள் தண்டனைக் கைதிகளை அடைக்கவுள்ளது. (உ-5)

# மக்களின் அதிக உயிரிழப்புக்கு ஐ.நா.தான் முழுப் பொறுப்பு

## முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கருத்து

கொழும்பு, நவ. 18

ஐக்கிய நாடுகள் சபை தனது கடமையைச் சரிவர நிறைவேற்றியிருந்தால் இறுதிக் கட்டப் போரில் இந்தளவு தூரத்துக்கு பொது மக்கள் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள் என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:-

ஐக்கிய நாடுகள் அமைப்பின் மெத்தனப் போக்கினாலேயே பெருமளவு பொதுமக்கள் உயிரிழக்க நேரிட்டது. ஐக்கிய நாடுகள் அமைப்பு உரிய முறையில் தமது கடமையை செய்திருந்தால் பெருமளவான பொதுமக்கள் உயிரிழப்புக்களை தடுத்திருக்கலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனித கேடயங்களாக பயன்படுத்திக் கொண்டனர். 2007 ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த உத்தியைப் பயன்படுத்திக் கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த தந்திரோபாயம் பற்றி ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிந்திருந்த போதிலும், உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியது.

தமிழீழ விடுதலைப் புலிகள் சட்டவிரோதமான முறையில் பொதுமக்களை தடுத்து வைத்திருக்கின்றார்கள் என்ற அரசின் முறைப்பாட்டை ஐக்கிய நாடுகள் அமைப்பு கவனத்திற் கொள்ளத் தவறியது. ஐ.நா. அந்த நேரத்தில் தனது கடமையை ஒழுங்காகச் செய்திருக்க வேண்டும். ஆனால் அதிலிருந்து தவறிவிட்டது. இதனாலேயே பொதுமக்கள் இவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஐக்கிய நாடுகள் பணியாளர்களைக் கடத்திச் சென்றிருந்த சந்தர்ப்பத்தில் எவரும் அதற்கு கண்டனம் வெளியிடவில்லை என்றும் போகொல்லாகம சுட்டிக்காட்டியுள்ளார். (உ-5)

# ஏமாற்றிவிட்டார் டிரான் அலஸ்: பொன்சேகா சாடல்

கொழும்பு, நவ.18

தனது விடுதலை தொடர்பில் தான் கூறியவற்றை செயற்படுத்தாமல் ஏமாற்றி விட்டார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் மீது குற்றம் சுமத்தியுள்ளார் இராணுவத்தின் முன்னாள் தளபதி சரத் பொன்சேகா.

பொன்சேகாவின் கட்சியிலிருந்து டிரான் அலஸ் அண்மையில் வெளியேறி இருந்தார். இருவருக்கும் இடையில் கருத்து வேறுபாடு முற்றி இருந்தது. தனது விடுதலைக்குக் காரணமாக இருந்தவர்களைப் பொன்சேகா மறந்துவிட்டார் என்று டிரான் ஓர் அறிக்கை விட்டார். அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் பொன்சேகா கருத்துத் தெரிவித்துள்ளார்.

''எனது விடுதலையின் போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்னிடமிருந்து பறித்த அனைத்தையும் எனக்கு மீள வழங்க வேண்டும் என்ற நிபந்தனையை நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸிற்கு நான் தெரியப்படுத்தி இருந்தேன். அந்த நிபந்தனை நிறைவேற்றப்படாமலேயே விடுவிக்கப்பட்டுள்ளேன். நான் விடுவிக்கப்பட்டுள்ளதால் எனக்கு நீதி கிடைக்கப் பெற்றது என்று சொல்லி விட முடியாது'' என்றார் சரத் பொன்சேகா.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:

எனது விடுதலை பற்றிப் பேசுவதற்கான சில வழிகள் இருப்பதாகவும், அதனால் அரசுடன் பேச்சுவார்த்தையை தொடங்கலாமா என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் என்னிடம் கேட்டார். அப்போது நான் சில நிபந்தனைகளை விதித்தேன்.

எனது சிவில் உரிமைகள், நான் பெற்ற இராணுவ கௌரவங்கள் மீளளிக்கப்பட வேண்டும். நிபந்தனை ஏற்கப்பட்டால் அவரை பேசும்படி கூறினேன். நான் விடுவிக்கப்பட்டால் எனக்கு பூரண அரசியல் சுதந்திரம் இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினேன்.

மஹிந்த ராஜபக்ஷ என்னிடமிருந்து பறித்த பதவி நிலை, பதக்கங்கள், ஓய்வூதியம் என்பன மீள எனக்கு வழங்கப்பட வேண்டும். அத்துடன் எனக்கு விதிக்கப்பட்ட தண்டனைகளையும் மீளப் பெற வேண்டும். ராஜபக்ஷவுக்கு எதிராக அரசியலில் ஈடுபட முழு சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். அத்துடன் நான் ஒரு போதும் அரசுடன் சேர மாட்டேன். என்பவற்றை நான் டிரானிடம் உறுதியாகத் தெரிவித்திருந்தேன்.

இந்த நிபந்தனைகளை முன்வைத்துப் பேசுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் ஒப்புக்கொண்டார். அவர் எட்டு மாதங்களாக என்ன பேசினார் என்பது எனக்கு தெரியவில்லை. ஆனாலும் இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படாமல் நான்சிறையிலிருந்து வெளியே அனுப்பப்பட்டேன்.





அவரது பேச்சுவார்த்தை வெற்றிகரமானது என்று நான் நினைக்கவில்லை. நான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டமையால் எனக்கு நீதி கிடைத்தது என்று சொல்ல முடியாது.

மேலும் டிரான் அலஸ், தன்னால் இயன்ற முழுவதையும் செய்திருக்கலாம். அவருக்கு அநீதியிழைக்க மாட்டேன். ஆனால், நான் எதிர்ப்பார்த்ததை அவர் செய்யவில்லை.

நான் சளைக்கமாட்டேன். மக்களுக்காகத் தொடர்ந்து பாடுபடுவேன். முழு அரசியல் கலாசாரத்தையும் மாற்றிவிடும் ஓர் அரசியல் இயக்கத்தை என்னால் தோற்றுவிக்க முடியும். தற்போதைய ஆட்சியை விரைவில் கவிழ்க்கக்கூடிய ஒரு பொது எதிரணியை உருவாக்கும் தனது முயற்சிகள் வெற்றி பெறும் என்று தனக்கு நம்பிக்கையிருக்கிறது என்றார் சரத் பொன்சேகா. (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி வலய மாணவருக்கு சீருடைகள் பாடசாலைகளுக்கு வந்தன

வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான அடுத்த ஆண்டுக்கான சீருடைகள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சீருடைகள் வடமராட்சி வலயத்துக்கு வந்து சேர்ந்ததை தொடர்ந்து அவை பருத்தித்துறை கரவெட்டி, மருதங்கேணி கோட்டங்கள் ஊடாக அந்தந்தப் பாடசாலைகளுக்குவழங்கப்பட்டன.

கல்வி அமைச்சால் அறிவிக்கப்படும் குறித்த தினத்தில் இச்சீருடைகளை மாணவர்களுக்கு வழங்க பாடசாலைகள் ஏற்பாடு செய்துள்ளன. (ம-8)

## வடமராட்சி மக்கள் காய்ச்சலால் பாதிப்பு

வடமராட்சிப் பிரதேசத்தில் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

ஒருவகை வைரஸ் சுவாச அழற்சிக் காய்ச்சல் தான் நோயாளிகளிடம் அதிகம் காணப்படுகிறது என்றும், உரிய நேரத்தில் சிகிச்சைகளைப் பெற்றுக் கொண்டால் பாதிப்பு ஏற்படாது என்றும் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-8)

## நிகழ்வுகள் இன்று

**பரிசளிப்பு விழா**

திருமறைக் கலாமன்றத்தின் கலைத் தூது அழகியல் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா முற்பகல் 10 மணிக்கு கலைத்தூதுக் கலையகத்தில் கல்லூரி உபஅதிபர் அருள்பணி செ.அன்புராசா தலைமையில் நடைபெறும். (ம-14)

* * *

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா காலை 9 மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி ச.ஸ்ரீ இராமச்சந்திரன் கலந்து கொள்வார். (ம-8)

**செயலமர்வு**

கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் தனிமனித ஆளுமை விருத்தி தொடர்பாக பயிற்சிப் பட்டறையின் இரண்டாம் பிரிவு செயலமர்வு காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் ஜோசப் சாந்தசீலன் கலந்து கொள்வார். (ம-14)

**பொதுக்கூட்டம்**

சாவகச்சேரி வடக்கு செல்வ விநாயகர் சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் முற்பகல் 10 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும். கூட்டத்துக்கு தென்மராட்சி பிரதேச சனசமூக அபிவிருத்தி அலுவலர் உட்பட பலர் கலந்து கொள்ளவிருப்பதால் நிலைய பொதுச் சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிலையத் தலைவர் எஸ். சாந்தகுமார் தெரிவித்துள்ளார். (வ-9)



யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு நேற்று சனிக்கிழமை வித்தியாலயத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினரான வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவித்துச் சான்றிதழ் வழங்குகிறார். (ம-7-17)

## பண்ணை ஊடான போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமாகும் நிலை

யாழ்ப்பாணம், நவ.18

இன்னும் சில மாதங்களில் பண்ணை ஊடான போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதம் அடையலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறிகாட்டுவான்-வேலணை ஊடான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பாலத்தின் ஒரு பகுதி கடல்நீர்பட்டு முற்றாக உக்கி சேதமடைந்துள்ளது. உக்கிய பகுதி தினமும் இடம்பெறும் போக்குவரத்தால் சிதைந்து வருகின்றது.

இந்த வீதி, பாலம் சிதைவு குறித்து வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டது.

இதேவேளை, இப்பாலம் ஊடான போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைவதற்கு முன்னர் அராலி- வேலணை ஊடாக கடற்பாதையை புனரமைக்குமாறு வேலணை பிரதேச செயலர் திருமதி சதீசன் மஞ்சுளாதேவி, வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா ஆகியோர் பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இரண்டு கூட்டங்களிலும் தெரிவித்திருந்தனர்.

பண்ணை ஊடாக போக்குவரத்துப் பாலம் சிதைவடைந்து போக்குவரத்து ஸ்தம்பிக்க முன்னர் அராலி - வேலணை கடற்பாதை புனரமைக்கப்பட்டால் மாற்றுப் பாதை ஊடான சேவை தீவகத்தையும் வலிகாமத்தையும் இணைக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை, 2012 ஆம் ஆண்டு முடிவடைய இன்னும் சில வாரங்கள் உள்ள நிலையில் அராலி-வேலணை பாதை புனரமைப்பு குறித்தான இறுதி முடிவும், நிதி ஒதுக்கீடு குறித்தும் முடிவாகவில்லை என்று தெரியவருகிறது. (ம-50)

# மேட்டுநில வயல்களில் வற்றியது வெள்ளம்

## தண்ணீர் இன்றி வாடும் பயிர்கள்

யாழ்ப்பாணம், நவ.18

*மேட்டுநில வயல்களில் மழை வெள்ளம் வற்றி நிலங்கள் வறண்டுபோயுள்ளன. இதனால் நெற்பயிர்கள் தண்ணீர் இன்றி வாடும் நிலைமை ஏற்பட்டுள்ளது.*

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் பெய்த தொடர் மழையால் வயல் நிலங்கள் வெள்ளக் காடாகக் காட்சியளித்தன.

இந்த நிலையில் தற்போது வறட்சி நிலை தொடர்ந்து வருகிறது.

இதனால் மேட்டுநில வயல்களில் வெள்ளம் முற்றாக வற்றி நிலங்கள் வறண்டு போயுள்ளன.

இதனால் மேட்டு நில நெற்பயிர்கள் வாடும் நிலையில் காணப்படுகின்றன.

தாழ்ந்த வயல் பகுதிகளில் வெள்ளம் ஓரளவு தேங்கி நிற்பதையும் காண முடிகிறது.

எனினும் தொடர்ந்து வறட்சி ஏற்படும் பட்சத்தில் தாழ்ந்த பகுதிகளில் உள்ள தண்ணீரும் வற்றிப் போகும் நிலைமையே ஏற்படும் என்று விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

மொத்தத்தில் இன்னும் ஒரு வார காலத்தில் மழை பெய்யாது போனால் பெரும் போகம் பாதிப்படையும் நிலையே ஏற்படும் என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

தற்போது மழைபெய்ய வேண்டிய காலமாக உள்ள போதும் காலநிலை வேறுபாட்டால் மழை பொய்த்துப் போயுள்ளது.

இதேவேளை, மேட்டு நில விவசாயிகள் கிணறுகளில் இருந்து வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். (ம-17)

## மாதகல், வலித்தூண்டல் மீனவருக்கு ஜப்பான் தூதுவர் உதவியளிப்பு

ஜப்பானிய அரசின் 4.5 மில்லியன் ரூபா நிதி உதவியில் மீள்குடியமர்த்தப்பட்ட வலி.தென் மேற்கு மாதகல், வலித்தூண்டல் புனித அன்னம்மா கடற்றொழிலாளர் சங்கத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் நொபு ஹிட்டோ ஹோபோ நேற்று யாழ். வருகை தந்திருந்தார். அதன் போது மீள்குடியமர்த்தப்பட்ட பகுதியான மாதகல் வலித்தூண்டல் புனித அன்னம்மாள் கடற்றொழிலாளர் பயனாளிகளுக்கு கடற்றொழில் உபகரணங்களைச் சங்கத் தலைவரிடம் கையளித்தார்.

யாழ்.சமூக மேம்பாட்டு மையத்தின் ஊடாகச் சங்கத்தில் தெரிவு செய்யப்பட்ட 12 பயனாளிகளுக்கு படகு, கட்டுமரம், இயந்திரம், வலை ஆகிய கடற்றொழில் உபகரணங்கள் இவ்வாறு வழங்கப்பட்டன.

மீனவர் குடும்பங்களின் அங்கத்தவர் எண்ணிக்கைகள், தொழில் உபகரணங்களின் விலை ஆகியவற்றை மதிப்பிட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

மீள்குடியர்த்தப்பட்ட பகுதியான வலி.தென் மேற்கில் கடற்றொழில் உதவிகளான வான்தோண்டுதல், இறங்குதுறை அமைத்தல், பொது நோக்கு மண்டபம் அமைத்தல், வெளிச்ச வீடு அமைத்தல், கரையோர வீதிகள் புனரமைத்தல் போன்ற கோரிக்கை அடங்கிய மனு ஒன்றை ஜப்பானிய தூதுவரிடம் வலித்தூண்டல் புனித அன்னம்மாள் கூட்டுறவுச் சங்கத் தலைவர் இதன் போது கையளித்தார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப்பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி, தெல்லிப்பழை பிரதேச பிரதி திட்டமிடல்பணிப்பாளர், தெல்லிப்பழை பிரதேசசெயலர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-13)

## போதையில் நடமாடுவோரை கட்டுப்படுத்த நடவடிக்கை

### மக்களிடம் ஒத்துழைப்புக் கேட்கின்றனர் பொலிஸார்

வடமராட்சி,நவ.18

இரவு வேளைகளில் மது போதையில் நடமாடுவோர் பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கின்றனர்.

மதுபோதையில் நடமாடுவோரைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பருத்தித்துறை பொலிஸார் கேட்டுள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதன் போது குற்றச் செயல்கள் தொடர்பாக பொலிஸ் தரப்பில் விளக்கமளிக்கையிலேயே இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

குற்றச்செயல்கள் தொடர்பாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சமுகமளித்திருந்த பருத்தித்துறை பொலிஸாரிடம் விளக்கம் கேட்கப்பட்டது. இதன் போது, குற்றச் செயல்கள் குறைந்துள்ளன. ஆனால் இரவு வேளைகளில் மது போதையில் நடமாடுவோரின் நடவடிக்கைகள் பொது அமைதிக்கும், நடமாடும் சாதாரண பொது மக்களுக்கும் இடைஞ்சல்களையும், சிரமங்களையும் தோற்றுவிக்கின்றன.

இத்தகையோரைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

இருந்தாலும் இதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு எமக்குத் தேவை. பொது மக்களின் ஒத்துழைப்பு கிடைக்குமானால் மதுபோதையில் நடமாடுவோரைக் கட்டுப்படுத்த முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-8)

## குடாநாட்டின் பல பாகங்களிலும் நீரிழிவு விழிப்புணர்வு பேரணி





யாழ்ப்பாணம், நவ.18

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவினரின் ஏற்பாட்டில் ''நீரிழிவு நோய் தொடர்பாக விழிப்புணர்வு மற்றும் மருத்துவத்தைப் பெற்று ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவோம்" எனும் தொனிப் பொருளில் நடமாடும் மருத்துவ சேவை மற்றும் வாகனத் தொடரணிமூலமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை பிரிவு, மானிப்பாய் வர்த்தக சங்கம், குருநகர் சென்.ஜோன்ஸ் தேவாலய அமைப்பு என்பன இணைந்து இந்த நிகழ்வை நடத்தின.

யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்பாக இருந்து பேரணி ஆரம்பமாகியது. சாவகச்சேரி லயன்ஸ் கழகத்துடன் இணைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையினரும் நீரழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துரைகளை வழங்கினர்.

100 இற்கும் மேற்பட்டவர்களுக்கு குருதிப் பரிசோதனை மேற்கொண்டு நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் வழங்கினர். அதனைத் தொடர்ந்து நீர்வேலிப் பிரதேசத்தில் நீரிழிவு நோய்க் கழகத்தின் வழிகாட்டலில் அங்கு விழிப்புணர்வுக் கூட்டத்தை நடத்தினர். குருதிப் பரிசோதனைகளையும் மேற்கொண்டனர்.

பேரணி மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையை அடைந்தது. மூளாய் பிரதேச மக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வை நடத்தியது. அதனைத் தொடர்ந்து மானிப்பாய் பிரதேசத்தில், குருநகர் பிரதேசத்திலும் விழிப்புணர்வு நிகழ்வை நடத்தினர்.

இந்த நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவு வைத்திய நிபுணர் வைத்தியர் எஸ். சிவன்சுதன், வைத்தியர் ஆர்.பரமேஸ்வரன், வைத்தியர் எஸ். பிரதீபனா, வைத்தியர் எஸ்.துஷ்யந்தினி, வைத்தியர் ரி.கார்த்திகா மற்றும் தாதிய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழகம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
என இரண்டு கட்டங்களாக வவுனியா தெற்குப் பிரதேச செயலகத்தில் வைத்து பெரும்பான்மை இன மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன என்று கூறப்படுகிறது.

''இந்திய தமிழக மக்களால் அன்பளிப்பு செய்யப்பட்டது'' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட சைக்கிள்களை பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு வழங்காமல் பெரும்பான்மை இன மக்களுக்கு வழங்குவது எந்த வகையில் நியாயம்'' என பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

(த-410)

## உலக வங்கி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
அடங்கிய குழு நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்தது. அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதியான வலி.வடக்குப் பகுதிகளைக் குழுவினர் நேரில் பார்வையிட்டனர்.

இந்தப் பயணத்தில் வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவரும் சோ.சுகிர்தனும் இணைந்து கொண்டனர்.

உலக வங்கி முகாமைத்துவப் பணிப்பாளர் அடங்கிய குழுவினர் கோப்பாய் பிரதேசத்துக்கு உட்பட்ட சிறுப்பிட்டி, ஜனசக்தி ஆகிய கிராமங் களுக்கும் சென்று அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மீள் எழுச்சித் திட்டக் கண்காட்சியையும் பார்வை யிட்டனர். அத்துடன் கிராம அபிருத்தி, தனியார் துறை ஆகியன தொடர்பாகவும் அங்குள்ள கிராம மக்க ளுடன் கலந்துரையாடினர்.

வசாவிளான் மத்திய மகாவித்தியாலத்தில் விஞ்ஞான ஆய்வு கூடம் அமைத்துத் தருமாறு அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் உலக வங்கிக் குழுவிடம் கோரிக்கை விடுத்தனர்.

'நெல்சிப்' திட்டத்தில் புனரமைக்கப்பட்டு வரும் மல்லாகம் சோடாக் கம்பனி ஒழுங்கையையும் இந்தக் குழு சென்று பார்வையிட்டது.

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துக்குச் சென்ற உலக வங்கிக்குழு அங்கு பிரதேச செயலருடனும் கலந்துரையாடியது. அத்துடன் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் அங்கு உலக வங்கிப் பணிப் பாளரைச் சந்தித்து அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடினர். (த-13-5)

## வரவு - செலவுத்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
நீதிமன்றத் தீர்ப்பை அரசு மீறுகின்றது. உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி ஒதுக்கீட்டு சட்ட மூலத்தின் சில சரத்துகள் அரசமைப்புக்கு முரணானவை. அவை திருத்தப்பட வேண்டும். திருத்தப்பட்டு $^2/_3$ பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால் இப்பொழுது திருத்தங்கள் மேற்கொள்ளப் படாமலேயே வாக்கெடுப்பு நடத்த முயற்சிக்கின்றீர்கள். இதை நாம் கண்டிக்கிறோம்'' என்று ஆட்சேபனை எழுப்பினார் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

எதிர்க்கட்சிக் கொரடா ஜோன் அமரதுங்கவும் இதை வலியுறுத்தினர். இதனால் சபையில் ஒரே குழப்பமும், கூச்சலும் ஏற்பட்டது. இந்த நிலையில் சபாநாயகர் அரசின் கருத்தை வெளியிடுமாறு கேட்டார். தேவையான திருத்தங்களை குழுநிலை விவாதத்தின்போது மேற்கொள்வோம் என்றார் சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வா.

இருதரப்பினரதும் கருத்துக்களைக் கேட்ட பின் நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு தொடர்பாக குழுநிலையில் விவாதிக்கப் படும்போது எதிர்க்கட்சியின் கூற்று பரிசீலிக்கப்படும் என்று உறுதியளித்த சபாநாயகர், இரண்டாவது வாக்கெடுப்பு மீதான வாக்கெடுப்பை என சபாநாயகர் அறிவித்தார்.

வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது ஆதரவு 156 வாக்குகளும், எதிராக 53 வாக்குகளும் கிடைத்தன. 103 மேலதிக வாக்குகளால் வரவு - செலவுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது.

ஐ.தே.க., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகியன எதிர்த்து வாக்களித்தன. நாடாளுமன்ற உறுப்பினர்களான இராதா கிருஷ்ணன், பிரபாகணேசன், திகாம்பரம் ஆகியோர் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சிறீ ரங்கா சபையில் இருக்கவில்லை.

ஐ.தே.கவினர் வாக்களிக்கும்போது இலங்கையின் அரசமைப்புக்கும் ஜனநாயகத்துக்கும் முரணானதும் உயர்நீதிமன்றத் தீர்ப்பை உதாசீனப்படுத்துவதும் இந்த வரவு - செலவுத்திட்டத்தை எதிர்க்கின்றோம் என்று கூறினர்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்கவின் வேண்டுகோளின் பேரில் பெயர் குறிப்பிடப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. (த-16-2)

## கூடங்குளம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தைக் கொண்டுள்ள மன்னார் கடல்படுக்கை பெரும் பாதிப்பைச் சந்திக்கும். அங்கு மீன் வளம் அழிந்து, மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை இழக்கும் நிலைமை ஏற்படும்'' என்று சி.கா.செந்தில்வேல் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு முன்பாக முற்பகல் 11 மணியளவில் கூடியவர்கள் சுமார் ஒரு மணி நேரம் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அமெரிக்க, ஜப்பானில் அணு உலைகள் கைவிடப்படுகையில் இந்தியாவில் ஏன் அணு உலைகள் அமைக்கப்படுகின்றன என்று அவர்கள் கேள்வி எழுப்பினர்.

''தனது சொந்த மக்களின் உயிர்கள் குறித்தே அக்கறைப்படாது கூடங்குளம் அணு மின் நிலையத்தை இயக்குவதில் உறுதியாக உள்ள இந்திய மத்திய அரசு, எப்படி ஈழத் தமிழர்களுக்கு நீதியை நியாயத்தைப் பெற்றுத் தரும்?'' என்று கேள்வி எழுப்பினார் மார்க்சிய-லெனினிசக் கட்சியின் தலைவர்.

### பின்னணி

கூடங்குளம் அணுமின் நிலையம், தமிழ் நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கூடங்குளத்தில் அமைந்துள்ளது. இந்திய அணுமின் கழகத்தின் நிர்வாகத்தில் ரஷ்ய நாட்டின் உதவியுடன் இந்த அணுமின் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்திற்கான ஒப்பந்தத்தினை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், ரஷ்ய நாட்டுப் பிரதமர் மிக்கைல் கொர்பசோவும் 1988 ஆம் ஆண்டில் கையெழுத்திட்டனர்.

அதன் பின்னர் ரஷ்யா பல நாடுகளாகப் பிரிந்து போனதனாலும், இந்தியா அணுக்கரு வழங்குவோர் குழுமத்தின் ஒப்புதல் பெறவில்லை என்ற காரணத்திற்காக அமெரிக்கா அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததாலும், இத்திட்டம் பத்தாண்டுகளுக்கு கிடப்பில் கிடந்தது.

இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான ஒப்பந்தம் 2001 ஆம் ஆண்டில் கையெழுத்தானது. தற்போது அங்கு ஒரு உலை செயற்படும் நிலையை அடைந்துள்ளது. இதுபோன்ற 8 உலைகளைக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு உலையில் இருந்தும் 1,000 மெகா வோல்ட்டுக்கும் அதிகமான மின்சாரத்தைப் பெறமுடியும்.

ஆரம்பத்தில் இருந்தே அணு உலைக்கான கூடங்குளத்தைச் சுற்றியுள்ள மக்கள் மத்தியில் இருந்தாலும், அண்மையில் ஜப்பான் நாட்டில் புக்குஷிமா, டா இச்சி அணு உலைகளில் ஆழிப் பேரலை (சுனாமி) காரணமாக நடந்த விபத்துக்களைத் தொடர்ந்து பெரும் போராட்டமாக வெடித்துள்ளது.

இந்த விபத்துக்களுக்குப் பின்னர் தம்மிடம் இருக்கும் அணு உலைகளை மூடிவிட ஜப்பான், ஜேர்மனி போன்ற நாடுகள் முடிவெடுத்திருக்கும் பின்னணியில் கூடங்குளத்தின் மிக அருகே உள்ள இடிந்தகரை ஊர் மற்றும் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி போன்ற மாவட்ட மக்கள் கூடங்குளம் அணு உலையை மூடிவிடும்படி கோரிப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மக்கள் போராட்டங்கள் பொலிஸார் மற்றும் படையினரின் உதவிகளுடன் அடக்கி ஒடுக்கப்படுகின்றன. எனினும் மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். இதுவரை அரச வன்முறைக்குப் போராட்டக்காரர் ஒருவர் உயிரிழந்திருக்கிறார்.

கூடங்குளம் அணு மின் நிலையத்திற்கு எதிராக போராட்டம் நடத்தி வரும் மக்களுக்கு ஆதரவு தரும் வகையில், 23 மார்ச் 2012 அன்று பாளையங்கோட்டையிலிருந்து இடிந்தகரைக்கு ஊர்வலமாகச் செல்ல முயன்ற, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான் உள்ளிட்ட 500 பேரைக் கைது செய்தது தமிழகப் பொலிஸார்.

செப்ரெம்பர் 11, 2011 அன்றுமுதல் இடிந்தகரை கிராம மக்கள் 10,000 பேர் உண்ணாவிரதம் உள்ளிட்ட தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். (உ-14)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

குடும்பஸ்தர் ஒருவரின் சடலமொன்று நேற்று இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் பகுதியில் குறித்த வயோதிபரின் சடலம் காணப்பட்டதாகவும் பின்னர் பொலிஸாரால் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தலையாளி கொக்குவில் பகுதியைச் சேர்ந்த நடராஜா பத்மநாதன் (வயது-55) என்பவரின் சடலமே அதுவென பின்னர் உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-16)

## ஆசியாவின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
செலவுத் திட்டத்தால் நாட்டில் வாழும் 99.9 வீதமான மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடையாது. 0.1 வீதமான தனவந்தர்களின் மேம்பாட்டை கருத்தில் கொண்டே அது தயாரிக்கப்பட்டுள்ளது.

முன்பு சாதாரணமான ஒரு காரை வைத்து ஓடியவர்கள் இந்த அரசின் காலத்தில் பல கோடி ரூபா பெறுமதியான சொகுசுக்கார்கள் பலவற்றுக்கு சொந்தக்காரர்களா்க இருக்கின்றார்கள்.

ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பங்குச் சந்தையில் கொடிகட்டிப் பறக்கின்றனர். இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கருத்திட்டங்களுக்கு 120 கோடி ரூபா முதல் 180 கோடி ரூபாவரை வருடாந்தம் தரகுப் பணமாக (கொமிஷன்) பெறுகின்றனர்.

கே.பி. என அழைக்கப்படும் குமரன் பத்மநாதனின் கறுப்புப்பணமும் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணமும் பங்குச் சந்தையில் உலாவுவதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன.

'சிறிலங்கன் எயார் லைன்ஸ்' தலைவரின் மகன் இதில் முக்கிய பங்காளியாக இருக்கின்றார். வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து கமிஷனாகக் கிடைக்கும் பணம் சுவிஸ் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளன. மற்றும் ஒரு பகுதி இங்கு உள்நாட்டில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. சீன இணையத்தளம் ஒன்று இதனைத் தெளிவாகச் சுட்டிக் காட்டி உள்ளது.

நாட்டில் அப்பட்டமாக மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. இனப்படுகொலைகள் இடம்பெறுகின்றன. பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள குற்ற விசாரணை நீதித்துறை மீதான அரசின் தலையீட்டை, ஆக்கிரமிப்பை உறுத்திப்படுத்தி உள்ளது எனச் சர்வதேச சமூகமே குற்றம் சாட்டி உள்ளது.

அதுமட்டுமல்ல இலங்கை இன்று மோசடிகளின் கேந்திர நிலையமாக மாறி வருகின்றது. இதனால் நமது நாடு இன்று சர்வதேச சமூகத்தினால் அந்நியப்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (த-2)

## பேச்சு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் சுகவீன விடுப்பு போராட்டத்தை இலங்கை ஆசிரியர் சங்கம் முன்னெடுக்கவுள்ளது. இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் நேற்று இதனைத் தெரிவித்தார்.

கடந்த வாரம் கொழும்பு பொது நூலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில், டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் 2 லட்சம் ஆசிரியர்களும் இணைந்து சுகவீன விடுப்பு போராட்டத்தை முன்னெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. இதற்கு 13 தொழில் சங்கங்கள் தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தன.

இந்த நிலையில் கல்வி அமைச்சு, இலங்கை ஆசிரியர் சங்கத்தை பேச்சுக்கு வருமாறு அழைத்திருந்தது. நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தப் பேச்சுசின் போது, இலங்கை ஆசிரியர் சங்கத்தால் சம்பள உயர்வு உள்பட முன்வைக்கப்பட்ட 20 கோரிக்கைகளில் ஒன்றைக் கூட நிறைவேற்றுவதற்கு இலங்கை கல்வி அமைச்சு அதிகாரிகள் சம்மதிக்கவில்லை.

''எனவே ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதை தவிர மாற்று வழிகள் காணப்படவில்லை. இதனால் முன்னரே திட்டமிட்டிருந்தவாறு டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி ஆசிரியர்கள் நாடளாவிய ரீதியில் சுகவீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்'', இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார். (உ-5-422)

## மனிக்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
முன்தினம் ஆரம்பித்து வைத்தார் இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் ஜெகத் ஜயசூரிய.

''பெருமெடுப்பிலான விவசாயச் செய்கை'' என்ற கோசத்தின் கீழ் இராணுவம் இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

மனிக்பாம் 200 ஏக்கருக்கும் அதிகமான நிலப் பகுதியைக் கொண்டது. அதனைக் கையகப்படுத்த இராணுவம் மற்றும் சில திணைக்களங்கள் தீவிர ஆர்வம் காட்டி வந்தன.

இந்தப் பகுதியில் ஏற்கனவே ஒரு பகுதி நிலத்தில் இராணுவத்தினர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். தற்போது மேலும் 10 ஏக்கர் நிலத்தை அவர்கள் கையகப்படுத்தியுள்ளனர். (உ-01)

## 8 பேர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு ஆஸ்திரேலியாவில் இருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று ஆஸ்திரேலிய குடிவரவு திணைக்களம் தெரிவித்துள்ளது.நாடு திரும்பும் முடிவை இவர்கள் தனிப்பட்ட ரீதியில் எடுத்தனர் என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நௌரு தீவுக்கு அனுப்பப்பட்ட இலங்கை அகதிகள் தொடர்ந்தும் சுயவிருப்பில் நாடு திரும்ப முன்வருகின்றமை ஆஸ்திரேலியா ஆள் கடத்தல்காரர்களை ஊக்கமளிப்பதாக இல்லை என்று என்பதை எடுத்துக் காட்டுகிறது என்று ஆஸ்திரேலிய குடிவரவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் ஆஸ்திரேலியாவில் இருந்து 332 இலங்கை அகதிகள் நாடு திரும்பியுள்ளனர். (உ-5)

## 109 தமிழ்ப்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பெற்றுப் புதிதாக இராணுவத்தில் இணையும் தமிழ்ப் பெண்கள் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.அரங்கில் நடன நிகழ்வுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

தமது பிள்ளைகளை பெற்றோர் இராணுவத்தில் இணைத்து வைக்க, அதற்கான உறுதிச் சான்றிதழை விருந்தினர்கள் பெற்றோரிடம் வழங்கினர்.

கிளிநொச்சி பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா சிறப்புரை ஆற்றினர்.

''உங்கள் பிள்ளைகளை நீங்களாகவே முன்வந்து இராணுவத்தில் இணைத்து விடுவதை வரவேற்கின்றேன். உங்கள் பிள்ளைகளுக்கு நாங்கள் ஆயுதப் பயிற்சி வழங்கமாட்டோம். இவர்கள் இந்தப் பகுதிகளிலேயே சேவையில் ஈடுபடுத்தப் படுவர் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், முன்னாள் அரச அதிபர் தி.இராசநாயகம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் திரேஸ் குமார், கிளிநொச்சி பிராந்திய கட்டளைத் தளபதி ஜெனரல் உதய பெரேரா ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை,

நிகழ்வின் பின்னர் கிளிநொச்சி இரணைமடு இராணுவ தலைமையகத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்று நடைபெற்றது.

இராணுவத்தில் சேரும் அனைவரும் கட்டாயமாக ஆயுதப் பயிற்சி பெற்றிருக்க வேண்டியது அவசியமானது. இது இராணுவ ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டது என்று கிளிநொச்சி பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா தெரிவித்தார்.

ஊடகவியலாளர் ஒருவர் ''புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட பிள்ளைகளுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்படுமா'' என்று கேள்வி எழுப்பினர்.இதற்குப் பதிலளித்தபோதே உதய பெரேரா இதனைத் தெரிவித்தார்.

ஏற்கனவே நிகழ்வில் உரை நிகழ்த்திய உதய பெரேரா உங்கள் பிள்ளைகளுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்பட மாட்டாது என்றும் உங்கள் பகுதிகளிலேயே அவர்கள் பணியாற்றுவார்கள் எனவும் தெரிவித்ததால் குழப்பநிலை ஏற்பட்டது.

இதேவேளை 'குடும்ப வறுமை காரணமாகவும், தொழில் வாய்ப்பு இல்லாததாலுமே நாங்கள் இராணுவத்தில் இணைந்தோம் எங்களுக்கு உள்ளூர் இராணுவச் சேவை என முன்னர் தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் 'இலங்கை தரைப்படைக்கான ஆள் சேர்ப்பு' என்ற படிவத்திலேயே தாம் கையெழுத்திட்டுள்ளதாகவும் நேற்று இராணுவத்தில் இணைந்துகொண்ட சில பெண் பிள்ளைகள் தெரிவித்தனர். (ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மனித நேயம் பிறக்கும் காலம் வாராதா...?

வடக்கில் - வன்னிப் பிரதேசத்தில் - இறுதிப் போரின்போது கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை அண்ணளவாக நாற்பதினாயிரம் பேர் என்பது உத்தேச மதிப்பீடு. அவர்களின் நெருங்கிய இரத்த மற்றும் குடும்ப உறவுகளின் எண்ணிக்கை ஆகக்குறைந்தது 2,00,000 பேர் - இரண்டு லட்சம் பேர் - எனக் கொள்ளலாம், கருதலாம். அவர்கள் அனைவரும் தமது உறவுகளின் அநியாய உயிரிழப்புக்களால் இதயம் வெடித்து ஏதோ ஒரு விதத்தில் உளநலம் பாதிக்கப்பட்டவர்களாகவும் மிகப்பலர் மனநோயாளிகளாகவும் மாறியுள்ளனர்.

மேலும், மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போர் என்று கணக்கில் கொள்ளும்போது, மன அழுத்தம் என்ற முதற்படி தொடக்கம் மனநோய் வரையான பாதிப்புக்குப் பல லட்சம் பேர் ஆளாகி இருப்பர் என உத்தேசமாகக் கொள்ளலாம்.

அரசாங்கத் தரப்பின் ஆகப்பிந்திய தகவல்களின் பிரகாரம் - பிந்திய புள்ளிவிவரங்களின்படி - வன்னி உட்பட வடக்கில் மட்டும் 65,230 பேர் மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றவர்களை, சிகிச்சை பெறுபவர்களை மட்டுமே இந்தப் புள்ளிவிவரம் அடக்கியுள்ளது.

கிழக்கில் இதேவகையான பாதிப்புக்கு ஆளானோரின் புள்ளிவிவரம் அரசினால் வெளியிடப்படவில்லை. அங்கு பணிபுரியும் தொண்டு நிறுவனங்கள் மூலமே ஊர்ஜிதப்படுத்தப்படாத விவரங்கள் முன்னர் வெளிவந்திருந்தன.

வடபகுதியில் போரின் பாதிப்பினால் மனநோய்க்கு ஆளானோரின் எண்ணிக்கை அரசு வெளியிட்டதைவிட மிகப்பல மடங்கு என்றே கருதவேண்டும்; கொள்ளலாம்.

அரசாங்கம் தனது கடமைக்கு வெளியிட்ட புள்ளிவிவரத்துக்கு உட்பட்டவர்களைவிடவும், தாம் மனநோயால் பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்தபின்னரும், சமூகத்தில் மற்றவர்களின் கேலிக்கு ஆளாக நேரிடும், ஒருவகை அச்சம் அல்லது வெட்கம், எல்லோரும் தெரிந்துகொள்ளும் விதத்தில் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதைத் தவிர்த்தல் என்ற வகைகளுக்குள் அடங்குவோரின் எண்ணிக்கை, சிகிச்சை பெறுவோரை விட மிக அதிகமாகவே இருக்கும் என்று கொள்வது தப்பன்று.

மனிதனையும் அதன்மூலம் சமூகத்தையும் பீடிக்கும் வியாதிகளில் உளநலப் பாதிப்பு, சம்பந்தப்பட்ட நோயாளர்களின் சீரான வாழ்க்கையை மிகப்பெரும் கனதியுடன் பாதிக்கிறது. காரணம் அந்த நோயின் வீரியம் அதிகரித்துச் செல்ல, உடல் நலமும் மிகப்பெரிய அளவில் குன்றுகிறது. நாள்கள், மாதங்கள் அதிகரித்துச் செல்லச் செல்ல, உடல்நலமும் வேகமாகப் பாதிப்புறுகிறது.

அதனால் உண்டாகக்கூடிய அபாய நிலைமையைக் கருத்திற்கொண்டு உளநலப் பாதிப்பை நீக்கக்கூடிய, உரிய சிகிச்சைகளைப் பெறுவது மிகவும் அவசியம். எந்தக் காரணத்தைக் கொண்டும் சிகிச்சை பெறுவதைத் தாமதிப்பது அல்லது தவிர்ப்பது மிகவும் ஆபத்தானதாகும். உளநலம் பாதிக்கப்பட்டோருக்கான உரிய சிகிச்சைகள் தாமதமின்றியும், வேண்டிய கவனிப்புகளுடனும் மேற்கொள்ளப்படுவது இன்றியமையாதவையென்று மருத்துவத் துறையினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

போரின்போது உண்டான உறவுகளின் மரணங்களால் அதிக எண்ணிக்கையான தமிழ் மக்கள் உளநலம் குன்றிப்போயுள்ளனர் என்பது ஒருபுறமிருக்க - நாட்டின் ஏனைய பகுதிகளைத் தவிர்த்து, அவசரகாலச் சட்டம் எழுபதுகளின் பிற்பகுதியிலேயே வடக்கு, கிழக்கில் மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டதால் -

அதற்குள் மறைந்துகொண்டு, சந்தேகத்தின்பேரில் என்ற குத்தூசி கொண்டு ஆயிரம் ஆயிரம் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் படையினரால் கைதுசெய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டனர். அவர்களில் மிகப்பலர் பின்னாளில் உளநலம் உருக்குலைந்த நிலையில் வாழ்வதற்கு நேரிட்டது.

வாழ்க்கையின் இயல்புநிலையில் பாதிப்பு, குடும்பத்தினரிடமிருந்து பிரிக்கப்பட்டுத் தனிமைப்படுத்தப்பட்டமை, தமக்கு என்ன நேரிடுமோ என்ற அச்சத்தினால் விளைந்த விரக்தி என்பன ஒரு கட்டத்தில் அவர்களை மனநோயாளிகளாக்கியது.

மறுபக்கத்தில் -

கைதுசெய்யப்பட்ட தமது பிள்ளைகள் பலாத்காரமாகப் பறித்து இழுத்துச் செல்லப்பட்டதனால் மனம் நொந்தும், ஏக்கமுற்றும், அவர்களின் வாழ்வு சிதைவுறப் போகிறதே என்ற அச்ச உணர்வுகளாலும் பெரும் எண்ணிக்கையான பெற்றோர் உளநலப் பாதிப்புக்கு ஆளானார்கள்.

தமது பிள்ளைகள் காணாமல் போகச் செய்யப்பட்டமை, நிரபராதிகளாக இருந்தபோதிலும் அவர்கள் மீது வலிந்து குற்றஞ் சாட்டப்பட்டமை ஆகியனவற்றாலும் பல பெற்றோர்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டனர். நாளடைவில் அவர்களும் உளநலம் பாதிப்புற்றவர்களாக மாற நேர்ந்தது.

ஏன், குண்டு வீச்சுகளாலும் விமானத் தாக்குதல்களாலும் தமது பிள்ளைகளை, குடும்ப உறுப்பினர்களை இழந்த பெற்றோரும் உளநலம் பாதிப்புற்றோராகினர்.

மேற்கூறிய வகைகளில் மனநோயாளிகளாக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையானோரையும் ஆற்றுப்படுத்தி, குணமாக்கி, சமூகத்தில் இணைத்துக் கொள்ள வேண்டிய தேவை உண்டு. ஆனால் அரசாங்கம் அதுகுறித்துக் கிஞ்சித்தும் அக்கறை கொள்வதற்கான ஏற்பாடு எதுவும் வெளிப்படவில்லை.

மொத்தத்தில், தமிழ் மக்களில் வயது வேறுபாடின்றி, பால்நிலை வேறுபாடின்றி, மனித நேயத்துக்கும், மனிதாபிமானத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு கொழும்பு அரசாங்கம் கட்டவிழ்த்துவிட்ட அராஜகங்களால் உளநலம் குன்றியவர்களைக் குணமாக்கும் முழுப்பொறுப்பும் அரசையே சார்ந்தது. அவர்கள் சமூகத்தில் இணைந்துகொள்வதற்கான வழிவகைகளையும் வாய்ப்புகளையும் வழங்கவேண்டிய பெருங்கடமை, தட்டிக்கழிக்க முடியாத பெரும் பொறுப்பு அரசுக்கே உண்டு.

அதனை ஆற்றுவது குறித்து அரசு மனிதாபிமானத்துடனாவது செயற்பட முன்வருமா? நாட்டின் பிரசைகள் ஒவ்வொருவரும் சமமானவர்கள், சமஉரிமைகள் உள்ளவர்கள் என்பதனை உய்த்துணரும் பக்குவம் இருந்தால், மனிதநேயமும் மனிதாபிமானமும் எவருக்கும் பிறக்கும். அது தெற்கின் அரசியல் தலைவர்களிடம் எப்போது பிறக்கும்? பிறக்கக் கூடாதா?

# சிறைச்சாலைகளுக்கு உயர் தொழில்நுட்ப சோதனை சாதனங்களுக்காக ரூ.18 கோடி

## அமைச்சால் அவசரமாக ஒதுக்கீடு

கொழும்பு, நவ.18

சிறைச்சாலைகளுக்குத் தேவைப்படும் உயர் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள சோதனையிடும் சாதனங்கள் மற்றும் கைவிலங்குகள், சங்கிலிகள், தலைக்கவசங்கள், குறுந்தடிகள் உள்ளிட்ட உபகரணங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாகப் புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சால் 18 கோடி 80 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் சந்திரசிறி கஜதீர'வின் பணிப்பை அடுத்து அவசரத் தேவை ஒன்றாகக் கவனத்தில் கொண்டு இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளுக்குள் வரும் சிறைக்கைதிகள், உத்தியோகத்தர்கள் போன்றோரின் பொதிகளை சோதனை செய்யும் 'ஸ்கான்' கருவிகள் 'மெற்றல் டிடெக்ரர்' 'ஜாமர்'' இயந்திரங்கள் உள்ளிட்ட உயர்தொழில்நுட்ப உபகரணங்களை விரைந்து கொள்வனவு செய்யுமாறு அமைச்சரால் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கு பணிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வெலிக்கடை சிறைச்சாலையில் நிகழ்ந்த மோதலின்போது சிறைக்கைதிகளால் சிதைத்து அழிக்கப்பட்டுள்ள கைவிலங்குகள், சங்கிலிகள், தலைக்கவசங்கள், குறுந்தடிகள் ஆகிய பாதுகாப்பு உபகரணங்களும் இதன் போது புதிதாக கொள்வனவு செய்யப்படவுள்ளன என்று அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தப் பாதுகாப்பு உபகரணங்களில் பெருமளவானவை பயன்பாட்டுக்கு உதவாத நிலையில் காணப்படுகின்றன என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார். (ம-22)

## கிணற்றில் இருந்து வயோதிபப் பெண் சடலமாக மீட்பு

வெற்றுக் காணியில் உள்ள கிணற்றில் இருந்து வயோதிபப் பெண் ஒருவரின் சடலம் நேற்று நீர்வேலி வடக்குப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் புனிதவதி (வயது -60) என்பவரே மரணமானவராவர்.

இது தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரணவிசாரனை அதிகாரி ரி.உதயசிறி மேற்கொண்டுள்ளார். சடலம் உடல் கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-14)

## திடீர் விபத்துகளால் வருடாந்தம் 5 ஆயிரம் பேர் வரையில் சாவு

கொழும்பு, நவ.18

வாகன விபத்துக்கள் அல்லாத திடீர் விபத்துக்களால் ஆண்டு ஒன்றில் ஐயாயிரம் பேர் வரையில் உயிரிழக்கின்றனர் என்று பொலிஸ் தலைமையகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் வெளிப்பட்டுள்ளது.

குறித்த தலைமையகத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிப்பதற்கு அமைய, கடந்த ஆண்டில் அத்தகைய திடீர் விபத்துக்களால் நாலாயிரத்து 39 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் நீரில் மூழ்கியதன் காரணமாகவே உயிரிழந்துள்ளனர்.984 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர்களில் 786 பேர் ஆண்கள் எனவும் அந்தப் புள்ளிவிவரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

மின்சாரம் தாக்கியதால் 143 பேரும், கட்டடங்களில் இருந்து விழுந்து 190 பேரும், மரங்களிலிருந்து விழுந்து 284 பேரும் தீயில் சிக்குண்டு 169 பேரும், பாம்புகளால் கடியுண்டு 159 பேரும் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

## 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவருக்கு பெறுபேற்றுச் சான்று

தென்மராட்சி, நவ.18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 70 இற்கு மேல்புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தைக் கொண்டாடும் முகமாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் கல்வி வலய அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் அந்தந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. பாடசாலைகளில் நாளை திங்கட்கிழமை நடைபெறும் நிகழ்வுகளில் அதிபர்களால் மாணவர்களுக்கு இந்தச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

பரீட்சையில் ஒவ்வொரு பிரிவிலும் தலா 35 மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வை பாடசாலைகளில் பாராட்டு விழாவாக நடத்த வேண்டும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

### சாதாரணதர மாணவருக்கு கருத்தரங்கு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு சாவகச்சேரி மக்கள் வங்கியின் அனுசரணையுடன் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் கருத்தரங்கு இடம் பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்துள்ளார். (ம-9)

### போக்குவரத்துக்குத் தடை

நல்லூர் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ள சூரசங்கார நிகழ்வை முன்னிட்டு ஆலயச்சூழல் ஊடாக வாகனப் போக்குவரத்து அன்று பிற்பகல் 2 மணி முதல் இரவு 7 மணிவரை தடைசெய்யப்படும். எனவே வாகன உரிமையாளர்கள் மாற்று வழிப்பாதைகளைப் பயன்படுத்துமாறு யாழ்.மாநகர சபை அறிவித்துள்ளது. (ம-14)

## திருநெல்வேலி இ.த.க.பாடசாலை பரமேஸ்வரா வித்தியாலயமாகிறது

### நாளை பெயர் சூட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.18

சேர். பொன்னம்பலம் இராமநாதனின் நினைவு தினத்தை முன்னிட்டு திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ''பரமேஸ்வரா வித்தியாலயம்'' எனப் பெயர் சூட்டி ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது.

சேர்.பொன். இராமநாதனின் நினைவு தினத்தை முன்னிட்டு முதல் தடவையாக ''பரமேஸ்வரா வித்தியாலயம்'' எனப் பெயர் சூட்டி பாடசாலை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் த.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நாளை காலை 7.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட பூசையும், அதனைத் தொடர்ந்து காலை 8.45 மணிக்கு சேர் பொன். இராமநாதன் திருவுருவ அலங்காரப் பூசையும், காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தில் கூட்டமும், முற்பகல் 11 மணிக்கு திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ''பரமேஸ்வரா வித்தியாலயம்'' எனப் பெயர் சூட்டும் நிகழ்வும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில். வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் பி.உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (ம-14)

## பரு. ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் பிரிவில் 12 ஆயிரம் பேர் சிகிச்சை

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கடந்த மாதம் வெளிநோயாளர் பிரிவில் 12 ஆயிரத்து 412 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். அத்துடன் 6 ஆயிரத்து 799 பேர் கிளினிக்குகளில் சிகிச்சை பெற்றுள்ளனர். 250 பேர் சத்திரசிகிச்சைகளைப் பெற்றுள்ளனர் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கடந்த காலங்களை விட சத்திரசிகிச்சை பெற்ற நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

சத்திரசிகிச்சைகளை சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் எஸ். கிரிதரன் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பிணக்குகளைத் தீர்ப்பதில் மன்னார் மத்தியஸ்தர் சபை மும்முரம்

**ஐந்து ரூபா முத்திரை கட்டணத்துடன் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப் பட்டு ஒரு மாதத்திற்குள் மக்களுக்கு தீர்வு பெற்றுக்கொடுத்து வருகின்றோம்.**

மன்னார்,நவ.18

மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் மத்தியஸ்தர் சபை தனது நீதிச்சேவையை மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தொடர்வதாக அதன் தலைவர் பிரின்ஸ் டயஸ் தெரிவித்துள்ளார்.

மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் தொடர்பில் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் இயங்க ஆரம்பித்துள்ள மன்னார் மத்தியஸ்த சபை,மக்களின் பல்வேறு பிரச்சினைகளையும், பிணக்குகளையும் சமாதானமாகவும், புரிந்துணர்வுடனும் தீர்த்து வைத்திருக்கின்றது.

குறிப்பாக வங்கிகளால் அறவிடப்படமுடியாத கடன்கள் மற்றும் மேலதிக பற்றுக்கள், காணித்தகராறுகள், அடிதடி போன்ற சிறு பிணக்குகளுக்கு நாம் விரைவானதும் சுமுகமானதுமான தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்துள்ளோம்.

ஐந்து ரூபா முத்திரை கட்டணத்துடன் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரு மாதத்திற்குள் மக்களுக்கு தீர்வு பெற்றுக் கொடுத்து வருகின்றோம்.

எனவே முறைப்பாட்டாளர்கள் தங்களது பிணக்குகளுக்கு தீர்வு காண விரும்பினால் மாதத்தின் முதல் மூன்று ஞாயிற்றுக்கிழமைகளில் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை முறைப்பாடுகளைப் பதிவு செய்யமுடியும். மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி வளாகத்தில் மக்கள் தங்கள் முறைப்பாடுகளைப் பதிவுசெய்ய முடியும். இறுதி ஞாயிற்றுக்கிழமை சபை கூடித் தீர்ப்புவழங்கும்-என்றார் அவர். (ஐ)

## நகரிலிருந்து விலகியிருக்கும் கனகராயன்குளம் சந்தை




வவுனியா,நவ.18

வவுனியா வடக்கு, கனகராயன்குளம் பொதுச்சந்தை பயன்பாடு இன்றி பூட்டப்பட்ட நிலையில் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

சேவாலங்கா நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட இந்தச் சந்தைக் கட்டடம் திறக்கப்பட்டு மீண்டும் பூட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இதனால் கட்டடம் பராமரிப்பின்றி சேதமடையும் நிலையில் உள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் குறித்து வவுனியா வடக்கு பிரதேச சபையின் உபதலைவரிடம் கேட்டபோது;

கட்டடம் கட்டப்பட்ட நிலையில் உள்ளது. அதனைத் திறந்து மக்கள் பாவனைக்காக விடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். விரைவில் சந்தை இயங்கத் தொடங்கும் - என்றார்.

இதேவேளை, சந்தையில் முன்னர் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவர் தெரிவிக்கையில்,

சந்தை கனகராயன்குளம் நகரத்திலிருந்து 800 மீற்றர் தொலைவில் உள்ளது. மக்கள் பொருள்களை வாங்க சந்தைக்கு வருவதில்லை. வீதியில் உள்ள கடைகளிலேயே வாங்கிச் செல்கின்றனர். இதனால் எமக்கு பெரு நட்டம் ஏற்பட்டது. நான் இப்போது நகரப்பகுதியில் ஒரு சிறிய கடையை ஆரம்பித்துள்ளேன் - என்றார் அவர். (ஐ)

## மன்னார் நகர சபைக்கு முதலாம் இடம்

யாழ்ப்பாணம்,நவ.18

வடமாகாண சபையால் நடத்தப்பட்ட ஒன்றிணைந்த முன்னேற்றத்தை நோக்கி, 2012 என்னும் கண்காட்சியில் மன்னார் நகர சபை மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றது.

கண்காட்சி யாழ்.மாநகர சபை வளாகத்தில் நடைபெற்றது. 2012 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றுகை மதிப்பீடாக இந்தக் கண்காட்சி அமைந்திருந்தது .

இதில் மாவட்ட ரீதியில் மன்னார் நகரசபை முதலிடத்தைப் பெற்றதுடன் மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. (ஐ-13)



கிளிநொச்சி கரைச்சி கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் திருநகர் இளையதம்பி நடராசா எழுதிய சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழாவின்போது கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன், நூலாசிரியர் ஆகியோர் மாலையிட்டு அழைத்து வரப்படுகின்றனர். (க-8)

## மடுத்திருத்தல புனரமைப்பு

### இராணுவத் தளபதி ஆராய்ந்தார்

**அடுத்த வருடம் இடம் பெறவுள்ள வருடாந்த உற்சவத்துக்கு முன்னர், தேவாலயத்தை புனரமைத்து அழகு படுத்துவதற்கான நடவடிக்கைகள்.**

மன்னார், நவ. 18.

மன்னார் மடு தேவாலயத்தைப் புனரமைத்து அழகுபடுத்துவதற்கு இராணுவத்தினர் முன்வந்துள்ளனர்.

இதன்படி தேவாலயத்தின் புனரமைப்புப் பணிகள் குறித்து இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய அடங்கிய குழுவினர் நேற்றுமுன்தினம் தேவாலயத்தைச் சென்று பார்வையிட்டனர்.

அடுத்த வருடம் இடம் பெறவுள்ள வருடாந்த உற்சவத்துக்கு முன்னர், தேவாலயத்தை புனரமைத்து அழகுபடுத்துவதற்கான நடவடிக்கைகள், தேவைகள் குறித்து இந்தப் பயணத்தின்போது இராணுவத் தளபதி, திருத்தல பங்குத்தந்தையிடம் விரிவாக ஆராய்ந்தார்.

நேற்றுமுன்தினம் விசேட வழிபாடுகளிலும் இராணுவத்தினர் ஈடுபட்டனர். (ஐ)

## விசுவாச ஆண்டுக் கொண்டாட்டம்

### மன்னாரில் ஆயர் தலைமையில் சிறப்பு மாநாடு

மன்னார்,நவ.18

போப்பாண்டவர் 16 ஆம் பெனடிக்ற் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்ட விசுவாச ஆண்டைக் கொண்டாடும் வகையில் மன்னார் மறைமாவட்டத்தினரின் திட்டமிடல் மாநாடு கடந்த 11ஆம், 12 ஆம் திகதிகளில் மடு தியான இல்லத்தில் நடைபெற்றது.

இந்த வருடம் ஒக்ரோபர் 11ஆம் திகதி தொடக்கம் 2013 நவம்பர் 24 ஆம் திகதி வரையான காலப்பகுதியை 'விசுவாச ஆண்டாக' பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் சிறப்புரை, கருத்துப் பரிமாற்றங்கள், குழு ஆய்வு என்பன இடம் பெற்றன.

முதல் நாள் நிகழ்வாக ''விசுவாசத்தின் வாயில்'' எனும் திருத்தந்தையின் திருத்தூது மடல் பற்றிய விளக்கத்தை மன்னார் மறைமாவட்ட குடும்பநல - பொது நிலையினர் ஆணைக்குழு இயக்குநர் அருட்திரு. எஸ். கே. தேவராஜா அடிகளார் வழங்கினார்.

இரண்டாம் நாள் நிகழ்வில், குழுக்கலந்துரையாடல்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பொது அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த மாநாட்டில் மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த மன்னார் மறை மாவட்டத்தில் பணி புரியும் அனைத்துக் குருக்களும், துறவற சபைகளைச் சார்ந்த பிரதிநிதிகளும், பொதுநிலைப் பிரதிநிதிகளுமாக 160 பேர் கலந்து கொண்டனர். (ஐ-12)

## சுருக்குவலைக்கு தாழ்வுபாட்டில் தடை

### நிர்க்கதி நிலையில் 100 குடும்பங்கள்

மன்னார், நவ.18

மன்னார், தாழ்வுபாடு கடலில் சுருக்குவலைத் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு கடற்படை தடை விதித்துள்ளது. சட்ட விரோத மீன்பிடி முறை என அறிவிக்கப்பட்ட நிலையில் இந்த மீன்பிடி முறையை கடற்படையினர் தடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாழ்வுபாடு கடற்பகுதியில் 100 க்கும் மேற்பட்ட மீனவர்கள் சுருக்குவலை தொழிலில் ஈடுபட்டுவருகின்றனர். இதனால் கடல்வளம் அழிக்கப்படுவதாக பல தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனை அடுத்து கடந்த புதன்கிழமையில் இருந்து சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன்பிடிக்கக் கூடாது என கடற்படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

ஏனைய அனுமதிக்கப்பட்ட மீன்பிடி முறைகளுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சுருக்குவலை மீன்பிடி அனுமதி மறுக்கப்பட்டதால் அந்தத் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட 100 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் சுருக்குவலை தொழிலாளி ஒருவர் உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

''எங்களுக்கு வேறு தொழில் முறைகள் தெரியாது, அதனைவிட போதிய உபகரணங்களும் இல்லை. அதனால் நீண்டகாலமாக சுருக்குவலை தொழிலையே செய்து வந்தோம். தற்போது கடற்படையினர் இதற்கான அனுமதியை மறுத்துள்ளனர். இதனால் நாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளோம்'' - என்றார். (ஐ-ரி)

## 78 தனியார் பஸ்கள் மன்னாரில் இருந்து வெளி இடங்களுக்கு

மன்னார்,நவ.18

மன்னார் தனியார் பஸ் நிலையத்திலிருந்து உள்ளூர் மற்றும் வெளியூர் சேவைகளில் 78 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன என்று தனியார் பஸ் சங்கம் அறிவித்துள்ளது.

சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தனியார் பஸ்களில் கொழும்புக்கு 12 பஸ்களும், வவுனியாவுக்கு 7 பஸ்களும், யாழ்ப்பாணத்துக்கு 7 பஸ்களும், கற்பிட்டிக்கு 4 பஸ்களும் , முழங்காவிலுக்கு 2 பஸ்களும், புத்தளம், பிலியந்தலை, நீர்கொழும்பு, கண்டி, மொனராகலை ஆகிய இடங்களுக்கு ஒவ்வொரு பஸ்ஸும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் உள்ளூர் சேவைகளில் நானாட்டனுக்கு 4 பஸ்களும், அரிப்புக்கு 5 பஸ்களும், தலைமன்னாருக்கு 10 பஸ்களும், பேசாலைக்கு 12 பஸ்க[illegible] பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மன்னார் தனியார் பஸ் நிலையத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு சேவையில் ஈடுபடும் பஸ்களில் யாழ்ப்பாணத்துக்கு அதிகாலை 5 மணி, காலை 6.15 மணி, 7.30 மணி, 9 மணி, முற்பகல் 10 மணி, 11 மணி, நண்பகல் 12 மணி ஆகிய நேர ஒழுங்கில் 7 பஸ்களும், வவுனியாவுக்கு அதிகாலை 5.30 மணி, காலை 7 மணி, 8 மணி, [illegible] 9.30 மணி, [illegible]0 மணி, 11 மணி, நண்பகல் 12 மணி ஆகிய நேர ஒழுங்கில் 7 பஸ்களும் , கொழும்புக்கு அதிகாலை 3.30 மணி, 4.30 மணி, காலை 7 மணி, 8 மணி, முற்பகல் 11.30 மணி, பிற்பகல் 1.30 மணி, மாலை 5.15 மணி, இரவு 7.30 , 9 மணி, 10 மணி , 10.30 மணி, 11 மணி, 11.30 மணி ஆகிய நேர ஒழுங்கில் 12 பஸ்களும், கற்பிட்டிக்கு அதிகாலை 5 மணி, காலை 6.15 மணி, முற்பகல் 11.20 மணி, பிற்பகல் 3.15 மணி, ஆகிய நேர ஒழுங்கில் 4 பஸ்களும் புத்தளத்துக்கு பிற்பகல் 3.15 மணிக்கும், பிலியந்தலைக்கு பிற்பகல் 3.30 மணிக்கும், நீர்கொழும்புக்கு நண்பகல் 12.15 மணிக்கும், கண்டிக்கு பிற்பகல் 2.30 மணிக்கும், மொனராகலைக்கு காலை 7.20 மணிக்கும், முழங்காவிலுக்கு பிற்பகல் 1.30 மணி, மாலை 5.30 மணி ஆகிய நேரங்களில் 2 பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன எனவும் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமான மீன்பிடி இலங்கைக்கு எச்சரிக்கை

## விடுத்தது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, நவ.18

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் இலங்கை உள்ளிட்ட 8 நாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாக ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை உள்ளிட்ட குறித்த நாடுகளுக்கு விடுக்கப்பட்டுள்ள இந்த எச்சரிக்கை ஒரு மஞ்சள் அட்டையே என்றும், அதற்கு அடுத்த கட்டமாகவே கறுப்புப் பட்டியலில் உள்ளடக்குவது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்ட விரோதமான, முறையற்ற மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்படுவதில் ஒத்துழைக்கத் தவறினால் இலங்கை உள்ளிட்ட எட்டு நாடுகளையும் கறுப்புப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள நேரிடும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்துள்ளது.

பனாமா, பெலிஸ், கம்போடியா, பிஜி, கினியா, டோகோ, இலங்கை, வனாட்டு ஆகிய நாடுகளுக்கே ஐரோப்பிய ஒன்றியம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

அனைத்துலகச் சட்டங்களுக்கு அமைய செயற்படத் தவறினால், இந்த நாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் மீன்பிடி ஆணையாளர் மரியா டமனாகி எச்சரித்துள்ளார்.

கலந்துரையாடல் மற்றும் ஒத்துழைப்பின் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் இந்த நாடுகள் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான கால அவகாசத்தை வழங்கவும் ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

ஆனால், அந்தக் காலப் பகுதிக்குள் முன்னேற்றத்தைக் காண்பிக்காது போனால், ஐரோப்பிய ஒன்றியம் வர்த்தக நடவடிக்கை தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றும்படி கேட்டுக் கொள்ளப்படும் என்றும் மரியா டமனாகி குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த எச்சரிக்கையை இலங்கை உதாசீனம் செய்தால், இலங்கையின் கடலுணவு ஏற்றுமதிக்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை விதிக்கும் நிலை ஏற்படலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

# முதியோருக்கு அன்பளிப்பு

நவாலி, நவ. 18

நவாலி கிழக்கு முதியோர் சங்கத்துக்கு அந்த ஊரைச் சேர்ந்த புலம்பெயர் உறவான செந்தில்குமரன் என்பவரினால் அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி நபரினால் உடுபுடைவைகள், உலர் உணவுப் பொருள்கள், பணப்பரிசு என்பனவும் வழங்கப்பட்டுள்ளன. நவாலி முருகமூர்த்தி ஆலய கல்யாண மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் எண்பதுக்கும் மேற்பட்ட முதியவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (3-100)

# பல்தரக் கற்பித்தல் குறுங்கால கற்கைநெறி

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடத்தப்பட இருக்கும் பல்தரக் கற்பித்தல் குறுங்காலக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த கற்கை நெறியில் இணைய விரும்பும் ஆசிரியர்கள் 25.11.2012 க்கு முன்னதாக தமது விண்ணப்பங்களை யாழ். பிராந்திய அலுவலகத்தில் ஒப்படைக்கலாம் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (3)

# கண்ணலிங்கேஸ்வர ஆலய உற்சவம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் ஆலய சோமவார உற்சவம் நாளை திங்கள்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து ஐந்து தினங்கள் இடம்பெறும்.

பூசைகள் யாவும் பிற்பகல் 3மணிக்கு ஆரம்பமாகி, வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து கண்ணலிங்கேஸ்வரர் உள்வீதி வலம் வரவுள்ளார். (எ)

# நேர அட்டவணை மாற்றம்

நாளை திங்கள்கிழமை நடைபெறவிருந்த தரம்-9 மாணவர்களுக்கான தமிழ்மொழி மற்றும் அழகியல் பாடங்களுக்கான மாகாண மட்ட பொதுப்பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

ஏனைய பாடங்கள் அதே நேர அட்டவணைக்கமைய 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் நடைபெறுமென வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (3)

# துரித கணிதப் போட்டி

தென்மராட்சி, நவ.18

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களுக்கான துரித கணிதச் செய்கைப்போட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-9)

# கம்பளையில் தனியார் நிறுவன பாதுகாப்பு அதிகாரி படுகொலை



கொழும்பு, நவ.18

கம்பளை நகரத்திலுள்ள தனியார் நிதி நிறுவனம் ஒன்றின் பாதுகாப்பு அதிகாரி இனந்தெரியாதோரால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பாதுகாவலர் நிதிக் கம்பனியின் முன்புற பாதுகாப்பு அறையில் கடமையில் இருந்த போது இரும்புக் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே பிரவேசித்த சந்தேகநபர்கள், அவரைக் கொலைசெய்து விட்டுச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

சம்பவத்தில் கம்பளை தொளஸ்பாகை ஹிராவுடவைச் சேர்ந்த என்.காமினி (வயது 54) என்ற குடும்பஸ்தரே கொலையுண்டவர் ஆவார்.

நேற்று சனிக்கிழமை காலை சம்பவம் நடைபெற்ற இடத்தில் இரத்த வெள்ளத்தில் இருந்த பாதுகாவலரை கண்ட நிறுவன ஊழியர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இதனை அடுத்து அந்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த கம்பளை மாவட்ட பதில் நீதிவானின் உத்தரவின் பேரில் சடலம் கம்பளை வைத்தியசாலைக்கு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

கொலைச் சம்பவம் நடைபெற்ற இடத்தில் பல தடயப் பொருள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

# இந்திய வீட்டுத் திட்டத்தில் நெடுந்தீவுக்கு 275 வீடுகள்

யாழ்ப்பாணம், நவ.18

நெடுந்தீவில் இந்திய வீட்டுத்திட்டம் வழங்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் நேற்றும் நேற்று முன்தினமும் இடம்பெற்றன. பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான படிவங்களை நிரப்புவது தொடர்பான பயிற்சிகள் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர்களுக்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. இந்திய வீட்டுத்திட்டத்துக்குப் பொறுப்பான இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை உத்தியோகத்தரால் இந்தப் பயிற்சிகள், உதவி அரச அதிபர் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டன.

கிராம அலுவலர் பிரிவுகளில் வழங்கப்படும் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டதும் பயனாளிகளுக்கான தெரிவு இடம்பெறும். நெடுந்தீவில் சுமார் 275 வீடுகள் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளன. உரிய ஆவணங்களை வழங்குவதனூடாகவே இந்தத் தெரிவு இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (3-7)

# இலங்கைப் பெண்கள் மூவர் சென்னையில் கைதாகினர்

88 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளுடன் இலங்கைப் பெண்கள் உட்பட மூவரை சென்னை விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்ததாக சென்னை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து வெள்ளிக்கிழமை சென்னை சென்றடைந்த குறித்த பெண்களின் ஆடைகளுக்குள் தங்க நகைகள் ஒளித்து வைக்கப்பட்டிருந்ததைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

சூட்சுமமான முறையில் இந்த நகைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக சென்னைப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நகைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த விதம் குறித்து சந்தேகம் அடைந்த நிலையில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம)

# சட்டவிரோத சிகரெட் விற்றவருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், நவ.18

வரி அனுமதிப்பத்திரம் இல்லாத 20 சிகரெட் பைக்கெட்டுக்கள் மானிப்பாய் பகுதியில் உள்ள தனியார் விற்பனை நிலையம் ஒன்றில் சங்கானை மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டபோது விற்பனை நிலையத்தின் உரிமையாளருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது என சங்கானை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி தர்மலிங்கம் நந்தகுமார் தெரிவித்தார். (த-14)

# இளைஞர்கள் முன்மாதிரி பொலிஸார் பாராட்டு

வலி.வடக்கு, நவ.18

உப பொலிஸ் பரிசோதகரால் தவறவிடப்பட்ட சம்பளப் பணத்தைக் கண்டெடுத்து தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த இளைஞர்கள் இருவரின் முன்மாதிரியான செயல்பாட்டைப் பொலிஸார் பாராட்டியுள்ளனர்.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சைக்கிளில் ரோந்து நடவடிக்கை மேற்கொண்ட வேளையில் கடந்த வியாழக்கிழமை தனது சம்பளப் பணம், தேசிய அடையாள அட்டை, பொலிஸ் அடையாள அட்டை மற்றும் வங்கி அட்டைகள், சாரதி அனுமதிப்பத்திரம் என்பவற்றைத் தவறவிட்டுள்ளார்.

இந்த நிலையில் நீர்வேலி வடக்கு கேணியடியைச் சேர்ந்த இளைஞர்களான க.ரவிராஜ், சி.செந்தில்செல்வன் ஆகியோர் வீதியில் கிடந்த குறித்த பேர்ஸைக் கண்டெடுத்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

தற்போது இடம்பெறும் திருட்டுக்களுக்கு மத்தியில் வீதியில் கிடந்த பத்தாயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணத்துடன் கூடிய பேர்ஸை கண்டெடுத்துப் பொலிஸாரிடம் நேர்மையாகக் கையளித்த இளைஞர்கள் இருவரையும் பொலிஸார் பாராட்டியதுடன் சன்மானம் கொடுக்க முனைந்த போது அதனையும் குறித்த இளைஞர்கள் ஏற்க மறுத்து விட்டனர் என்றும் பொலிஸார் கூறினர். (ம 86)

# சுவாமி விபுலானந்தரின் ஜெயந்தி தின மாநாடு

வலி. வடக்கு, நவ. 18

சுவாமி விபுலானந்தரின் 150 ஆவது ஜெயந்தி தின ஊர்வலமும் மாநாடும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. ஏழாலை மகா வித்தியாலய முன்றிலில் இருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயத்தை வந்தடையும்.

ஊர்வலம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து ஏழாலை சைவமகாஜன வித்தியாலய மண்டபத்தில் ஓய்வு பெற்ற அதிபர் செ.சிவநடராசா தலைமையில் மாநாட்டு நிகழ்வுகள் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகவுள்ளன.

சைவமகாஜன வித்தியாலய மாணவிகளின் தேவாரம் மற்றும் வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து வரவேற்புரையை ஏழாலை சைவ மகாஜன வித்தியாலய அதிபர் திருமதி தேவகி புவனேஸ்வரனும் ஆசியுரையை பிரம்மஸ்ரீ ச.பிரணதார்த்திகரசர்மாவும் நிகழ்த்துவர்.

விவேகானந்தரின் சிந்தனைப் பேருரைகளை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன், குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலய அதிபர் த.குணரெட்ணம், ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் செ.பரமேஸ்வரன், ஏழாலை மகா வித்தியாலய ஆசிரியைகள் திருமதி தமிழ்ச்செல்வி சண்முகானந்தன், திருமதி ஜெனகா சிவசுப்பிரமணியம் ஆகியோர் நிகழ்த்துவர். (ம-86)

# முதியவரின் ரோச் லைற்றும் வழியில் தட்டிப்பறிப்பு

## மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் கை வரிசை

யாழ்ப்பாணம், நவ.18

இரவு வேளையில் வீதியில் சென்று கொண்டிருந்த வழிப்போக்கர் ஒருவரின் ரோச் லைற்றை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் பறித்துச் சென்ற சம்பவம் சுன்னாகத்தில் இடம்பெற்றுள்ளது.

சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் வசிக்கும் 61 வயதான முதியவர் ஒருவர் அங்குள்ள மின்சார நிலையத்துக்குச் செல்லும் வீதியில் வசிக்கும் உறவினர் ஒருவரைப் பார்த்து வருவதற்கெனக் கடந்த சனிக்கிழமை இரவு வேளையில் சென்றுள்ளார்.

உறவினரை நலம் விசாரித்த பின்னர் இரவு 9.30 மணியளவில் சுன்னாகம் ஸ்ரேசன் வீதியூடாக தமது வீட்டை நோக்கி சைக்களில் இந்த முதியவர் சென்றுள்ளார். இருளைப் போக்குவதற்கு அவரது கையிலிருந்த ரோச் லைற் பெரிதும் உதவியது.

அவர் ஸ்ரேசன் வீதியிலிருந்து மயிலணி ஊடாகச் செல்லும் வீதியை அண்மித்த போது மோட்டார் சைக்கிளொன்று வேகமாக வந்து இவரது காலடியில் திடீரென நிறுத்தப்பட்டது. இதனால் தடுமாறிய அந்த முதியவர் ஒருவாறு தம்மைச் சுதாகரித்துக் கொண்டார். அதில் இருவர் அமர்ந்திருப்பது அவரது கண்களில் தென்பட்டது. எவர் பற்றியோ தம்மிடம் இவர்கள் விசாரிக்கப்போகிறார்களெனப் பெரியவர் எண்ணினார். ஆனால் நிகழ்ந்ததோ வேறு.

வந்தவர்களில் ஒருவர் முதியவரின் கையிலிருந்த ரோச் லைற்றை இழுத்துப் பறித்தார். இதன்பின்னர் மோட்டார் சைக்கிளும் ஓடி மறைந்தது.

முதியவரும் விடவில்லை. அந்த இருளிலும் அவர்கள் சென்ற திசை நோக்கி வேகமாகச் சைக்கிளை செலுத்தினார். ஊகத்தில் இரண்டு சாராய பார்கள், ஒரு கொத்து ரொட்டிக்கடை ஆகியவற்றில் ஆள்களைச் சல்லடை போட்டுத் தேடினார். ஆனால் அவர்கள் அகப்படவேயில்லை என அவர் தெரிவித்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## காசிப்பிள்ளை செல்லையா (வாத்தியார்)

**(இளைப்பாறிய ஆசிரியர் - பளை மத்திய மகாவித்தியாலயம், வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், யாழ்/தெல்லிப்பழை - மகாஜனக்கல்லூரி, பலாலி சாதனா பாடசாலை).**



யாழ்ப்பாணம், பலாலி மத்தியைப் பிறப்பிடமாகவும், ஐயனார் கோயில் வீதி, வண்ணார் பண்ணை மற்றும் உடையார் லேன், கந்தர்மடத்தினை நிரந்தரவதிவிடமாகவும் தற்போது 538/12 B 3/7 அளுத்மாவத்தை வீதி, கொழும்பு - 15 இல் வசித்தவருமான ஓய்வு பெற்ற ஆசிரியர் காசிப்பிள்ளை செல்லையா 16.11.2012 வெள்ளிக்கிழமை செல்வச்சந்நிதியான் பாதக்கமலம் சேர்ந்தார்.

அன்னார் பலாலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஓய்வுபெற்ற ஆசிரியர் சின்னத்தம்பி காசிப்பிள்ளை - காசிப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதி யரின் சிரேஸ்ட புதல்வரும், கைதடியைச் சேர்ந்த காலஞ்சென்ற கமவிதானையார் வல்லிபுரம் சண்முகம் - சண்முகம் தில்லைப்பிள்ளை தம்பதியரின் மூத்தமருமகனும், திருமதி முத்தம்மா செல்லையா (ஓய்வு பெற்ற ஆசிரியை - யாழ். இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை) அவர்களின் அன்புக்கணவரும், திருமதி சத்தியகலா சக்திவேல் (விரிவுரையாளர் Australia), திருமதி நித்தியகலாமோகன் (கொமர்ஷல் வங்கி - தலைமைக்காரியாலயம்), திருமதி சத்தியானந்தி ஜீவகாந்தன் (Canada) , திருமதி சதேஷ்வரி ஸ்ரீனிவாசன் (ஆசிரியை - யாழ். செட்டித்தெரு மெதடிஸ்ட் மிஷன் பாடசாலை), Dr. செல்லையா செந்தில்குமரன் (Neurotrauma Centre The Nationla Hospital of SriLanka - Colombo) , செல்வி ரேணுகா செல்லையா (Colombo), திருமதி சியாமளா இரவீந்திரன் (Denmark) ஆகியோரின் பாசமிகு அப்பாவும், மகேந்திரன் சக்திவேல் (Australia), பொன்னுத்துரைமோகன் (Dammam), தாமோதரம்பிள்ளை ஜீவ காந்தன் (Canada), காசிராசா ஸ்ரீனிவாசன்(Jaffna), திருமதி தயாளினி செந்தில்குமரன் (Colombo), இராமச்சந்திரன், இரவீந்திரன் (Denmark) ஆகியோரின் அன்பு மாமாவும், Ahash, Akeeshan, Aisvika, Anchana Maathanki, Subanki, Shaajine, Shelyoahn ஆகியோரின் ஆசைத்தாத்தாவும், Rakshaya, Raksayan ஆகியோரின் அருமை அப்பப்பாவும், பலாலியைச் சேர்ந்த திருமதி அன்னப்பிள்ளை சுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான திருமதி புவனேஸ்வரி செல்லையா, காசிப்பிள்ளை பொன்னம்பலம் ஆகியோரின் அருமைச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2012) திங்கட்கிழமை மு.ப. 10 மணி தொடக்கம் -A, Jayaratne ( PARLOUR ) மலர்ச்சாலை பொரளையில் நடைபெற்று பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**Dr. Chelliah Senthilkumaran**
**NSU/NHSL - 077 7777583**

(சி/1868)(6.7.8)

தகவல்:
குடும்பத்தினர்.

## சங்கானை குடியேற்ற மக்கள் காணி வழங்கக் கோரிக்கை

50 வருட காலமாக சங்கானை மத்தி குடியேற்ற காணியில் குடியமர்ந்துள்ளோம். ஆனால் இது வரை வலி.மேற்கு பிரதேச சபை எமக்கு காணி பகிர்ந்து வழங்கவில்லை.

சங்கானை மத்தி அம்பாள் சனசமூக நிலைய தலைவர், செயலாளர் இவ்வாறு கவலை தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண முன்னாள் பிரதேச செயலாளர் எஸ்.ரங்கராஜன் வலி. மேற்கு பிரதேச சபையின் காணியை பகிர்ந்து வழங்குமாறு கோரி வடக்கு மாகாண ஆளுநரின் அனுமதியை பெற்று கடிதம் எழுதியிருந்தார்.

இந்தக்கடிதம்முறையே வலி.மேற்கு பிரதேச சபைக்கும் வலி.மேற்கு பிரதேச செயலகத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

ஆனால் அன்றைய காலத்தில் வலி.மேற்கு பிரதேச சபை செயலாளரின் நிர்வாகத்துக்கு கீழ் இருந்தது..

ஆனால் தற்போது சபை வந்து 12 மாதங்கள் முடிவுற்றுள்ளது.

சங்கானை மத்தி காணியை பகிர்ந்து வழங்குவது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டும்கிடப்பில்போடப் பட்டுள்ளது. தற்போது களைப்படைந்து விட்டோம் என்று மேலும் கூறினார். (ம-50)

# வேலைவாய்ப்பு
## SANKEN CONSTRUCTION (PVT) LTD

தரமான கொங்கிறீட் விநியோகிக்கும் சங்கன் ஸ்தாபனத்துக்கு கீழ்வரும் வேலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன



- ★ பார ஊர்தி சாரதிகள்
- ★ சிறிய வாகன சாரதிகள்
- ★ கொங்றீட் பம்ப் ஒப்பரேட்டர்கள்
- ★ கொங்கிறீட் பம்ப் ஒப்பரேட் பண்ண பழக விரும்பும் Trainees
- ★ வேலைத்தளத்தில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய வேலையாள்கள்.

(25434) (10,6,7)

விவரங்களுக்கு நற்சான்றிதழுடன் விண்ணப்பிக்கவும்

**பெ. நிரஞ்சன்**
**No-31, வைமன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி: 0775349916, 0212241185.**

# தசாக கிரஹயக்ஞ அழைப்பு

நிகழும் நந்தன வருடம் ஐப்பசி மாதம் 24 ஆம் நாள் (09.11.2012) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த

***பிரம்மஸ்ரீ நடராஜஐயர் இராமச்சந்திரசர்மா***

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

தசாகம்:- கார்திகை மீ 03 ஆம் நாள் 18.11.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி

ஏகோதிஷ்டம் மாசியம்:- கார்திகை மீ 04 ஆம் நாள் 19.11.2012 திங்கட்கிழமை

சபிண்டிகரணம்:- கார்த்திகை மீ 05 ஆம் நாள் 20.11.2012 செவ்வாய்க்கிழமை

மேற்படி கிரியைகளிலும்

கிருஹயக்ஞம்:- கார்த்திகை மீ 06ஆம் நாள் 21.11.2012 புதன்கிழமை நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

விக்ரோறியாக் கல்லூரி அண்மை,
பிரதான வீதி, சுழிபுரம். (25449)(3.14) குடும்பத்தினர்.

வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2011/2012 (வெளிவாரி)

**Bachelor of Businees Management (Online) Degree Programme - 2011/2012**

புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை - 2011

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகினூடாக நடத்தப்படும் தமிழ் மொழி மூலமான மூன்று வருட இணையவழி வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அனுமதிக்கான தகைமைகள்:

- ✱ க.பொ.த. (உ/த) பரீட்சை - 2010 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக் கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்.

**அல்லது**

- ✱ பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

முக்கிய குறிப்பு: இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

மாணவர் தெரிவு: விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப்பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்:

1. விண்ணப்பப்படிவத்தினை நேரடியாக பெறவிரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 250 ஐ செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டை சமர்ப்பித்து யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் மற்றும் வெளிவாரிப் பட்டப் படிப்புகள் அலகில், அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெறவிரும்புவோர், யாழ்ப்பாணப் பல் கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட, ரூபா 250 க்கான காசுக் கட்டளை/ தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 40.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 25 × 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு, யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும்.
2. விண்ணப்பப்படிவத்தினை www.jfn.ac.lk/bbm எனும் இணைய முகவரியிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்தல்:

விண்ணப்பங்கள் யாவும் உதவிப்பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு'' என தெளிவாகக் குறிப்பிடப் படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 28.12.2012

மேலதிக விபரங்களுக்கு: 021 222 1106, 021 222 3610, 021 222 3612 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

பதிவாளர், (சி/1855) (45.6.7)

நீங்கள் பொறுப்பான பெற்றோரா?
A/L இன் பின் உங்கள் பிள்ளைக்கு
சரியாக வழிகாட்டினீர்களா

S. Mayoorran
தலைமையிலான
தரம் வாய்ந்த விரிவுரையாளர்களிடம்

யாழ் CAPSTONE இல்
CIMA கற்கும் வாய்ப்பு
புதிய பிரிவு ஆரம்பம் 01-12-2012
[Weekend batch]

LIMITED ADDMISSIONS



CALL : 0212220727
0771250350
SMS : 0779148753

(25428) (10,6,7)

No: 154-A/1, Navalar Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச துறையில் பணிபுரிவோருக்கு உபகார இணையத்தள வசதிகள்

தேசிய கையடக்கத் தொலைபேசி வலையமைப்பான மொபிடெல் நிறுவனம், 2008 ஆம் ஆண்டில், நாட்டின் தொலைத்தொடர்புத்துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தி, அரச துறையில் சேவையாற்றுவோருக்கு மொபிடெல் உபகார பொதியை அறிமுகப்படுத்தியது.

இவ்வாறு அரச ஊழியர்களுக்கு விசேட மாற்றத்தைக் கொண்டு வந்த மொபிடெல் உபகார பொதிக்கு மேலும் பெறுமதிசேர்க்கும் வகையில், இப்போது புரட்சிகரமான இணையத்தள சேவை யையும் அவர்களுக்கு வழங்கும் செயற்பாட்டை மொபிடெல் நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்கு அமைய, தொலைத்தொடர்புத் துறையில் வளர்ச்சியை ஏற்படுத்த, இந்த நாட்டை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றும் அரசின் தொலைநோக்கிற்கு அமைய, மொபிடெல் நிறுவனத்தின் மூலம் இதுவரை பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த விசேட இணையத்தள வசதியும், தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சுடன் இணைந்த ஒரு வேலைத்திட்டமாக இருப்பதுடன், இது அரச ஊழியர்களின் பணியைப் பாராட்டும் வகையிலான, அவர்களது பிள்ளைகளின் கல்வி அறிவில் வளர்ச்சியை ஏற்படுத்தும் ஒரு சிறந்த வேலைத்திட்டமாகும்.

மொபிடெல் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி லலித் டி சில்வா இது சம்பந்தமாக கருத்து தெரிவிக்கையில், தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்கென தற்போதைய அரசு மேற்கொண்டு வரும் வேலைத்திட்டங்களுக்கு உறுதுணையாக, தேசிய கையடக்கத் தொலைபேசி வலையமைப்பான மொபிடெல் நிறுவனம் தொடர்ச்சியாக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றது.

கிராமத்துக்கு தகவல் தொழில்நுட்பத்தை கொண்டு செல்லும் வேலைத் திட்டத்திற்கு உதவும் வகையில், நாம் கிராமப் புறங்களில் எமது தகவல் நிலையங்களை ஆரம் பித்துள்ளோம். தனது தேசிய பொறுப்பை நன்கு விளங்கி, கையடக்கத் தொலைபேசித் துறையில் எந்தவொரு நிறுவனமும் இதுவரை ஆற்றல் எல்லையைப் பெற்றுத் தராத பிரதேசங்களையும் தேடிச் சென்று அவர்களுக்கும் தொலைத்தொடர்புத் துறையின் வளர்ச்சியின் அனுகூலங்களைப் பெற்றுக்கொடுக்க மொபிடெல் நிறுவனம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. தகவல் தொழிநுட்ப துறை சார் அறிவினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த இலங்கையின் அனைத்து குடிமகனிடையேயும் தகவல் தொழிநுட்ப அறிவு மற்றும் அநுபவத்தினை மேம்படுத்த வேண்டுமென நாம் நம்புகின்றோம்.

அரச துறையின் தரமேம்பாட்டின் மூலம், நாட்டின் அபிவிருத்தி துரிதமடையும் என்பதனால், அரச ஊழியர்களின் சேவையைத் தொடர்ச்சியாகப் பாராட்டும் நிறுவனமாக, உலகின் நவீன தொலைத்தொடர்பு வசதிகளை அரச துறைக்கு தயங்காது பெற்றுக் கொடுத்து வருகின்றோம்- என்றார். (த)

## கூந்தல் பராமரிப்புக்கான Clear புதிய கண்டுபிடிப்பு




இவ்வுலகில் பொடுகுத் தொல்லை மற்றும் தலை சம்பந்தமான பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும் 60 வீத மானவர்களில் நீங்களும் உள்ளடங்குகிறீர்களா? இலங்கை யுனிலீவர் நிறுவனமானது சர்வதேச அழகுசாதன தோலியல் நிறுவனத்தைச் (IACD) சேர்ந்த உலகின் முன்னணி தோலியல் வைத்தியர்களை இணைத்துக் கொண்டு தலை சம்பந்தமான பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வாக 'Nutrium10' என்ற புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. ஆய்வறிக்கைகளுக்கு அமைய, பொடுகு மற்றும் ஏனைய தலை சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட தலைவரண்டு காணப்படுவதே காரணமாகும்.

மேலோட்டமாக கூந்தலை கழுவுவதன் மூலம் சிராய்ப்புகள் சுத்தமானாலும, கூந்தல் வேர்ப் பகுதிகள் தூய்மையாகாது. 'Nutrium10' ஆனது மூன்று கட்டங்களாக பொடுகு ஏற்படுவதற்கான காரணங்களை தடுக்கிறது. முதலாவதாக, பொடுகு ஏற்படுவதற்கான காரணங்களுக்கு எதிராக செயற்படக்கூடிய வகையில் தலைக்கு இயற்கையான பாதுகாப்பினை அளிக்கிறது.

இரண்டாவதாக, மூன்று அடுக்குகளாக தலையின் அடிப்பாகத்திற்கு ஊடுருவி இயற்கையான தன்மையை பாதுகாக்கிறது. மூன்றாவதாக, பொடுகை நீக்கி கூந்தலின் மேற்புறத்தை பாதுகாக்கிறது. ஏனைய பொடுகு நீக்கி ஷாம்போக்களை போலல்லாது, Clear இல் அடங்கியுள்ள Pro&Nutrium10 மற்றும் Nutrium 10 போன்றன ஆண், பெண் இருபாலாருக்கும் சிறந்த தீர்வை வழங்குகிறது. (த)

## ஆண்டின் சிறந்த 10 வர்த்தக தலைவர்கள் தரப்படுத்தல்

LMD சஞ்சிகையின் மூலம் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் சிறந்த 10 வர்த்தகத் தலைவர்களைத் தெரிவு செய்யும் தரப்படுத்தலை அண்மையில் வெளியிட்டிருந்தது. இதன் தரப்படுத்தலுக்கு அமைய, பின்வரும் சிறந்த 10 தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

1. மஹேஷ் அமலீன்
2. ராஜன் பிரிட்டோ
3. அமல் கப்ரால்
4. சஞ்சீவ் கார்ட்டினர்
5. கலாநிதி விஜித் கன்ணங்கர
6. அஷரஃப் ஓமார்
7. மொஹான் பண்டிதகே
8. அசோக பீரிஸ்
9. சுசந்த ரத்நாயக்க
10. ஹரி செல்வநாதன்



மக்கள் வங்கியின் சிறுவர் தின சீட்டிழுப்பில் கன்னாதிட்டிக் கிளையின் வெற்றியாளராக இணுவில் இந்துக் கல்லூரி மாணவி செல்வி.ப.ஹேமப்பிரியா தெரிவு செய்யப்பட்டார். கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இணுவில் இந்துக் கல்லூரி பரிசளிப்பு வைபவத்தின் போது அந்த வெற்றியாளருக்கு மக்கள் வங்கி முகாமையாளர் க.நமேஸ்நேசன் வெற்றிப் பரிசாகிய சைக்கிளை வழங்குகின்றார். அருகில் கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான் உள்ளார். (த)

## ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் வருடாந்த திறன்காண் போட்டிகள்

ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் வருடாந்த 'பிரதீப 2012' எனும் தலைப்பில் கொழும்பு புனித சூசையப்பர் கல்லூரியின் பிரதான அரங்கில் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் 80இற்கும் அதிகமான ஜனசக்தியின் ஊழிய அங்கத்தவர்கள் தமது நடனத் திறமைகளை வெளிகாட்டியிருந்தனர். ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் வரலாற்றில் ஊழியர்கள் திறம்பட தமது திறமைகளை வெளிப்படுத்திய நிகழ்வாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் முன்னிலையில் தமது திறமைகளை இவர்கள் வெளிக்காட்டியிருந்தனர்.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக ஜனசக்தி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் பிரகாஷ் ஷாஃப்டர் கலந்து கொண்டிருந்தார். நிறுவனத்தின் ஊழியர்களின் திறமைகளை இவர் பாராட்டிக் கௌரவித்தார். (த)

## சி.பி.எல் நிறுவனத்துக்கு 11 விருதுகள்

நாட்டின் மிகப்பெரும் சொக்லேட் மற்றும் பிஸ்கட் வகைகளைத் தயாரித்து ஏற்றுமதி செய்யும் நிறுவனமான சி.பி.எல் நிறுவ னத்தின் பிரதான வர்த்தக நாமங்களில் ஒன்றான றிட்ஸ் பரிக்கு, அண்மையில் நடைபெற்ற 2012ஆம் ஆண்டுக்கான SLIM வர்த்தக நாம விருதுகள் வழங்கும் நிகழ்வில் முதன் முறையாக 11 விருதுகளைத் தனதாக்கியிருக்கிறது.

ஆண்டின் சிறந்த வர்த்தக நாம விருதை சி.பி.எல். நிறுவனத்தின் முன்னணி வர்த்தக நாமமான றிட்ஸ்பரி பெற்றுக் கொண்டிருந்ததுடன், மேலும் நான்கு பிரதான விருதுகளைத் தனதாக்கியிருக்கிறது. இதற்கு பிரதான காரணியாக புதிய கண்டுபிடிப்புகளாக அமைந்த தயாரிப்புகள் அமைந்திருந்தன.

றிட்ஸ்பரி மொத்தமாக நான்கு தங்க விருதுகளையும் ஒரு வெண்கல விருதையும் வென்றிருந்ததுடன், மஞ்சி வர்த்தக நாமம் ஒரு தங்க விருதையும் தனதாக்கியிருந்தது. மஞ்சி வர்த்தக நாமத்தின் சமூக பொறுப்புணர்வு திட்டத்துக்காக இந்த விருது வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மாற்றுத்திறன் கொண்ட பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கென வடிவமைக்கப்பட்டிருந்த சஹான் செவன எனப்படும் 'ஹோப்' குக்கீஸ் வகைகளைத் தயாரிக்கும் திட்டத்துக்கு ஆண்டின் சிறந்த சமூக பொறுப்புணர்வு வர்த்தக நாமத்துக்கான வெள்ளி விருது வழங்கப்பட்டிருக்கிறது.

## 'மெகாவாசி' பரிசளிப்பு




யாழ்.மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் மெகாவாசிக்கான விருது பெறும் கணக்குகளைப் பேணும் வாடிக்கையாளர்களில் அதிர்ஷ்டசாலிகளுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு யாழ்.மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.எம்.மாணிக்கசிங்கி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மத்தியவங்கி முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர் வங்கிச் சேமிப்புத் தொடர்பாக ஆலோசனையை வழங்கியதுடன் வெற்றியாளர்களுக்கான பரிசில்களையும் வழங்கினார்.

இதில் தலயாத்திரை செல்வதற்காகப் பணப்பரிசு மற்றும் வீட்டுத் தளபாட உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ஒரு லட்சம் பெறுமதியான காசோலை, 15 ஆயிரம் பெறுமதியான காசோலை, சிறுவர் பொன் அரும்புக் கணக்காளர்களுக்கான பணப்பரிசுக் காசோலை என்பனவும் வழங்கப்பட்டன. (த-14)

# ஆரோக்கிய வாழ்க்கைக்கு சைக்கிள் சவாரி

இலங்கையர்கள் மத்தியில் ஆரோக்கியமான வாழ்க்கையை ஏற்படுத்தும் வகையில், யுனிலீவர் நிறுவனத்தின் உடல் ஆரோக்கியம் தொடர்பாக தயாரிக்கப்படும் புளோரா மாஜரின், இலங்கை பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் கொழும்பு சைக்கிளிங் கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. அரச தனியார் நிறுவனங்களின் பங்குடமையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தக் கழகத்தை யுனிலீவர் நிறுவனத்தின் தலைவர் அமல் கப்ரால் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.



தமது உடல் ஆரோக்கியம் குறித்து அக்கறை கொள்வோர், இனி இந்த கொழும்பு சைக்கிளிங் கழகத்திலுள்ள சைக்கிள்களை வாடகைக்கு வழங்கும் பகுதி [illegible] சைக்கிள்களை மணித்தியாலத்துக்கு 100 ரூபா வீதம் வாடகைக்கு பெற்று தமது உடற்பயிற்சி தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்ள முடியும். இந்தக் கழகத்தை நிர்வகிக்கும் பொறுப்பை பாதுகாப்பு அமைச்சும் நகர அபிவிருத்தி அதிகாரசபையும் கொண்டுள்ளன.

மேலும், இந்த சைக்கிள்களை வாடகைக்கு அமர்த்துவதன் மூலம் திரட்டப்படும் நிதி ''நமக்காக நாம்'' நிதியத்துக்கு வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டம் குறித்து யுனிலீவர் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் பணிப்பாளர் அசங்க ரணசிங்க கருத்து தெரிவிக்கையில், ''கொழும்பு நகரம் தற்போது துரிதமாக அபிவிருத்தியடைந்து வருகிறது. பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் அர்ப்பணிப்பான செயற்பாடுகள் பெரிதும் வரவேற்கத்தக்கது. வளமானதும், ஒளிமயமானதுமான எதிர்காலத்துக்கு அடித்தளமிடும் வகையில், தேசத்தின் சிறந்த குடிமகன்களாக நாம் சிறந்த வாழ்க்கை பாணியையும் பழக்கவழக்க முறைகளையும் கைக்கொள்ள வேண்டும்.

இதன் அடிப்படையில் இந்த வாழ்க்கைப் பாணியை அபிவிருத்தி செய்யும் திட்டத்துக்கு பங்களிப்பு வழங்க எம்மால் முடிந்தமையையிட்டு நாம் பெரும் மகிழ்ச்சியடைகிறோம்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

இல.15, குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் (றெயில் றோட், கோயில் வீதி, ஆடிய பாதம் வீதி ஆகியவற்றுக்கு இடையில் அமைந்துள்ள ) 3 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0718474555 (25403)(2-6-7)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
08.07.1987

விண்ணில்
18.11.2008

**கனியூட் கட்சன்**



நீ மரணிக்கவில்லையடா – எல்லா உறவுகள் மனதிலும்
வாழ்ந்துகொண்டிருக்கிறாய்
உடன் பிறந்தவர்களுக்காய்
உன்னுயிரையே கொடுத்தவனே!
உன்னுடன் பழகிய உறவுகளெல்லாம்
உனைப் பற்றிக் கேட்கிறார்கள்.
எப்படிச் சொல்வோம் நீ முடிவில்லா
வாழ்வைத்தேடிச் சென்றுவிட்டாய் என
நீ விண்ணுலகில் தேவனோடு வீற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

*உன் நீங்கா நினைவுகளுடன்*
அப்பா - கனியூட்,
அம்மா - பற்றிமா நாயகி
(கமநல உத்தியோகத்தர்,
உடையார்கட்டு),அத்தான்,
சகோதரிகள், குட்டி மருமகள்.

நி.மு:- 10 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
த.மு:- பாசையூர், யாழ்ப்பாணம். (25382)(2-6-7)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி இராசா வள்ளிப்பிள்ளை
(பாக்கியம்) அம்மையார்
(குறுக்கு வீதி, மாசுவன், நீர்வேலி)

நீர்வேலி அருள்வளர் ஸ்ரீ செல்லக் கதிர்காம முருகன் திருத்தல ஸ்தாபகரான தபஸ்வினி செல்லாச்சியம்மையாரின் விஷேட ஆசீர்வாதத்துக்கு உரியவராய் ஆலய பராமரிப்புத் தத்துவம் வழங்கப் பெற்றவர்.

பதின்மூன்றாவது வயதிலேயே இப் பாக்கியம் பெற்றதால் 'பாக்கியம்' எனப் போற்றப்பட்ட இவ்வம்மையாரும் அந்த வயது முதல் இறைபதப்பேறு அடையும் வரை ஆலயப் பணிகளில் ஈடுபட்டுழைத்தவர். பிறரையும் கோயிற்பணிகளில் ஈடுபாடுறச் செய்தவர்.

இத்தகு பாக்கியமுற்ற வள்ளிப்பிள்ளையாம் அம்மையார் ஸ்கந்த ஷஷ்டிக்கால (கார்த்திகை திருதியையில்) சுவர்க்கப் பேறுற்றுள்ளார்.

இவர் தம் ஆத்மா செல்லக் கதிர்காமத்துச் செவ்வேள் மலரடிகளில் பூரண இன்பம் பெற பிரார்த்திப்பதுடன், அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

ஆலய சிவாச்சார்யாரும், அறங்காவல் சபையினரும்,
செல்லக் கதிர்காம தேவஸ்தானம், நீர்வேலி. (13978) (45.6.7)

## மரண அறிவித்தல்



**இராசா வள்ளிப்பிள்ளை**

நீர்வேலி மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட இராசா வள்ளிப்பிள்ளை நேற்றுமுன்தினம் (16.11.2012) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், பாலச்சந்திரன், காலஞ்சென்ற சந்திரலீலா, மற்றும் நகுலேந்திரன் (பிரான்ஸ்), தயாகரன், சத்தியதேவி (கனடா), தெய் வேந்திரம், சகுந்தலாதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் சிவபாதம் (கனடா), இந்திராதேவி (பிரான்ஸ்), விஜய லக்சுமி, சிவலிங்கம் (கனடா), தமயந்தி, ஜெயக் குமார் (கனடா) ஆகியோரின் மாமியும், சந்திரபிரதாப், ஜெசிந்தா, சிந்துஜா, யசிந்தன், அகிலன், ஜனகன், கிருபாலினி, ஜெயபாலினி (கனடா), கௌதமன், கௌசிகன், சரண்ஜா (பிரான்ஸ்), சிவாஜினி, சாமினி, தர்சிகா, கோபிராஜ், கிசோக் (கனடா), மயூரன், மதுராங்கன், அபிஜா, யனுசன், கபீர்தனன், திவாகரன், சனோஜா, தூயவன் (கனடா), கஜந்தி, றமணன் (கனடா), தர்மானந்தன், சிவராசா ஆகியோரின் பேர்த்தியும், சாருஜன், சஜித் (கனடா), மதுஷான், திலக்சன், அபிஷனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2012) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சீயாக்காடு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாசுவன் சந்தி,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர். (13977) (45.6.7)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி தபாற்பெட்டி சந்திக்கு அருகில் 5 7/16 பரப்புக்காணி சுற்றுமதிலுடன் கூடிய குழாய் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 075 2894893 (13980)(6,7,8)

## விற்பனைக்கு

நல்லின கமுகம் கன்றுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 021 225 0130, 071 847 5162 (25400)(6.7.8)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1978 மகம் 7 இல் செவ்வாய் Accountant UK Citizen மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை.
தொடர்பு: 0770783832 (25202)(2-6-7)

## உணவு பரிமாறுபவர்கள் தேவை

பிரபல ரெஸ்ரொறொன்ட் ஒன்றுக்கு உணவு பரிமாறுபவர்கள் தேவை.
வயது 18 - 30
தொடர்புகளுக்கு- 0777741750 (225459)(2.6)

## காணி விற்பனைக்கு

கச்சாய் கோயிற்பற்று வெள்ளாம் போக்கட்டியில் (பூசாரித்தோட்டம்) 60 பரப் புத் தென்னந்தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு. (பகுதிகளாகவும் விற்கப்படும்)
(21594)(6.7.2)
தொடர்பு : 0776405490, 0214901605

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நோய்த்தடுப்பூசி, பூச்சி மருந்து வழங்கப் பட்ட 55 நாள் நிரம்பிய நல்ல இன ஆண், பெண் அல்சேசியன் நாய்க்குட்டிகள் விற்பனைக் குண்டு.
தொடர்பு : இ. மனோகரன்
மாரியம்மன் கோவிலடி, கூழாவடி கிழக்கு ஒழுங்கை
ஆனைக்கோட்டை.
(25407)(6.7.8)

## வான் விற்பனைக்கு

Nissan Vanette ( Petrol) GR - XXXX இலக்கமுடைய வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 075 0407723 (13980)(6,7,8)

## விற்பனைக்கு

வைத்தியரின் பாவனையிலுள்ள Lancer 90 Honda Motorcycle விற்பனைக்குண்டு
விலை 190,000/=
T . P : 075 6366779 (25400)(6,7,8)

## காணி விற்பனைக்கு

ஊரெழு கிழக்கு, சங்கக் கடைக்கு முன்பாக உள்ள வீடும் 5½ பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.
(25441)(2.6) தொடர்பு- 0750441679

## வீடு வாடகைக்கு

கச்சேரிக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0756709408 (25452)(2-6-7)

## வீடு வாடகைக்குதேவை

அரச உத்தியோகத்தில் பணிபுரியும் இரண்டு பிள்ளைகளைக் கொண்ட குடும்பம் தங்குவதற்கு. சகலவசதிகளுடன் வீடு வாடகைக்கு தேவை.
(பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் விரும்பத்தக்கது)
தொடர்பு. 0777222262


## சாரதி தேவை

மின்சாதனப் பொருள்களை விற்பனை செய்யும் பிரபல ஸ்தாபனம் ஆன Jaffna Electrical க்கு AD Licence உடைய வாகன சாரதி தேவை.
தொடர்புகளுக்கு: 021 222 2353, 021 222 4302
**Jaffna Electrical,**
**Stanly Road, Jaffna.** (C/1870)(2-6-7)

## பணியாளர்கள் தேவை

சம்பளம் 20, 000/= தொடக்கம் 28,000/=, 38,000= வரை எங்கள் நிறுவனத்திற்கு பிஸ்கட், சொக்லேட், சவர்க்காரம், பால்மா, ரயர், கிளவுஸ், சிமெந்து சீற் ஆகிய தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி பொதியிடல், லேபல் அடங்கிய சுப்பர்வைசிங் 17 தொடக்கம் 55 வரை ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிடம் உண்டு. ஆண்பாலர்கள் குடும்பமாகவும் கணவன், மனைவியும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.
தொடர்பு : 071 3460295 (அநுராதபுரம்)
(13980)(6.7.8)

## 10 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
02.04.1936

உதிர்வு
09.12.2002

திதி: 18.11.2012

அமரர்
**மா.சின்னத்துரை**
(ஓய்வுபெற்ற உப அதிபர்)

பாசமுடன் எமை வளர்த்து
பாரினில் மிளிர வைத்த அப்பா!
ஆண்டுகள் பத்து ஆனாலும் – உங்கள்
நினைவுகளுடனேயே நாங்கள் வாழ்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சிவகிரி, கேணியடி, குப்பிளான். (25458)(2.6.7)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை சங்கீத
ஆசிரியை திருமதி
விக்கினேஸ்வரி ஈஸ்வரன்
அவர்களின் அன்புத் தந்தை
வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பா/ கைதடி குருசாமி வித்தியாலயம். (25422)(6-7-45)

## பாலர் ஞானோதய சங்கத்தின் அறிவித்தல்

(கட்டுவன், மயிலிட்டிதெற்கு, வர்த்தலைவிளான்)

மேற்படி கிராமங்களைச் சொந்த இடமாகக் கொண்டு இடம்பெயர்ந்த நிலையில் நிதிநெருக்கடி காரணமாக தங்கள் பிள்ளைகளை உயர்கல்வி கற்பிக்க முடியாத நிலையில் உள்ள பெற்றோர்களே,

க.பொ.த. சா.தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று க.பொ.த. உ.தரத்தில் கல்வி கற்பவர்களுக்கும், பல்கலைக்கழக கல்வி கற்பதற்கு தெரிவு செய்யப்பட்டு தொடர்வதற்கு முடியாத நிலையில் உள்ளவர்களுக்கும் வெளிநாடுகளில் இயங்கும் எமது கிளைச் சங்கங்கள், தாய்ச்சங்கத்தின் ஊடாக உதவி செய்ய முன் வந்துள்ளன. தகுதியானவர்கள் தயவு செய்து சங்கச் செயலாளருடன் (திரு.வ.இராசதுரை) 30.11.2012க்கு முன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புக்கான முகவரி:
வ. இராசதுரை
இல.43, பிரதேச செயலக வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
தொலைபேசி இல: 0212240449.

ந. பாலச்சந்திரன் (தலைவர்)
வ. இராசதுரை (செயலாளர்)
(25409) (10,6,7)

THE HALO TRUST

## Vacancy – Excavator and Loader Operators

The HALO Trust is a British Mine clearance NGO working in ten countries worldwide. The HALO Trust has been working in Sri Lanka since 2002 clearing mines and other explosive remnants of War.

We are recruiting operators for our mechanical mine clearance operations based in Kilinochchi and Jaffna.

Required experience/qualifications:

- Minimum 2 years plant operating experience (excavator, backhoe or loader)
- Valid AD driving license
- Good health and willingness to work hard for long hours

Interested candidates should submit their bio-data, contact details and a brief summary of their experience to:

**The HALO Trust**
**12, Nallur Cross Road, Nallur,**
**Jaffna.**

**OR**

**The HALO Trust**
**450, Thirunagar West,**
**Kilinochchi.**

**All applications must be submitted no later than Sunday 25th November 2012**
(25369)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 90

# புரத உணவின் புதையல் தானியங்கள்

**1.தாவர உணவு சரிவிகித உணவாகும்.**

★இயற்கையுடன் ஒன்றி வாழ வேண்டும் என்று பண்டைக்காலம் முதல் நம் முன்னோர்கள் கற்பித்துள்ளனர். சுற்றுப்புறச் சூழலில் எல்லா உயிரினங்களும் நிலை கொள்ள இன்றியமையாத ஒரு வாழ்க்கை முறையைப் போதித்துள்ளனர்.

★தாவர உணவு சரிவிகித சிந்தனையை வளர்த்து மனித மனதுக்கும் உடலுக்கும் ஒரே போல் சக்தியளிக்கிறது. இந்தவாழ்க்கை முறையைப் பின்பற்றுவோருக்குப் பூரணமான உடல் நலமும், நீடித்த ஆயுளும் வழங்கும் என்று இயற்கைச் சிகிச்சை நிபுணர்கள் கூறுகின்றனர்.

★தாவர உணவுப் பொருள்களும் அவற்றிலிருந்து தயாரிக்கப்படும் உணவும் மனித உடல் என்ற கோயிலைக் கட்டி எழுப்புவதற்கான பயன் உடையவையாகும் என்று தமிழ் கலாசாரம் கருதி வந்துள்ளது.

★உடலுக்கு மிக அதிகம் சக்தியளிக்கும் கொழுப்புச் சத்து தாவர உணவு வகைகளிலும் தாராளமாக அடங்கியிருக்கிறது. கனிகளும் தானிய வகைகளும் மனித உடலில் எளிதில் ஜீரணிக்கக் கூடிய புரத உணவின் புதையலாகக் காண்கிறோம்.

★வயிற்றிலும், குடல்களிலும் தடங்கலற்ற செயற்பாட்டைத் தாவர உணவு வகைகள் மட்டுமே ஏற்படுத்துகின்றன. புற்றுநோய் போன்ற கொடிய நிலைகள் உருவாகும் வாய்ப்பு தாவர உணவு உட்கொள்பவர்களில் மிகக் குறைவு என்று விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

**2. பிரம்ம முகூர்த்தத்தில் விழித்திருந்து படிக்க வேண்டும்.**

★பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து படிப்பதால் பெரும் நன்மையடையலாம் என முதியோர்கள் கூறும்போது இளைஞர்கள் பொருட்படுத்துவதில்லை. ஆனால் அதிகாலை எழுந்து படித்தால் படிப்பவை ஒரு போதும் மனதிலிருந்து மறைந்து போவதில்லை என்று கல்விப் பிரச்சினைகளைக் குறித்த ஆராய்ச்சிகள் கண்டறிந்துள்ளன.

★சூரியன் உதித்தெழுவதற்கு 48 நிமிடங்களுக்கு முன்பு பிரம்ம முகூர்த்தம் ஆரம்பமாகிறது. பிரம்மா பெயரால் அறியப்படும் இந்தமுகூர்த்தம் அவருடைய தர்ம பத்தினியான சரஸ்வதி தேவி விழித்து செயற்படும் நேரம் என்பதே நம்பிக்கை. அதனால் இந்த நேரத்தை "சரஸ்வதி யாமம்" என்று அழைக்கின்றோம்.

★பொதுவாகத் தலையின் இடது பக்கம் இருக்கும் கல்வி மையம் செயற்படும் போது படிப்பது மிகப் பயனளிக்கும் என்பது நவீன கண்டுபிடிப்பு. காலையில் கொளுத்தி வைக்கும் குத்து விளக்கிலிருந்து ஒளிரும் சக்தி கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் என்று கண்டறிந்துள்ளனர்.

★இதை மனதில் கொண்டுதான் பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து விளக்கு கொளுத்தி (தற்காலத்தில் மின்சாரம்) கல்வி பயில வேண்டும் எனக் கூறுகின்றனர்.


**3. தியானம் வாழ்க்கைக்கு பயனளிக்கும்**

★தியானம் வாழ்க்கைக்குப் பயனளிக்கும் என்று பழைய தலைமுறை நமக்குக் கற்பித்திருக்கிறது.

★சாந்தமாயிருந்து ஒரே சிந்தனையுடன் தன்னிலும் தன்னைச் சுற்றியுள்ள எல்லாவற்றிலும் குடிகொள்ளும் ஜீவசக்தி, இறைவன் அருளும் சக்தி என்று மனதில் கொண்டுள்ள ஆராதனையே தியானம்.

★யுகங்கள் கழியும் போது நிகழவிருக்கும் மனதின் சுத்திகரிப்பு இந்த ஜென்மத்திலேயே பரிணமிக்கும் சாதனையென்று தியானத்தை சிறப்பிக்கலாம்.

★தியானத்தின் பயன்களை நவீன அறிவியல் அங்கீகரித்துள்ளது. மனதுக்கும் புத்திக்கும் சக்தி பெற ஒரே ஒரு பாதையை மட்டுமே நவீன விஞ்ஞானம் உபதேசிக்கிறது. அதுவே தியானப்பாதை. மனதை ஒருநிலைப்படுத்தி ஒரு தனிப்பட்ட புள்ளியில் மையப்படுத்தி தியானம் செய்தால் மனதை அலட்டும் எல்லாச் சிந்தனைகளிலிருந்தும் விடுதலை பெறலாம்.



★தியானத்தின் ஆழமான நிலையில் செல்லும் போது மூளையிலுள்ள பீற்றா அலைகள் (Beta waves), அல்பா (Alpha), டெல்ரா (Delta), தீற்றா (Teta) அலைகளாக மாறுதலடைகின்றன என்று அறிவியல் கற்பிக்கின்றது. இந்த அலைகள் மூளையை அநேக மடங்கு விருத்தியடைந்து செயல்படச் செய்யும் என்று ஆராய்ச்சிகள் வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளன.

**மருத்துவர் நி.தர்ஷனோதயன்**
வைத்தியஅதிகாரி, மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை,
மன்னார்.

# தீ விபத்துக்குள்ளானவர்களுக்கான முதலுதவி

## அனைத்துவகைத் தீக்காயங்களுக்கும் !

உடனடியாக நெருப்பை அணையுங்கள், அல்லது தீக்காரணிகளை அந்த நபரிலிருந்து விலக்குங்கள் (உதாரணமாக சூடானதிரவம், ஆவி, இரசாயனப்பொருள்கள் போன்றன)

தீச்சுவாலை இருப்பின் அந்த நபரை நிறுத்தி(ஓடுவதையோ/ நடப்பதையோ தவிர்க்க வேண்டும்) நிலத்தில் உருட்டி தீயை அணையுங்கள், மேலும் தடிப்பான போர்வையால் சுற்றி அணையுங்கள் (மண்ணால் அணைத்தலை தவிர்க்க வேண்டும்) நீர் இருப்பின் நீரினாலும் அணைக்கலாம்.

உருகக்கூடிய பொருள்கள் உடலில் காணப்படின் அவற்றை விலக்குங்கள் இறுக்கமான ஆடைகளை உடனடியாக விலக்குங்கள், ஆடையின் பகுதி எரிகாயங்களுடன் ஒட்டியிருப்பின் அப்பகுதியை சுற்றி வெட்டியெடுக்கவும் தோலுடன் ஒட்டியிருக்கும் ஆடையின்பகுதியை நீக்க வேண்டாம். ஆபரணங்கள், இடுப்புப் பட்டி போன்றவற்றை உடனடியாக நீக்குங்கள். கழற்றுவதற்கு சிரமமாக இருப்பின் வெட்டி அகற்றுங்கள். ஏனெனில் எரிகாயங்கள் வேகமாக வீங்கக் கூடியவை. எனவே பின்னர் அகற்றுவது சிரமமாகிவிடும்.

எரிந்தகாயப்பகுதிகளை வலி குறையும் வரை ஓடும் குளிர்நீரின் கீழ் பிடிக்கவும்

அல்லது குளிர்நீரினுள் அமிழ்த்தவும் (ஐஸ் தண்ணியோ, ஐஸ்கட்டியோ பாவிக்க வேண்டாம்) ஏனெனில் அவை உடல் வெப்பநிலையைக் குறைத்து மேலும் பாதிப்பை ஏற்படுத்தும்.



பின்னர் சுத்தமான தொற்று நீக்கிய ஒட்டாத துணியினால் காயத்தை கட்டுப் போடுங்கள். பட்டர், கிறீம்களை எரிகாயங்களில் போட வேண்டாம்.

கொப்பளங்கள் ஏற்பட்டிருப்பின் அவற்றை உடைக்கவேண்டாம். ஏனெனில் இவை எரிகாயத்தில் கிருமித் தொற்றை ஏற்படுத்திவிடும். தாங்கமுடியாத வலியிருப்பின் பனடோல் அல்லது புரூபன் மாத்திரையைக் கொடுங்கள் .

சிறுவர்களாக இருப்பின் மருத்துவ ஆலோசனையின்றி மாத்திரை கொடுக்க வேண்டாம்.

எரிகாயம் பெரியதாயிருப்பின் ஆழமானதாயிருப்பின் வெப்ப இழப்பால் ஏற்படும் நரம்புமண்டல அதிர்ச்சியை (**shock**) தவிர்ப்பதற்கு எரிகாயத்துக்குள்ளானவரை மட்டமான தரையில் படுக்கச் செய்து பாதங்களை உயர்த்தி வைப்பதுடன்,தடிப்பான போர்வையால் போர்த்திவைத்திருங்கள். இயலுமானால் எரிகாயத்தை இதயமட்டத்திற்கு மேல் வைத்திருத்தல் சிறந்தது. வைத்திய உதவியை நாடுவது அவசியம். எரிகாயம் மிகவும் ஆழமானதாயிருப்பின் உடனடியாக அவசரசிகிச்சை பிரிவுக்கு அறிவிக்க வேண்டும், அத்துடன் நீரினால் கழுவுவதையும் தவிர்த்தல் வேண்டும். சிறிய தீக்காயமாக இருப்பினும், காய்ச்சல் இருப்பின் , அல்லது எரிகாயம் சிவந்து, வீங்கி காணப்படின் அல்லது எரிகாயம் தொற்றுக்குள்ளாகியிருப்பின் அல்லது எரிகாயத்திலிருந்து நீர்வடிந்தால் வைத்தியரை நாடுவது அவசியம் .

சுவாசப்பகுதி எரிந்திருப்பின், தரையில் படுக்கவைத்திருக்கும் பொழுது தலையின் கீழ் தலையணையோ , வேறு பொருள்களோ வைக்கவேண்டாம். ஏனெனில் இவை சுவாசப்பாதையை அடைத்துவிடலாம்.

முகத்தில் எரிகாயம் ஏற்பட்டிருப்பின் அந்த நபரை இருத்திவைக்கவேண்டும்.

அவசரசிகிச்சை உதவி கிடைக்கும் வரை நாடித்துடிப்பை, சுவாசத்தை கண்காணித்துக் கொண்டிருக்கவேண்டும்.

இரசாயனப்பொருள்களினால் ஏற்பட்ட எரிகாயமாக இருப்பின் நீரினால் கழுவும்பொழுது உடலின் ஏனைய பகுதிகளுக்கு அவ் இரசாயனம் படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அமிலத்தை காரத்தாலோ, காரத்தை அமிலத்தாலோ நடுநிலைப்படுத்த முயல வேண்டாம். இது மேலும் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

இரசாயனப்பொருளால் கண்பகுதி பாதிக்கப்பட்டிருப்பின் கண்ணை அகலத் திறந்து குளிர்ந்த ஓடும்நீரின் கீழ் பிடிக்கவும் **contact lense** கண்ணினுள் வைத்திருப்பின் அவற்றை ஓடும் நீரினாலேயே அகற்றுங்கள், கைகளை பாவிக்கவேண்டாம் கண்ணின் மீது துணியால் கட்ட வேண்டாம்.

**Dr.துஷ்யந்தினி ஆனந்தலிங்கம்**
நீரிழிவுச் சிகிச்சை நிலையம்
யாழ்.போதனா வைத்தியசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மரண அறிவித்தல்



## கனகரத்தினம் ஈஸ்வரிதேவி

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் தம்பாலை, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் ஈஸ்வரிதேவி (15.11.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பருவதம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்தையா மற்றும் மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், கனகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், அனுசா (மைதிலி - பிரான்ஸ்), கவீந்திரன் (பிரான்ஸ்), பாலேந்திரன் (பிரான்ஸ்), கஜீந்திரன் (இலங்கை), நிதர்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், யோகம்மா, காலஞ்சென்றவர்களான சரசம்மா, பூமணி, பரமேஸ்வரி, தம்பிராசா மற்றும் விஸ்வலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுலோசனா, கந்தையா, காலஞ்சென்றவர்களான சடாசிவம், குமாரசாமி மற்றும் பூரணம் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, ஐயாத்துரை, நாகலிங்கம் மற்றும் குணமணி, இந்திராணி, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, றோயாமலர் மற்றும் அற்புதராசா, நேசமலர், இராசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், றஞ்சன், சுபாசினி, சுஜிதா, ஓவியா ஆகியோரின் பாசமிகு மாமியும், ரேகான், தீபிகா, றெகீசன், ரெக்சன், சபரீசன், ரிஸ்விகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (19.11.2012) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தம்பாலை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாச்சிமார் வீதி,
தம்பாலை, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(21597) (45,6,7)

# தொழில் வாய்ப்புக்கான பயிற்சிப் பட்டறை

## யாழ் மாவட்ட (தீவகம் உட்பட) இளைஞர்/யுவதிகளுக்கான தொழில்துறை பயிற்சிப் பட்டறை

**18 வயது முதல் 25 வயது வரையுள்ள இளைஞர்/யுவதிகள் விண்ணப்பிக்கலாம்.**

**கட்டடத்துறை, தையல்துறை, சுற்றுலாத்துறை, வெதுப்பகத்துறை(பேக்கரி) வேறு உங்களுக்கு விருப்பமானவை.**

ஆகிய துறைகளில் பயிற்சி வழங்கப்படும். பயிற்சி முடிந்து தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும் பொழுது நீங்கள் தன்னிறைவான வருமானத்தை பெறலாம். தீவகம் உட்பட யாழ்ப்பாண மாவட்ட இளைஞர்/ யுவதிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்த வேண்டும் எனும் நோக்கில் இப்பயிற்சி கொடுக்கப்படுகின்றது. இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

**பயிற்சி நடத்துவோர்:**
அமெரிக்கத்தூதரக அனுசரணையுடன்,
பக்திவேதாந்த சிறுவர் இல்லம்; கோகுலம்.

UNITED STATES EMBASSY COLOMBO

Gokulam

(ல/4874) (6-7-2)

பயிற்சியைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் கீழ் உள்ள கூப்பனை அல்லது அதன் நகலை நிரப்பி கீழ்வரும் முகவரிக்கு 24.11.2012 க்கு முன்னர்கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்கவும்.

முழுப்பெயர்: ....................
தபால் முகவரி: ....................
தொலைபேசி இல: ....................
பால்: ....................
தேசிய அடையாள அட்டை இல: ....................
பெற விரும்பும் பயிற்சி: ....................
விண்ணப்பதாரியின் கையொப்பம்: ....................

**முகவரி: நிதாய் கோகுலம், நந்தாவில் அம்மன் வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LL.B ( UK) கற்கை நெறி

யாழில் சட்டக் கல்வியை வழங்கும் ஒரே கல்வி நிறுவனம்
Prince City Campus இல்
EdHat IHD in Law leading to LL.B (UK)

புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் நடைபெறுகிறது



- ★ உலக தரம் வாய்ந்த கற்கை நெறி.
- ★ இலங்கை மற்றும் UK பாட விதானங்களை உள்ளடக்கியது.
- ★ யாழ்ப்பாணத்தில் 3 வருடங்களையும் பூர்த்தி செய்யலாம்.
- ★ இலகு தவணை கொடுப்பனவு முறை
- ★ இலவசமான ஆங்கிலம் , மற்றும் தகவல் தொழில் நுட்ப கற்கை திட்டங்கள்.

(சி/4888) (6-7-2)

**Prince City Campus**
இல. 275,மணிக்கூட்டு கோபுர வீதி (Clock Tower Road), யாழ்ப்பாணம்.
தொ . பே .- 021 492 3855 Hotline: 0775 949 272


## மகப்பேற்று, நரம்பியல் வைத்தியர் என்று பெண்களிடம் சேஷ்ட்டை விட்ட மேசன்

### பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார்

கொழும்பு, நவ.18

கர்ப்பிணிப் பெண்கள், புதிதாகனு திருமணம் முடித்த பெண்கள் மற்றும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான பெண்களைப் பரிசோதிக்கும் மகப்பேற்று, நரம்பியல் வைத்தியர் என்று தன்னை அடையாளப்படுத்தி பெண்களிடம் சேஷ்ட்டை விட்ட மேசன் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கராப்பிட்டிய வைத்தியசாலையில் இருந்து வரும் விசேட நிபுணத்துவம் பெற்ற வைத்தியர் என்று கூறிக் கொண்டே குறித்த சந்தேக நபர், கர்பிணிப் பெண்களின் அங்கங்களைத் தொட்டுப் பரிசோதித்துள்ளார்.

கிராமங்களுக்கு சென்று வீடு வீடாகப் பரிசோதனைகளை மேற்கொண்ட இந்த வைத்தியர் தொடர்பில் சந்தேகம் கொண்ட பொது மக்கள் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதனை அடுத்து அவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் மொறவக பிரதேசத்தைச் சேர்ந்த சாதாரண மேசன் என்றும் பெண்களின் அங்கங்களைத் தொடுவதை அவர் விநோத செயற்பாடாக மேற்கொண்டு வந்ததாகவும் தெரியவந்துள்ளது.

குறித்த நபரை வைத்தியர் என்று நிரூபிப்பதற்கான எந்தவொரு ஆதாரங்களும் அவரிடம் இல்லை என்று ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த சந்தேக நபரிடமிருந்து கர்ப்பம் தரிக்கமால் இருப்பதற்கான உறைகள் மற்றும் வைத்திய உபகரணங்கள் சிலவற்றை மீட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம)


## KALAIMAGAL INTERNATIONAL COLLEGE, KOKUVIL

**ஆங்கில மொழி மூல முழுநேர தனியார் பாடசாலை.**

இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் பதிவு செய்யப்பட்ட அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலை.

★Play group முதல் G.C.E (A/L) வரை.
★Play group முதல் Grade - 5 வரை Oxford பாடத்திட்டமும் Grade- 6 முதல் G.C.E (A/L) வரை இலங்கைப் பாடத்திட்டமும் கற்பிக்கப் படுகின்றது.
★தமிழ், சமயம் போன்ற பாடங்கள் தமிழிலும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கிலத்திலும் சிங்களம்/ French விருப்பத்திற்குரிய பாடமாகவும் கற்பிக்கப்படும். கல்விக் கொள்கை.

மேற்படி கல்லூரிக்கான 2012-2013 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதால் கீழ் வரும் எமது கல்லூரியின் கிளைகளில் உங்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 25 NOVEMBER 2012**

★ Church Lane, Kokuvil east, Kokuvil.
★ இந்து அ.த.க. பாடசாலை ஒழுங்கை வல்வெட்டி. (இந்து அ.த.க. பாடசாலை அருகில்)
★ வங்களா வெளி, வேலணை. (தபார் கந்தோர் அருகில்)
★ கோப்பாய் தெற்கு, கட்டப்பிராய் (கல்வியங்காடு)
★ ஆஸ்பத்திரி வீதி, அச்சுவேலி.
★ தம்பசிட்டி றோட், பருத்தித்துறை.
★ Nunavil east, Kandy Road, Chavakachcheri.
★ இல. 234, சில்வா வீதி, வட்டுக்கச்சி.
★ மார்க்கற் லேன், தண்ணீரூற்று, முள்ளியவளை.
★ டிப்போ றோட், மார்க்கற் பின்புறம், கிளிநொச்சி.
★ புலோப்பளை றோட், பளை.

மேலதிக விவரங்களுக்கு :- 021 492 3238, 021 492 3235, 077 6548283, 077 490 4286

(24068)(5-8-7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## Singapore ல் பகுதி நேர வேலை வாய்ப்புடன் கூடிய Hotel Managment பயிற்சி

மாதாந்தச் சம்பளம் : 100,000/-

-No- Visa, Interview, Sponsor, Bank Balance,

பாட நெறிக்கட்டணத்துடன், மொத்த செலவு : 4 இலட்சம் மட்டுமே.

**Free** Visa Arrangements, Air Ticket,Sponsorships, Airport Pickup, One Week Accomodation.

ஒரு மாதத்தில் உடனடி பயணம்.

**Greenwich College**
No : 34, Galle Road,Dehiwela.
Tel : 2713 214
Email : info@greenwich.lk
Cool Lines 0722 419 418, 0777-751-382
Reg. No : PV 57191
(சி/4873) (6-7-2)

## புதிய மெடிகல் கிளினிக்

புதிய மெடிகல் கிளினிக் யாழ்நகர், நம்பர் 125, பிரதான வீதியில் (Main street) திறக்கப்பட்டுள்ளது.

Dr. ச.சிறீதேவா (MBBS, DcH, DFm, McGP)
Dr. பொ.சந்திரசேகரம் (Registered medical officer)

ஆகிய வைத்திய நிபுணர்கள் பணியாற்றுகிறார்கள்.
ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் பார்வையிடப்படும்.

| | |
|---|---|
| Dr. ச.சிறீதேவா | காலை 8 முதல் பி.பகல் 1 மணிவரை |
| Dr. பொ.சந்திரசேகரம் | பி.ப. 3 முதல் மாலை 5 மணிவரை |

தொ.பே:
0212228100
0775930254

நிர்வாக ஒழுங்கமைப்பாளர்.

(25463) (6-7-10)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
27.09.1947
உதிர்வு
19.10.2012



### அமரர் காசிநாதர் பாலசுப்பிரமணியம்

கடந்த 19.10.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (18.11.2012) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

83, கல்மடுநகர்,
இராமநாதபுரம்.
— குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி புண்ணியபுவிராசசிங்கி சரஸ்வதி

சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புண்ணியபுவிராசசிங்கி சரஸ்வதி நேற்று முன்தினம் (16.11.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - நவரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற புண்ணிய புவிராச சிங்கி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான நடராஜா, குணசிங்கம் மற்றும் புவனேஸ்வரி, இராஜேந்திரம் ஆகியோரின் சகோதரியும், குணரத் தினம், இந்திராதேவி, அழகானந்தசுந்தரி (கண்மணி), பேரின்ப நாயகி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2012) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குணரத்தினம் குடும்பம்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(25485) (45.6.7)


## இடம்மாற்றம்

பல ஆண்டுகாலமாக மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கிய



## கரன் வோட்ச் அன் றேடியோ

**23.11.2012 முதல்** இல. 26K, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கபிலா பாட்டா அருகில்)

என்னும் முகவரியில் இடம்மாற்றப்பட உள்ளது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
23.11.2012 அன்று பொருள்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட சலுகைகளும் உண்டு என்பதனால் அனைவரையும் [illegible]

தங்கள் நல்வரவை நாடும்
கரன் வோட்ச் அன் றேடியோ உரிமையாளரும், ஊழியர்களும்.

(25896) (10.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
18/11/2012

## பருத்தித்துறைக்கு தென்னங்கன்றுகள்

வடமராட்சி, நவ.18

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் வீடுகளில் நடுவதற்கென முதலாம் கட்டமாக 2 ஆயிரத்து 500 நல்லினத் தென்னங்கன்றுகள் கிராம சேவையாளர்கள் ஊடாக வழங்கப்பட்டன.

தேசிய மரநடுகைத்திட்டத்தின் கீழ் நடுகைக்கென தென்னை ஆராய்ச்சி சபை இந்த நல்லினத் தென்னங்கன்றுகளை பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு வழங்கியிருந்தது.

மற்றொரு தொகுதி நல்லினத் தென்னங்கன்றுகள் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குக் கொண்டு வரப்படவுள்ளன என்று கூறப்பட்டது. (ம-8)

## நெற்செய்கையாளர் விவரம் பார்வைக்கு

வடமராட்சி, நவ.18

வடமராட்சிப் பிரசேதத்தில் நெற்செய்கையாளர்களின் பெயர், விவரங்கள் அந்தந்த கமநல சேவை நிலையங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

அம்பன், புலோலி, கரவெட்டி கமநலசேவை நிலையங்களிலேயே நெற்செய்கையாளர்களின் விவரங்கள் அந்தந்தப் பகுதி விவசாய சம்மேளனத்தின் உதவியுடன் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. (ம-8)

## கடந்த இரு வாரத்தில் 10 பேருக்கு காசநோய்

யாழ்ப்பாணம், நவ.18

யாழ். மாவட்டத்தில் கடந்த 14 தினங்களுக்குள் 10 பேர் காசநோய் தாக்கத்துக்கு ஆளாகியுள்ளனர் என்று மாவட்ட காசநோய் கட்டுப்பாடு வைத்திய அதிகாரி மருத்துவர் சி.எஸ். யமுனானந்தா தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் காசநோயின் தாக்கம் அதிகரித்துச் செல்கிறது.

இந்த வருடம் 275 பேர் காசநோயால் பாதிக்கப்பட்ட நிலையில் பண்ணை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஜனவரி மாதம் 27 பேரும், பெப்ரவரி மாதம் 20 பேரும், மார்ச் மாதம் 36 பேரும், ஏப்ரல் மாதம் 17 பேரும், மே மாதம் 19 பேரும், ஜூன் மாதம் 32 பேரும், ஜூலை மாதம் 29 பேரும், ஓகஸ்ட் மாதம் 25 பேரும், செப்ரெம்பர் மாதம் 21 பேரும், ஒக்ரோபர் மாதம் 28 பேரும் நவம்பர் மாதம் நேற்றுவரை 25 பேரும் காசநோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் 340 நோயாளர்கள் இனங்காணப்பட்டனர்.

காசநோயைக் கட்டுப்படுத்த முடியும். தொடர்ச்சியாக மூன்று கிழமைகளுக்கு இருமல், சளி ஆகியன இருந்தால் உடனடியாக பரிசோதனைகளை மேற்கொண்டு தடுக்கமுடியும்.

நோயாளர்களைப் பராமரிப்பதற்கு போதிய இடவசதிகள் இல்லை. வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறை உள்ளது.

மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையைப் பாவனைக்கு மீளத்திறந்தால் நோயாளர்களுக்கான சேவைகளை ஆற்ற முடியும்- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

## ஆடுகள் கொண்டு செல்வதற்கு நெடுந்தீவில் தற்காலிகத் தடை

யாழ்ப்பாணம், நவ.18

நெடுந்தீவில் இருந்து வெளியிடங்களுக்கு ஆடுகள் கொண்டு செல்வது தற்காலிமாக தடைசெய்யப்பட்டுள்ளது. ஆடுகள் பெருமளவில் வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதால் உள்ளூரில் ஆடுகளின் தொகை குறைந்து கொண்டு செல்கிறது. இதனாலேயே இந்தத் தடையை நெடுந்தீவு பிரதேசசபை ஏற்படுத்தியுள்ளது. போரை அடுத்து வன்னிப் பிரதேசங்களில் ஆடுகளின் தொகை அருகியுள்ளது. இந்த நிலையில் வன்னியில் வாழும் உள்ளூர் மக்கள் தமக்குச் சொந்தமான ஆடுகளை அங்கு கொண்டு செல்வதில் அக்கறை காட்டி வருவதால் நெடுந்தீவில் ஆடுகளின் தொகை குறைந்து கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (3-7)

## 'கேற்வே'யின் புலமைப்பரிசில்

வடமராட்சி, நவ.18

ஜோன்கீல்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் 'கேற்வே' நிறுவனம் 15-17 வயதுப் பிரிவுக்கு உட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு நடத்திய ஆங்கில புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கலும், ஆங்கில வகுப்பு அங்குரார்ப்பண நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

முற்பகல் 10மணிக்கு யாழ். கஸ்தூரியார் வீதியிலும் பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி நவீன சந்தையிலும், மாலை 4மணிக்கு நெல்லியடி பிரதான வீதியிலும் அமைந்துள்ள 'கேற்வே' நிறுவனங்களில் அதன் முகாமையாளர் க.நிமல்சன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுகளில் 'கேற்வே' ஜோன்கீல்ஸ் நிறுவனத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப் புலமைப்பரிசிலுக்கு யாழ்ப்பாணத்தில் 75 பேரும், சாவகச்சேரியில் 44பேரும், நெல்லியடியில் 47 பேரும் தெரிவாகியுள்ளனர்.

புலமைப்பரிசில் பெற்றவர்களின் விவரங்கள் அவர்கள் கற்கும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டோர் விவரத்தில் தெரிவிக்கப்பட்ட நிலையங்களுக்கு குறித்த நேரத்தில் சென்று பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ம-8)

## ஆஸி. செல்ல முயற்சித்த 104 பேர் கடலில் சிக்கினர்

சட்டவிரோதமான முறையில் கள்ளப்படகு மூலம் ஆஸ்திரேலியா தப்பிச் செல்ல முயற்சித்த 104 இலங்கையர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம் - துடுவாய கடலில் இவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் முகத்துவாரம் துறைமுகத்துக்கு அழைத்துவரப்பட்டு மேலதிக விசாரணைகளுக்கென குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 96 தமிழர்களும் 6 சிங்களவர்களும் இரண்டு முஸ்லிம்களும் அடங்குகின்றனர். இதில் 13 பெண்களும், 13 சிறுவர்களும் உள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, புத்தளம், மட்டக்களப்பு, கொழும்பு, மன்னார், ஜா-எல, நீர்கொழும்பு, வத்தளை, கல்பிட்டி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்று அறிவிக்கப்படுகிறது. (3)

## தேங்காயின் விலை நெடுந்தீவிலும் ஏறுமுகம்

யாழ்ப்பாணம், நவ.18

நெடுந்தீவில் தேங்காய் ஒன்று தற்போது ரூபா 20 முதல் 25 வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. தற்போது தேங்காய் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாலேயே இந்த விலை உயர்வு எனத் தெரிவிக்கப்பட்டது. இங்கிருந்து தினமும் பெருமளவு தேங்காய்கள் யாழ். நகருக்குக் கொண்டு செல்லப்பட்டு வந்தது. இந்த நிலையில் தற்சமயம் தேங்காய் தட்டுப்பாடு காரணமாக கூடுதலாக வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லும் வியாபாரிகள் தமது செயற்பாட்டை நிறுத்தியுள்ளனர். தனியார் படகுகளில் இதுவரை காணப்பட்டுவந்த கணிசமான தேங்காய் முடிச்சுக்களை இப்போது காண்பது அரிதாகவே இருக்கின்றது.

தென்னை உற்பத்திக்கான முயற்சிகள் மந்த நிலையிலேயே உள்ளன. ஏற்கனவே முன்னோர்களால் உற்பத்தி செய்யப்பட்ட தென்னை மரங்களில் இருந்தே இங்கு தேங்காய் கிடைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ( 3-7)

## வங்கிக் கிளை இடமாற்றம்

சாவகச்சேரி வர்த்தக வங்கிக் கிளை நாளை திங்கட்கிழமை முதல் புதிய இடத்துக்கு இடமாற்றம் செய்யப்படுகிறது. இலக்கம் 87, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் புதிய முகவரியில் சாவகச்சேரி வர்த்தக வங்கிக் கிளை செயற்படும் என வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார். (எ-50)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**நாளை**

*கார்த்திகை -04 திங்கட் கிழமை 19.11.2012*
*திதி: ஷஷ்டி பி.ப. 03.47 வரை*
*நட்சத்திரம்: உத்தராடம் காலை 06.49 வரை*
*சுபநேரம்: 12.09 - 01.39 வரை*
*ராகுகாலம்: 07.39- 09.09 வரை*

**மேடம்:** எதிலும் அவசரப்பட வேண்டாம். அலைச்சல், பதற்றம் ஆகியன நீங்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். மனதுக்கு அமைதி கிடைக்கும்.

**இடபம்:** மற்றவர்களை நம்பி பெரியளவிலான முடிவுகள் எடுக்கவேண்டாம். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் அளவாகப் பழகுங்கள். இடம் பொருள் ஏவல் அறிந்து செயற்பட வேண்டும்.

**மிதுனம்:** சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் புதிய அதிகாரி உங்களை மதிப்பார்.

**கடகம்:** கனிவாகப்பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பழைய வேலையாள்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்களைக் கலந்தாலோசித்து சில முடிவுகளை எடுப்பார்.

**சிங்கம்:** மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களைக் கண்டறிவீர்கள். செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.

**கன்னி:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்துப் போகும். புதிய வேலை அமையும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள்.

**துலாம்:** துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எதிலும் கவனமுடன் செயற்படப்பாருங்கள். கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் மிகுதிகள் கைக்குக்கிடைக்கும். உத்தியோகத்தில் மதிப்பு அதிகரிக்கும்.

**தனுசு:** ஒரே முயற்சியில் முடிக்க வேண்டிய விடயங்களை பலமுறை அலைந்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களைக் கவனிக்கவும். உத்தியோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும்.

**மகரம்:** கணவன்மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

**கும்பம்:** நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். உறவினர், நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் தேடி வரும்.

**மீனம்:** உங்கள் பிடிவாதப் போக்கை சிறிதளவு மாற்றிக் கொள்வீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். பிரபலங்களின் உதவி கிட்டும். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்புடன் செயற்படுவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | 9 | | | | | |
| 9 | 4 | | | 5 | | 8 | | |
| | 5 | 6 | 4 | 8 | | 7 | 2 | |
| | | 8 | | | 9 | | 3 | |
| | | 5 | | 3 | | 2 | | |
| | 6 | | 1 | | | 4 | | |
| | 3 | 2 | | 1 | 6 | 9 | 4 | |
| | | 1 | | 7 | | | 8 | 2 |
| | | | | | 5 | | 6 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 1 | 9 | 6 | 8 | 3 | 4 | 5 |
| 8 | 5 | 4 | 2 | 3 | 7 | 1 | 6 | 9 |
| 6 | 9 | 3 | 4 | 1 | 5 | 8 | 7 | 2 |
| 1 | 4 | 9 | 7 | 5 | 3 | 2 | 8 | 6 |
| 3 | 6 | 7 | 8 | 2 | 4 | 5 | 9 | 1 |
| 2 | 8 | 5 | 1 | 9 | 6 | 4 | 3 | 7 |
| 5 | 3 | 2 | 6 | 8 | 9 | 7 | 1 | 4 |
| 9 | 7 | 8 | 5 | 4 | 1 | 6 | 2 | 3 |
| 4 | 1 | 6 | 3 | 7 | 2 | 9 | 5 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்

## திருமதி கிருஷ்ணன் இலட்சுமி



கைதடி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இலட்சுமி கிருஷ்ணன் நேற்று முன்தினம் (16.11.2012) வெள் ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகர்-சீதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கிருஷ்ணன் (நீதிமன்ற உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு மனைவியும், நித்தியானந்தன் (இளைப்பாறிய நீதிமன்ற உத்தியோகத்தர்), கமலாதேவி, சச்சிதானந்தன் (இ.போ.ச.உத்தியோகத்தர்), சந்திராதேவி (சுவிஸ்), இந்திராதேவி (ஆசிரியை யா/நாவற்குழி மகா வித்தியாலயம்), யோகானந்தன் (சுவிஸ்), சுவர்ணாதேவி (கொழும்பு), சிவானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இந்திராணி, குமாரலிங்கம் (இளைப்பாறிய நீர் விநியோகசபை உத்தியோகத்தர்), சர்வேஸ்வரி, கதிர்காமநாதன் (சுவிஸ்), சிவகுருநாதன் (இளைப்பாறிய இ.போ.ச உத்தியோகத்தர்), ஷாலினி (சுவிஸ்), உதயகுமார் (கொழும்பு), வளர்மதி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புமிகு சகோதரியும், சங்கீதா, சுமன், லதா, ஹரன், கஜன், நிஷாந்தி, அபிநயா, மாதங்கி, வைஷ்ணவி, சரண்யா, சகானா, ஜெசிக்கா, தஞ்சிகா, திவாகரன், டினோசன், டிலக்ஸன், அவிநாஸ், பரிதி, கிஷோபன், விக்னேஸ்வரன், சுதர்சன் (அஞ்சல் அலுவலகம்-கைதடி), கார்த்திகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஹர்ஷன், யதுர்ஷன், கானுஜா, வர்ணன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புக்கு: 0217902467
குமரநகர், கைதடி (25465) (10.8.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## கிணத்துள் விழுந்து பெண் சாவு

கைதடி, நவ. 18.

மாட்டுக்குத் தண்ணீர் வைக்கச் சென்ற பெண் கிணற்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை நண்பகல் கைதடிப் பகுதியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த கதிரவேலு யோகம் (வயது -65) என்ற குடும்பப் பெண்ணே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இவர் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் மாட்டுக்குத் தண்ணீர் வைப்பதற்காக வளவிலுள்ள கிணற்றுக்குச் சென்றதாகவும் தவறுதலாகக் கிணற்றில் வீழ்ந்தாரா அல்லது மாடு இவர்மீது மோதித் தள்ளியதா என்பதைச் சரியாக உறுதிப்படுத்த முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-16-288)


## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி இந்திராதேவி சிவகுருநாதன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி லக்ஷ்மி கிருஷ்ணன்
இறைவனடி அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடை ந்தோம். அன்னாரின் ஆத்ம சாந்திகாக அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், பிரதி அதிபர்,
ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
மாணவர்கள்
யா/நாவற்குழி ம.வி. (சி/1875)(5-6-7)

## அருணாச்சலம் சொகுசு பஸ்

யாழ்பாணம் - கொழும்பு சேவை
பிரயாணிகளுக்கு விசேட அறிவித்தல்

கீழ்காணும் தொலைபேசிகளுக்கு பிரயாணிகள் தங்களது ஆசன பதிவுகளை செய்து கொள்ளலாம். பிரயாண கட்டணங்களை பஸ் இல் செலுத்தலாம் அல்லது எங்களது உதவியாளர்கள் உங்களது இல்லத்தில் ரிக்கெட்டுகளை ஒப்படைப்பார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து ஐந்து மைல் தூரத்தில் வசிப்பவர்களுக்கு மட்டுமே இந்த சலுகை. தூரத்தில் வசிப்பவர்கள் கட்டணத்தை பஸ் இல் செலுத்தலாம்

உமா சதீஸ் :- 077 8426118
சிவா :- 077 4063579
RG ads

பஸ் வண்டி விற்பனை
TATA Starbus
விற்பனைக்கு 57 இருக்கைகள் அரைச் சொகுசு வண்டி. 2010 பதிவு செய்யப்பட்டது. 50,000Km க்கு குறைந்த ஓட்டம்.
NA- 8xxx
தொடர்புக்கு- 0773 597068 (கொழும்பு)

University of Bedfordshire
Study in the UK
Great location: 30 minutes from London
* Scholarships Available
www.beds.ac.uk

- Top 10 University for International Students
- Honorary Doctorate given to Actor Shah Rukh Khan
- Queen's Award for Enterprise : International Trade 2011
- Award: International Student Recruitment Team of the Year 2009

Admissions Available for February 2013 / April 2013 Intakes

Postgraduate / Undergraduate Courses
MBA, Business & Management, Computing, Marketing, Information Systems, Finance & Accounting, Law, Media, Art & Design, Education, Nursing, Biotech, Public Health, Psychology, Pharmacology, Tourism.

Overseas Education Centre
No: 102 A Horton Place
Colombo 7
Contact No: 072 222 3600, 011 763 2000, 011 268 2727

Mr. Loho (Loho Group)
Lucky Plaza Building. 4/7, 4th Floor, St. Anthony's, Mawatha, Kollupitiya
Contact No: 0777 917929, 0773 498660

வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு
வட்டுக்கோட்டை, சங்கரத்தை சந்தியில் இருந்து 500m தொலைவில் ஞானசம்பந்தர் வீதியில் 5 பரப்பு விஸ்தீரணமான காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
(25461)(5 6 7) தொ.பே.: 077 727 9205


All kind of Mobile phone's Unlocking



சுவிற்ஸர்லான்ட், நோர்வே, சுவீடன், பிரான்ஸ், கொரியா, கனடா, UK, USA, etc (I Phone 3GS, 4, 4S, 5) மற்றும் (HTC, Nokia (SL), Sony ericsson, Samsung, Blackberry உட்பட அனைத்து புதுவகையான Phone கள் unlock செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:
S.M.M. Zuhair (Razmi)
R & R Telecom
127, MPCS Building, K.K.S. Road, Jaffna.
072-2441441
(25993) (6,7,10)

JCB விற்பனைக்குண்டு



RG ads

ஐரோப்பாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதும், பதிவு செய்யப்படாததுமான JCB 3CX Power 2002 விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
No. 70, Galle Road, Mount Lavinia.
Hot Line : 0777 797 002


# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சச்சிதானந்தம்



மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சச்சிதானந்தம் (சச்சி) 15.11.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் -சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிநாதர் - கனகம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், டுஷா, குமார், சியாமளா ஆகியோரின் பாசமிகு தந்தையும், வர்ணகுலசிங்கம், சசிகலா, ஜெயக்குமார் ஆகியோரின் மாமனும், விதுஷா, தினுபா, லக்சிகா, டுஷான், நயோமிக்கா, மயூரி, நிக்ஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2012) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.புவனேஸ்வரி (மனைவி)

இராஜகாரியார் வீதி,
மானிப்பாய் வடக்கு, மானிப்பாய். (25467)(3.14)


விசா

- ★ அமெரிக்கா,கனடா,அவுஸ்திரேலியா,நியுசிலாந்து,UK Student விசா
- ★ லண்டன்,பிரான்ஸ் விசா,
- ★ தென்னாபிரிக்கா சைப்பிரஸ்,கொரியா,ஜப்பான் விசா
- ★ ஜப்பான் ஒரு வருட விசா,(இந்த விசாவுடன் உங்கள் குடும்பத்தினரை நீங்கள் ஸ்பொன்சர் செய்யலாம்)
- ★ மலேசியா ஒரு வருட ஓப்பின் விசா, Singapore Work Permit
- ★ தென்அமெரிக்கா நாடுகளிற்கான விசா [டொமினிக்கன்,றிப்பப்ளிக் கியூபா,பரகுவே, சிலி குயானா]
- ★ இந்தியா 6 மாத Business விசா

வங்கி பணவைப்பு
UK,கனடா,அமெரிக்கா,அவுஸ்திரேலியா,நியுசிலாந்து,ஐரோப்பிய நாடுகளிற்கான அனைத்து வகையான விசாக்களிற்குமான வங்கிகளினூடாக பணவைப்புகள் செய்து கொடுக்கப்படும்.

Galaxy International (Pvt) Ltd,
[illegible] Galle Road, Dehiwela
சாரங்கன் Tel: 0774 740 040, 0774 745 000


# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் கந்தசாமி (ஆசாரி)



மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட நாகலிங்கம் கந்தசாமி 13.11.2012 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- ஞானம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் தெய்வானைபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், தற்பராசக்தியின் (ராணி) அன்புக் கணவரும், கடம்பநேசன், சிவநேசன், குகநேசன், இராஜேஸ்வரி, அருள்நேசன், மயூரினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கமலாம்பிகை, பரிமளம், காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரனும், முத்து லிங்கம், காலஞ்சென்றவர்களான சிவானந்தம், ஆனந்தராசா மற்றும் இரத்தினசாமி, சிறிதரன், சிறிவரதன், கருணேஸ்வரி, சிவசக்தி, லலிதா ஆகி யோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

அந்தோனியார் வீதி, மாதகல். (சி/1876)(3.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 33 ஏக்கர்ஸ் முகமாலை தென்னம் தோட்டம் விற்பனைக்கு

முகமாலையில் ஏ-9 றோட்டிலிருந்து 300 யார் தொலைவில் அமைந்துள்ள33 ஏக்கர் தென்னம் தோட்டம் விற்பனைக்குள்ளது. இந்தக்காணியானது முன்பு அதிக விளைச்சலைக் கொடுக்கும் ஒரு தென்னம் தோட்டமாகும். எந்த வகை பயிர் செய்கைக்கும் உகந்த மண் வளமுள்ள பெறுமதி வாய்ந்த காணியாகும்.

தொடர்பு: 077 527 9567/ 077 773 8133

(சி/4877)(5 6 7)

## தேவை

விற்பனைப் பிரதிநிதி,உணவுவகை, கட்டடத்துறை, தமிழ், ஆங்கிலம் தெரிந்து இருத்தல் வேண்டும். கட்டட கணியவியலாளர்,கட்டட தொழில் நுட்பவியலாளர், படவரைஞர், கணக்கு லிகிதர் வடபகுதிக்குத் தேவை.

தொடர்பு: சுதர்சன் 077 348 3099

உங்கள் விண்ணப்பங்களை 74/1.2/1, W.A.Silva Mawatha,Colombo-06 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(சி/4878)(5 6 7)

## கடை வாடகைக்கு

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு முன்பு இரு கடைகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி இலக்கம்

**071 8285687**

லண்டன் /கனடா /அமெரிக்கா /சுவிஸ் /ஜேர்மன் பிரான்ஸ் /இத்தாலி /டென்மார்க் /ஆஸ்திரேலியா / நியூஸிலாந்து ஆகிய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு

**Central Bank Approved**

அரச வங்கியில் 12, 6, 3 மாதங்களுக்கான முன் பின் பணவைப்பு வங்கியில் பணவைப்பு

விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான சகல உதவிகளும் எம்பசி வேலைகள் செய்து தரப்படும்

**077 863 4449**

**UNION SPEED CASH LINE**

## விற்பனைக்கு

பிறவுண் றோட் கடைத்தொகுதி ஒன்றில் பான்ஸி பொருள்கள், ஸ்ரேசனறி பொருள்கள், போட்டோ கொப்பி இயந்திரம்(2), கணினி பிறின்ரர், குளிர்சாதனப் பெட்டி போன்ற பொருள்கள் விற்பனைக்குண்டு. (இக் கடைத்தொகுதியில் வியாபாரம் செய்வதற்கு அனுமதி பெற்றுத் தரப்படும்.)

தொடர்பு: 075 096 4062

(25462)(5-6-7)

## வெற்றியாளர்கள்

அன்னை நாகா பூட்சிற்றியின் ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பின் போது வெற்றி பெற்ற வாடிக்கையாளர்களின் விவரம்

(1) முதலாம் பரிசு ( சலவை இயந்திரம்)
K. தர்மசூரியர்
நெடுந்தீவு கிழக்கு, வட்டாரம் 13

(2) இரண்டாம் பரிசு ( தொலைக் காட்சிப் பெட்டி)
K. பிரதீப்குமார்
வளவத்தை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(3) மூன்றாம் பரிசு (DVD Player)
J. தினேஷ்ரூபன்
67, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளித்து உங்கள் பரிசில்களை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
வாழ்க வளமுடன் !

நிர்வாகம்
அன்னை நாகா பூட் சிற்றி

(20426)(6 7 8)

## பக்றீரியாவே சிவப்பு மழைக்குக் காரணம்

சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, நவ.18

சிவப்பு மழைக்குக் காரணம் ஒருவகைப் பற்றீரியா மழைநீரில் கலந்துள்ளமையே. ஆபத்துகள் இல்லை யென சுகாதார அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

நாட்டின் சில பகுதிகளில் கடந்த நாள்களில் சென்றிற மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தது.

இதனால் அந்தப் பகுதி மக்கள் மத்தியில் பெரும் பதற்ற நிலை காணப்பட்டது.

குறித்த மழைநீர் நானோ தொழில்நுட்பத்தின் மூலம் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது.

அதன் போது மழைநீரில் 'ரஷலோ மொளஸ்' எனப்படும் பக்றீரியா கலந்துள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பக்றீரியாக்கள் நிலத்தில் சரளமாக வாழக்கூடியவையெனவும் இது சூழலுக்கேற்ப பச்சை, சிவப்புப் போன்ற நிறங்களை எடுக்கக்கூடியவை. எனவே இது மழை நீரில் கலந்துள்ளமையே சிவப்பு மழைக்குக் காரணம் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களாக பதியதலாவ, ஹிங்குராங்கொடை, செவனகல, மனம்பிட்டிய போன்ற இடங்களில் சிவப்பு மழை வீழ்ச்சி பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(16)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் நல்ல சுற்றாடல், நல்ல நிலையிலுள்ள வீடு வாடகைக்குத் தேவை.

(25463)(5-6-7) தொடர்பு: 077 926 6415

## டென்டர் அறிவித்தல்

மாபோல, வத்தளை மற்றும் மட்டக்குளி ஆகிய இடங்களில் பாவனைசெய்த கீழ்க்காணும் பொருள்கள் விற்பனைக்கு உள்ளன. இப்பொருள்கள் யாவும் அலுவலக நேரத்தில் 19 ஆம் திகதி நவம்பர் 2012 தொடக்கம் 23ஆம் திகதி நவம்பர் வரை பார்வைக்காக வைக்கப்படும். இவற்றைப் பார்வையிடுவதற்கு முன்பாக இவை பற்றிய விவரங்களுக்கு பானு வைத்திய ரத்தின என்பவரை தொலைபேசி இலக்கம்: 077 7420 809 தொடர்பு கொண்ட பின்பே பார்வையிடமுடியும். கொள்வனவு செய்வதற்கு விரும்பு பவர்கள் விலைகள் உள்ளடக்கிய கோட்டேசனை உத்தியோகபூர்வ சீலுடன் உறுதிப்படுத்தி, கீழ்க்காணும் விலாசத்துக்கு 30ஆம் திகதி நவம்பர் 2012 அன்று 4.00 மணிக்கு முதல் சமர்ப்பிக்கவும்.

i. பாவனை செய்த டயர்
ii. பாவனை செய்த தகரம்/டிரம்ஸ்
iii. பட்டரி வகைகள்
iv. பாவனை செய்த வாகன எண்ணெய்

ஏஸ். கன்டெனர் பிரைவேட் லிமிட்டெட்.
775/5, நீர்கொழும்பு றோட், மாபோலை, வத்தளை.

(சி/4870) (45.6.7)

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

24

**NOV.'2012 TO APRIL'2013**

*தமிழ் மொழி மூலம்*

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.alimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.11.2012

# மரண அறிவித்தல்



## திருமதி தேவபாலசர்மா ரமணி அம்மா (கல்யாணி)

சாவகச்சேரி துர்க்கை அம்மன் கோயிலடியைச் சேர்ந்த திருமதி தேவபாலசர்மா ரமணி அம்மா நேற்று (17.11.2012) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெங்கடாசலக் குருக்கள் - பவானி அம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரஐயர் - யோகம்மா தம்பதியரின் மருமகளும், இராஜேஸ்வரஐயர் தேவபாலசர்மாவின் அன்பு மனைவியும், ரூபகண்ண சர்மா, பிரசன்னா குருக்கள், ஜெகன்சர்மா, துஸ்யந்தினி, சுகன்யா, வித்தியஸ்ரீ ஆகியோரின் பாசமிகு தாயும், கிருஸ்ணகுமாரக் குருக்கள், தர்ஷிகா, தனுஷா ஆகியோரின் அன்பு மாமியும், தரனீதரன், தனுஷாயினி, வக்ஸன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (18.11.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துர்க்கை அம்மன் கோயிலடி, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/2824) (45.6.7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
28.08.1938
05.04.1947

ஆண்டவன் மடியில்
19.10.2009
21.11.2009

அமரர்கள்
டேவிற் இராசையா
திருமதி கிருஸ்ணலீலா டேவிற் இராசையா

அன்பும் பண்பும் கருணையும் இரக்கமும்
பாசமும் பரிவும் காட்டி இவ்வுலகில்
எம்மைப் பெற்று வளர்த்த ஈடு இணையில்லா
தம்பதியினராக வாழ்ந்து ஒருமாத இடைவெளியில்
விண்ணுலகம் சென்ற - எமது மாதா பிதாவுக்கு
இந்த நாளில் இறை ஆசிவேண்டிப் பூசிக்கின்றோம்.

க.இராசா
பாடசாலை வீதி, எழுதுமட்டுவாள்.
த.முகவரி:
வரணிவடக்கு, வரணி.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(25461) (10,6,7)

## வேலை வாய்ப்பு

பல்கலைக்கழகங்களுக்கான தனியார் முகவர் நிறுவனத்துக்கு Admin, Counselor ஆள்கள் தேவை ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். வயதெல்லை 21-40 வரை.

தொடர்பு: 077 301 3060

(சி/4872)(5 6 7)

## சேவை

விமான டிக்கட்டுகள் மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ள..............
ரெட்டினா டுவர்ஸ் & ட்ரவல்ஸ்
இல. 687, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்
தொ.பே 0212219686

(சி/4418)(3.8.7)

## தேவை

வீடு மற்றும் காரியாலயம்
(ஒரேகட்டடத்தொகுதியில்)

700 சதுர அடி
யாழ்ப்பாண நகர வளாகத்தில்

தொடர்புகளுக்கு 072 2352668

# மரண அறிவித்தல்

## குமாரசாமி சரவணபவன்



அரியாலையைப் பிறப்பிடமாகவும், No.30, குகன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சரவணபவன் 13.11.2012 புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளைப்பாறிய ஆசிரியர் (சொக்கலிங்கம் வாத்தியார்) என்று அழைக்கப்படும் குமாரசாமி-இராசம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாக்கியநாதன் மற்றும் பத்மாதேவி, முத்துக்குமாரசாமி, யசோதா, உருத்திரா தேவி, பாசுபதன், வாசவன், கெங்காதரன், ஐங்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சசிதரன், சகிலா, சகிரதா, உஷாயினி, சயிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், அருள்டா, துஸ்யந்தன், நல்லைநாதன், யுவனேந்திரன், தில்லைராயன் ஆகியோரின் மாமனாரும், மாணிக்கராசா, காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை மற்றும் சவுந்தரராயன், சுமணாவதி, தேம்பாமலர், சுதாமதி, கமலாசனி, விஜயகுமாரி, சுந்தரலிங்கம், பாலச்சந்திரன், சித்திரா, யசோதா, தேவா ஆகியோரின் மைத்துனரும், யோனதன், யசிக்கா, கயன், யசிந்தன், நிரோயன், யினோதன், நதினி, தவின், யோந்தன், கயோதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2012) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

(25390) (10,6,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிக் கிண்ணம் ஹென்றிஸ் வசம்



யாழ்ப்பாணம், நவ.18

அமரர் முருகர் வேலாயுதம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 14வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே நடந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி வெற்றிபெற்று வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டிச் சம்பியன் ஆனது.

தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

ஆட்டம் தொடங்கியது. முதல் ஆட்டம் முடிவடையும் வரை இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாதமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டத்தின் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வட்டுக் கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி அணியை வெற்றி கொண்டு மூன்றாமிடத்தைத் தனதாக்கிக்கொண்டது. இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவானந்தராசா, கௌரவவிருந்தினராக அமரர் முருகர் வேலாயுதம் அவர்களின் புதல்வரும் மகாஜனக் கல் லூரி ஆசிரியருமானவேலாயுதம்ஜீவறாபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-23-86)

## கிறீன்லைட் வெற்றி




திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடத்தப்படும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று சனிக்கிழமை திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் மாலை 3 மணியளவில் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் கிறீன்லைட் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது.

கிறீன்லைட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பற்றிமா விளை யாட்டுக்கழக அணி மோதிக் கொண்டன.

இதில் கிறீன்லைட் விளையாட்டுக் கழக அணி 5:4 என்ற கோல்கணக்கில் பற்றிமா விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டது. (த-23)

## திருமலையில் கபடிப் பயிற்சி



யாழ்ப்பாணம்,நவ.18

கிழக்கு மாகாண விளையாட்டுத்துறைத் திணைக்களத்தின் நிதிப்பங்களிப்புடன் திருகோணமலை மாவட்ட செயலகமும் திருகோணமலை கபடிச் சங்கமும் இணைந்து திருகோணமலை மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த உடற்பயிற்சி ஆசிரியர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு இடையே நடத்திய இரண்டு நாள் கபடிப் பயிற்சி முகாம் வெள்ளி, சனிக்கிழமைகளில் திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. கொழும்பு விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் அதிகாரி இசுறு பண்டாரா, பொலிஸ் கபடி அணியின் பயிற்றுவிப்பாளர் இரவிந்திர சில்வா, விமானப்படை கபடி அணியின் பயிற்றுநர் பிரதாப் நிசாந்த ஆகியோர் பயிற்சிகளை வழங்கினர். பயிற்சியில் பங்கு பற்றியவர்களுக்கு பயிற்சி சான்றிதளும் வழங்கப்பட்டன. (த-23)

# சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றி

யாழ்ப்பாணம்,நவ.18

இலங்கைத் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயதுப் பிரிவு ஆண்களுக்குகிடையிலான பிரிவு 111 இற்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது. நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். ஜோன்ஸ்கல்லூரி 'ஏ' அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி மோதிக்கொண்டது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி 28.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அபிலாஸ், 17 ஓட்டங்களைத் தமது அணி சார்பாக பெற்றனர். உதிரிகளாக 11 ஓட்டங்கள் கிடைக்கப்பெற்றன.

பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் சிந்துஷன் 8.1 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 7 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளையும் கபில்ராஜ் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் ,யதுஷன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினை வீழ்த்தினர். தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ கல்லூரி அணி 30.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யதுஷன் 51 ஓட்டங்களையும், கபில்ராஜ் 26 ஓட்டங்களையும் டினுசன் 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். உதிரிகளாக 5 ஓட்டங்கள் கிடைக்கப் பெற்றன.

பந்து வீச்சில் நெல்லியடி மத்திய மகா வித்தியால அணி சார்பில் தர்சிகன் 11.1 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 46 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், சாறுகன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினார்.

தனது இரண்டாவது இன்னிங்ஸுக் காகக் களம் இறங்கிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 32.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கினையும் இழந்து 32 ஓட்டங் களை மட்டும் பெற்றது.

இதில் ரதீஸ்சன், அன்பரசன் ஆகியோர் தலா 3 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிசார்பில் சொரூபன் 6:1 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 6 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், யதுஷன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 6 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும் சிந்துஷன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 2 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் வீழ்த்தினர். (த-23)

# ரக்பி பயிற்சி முகாம் நேற்று





நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த கத்துரு சிங்க கலந்து கொண்டு ரக்பி பயிற்சி பட்டறைஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாணம்,நவ.18


சப்ரகமுவ ஸ்டேலியன்ஸ் விளையாட்டுக்கழகம் மற்றும் யாழ்ப்பாணம் பாதுகாப்புப்படைத் தலையமையகமும் இணைந்து நடத்திய ரக்பி பயிற்சிப் பட்டறை நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க கலந்து கொண்டு ரக்பி பயிற்சிப் பட்டறையை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து ரக்பி தொடர்பான அடிப்படையான விளக்கங்கள் வீர,வீராங்கனைகளுக்குத் திரையில் காண்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து வீர,வீராங்கனைகளுக்கு ரக்பி தொடர்பான விளக்கங்கள் மைதானத்தில் செயல்முறைமூலம் செய்து காண்பிக்கப்பட்டது. ரக்பி தொடர்பான விதிமுறைகள் செயல்முறைகளை ரெனி அமித் ,வருண டிசில்வா ஆகியோர் வழங்கினர்.

இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மாதகல் சென்.ஜோசப், மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி, சுழியாற்றைச் சேர்ந்த 80 மாணவர்கள் கலந்து கொண்டனர். (த-23)

## வென்றது சென். அன்ரனிஸ்



கொழும்புத்துறை.நவ.18


பாஷையூர் சென். அன்ரனிஸ் மகளிர் வித்தியாலய வலைப்பந்தாட்டத் திறப்புவிழா கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் மகளிர் அணிக்கும் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்துக்கும் இடையிலான சினேகபூர்வ போட்டி நடைபெற்றது. இதில் பாஷையூர் சென். அன்ரனிஸ் அணி வெற்றியீட்டியது.

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய அணிக்கும் பாஷையூர் சென். அன்ரனிஸ் மகளிர் வித்தியாலய அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் 4:1,4:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் பாஷையூர் மகளிர் வித்தியாலய அணி வெற்றிபெற்றது.

வெற்றிபெற்ற அணிக்கான வெற்றிக்கிண்ணத்தை மைதானத் திறப்புவிழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இராணுவ அதிகாரி சந்தன குணவர்த்தன வழங்கினார். (த-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அபார பந்துவீச்சு



நியூஸிலாந்து வீரரை ஆட்டமிழக்கச் செய்த மகிழ்ச்சியில் ஹேரத்.

நியூஸிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதலாவது நாளில் இலங்கை அணி சிறப்பாகப் பந்து வீசி 221 ஓட்டங்களுக்குள் நியூஸிலாந்து அணியைக் கட்டுப்படுத்தியது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இலங்கை அணி நேற்றைய நாள் நிறைவு வரையில் ஒரு இலக்கினை இழந்து 9 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு நியூஸிலாந்து அணி வந்துள்ளது. முதலில் இடம்பெற்ற ஒரு நாள் தொடரை 3-0 என்ற கணக்கில் நியூஸிலாந்து அணி இலங்கையிடம் இழந்தது. இந்த நிலையில் இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் காலியில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டில்ஷான் காயம் காரணமாக ஆட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

ஆரம்பம் முதல் இலங்கை அணியின் பந்து வீச்சில் நியூஸிலாந்து அணியின் துடுப்பாட்டம் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டிருந்தது. முதல் மூன்று இலக்குகளை இலங்கையின் வேகப் பந்து வீச்சாளர்கள் கைப்பற்றினர். சமிந்த எரங்க நியூஸிலாந்தின் முதலிரண்டு இலக்குகளையும் வீழ்த்த, முக்கிய இலக்கான ரெயிலரை, குலசேகரா ஆட்டமிழக்கச் செய்தார்.

40 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து நியூஸிலாந்து அணி தடுமாறியது. அதன் பின்னர் நான்காவது இலக்குக்கு இணைந்த பிரண்டன் மக்கலம், டானியல் பிளைன் ஜோடி நியூஸிலாந்து அணியை சரிவிலிருந்து மீட்டது. இலங்கையின் பந்து வீச்சை சிறப்பாக சமாளித்த இந்த ஜோடி நியூஸிலாந்துக்கு வலுவான அடித்தளத்தை அமைத்தது. அபாரமாக துடுப்பெடுத்தாடிய மக்கலம் தனது 24 ஆவது அரைச் சதத்தை கடந்தார். நான்காவது இலக்குக்கு 90 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் ஹேரத்தின் சுழலில் சிக்கி மக்கலம் 68 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அதன் பின்னர் களமிறங்கிய மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் ஹேரத்தின் சுழலுக்கு மண்டியிட்டனர். இருந்தும் மக்கலத்துடன் சிறப்பான இணையை வெளிப்படுத்திய டானியல் பிளைன் தனது 5 ஆவது அரைச் சதத்தை கடந்து நியூஸிலாந்து அணிக்கு ஓரளவு ஆறுதலளித்தார். அவரும் 53 ஓட்டங்களுடன் ஹேரத் சுழலில் சிக்க நியூஸிலாந்து அணி மீட்சியில்லாமல் போனது.

பின்வரிசையில் வென் விக் 28, சவுத் தீ 16 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். இறுதியில் நியூஸிலாந்து அணி 82.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 221 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. பந்து வீச்சில் ஹேரத் 5, எரங்க 3, குலசேகரா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு நேற்று மாலையே இலங்கை அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. தரங்க பரணவிதானவுடன், அறிமுக வீரர் கருணாரத்ன களமிறங்கினார். நியூஸிலாந்து அணியும் இலங்கை அணிக்கு சற்றும் சளைக்காமல் ஆரம்பத்திலேயே போட்டுத் தாக்கியது. அறிமுக வீரர் கருணாரத்ன ஓட்டமெதனையும் பெறாது சவுத் தீயின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து 'நைட் வோர்ச்மனாக' சுராஜ் ரந்தீவ் களமிறங்கினார்.

நேற்றைய ஆட்ட நேர இறுதியில் இலங்கை அணி 5 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கினை இழந்து 9 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ரந்தீவ் 3, பரணவிதான கணக்கை ஆரம்பிக்காத நிலையிலும் களத்தில் உள்ளனர். (5)

# முதல் இன்னிங்ஸில் திணறியது இங்கிலாந்து

இந்திய அணியின் சுழல் பந்து வீச்சை சமாளிக்க முடியாத இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 191 ஓட்டங்களுக்குள் சுருண்டு 'பலோன்' நிலைக்குத் தள்ளப்பட்டது. இரண்டாவது இன்னிங்ஸை நேற்றைய தினமே ஆரம்பித்த இங்கிலாந்து அணி நேற்றைய நாள் நிறைவில் இலக்கு நஷ்டமின்றி 111 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் அஹமதாபாத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 8 இலக்குகளை இழந்து 521 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது. இந்திய அணி சார்பில் துடுப்பாட்டத்தில் புஜாரா ஆட்டமிழக்காமல் 206, சேவாக் 117, யுவராஜ் 74 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சுவான் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இங்கிலாந்து அணி ஆரம்பத்திலேயே இந்திய சுழல் பந்து வீச்சுக்கு திணறியது. நேற்று முன்தினம் ஆட்ட நேர நிறைவில் 3 இலக்குகளை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் குக் 22, பீற்றர்ஸன் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.

சவலான ஆட்டத்தை எதிர்கொள்வதற்கு களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு இந்திய அணி நேற்றைய தினம் தொடர்ந்து அதிர்ச்சியைக் கொடுத்தது. பீற்றர்ஸன் 17 ஓட்டங்களுடனும் அணித் தலைவர் குக் 41 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 97 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்து தடுமாறியது.

பிரியர், பிறஸ்னன் ஜோடி 8 ஆவது இலக்குக்காக சுமாரான இணைப்பாட்டத்தை ஏற்படுத்தியது. இந்திய அணி சுழலை சிரமப்பட்டு சமாளித்து ஓட்டங்களைக் குவித்தது. 47 ஓட்டங்களை ஏழாவது இலக்குக்காகப் பகிர்ந்த நிலையில் பிறஸ்னன் 19 ஓட்டங்களுடன் ஓஜாவின் சுழலில் சிக்கினார்.

அதன் பின்னர் புரோட்டுடன் இணைந்த பிரியர் அணியை தொடர்ந்து வழிநடத்திச் சென்றார். மேலதிக இலக்கு இழப்பை தவிர்ப்பதற்கு கடுமையாகப் போராடியது இந்த இணை. மெதுவாக நகர்ந்த இணைப்பாட்டம் 43 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் சகீர்கானால் பிரிக்கப்பட்டது. புரோட் 25 ஓட்டங்களுடன் வெளியேறினார். சிறிது நேரத்தில் பிரியர் 48 ஓட்டங்களுடன் ஓஜாவிடம் சிக்க இங்கிலாந்தின் முதலாவது இன்னிங்ஸ் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸிற்காக சகல இலக்குகளையும் இழந்து 191 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் சுழல் பந்து வீச்சாளர்களான ஓஜா 5, அஸ்வின் 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

'பலோன்' நிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட இங்கிலாந்து அணி களமிறங்கியது. குக் அறிமுக வீரர் கொம்ரொன் களமிறங்கினர். இந்த ஜோடி இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய அணியின் சுழல் பந்து வீச்சை இலகுவாக சமாளித்து ஓட்டங்களைக் குவித்தது. சிறப்பாக ஆடிய அணித் தலைவர் குக் தனது 30 ஆவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

நேற்றைய நாள் ஆட்ட நேர முடிவுவரையில் சிறப்பாக ஆடிய இங்கிலாந்து அணி 38 பந்துப் பரிமாற்றங்களில் இலக்கு நஷ்டமின்றி 111 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. இன்று ஆட்டத்தின் நான்காவது நாளாகும். (5)



இங்கிலாந்தை ஆட்டிப் படைத்த ஓஜா, அஸ்வின்

# பங்களாதேஷ் பரிதாபத் தோல்வி

பங்களாதேஷ் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதும் மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டாவது இன்னிங்ஸில் அசத்தலாகப் பந்து வீசி வெற்றியைத் தனதாக்கியது. பங்களாதேஷ் அணி 77 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணியிடம் வீழ்ந்தது.

பங்களாதேஷ் சென்றுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டு போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் டாக்காவில் கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகளின் அணித் தலைவர் டரன் சமி, துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

அதன்படி களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 144 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 527 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. மேற்கிந்தியத் தீவுகள் சார்பில் துடுப்பாட்டத்தில் சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 203, ராம்டின் ஆட்டமிழக்காமல் 126 ஓட்டங்களையும், கெரன் பவல் 117 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் அறிமுக வீரர் சொகாக் ஹாசி 3 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய பங்களாதேஷ் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 556 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பங்களாதேஷ் அணி சார்பில் துடுப்பாட்டத்தில் நமீம் ஸ்லாம் 108, நஷீர் ஹுஸைஸன் 96, சகிப் அல் ஹசனின் 89, மகமதுல்லா 62 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தனர். பந்து வீச்சில் சுனில் நரைன், ராம்போல் தலா 3 இலக்குகளையும், சமி 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 29 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது மேற்கிந்தியத்தீவுகள் அணி. நேற்று முன்தினம் ஆட்ட நேர நிறைவில் 6 இலக்குகளை இழந்து மேற்கிந்தியத்தீவுகள் அணி 244 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சமி ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பரபரப்பான நிலையில் நேற்றைய ஐந்தாவது நாள் ஆட்டம் ஆரம்பமானது. ஆட்டம் ஆரம்பித்து சிறிது நேரத்திலேயே சமி 16 ஓட்டங்களுடன் வீழ்த்தப்பட்டார். அதன் பின்னர் சுனில் நரைன் தவிர்ந்து ஏனைய வீரர்கள் இரட்டை ஓட்ட இலக்கத்தைப் பெற தவறினர். காயம் காரணமாக இறுதி ஆட்டக்காராக களமிறங்கிய சந்தர்போல் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி சகல இலக்குகளையும் இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. சுனில் நரைன் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் பங்களாதேஷ் சார்பில் அறிமுக வீரர் சொகாக் ஹாசி 6 இலக்குகளைக் கைப்பற்றினார்.

245 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளிக்கத் தொடங்கிய பங்களாதேஷ் அணி ஆரம்பத்திலிருந்தே மேற்கிந்தியத்தீவுகளின் பந்து வீச்சை சமாளிக்கத் திணறியது. முன்னணி வீரர்களே இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தடுமாறினர். பெஸ்டின் பந்து வீச்சில் பங்களாதேஷ் அணி விரைவாக இலக்குகளைப் பறிகொடுத்தது.

எந்தவொரு இலக்குக்கும் சீரான இணைப்பாட்டம் பகிரப்படாமையால் 167 ஓட்டங்களுக்குள் தனது சகல இலக்குகளையும் பங்களாதேஷ் பறிகொடுத்தது. மகமதுல்லா அதிகபட்சமாக 29 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் பெஸ்ட் 5, வீரச்சாமி பெருமாள் 3 இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக இரண்டு இன்னிங்ஸிலும் சதமடித்த மேற்கிந்தியத்தீவுகளின் கெரன் பவல் தேர்வானார். (5)



பெஸ்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா மாவட்ட முதியோர் சங்கமும் - வடமாகாண சமூக சேவைகள் திணைக்களமும் லயன்ஸ் கழகங்கள் மற்றும் வவுனியா வர்த்தகர் சங்கத்துடன் இணைந்து நடத்திய மாவட்ட முதியோர் தின விழாவில் வவுனியா அல்- இக்பால் கல்லூரி மாணவர்கள் இணைந்து 'முதியோர் இல்லத்தில் ஒரு நாள்' என்ற நகைச்சுவை நாடகத்தை நடத்தினர். இதில் பங்கு கொண்ட கலைஞர்களும், நெறியாள்கை செய்த கல்லூரி அதிபர் சேகுது ராஜிது மற்றும் விருந்தினர்களும் காணப்படுகின்றனர். (க-400)



அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகளான வி.கின்சிகா, யோ. திலக்சனா, த.திலக்ஷா ஆகியோர் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர். (க-18)



வவுனியா மாவட்ட முதியோர் தினவிழாவில் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி துஸ்யந்தி வேலுப்பிள்ளையின் பரதக்ஷேத்திர கலாமன்ற மாணவிகள் வரவேற்பு நடனம் நிகழ்த்துகின்றனர். (க-400)



வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்திய திருமூலர் விழாவின்போது மணி விழாக் காணும் கலாநிதி நாகேஸ்வரனுக்கு ஓய்வு பெற்ற வவுனியா மேலதிக அரச அதிபர் திருஞானசம்பந்தபிள்ளை, வவுனியா நகர சபையின் முன்னாள் நகர சபைத் தலைவர் என்.ஜி.நாதன், தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் க.சத்தியநாதன், சண்முகவடிவேல் ஸ்தபதி ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றனர். (க-400)



நீண்ட நேரமாகக் காத்திருந்து பஸ்சில் ஏறுவதற்கு முண்டியடிக்கும் அக்கராயன் மகாவித்தியாலய மாணவர்கள். (க-18)



துணுக்காயில் மேய்ச்சல் நிலங்களைத் தேடி அலையும் மாடுகள். (க-18)



கடந்த தீபாவளி தினத்தன்று இராணுவத்தின் 54 ஆவது படைப் பிரிவினர் திருக்கேதீஸ்வரத்தில் பக்தர்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கினர். (க-12)



கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட 62 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடம். (க-18)



நெடுங்கேணி பிரதான தபால் நிலையத்தின் நுழைவாயிலில் மக்களுக்கு இடையூறாகக் காணப்படும் கழிவு வாய்க்கால். (க-435)



தழல் இலக்கிய வட்டத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புத்தகக் கண்காட்சியின் போது மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்டர் சோசையால் எழுத்தாளர் உதயன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுகின்றார். (க-12)



துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தினரால் மாங்குளத்தில் நடத்தப்பட்ட மாணவர்களின் கையெழுத்துச் சஞ்சிகைகளைக் கொண்ட கண்காட்சியின் நிறைவு நிகழ்வின்போது துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி லூட்ஸ் மாலினி வெனிற்றன் உரையாற்றுகின்றார். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111


## பொன்னான வாய்ப்பு

**மலேசியாவில் ஹொட்டல் முகாமைத்துவப்படிப்பும், மாதாந்த சம்பளமும் (ரூபா 30,000மும்) இலவச தங்குமிட வசதி, இலவச உணவும்.**

* 30 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகள்
* O/L மட்டும் போதுமானது
* 2 வருடங்களில் கற்கைநெறி பூர்த்தியானவுடன் மலேசியா அல்லது சிங்கப்பூரில் உயர்ந்த வேதனத்துடன் வேலைவாய்ப்பு
* முதல் வரும் 20 பேருக்கே இவ் அரிய வாய்ப்பு

திசைகாட்டி பிறைவேற் லிமிட் (PV 82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்:
0212219016
(25373)(3.14)



## நான்கு இயந்திரங்களில் நாளாந்த வருமானம்

**வின்ஸ்டார்**



ஐஸ்கிறீம் இயந்திரம்
ரூ. 99,000 இலிருந்து

விபரம் அறிய உடனே அழையுங்கள்
யோகேஸ் 077 3918870
077 1066902

வின்ஸ்டாரின் வியப்பான மாத லாபம்
**ரூ 100,000/= க்கு மேல்**

விற்பனையின் பின் சேவை
WITH PRE - COOLING & AIR PUMP



ஜூஸ் இயந்திரம்
ரூ. 55,000 இலிருந்து

டீ & கொ(f)பி இயந்திரம்
ரூ. 45,000 இலிருந்து

பொப்கார்ன் இயந்திரம்
ரூ. 29,000 இலிருந்து

வின்ரிச்சின் உத்தரவாதத்துடன்
Credit card acceptable
VISA

**WINRICH INTERNATIONAL (PVT) LTD**
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.

## STUDY IN NEW ZEALAND


உங்கள் எதிர்காலத்தை ஒளிமயமாக்கிட நாம் தயார்....



நியூசிலாந்தில் அங்கீகரிக்கப்பட்ட முதன்மை கல்லூரிகளில் கல்வியை தொடர...

**யாழ். நகரில் இலவச ஆலோசனை**
**இம் மாதம் 21 ஆம் திகதி ( புதன்கிழமை)**
**மட்டுப்படுத்தப்பட்ட பதிவுகள் ...... முந்துங்கள்**
**உங்கள் பதிவுகளுக்கு தொடர்பு : 077 3922677**

எம்மால் நியூசிலாந்து நாட்டிற்கு கல்வி தொடர அனுப்பிவைக்கப்பட்ட மாணவர்களில் சிலர்...



| Studying in Auckland, NZ | Work Permit in NZ | Studying in Christchurch, NZ | Studying in Auckland, NZ | Studying in Auckland, NZ |
|---|---|---|---|---|
| Mariya Riyankie Reggie Batticaloa | Enthuya Vijay Jaffna | Sageevan Pathmaseelan Jaffna | Pratheepkumar Sivasothy Trincomalee | Vijay Jaffna |

excellence education
www.excellenceedu.com

மேலதிக விபரங்களுக்கு Mr.Safeer 077 3922677
13,1/1,17th Lane Colombo-03.Tel : 0112 372709
Website:www.excellenceedu.com

## FRENCH LANGUAGE CENTRE

Easy Way to Learn French

FRENCH CLASSES - பிரெஞ்சு வகுப்புக்கள்

French கதைப்பதற்கு 100% உத்தரவாதம், Speaking, Listining, Reading, writing தனித்தனி கவனம் செலுத்தப்படும்.

600க்கும் மேற்பட்ட மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் எமது நிறுவன ஆசிரியரிடம் French கற்றுச் சென்றுள்ளனர்.

ஆசிரியர்: Mr. V. Jegan (Teaching Trainning in France)
T.P: 0779789456 (சி/1883)(3.14)

| No.23, Palaly Road, Jaffna. (ஆரியகுளத்துக்கு அண்மையில்) பிரிவு I Sat, Sun 10am (24.11.2012) பிரிவு II Mon, Tue 11am (26.11.2012) | M.M.V வீதி, காளி கோயிலடி, நெல்லியடி. பிரிவு I Mon, Tue 3.30pm (26.11.2012) உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். |
|---|---|

German, Swiss (Deutch) வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

## தேவை

யாழ் நகரில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு கார்ச் சாரதி தேவை. தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல.4417,
C/O உதயன்
361,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(25412)(3.14)

## இறுதிக் கருத்தரங்கு

24 ஆம் திகதி நடைபெறவுள்ள மக்கள் வங்கி போட்டி பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு

By:P உமாசங்கர் கமல்தாசன்
காலம் 19.11.2012 திங்கள் காலை 9-பி.ப.5
T.P: 0774696695

**நாவலர் கல்வி நிலையம்.**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## நேர்முகத்தேர்வு

16.11.2012 அன்று உதயனில் பக்கம் 24 இல் பிரசுரமான நடிகர், நடிகைகளுக்கான நேர்முகத்தேர்வு இன்று பிற்பகல் 3.00 மணியளவில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

தொடர்பு: 0774604576 "வரத்" (24319)(3.14)

## வாகனம் விற்பனைக்கு

**பாட்லீட்**
**பினான்ஸ் பிஎல்சி**

43-8608 - ISUZU ELF LORRY
47-8688 - LEYLAND TUSKER LORRY

தொடர்புகளுக்கு:- 077-3425114
077-7869886
077-3464399

306A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## இசுசு றக் விற்பனைக்கு

இசுசு ELF 250 Single wheel , Single Battory, 10½ அடி, 68-xxxx 4.JB1 எஞ்சின்(டீசல் வேலை செய்யக் கூடியது)மிக நல்ல நிலையிலுள்ள றக் விற்பனைக்குண்டு.
தொடர்பு:0776306733, 0212250186
(25387)(6.7)

## German Language Academy

ஜேர்மன், டொச் மொழிகள் இலகுவழியில் ஜேர்மனியில் கற்று வந்த ஆசிரியரால் மிகச்சிறந்த முறையில் பல வருடங்களாக யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் பல மாணவர்களை சித்தியடையச் செய்த ஆசிரியர் ஆவார். கடந்த 27.09.2012 நடைபெற்ற பரீட்சையில் பல மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.

* ஜேர்மன் A1 பரீட்சைக்கு தோற்ற விரும்புவோர் இந்த நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

French மொழிகளும் இங்கு கற்பிக்கப்படுகிறது.

| German Language Academy No.7, Palaly Road, Jaffna. 0779707322 | Sun British College Station Road, Vavuniya. |
|---|---|

(25094)(3.6)

## Personal Class (கணினி)

* கற்கைநெறிகள் யாவும் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
* Ms Office 2010, Internet and E-mail, Web Design,.Desktop Publishing, Computre Type Setting, Graphic Design சிறுவர்களுக்கான Kids program.
* பெறுமதி மிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்
* குறிப்பு: கணினி இல்லாதவர்களுக்கு எனது Loptop மூலமாகக் கற்பிக்கப்படும்.
* T.P: 0779672038
* ஆசிரியர்: KRC (25383)(3.8) நல்லூர்.

## கார் விற்பனைக்கு

மாருதி சில்வர் நிறக்கார்
800CC
விற்பனைக்குண்டு.
**0778418344** (25362)

## யாழ்ப்பாண முந்திரிகைப்பழம் (Grapes) உற்பத்தியாளர்களே!

உங்களுடைய முந்திரிகைப் பழத்துக்கு எங்களிடமிருந்து கூடுதல் விலை வழங்கப்படும்.(பணம் அன்றே வழங்கப்படும்)
தொடர்பு அஜித் என்ரபிரைசஸ்,
இல. 45, 5ஆம் குறுக்குத்தெரு கொழும்பு 11
0112423464, 0115739486,0779612110
(24721)(6.8)

## விற்பனைக்கு உண்டு

நல்ல நிலையில் இயங்கிவரும் புடைவை வியாபார நிலையத்திலுள்ள தளபாடங்கள் உட்பட அனைத்து இந்திய நவீன புடைவைகளும் விற்பனைக்கு உண்டு. இந்த நிலையத்தினை கைமாற்றம் செய்து நடத்தவிரும்புவோருக்கு சகல ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும். குளிரூட்டப்பட்டதும் நவீன முறையில் அமைக்கப்பட்டதுமாகும்.

**தொடர்பு:**
**0771286031,**
**0777709381**
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி.
(25240)(3.14)

## ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா சட்ட ஆலோசனையின் இறுதி நாள் 15.12.2012

### ஏன் இந்தக் காலக்கெடுவினுள் நாம் திசைகாட்டியில் ஆலோசனை பெற்றாக வேண்டும்?

#### தனித்துவமானவர்கள்:

ஆம் வடபுலத்தில் மேற்படி ஆலோசனைத்துறையில் பலவித வெற்றிகளை ஈட்டி சாதனைபடைத்துவரும் ஒரேயொரு நிறுவனம் திசைகாட்டி மட்டுமே.

#### முதலுக்கு மோசமில்லை

முற்பணமோ பிற்பணமோ கொடுத்தவர் கேட்ட கணத்தில் மீளளிப்பு என்பதற்கிணங்க ஊராறிய பல லட்சங்களை திருப்பிக் கொடுத்ததன் மூலம் தாம் முன்மாதிரியானவர்கள் என்பதை நிரூபித்தவர்கள். எனவே உங்கள் முதலுக்கு மோசமில்லைத்தானே.

#### மீள எப்போ ஆரம்பிக்கப்படுமோ தெரியவில்லை.?

கௌரவ இயக்குநர் சபைத்தீர்மானத்தின் பிரகாரம் இதுவரை கிடைக்கப்பெற்ற விசேட ஆலோசனை செயற்திட்டத்திற்குரிய பல நூற்றுக்கணக்கான விண்ணப்பங்களிற்கு பரிகாரம் கண்ட பின்பே மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை உள்ளதால் மீளவும் ஆலோசனை வழங்கல் எப்போது ஆரம்பிக்கப்படுமோ தெரியவில்லை.

இன்னும் என்ன தாமதம் கறைபடியாத வரலாற்றைக் கொண்ட பகிரங்கத்தன்மையான முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான உங்கள் திசைகாட்டியிடம் விரைந்து வாருங்கள்.

திசைகாட்டி பிறைவேற் லிமிட் (PV 82703)
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 0212219016
(25372)(3.6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


03
உச்சத்தில் இருக்கும் சனீஸ்வரன்

விலகி இருக்க வேண்டிய தருணம்


02


22
வெலிக்கடையின் பின்னணியில் யார்?

சுரண்டப்படுகிறது தமிழரின் கடலும்


04

புலி வரும்; கவனம் பாருங்கோ!


23


# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்
01

உதயன் | 18 நவம்பர் 2012 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள்: இருபத்துநான்கு


# "யானே கள்வன்"

ஒளண்யன்

ஈடிப்பஸ், கிரேக்கப் புராணங்களின் பக்கங்களை கண்ணீரில் தோய்த்தெடுத்த துயர் நாயகன். நாட்டின் அதிமேன்மை மிக்க சக்கரவர்த்தியாக முடிசூடிக்கொண்ட பின்னர், வறுமையும், பஞ்சமும் தலைவிரித்தாடத் தொடங்கின. இதற்கு என்ன காரணம் என்று அறிந்து வரத் தனது மைத்துனனான கிரியோனை வானுலகுக்கு அனுப்பி வைத்தான்.

கடவுளர்களிடம் விசாரித்ததில் மாபாவி ஒருவனாலேயே இவ்வாறு நாட்டில் பஞ்சம் தோன்றியுள்ளது என்பது தெரிய வந்தது.


இதை மன்னனிடம் சொன்னான் கிரியோன். குற்றவாளியை தேடும் படலம் தொடங்கியது. கடைசியில் மன்னனான ஈடிப்பஸ்ஸே அந்த மாபாவி என்பது தெரியவந்தது. விதி வசத்தால், தனது தந்தையைக் கொன்று, தாயையே தனது மனைவியாக்கியும் கொண்டிருந்தான் என்பது வெளிச்சத்துக்கு வந்தது.

ஆனால் இந்தப் பாவங்களைத் தான் செய் திருந்ததை ஈடிப்பஸ் உணர்ந் திருக்கவில்லை. இறுதியில் தனது பாவங்களுக்குப் பரிகாரமாக தனதுகண்களைப் பிடுங்கி எறிந்து,தற்கொலை செய்து கொள்கிறான் ஈடிப்பஸ். (தனது தாயையே மணந்தவன் ஈடிப்பஸ் என்பதாலேயே, தாய்க்கும் மகனுக்கும் இடையிலான பிணைப்பை 'ஈடிப்பஸ் சிக்கல்' என்றழைப்பர்).

கிரேக்கப் புராணத்தின்படியும், சோபோ கிளிஸின் நாடகப் பிரதியின்படியும் ஈடிப்பஸ் இறந்திருந்தாலும், வெவ்வேறு வடிவங்களில் யுகங்கள்தோறும் அவன் பிறப்பெடுத்துக் கொண்டே வருகின்றான் போலும்.

அந்த வரிசையில் ஈடிப்பஸ்ஸின் இப்போதைய பிறப்பு வடிவம் ஐ.நா.சபை. இலங்கையில் நடைபெற்ற, இறுதிக்கட்டப் போரின்போது, நிகழ்ந்த மனிதப் படுகொலைகள் உள்ளிட்ட சகல விடயங்களையும் ஆராய்வதற்காக ஐ.நா. சபை ஒரு உள்ளக விசாரணையை நடத்தியது.

> "நீங்கள் இருக்கிற படியால தான் ஆமி ஓரளவுக்கு இடம் வலம் பார்த்துக் குண்டு போடுறான். நீங்களும் இல்லையெண்டால் அவங்கள் கண் மண் பாராமல் எங்களையும் குழந்தை குஞ்சுகளையும் குதறிப் போடுவாங்கள்'' என்று ஒப்பாரி வைத்தனர். வீதிகளுக்குக் குறுக்கே படுத்திருந்து, வெள்ளை வாகனங்களை நகரா முடியாதபடி மனிதப் போராட்டத்திலும் இறங்கினர்.



புலிகளா? படையினரா? அதிகளவான குற்றங்களைப் புரிந்துள்ளார்கள் என்பதையும் இதன் போது, ஐ.நாவின் செயற்பாடு எவ்வாறு இருந்தது என்பதையும் பிரேத பரிசோதனை செய்து பார்ப்பதே இந்த விசாரணையின் முக்கிய கூறாக இருந்தது.

ஆனால், விசாரணையின் முடிவில் ஐ.நா. கலியுகத்து ஈடிப்பஸ்ஸாகத் தனது கண்ணை தானே பிடுங்கிக்கொண்டு, சாக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கு ஐ.நா. சபையின் அ[illegible] பணிப்பற்ற செயற்பாடுகளே பிரதான **காரணம்** என்று **"மையிட்டப்பின்னரும்"** ஐ.நாவின் உள்ளக **அறிக்கை** உண்மையை கக்கி **இருக்கிறது (**இந்த அறிக்கையின் **அநேக பக்கங்கள்** கறுப்பு மையிடப்பட்**டு**, தணிக்கை செய்யப்பட்**டுள்ளன)**

இந்த **விடயம்** உலக நாடுகளுக்கும், **ஐ.நாவின்** பொதுச் செயலருக்**கும் ஏற்கனவே** தெரிந்திராத **அதிர்ச்சி தரக்கூடி**ய விடயமாக **இருக்கலாம்.** ஆனால், தமக்கு **நேர்ந்த அழி**வுகளுக்கு ஐ.நாவும் **காரணம் என்ப**து வன்னி மக்களுக்குப் **போர் நட**ந்து கொண்டிருக்கும்**போதே நன்**கு தெரியும்.

வன்னி **மக்களின்** மீட்பர்கள் தாமே **என்பதுபோல**, சமாதான காலத்தில் **புழுதியைக்** கிளப்பிய படி **வெள்ளை வாகன**ங்களில் அறம்புறமாக ஓடித்திரிந்தன ஐ.நா. நிறுவனங்கள் உள்ளிட்ட தொண்டு **நிறுவனங்கள்.** போர் தன்னுடைய உக்கிர மூச்சால் தமிழ்ப் பகுதிகளைச் சுட்டெரிக்கத் தொடங்கியபோது, அரசு ஓர் அறிவிப்பை வெளியிட்டது. "சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பணியாளர்களின் உயிர்களுக்கு நாங்கள் உத்தரவாதம் அளிக்க முடியாது. எனவே, அவர்கள் போர் நடக்கும் இடங்களிலிருந்து வெளியேற வேண்டும்''

அரசின் இந்த அறிவிப்புக்கு மறு பேச்சுப் பேசாமல், இதற்காகவே இத்தனை நாளும் காத்திருந்தவர்கள் போல தமது பெட்டி படுக்கைகளோடு, ஐ.நா. நிறுவனங்களும் ஏனைய தொண்டு நிறுவனங்களும் வன்னியிலிருந்து கழன்றுவிட்டன.

தொண்டு நிறுவனங்கள் தம்மைக் கைவிட்டுச் செல்லும் செய்தி கேட்டதும் மக்கள் கதறி அழுது "எங்களை விட்டுப் போகாதைங்கோ. நீங்கள் எல்லாரும் போனால் இஞ்சை நடக்கிற அநியாயங்களை உலகத்துக்குச் சொல்ல ஒருத்தரும் இருக்க மாட்டினம்.

நீங்கள் இருக்கிற படியால தான் ஆமி ஓரளவுக்கு இடம் வலம் பார்த்துக் குண்டு போடுறான். நீங்களும் இல்லையெண்டால் அவங்கள் கண் மண் பாராமல் எங்களையும் குழந்தை குஞ்சுகளையும் குதறிப் போடுவாங்கள்'' என்று ஒப்பாரி வைத்தனர். வீதிகளுக்குக் குறுக்கே படுத்திருந்து, வெள்ளை வாகனங்களை நகர முடியாதபடி மனிதப் போராட்டத்திலும் இறங்கினர்.

குழந்தைகளின் கேவலும், உதவி கேட்டு அழும் ஓர் இனத்தின் ஒப்பாரியும் ஐ.நாவுக்கு கேட்கவே இல்லை.

(தொடர்ச்சி 23ஆம்பக்கம்பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலகி இருக்க வேண்டிய தருணம்



விகேளம்

இதுவரைநாளும் விலக்கி வைக்கப்பட்டிருந்தது. அந்த உறவு வலுக்கவேண்டும் என தமிழ் மக்கள் விரும்பவில்லை. 'நாங்கள் வேறு நாடு நீங்கள் வேறு நாடு' என்ற தத்துவம் தான் அவர்களின் உறவு நிலைகளில் அந்தஸ்து.

புதிய உறவு தேவைப்படுகிறது எனக் கருதுபவர்கள் தமிழ் மக்கள் அல்லர். எல்லாத் திணிப்புக்களையும் போல அந்த உறவையும் திணிக்க ஒரு சமூகம் முற்படுகிறது என்பதே உண்மை.

அது சாதாரண மனித தோற்றம் அல்லாத வேறு உடை அணிந்து அலங்கரிக்கப்பட்ட உறவு என்பதையே இங்கு கவனிக்க வேண்டி இருக்கிறது. இந்த பத்தியைப் பொறுத்தவரையில் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளை தோற்றுவிக்க வேண்டும் என்பது நோக்கல்ல. ஆனால் மக்கள் விரும்பாத ஒன்றை திணித்து அவர்களின் இருப்பை, சுய கௌரவத்தை இல்லாது ஒழிக்க சிலர் முற்படுகின்றனர் என்பதை இதனால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய விளைவுகள் பற்றி மக்களுக்கு சொல்லப்பட வேண்டிய கடப்பாட்டின் அடிப்படையிலேயே எழுதப்படுகிறது.

கண்ணீரோடு கடந்து போன தீபாவளி தினம் சிலருக்கு நகைப்புடன் கூடிய கொண்டாட்டமாக இருந்தது என்பது எல்லோரும் அறிந்திருக்கக் கூடிய விடயம். வன்னியில் ஒவ்வொரு வீட்டிலும் வருடத்தில் பல தடவைகள் அழுகுரல்கள் கேட்டுக்கொண்டே இருக்கின்றன. யாரும் எண்ணலாம், அல்லது தத்துவம் பேசலாம் 'மனிதன் பிறந்தால் இறப்பு உண்டு என்று' இப்படி ஒரு இறப்புக்காக அந்த அழுகுரல்கள் கேட்கவில்லை. அவலங்களுடன் மறைந்திருக்கும் இந்தக் கணங்கள் எய்யப்பட்ட அம்புகள் பட்டு அழிந்து போனவற்றுக்காகவே.

அம்பை எய்தவர்கள் இப்போது சமூக பாதுகாவலர்களாக தமிழ் மக்களின் நேசக் கரங்களாக எந்த வகையிலும் வேறுபாடற்றவர்களாக மாற அல்லது மாற்றிக் கொள்ள முற்படுகின்றனர். தமது பாவங்களுக்கு மன்னிப்பு கோருவது போன்று நடந்து கொள்கின்றனர்.

வன்னியில் பரவலாக கடந்த தீபாவளி இராணுவத்தினரால் கொண்டாடப்பட்டது. தீபாவளியை இராணுவத்தினர், தமிழ் மக்களோடு சேர்ந்து கொண்டாடினர் என்பதே செய்தி.

இதில் எந்தளவு உண்மைகளும் வடிவமைப்புகளும் இருக்கின்றன என்பது அன்றைய தீபாவளியைக் கொண்டாடிய மக்களுக்கு மட்டுமே புரிந்திருக்கும்.

இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று தீபாவளி வாழ்த்து அட்டைகளைக் கொடுத்து தங்களுடைய மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். ஆனால் அந்த அட்டையை வாங்க வந்தவர்களது கண்களில் பொலிந்திருக்கக் கூடிய கண்ணீரின் அர்த்தம் இராணுவத்தினருக்கு புரிந்திருக்குமா? அவர்கள் மனமுவந்து தங்கள் வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டனரா? வெடி கொழுத்தி ஆரவாரம் செய்தனரா? இந்தக் கேள்விகள் அனைத்துக்குமே இராணுவத்தினருக்கு, அவர்களது மனச் சாட்சியைத் தொட்டு விடை சொல்ல முடியுமா என்றால் ''இல்லை'' என்றே பதில் கிடைத்திருக்கிறது.

இந்த விடயம் இந்தப் பத்தியில் திணிக்கப்படுவது நோக்கமல்ல. ஆனால் இராணுவத்தினரின் தீபாவளி அட்டையை வாங்கிக் கிழித்து எறிந்த மக்களே தமது நிலைப்பாட்டை பகிர்ந்து கொண்டுள்ளனர்.

'இனிய தீபாவளி வாழ்த்துக்கள்' என தலைப்பிடப்பட்டு இராணுவத்தினரால் விநியோகிக்கப்பட்ட அந்த அட்டையில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் உங்கள் உறவுகளான எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள் என்று எழுதப்பட்டிருந்தது.

'' இந்த நன்னாளில் எம் சிந்தனைகள் அனைத்தையும் ஒருதாய் மக்களாக முன்வைப்போம். எம் தாய் நிலத்தை முன்னேற்றுவதற்காக நாம் அனைவரும் ஒன்றாகக் கைகோர்த்துச் செயற்படுவோம் என சபதம் எடுத்துக்கொள்வோம்.'' இது தான் அந்த வாழ்த்துச் செய்தி.

30 வருடங்களாக விடுதலைக்காகப் போராடிய ஓர் அமைப்பு தமிழ் மக்களிடம் இருந்தே தோற்றுவிக்கப்பட்டது. அந்த அமைப்பை தோற்கடிக்க எண்ணிய அரசு தமிழ் மக்களையே படிப்படியாக அழித்தது. அதன் உச்சக் கட்டம் 2009 இல் அரங்கேற, எண்ணிக்கை அற்ற இறப்புக்களால் ஓர் இனம் அழிக்கப்பட்டது.

இதன் பின்னரே அந்த அமைப்பின் இருப்பும் இல்லாது போனது. பின்னரான காலப்பகுதியில் தமிழ் மக்களோடு சேர்ந்து கைகோர்த்து நல்லுறவை கட்டியெழுப்ப ஓர் இனத்தின் அழிப்புக்கு காரணமாக இருந்த இராணுவமே பயன்படுத்தப்படுகிறது என்பது எந்த வகையில் நியாயமானது.

சிங்கள மக்களுக்கு விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகளாக இருந்தால் தமிழ் மக்களுக்கு சிங்கள இராணுவத்தினர் பயங்கரவாதிகளே. அதையும் தாண்டி அரக்கர்களாகவும், பிசாசுகளாகவும் சித்திரிக்கும் அளவுக்கு இராணுவத்தினர் நடந்து கொண்டுள்ளனர். இன்றும் நடந்து கொண்டிருக்கின்றனர்.

சமூகப் பணிகளிலும் அபிவிருத்திப் பணிகளிலும் தாமாகவே தலையிட்டுக் கொள்ளும் படையினர், அதில் தங்களது பங்களிப்பை கணிசமான அளவு பதிவு செய்ய முற்படுகின்றனர். பதிவு செய்தும் உள்ளனர்.

வடக்கு, கிழக்கில் இராணுவத்தினரின் பிரசன்னம் இருக்கும் வரையில் தமிழ் மக்களினது சுய வாழ்வு நிரூபிக்கப்படாது எனச் சர்வதேச சமூகம் அறிவித்துள்ள நிலையிலும் தனவான்களாக தங்களைக் காட்டிக் கொண்டு இன்னமும் தமிழ் மக்களின் சுய நடவடிக்கைகளில் வேண்டாத விருந்தாளிகளாக தலையிட்டு அவர்களது நிம்மதியை இராணுவத்தினர் குழப்பி வருகின்றனர்.

இன அழிப்பின் வடிவங்களில் இதுவும் ஒன்றாகவே கருதப்படுகிறது. ஆயுதப் போராளிகள் இருந்தபோது சுடுகலங்களை ஏந்தி சுட்டவர்கள் தமிழ் இளைஞர்களையும், பெண்களையும் கொடூரமாகக் கொன்றவர்கள் இப்போது நிராயுத பாணிகளான தமிழ் மக்களை நிராயுதமாகவே நின்று கொல்ல வேண்டும் என்று எண்ணுகின்றனர். இதுவே இவர்களின் உறவு திணிப்புக்கான காரணமாகின்றது.

ஏற்கனவே விடுக்கப்பட்ட எச்சரிக்கையை மீறி நேற்று நூறு தமிழ்ப் பெண்கள் இராணுவத்தின் உள்ளூர்ப் படைகளில் இணைந்து கொண்டனர். போரால் பாதிக்கப்பட்ட பின்தங்கிய கிராமங்களில் இருந்தே திருட்டுத் தனமாக ஆசை வார்த்தை காட்டி இவர்கள் இணைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது வெளித்தெரியாத உண்மை.

தற்போது இன்னும் தமிழ்ப் பெண்களை இணைத்துக் கொள்வதற்கு இராணுவத்தினருக்கு இரகசியத் தரகர்கள் தேவையாக இருக்கின்றனர். அவர்களும் தமிழர்களே. அவர்களும் எல்லாம் ஒழுக்கங்களும் கட்டுப்பாடுகளும் நிறைந்த தமிழ் பாரம்பரியத்தை பின்பற்றுபவர்களே. ஆனாலும் ஆசையின் அளவு இந்த மூன்று எழுத்துக்களில் இருந்து மாறியிருக்கின்றது. இதனால் இராணுவத்தினரின் செயற்பாடுகளை சரி என வாதிட்டுக் கொண்டு அதில் இருக்கக் கூடிய நல்ல எடுத்துக் காட்டுக்களாக சம்பளம், மேலதிக படி, உயர்ந்த சலுகைகள் என்று கண்ணைக் கவரும் வார்த்தைகளைக் கொண்டு வலம் வருகின்றனர். இவர்களுக்கு எப்படி துண்டில் போட்டு எப்படி இழுப்பது என்று நன்றாக தெரிந்திருக்கிறது.

அந்த சாதுரியத்தை வைத்துக் கொண்டு மக்களோடு மக்களாக இவர்கள் இருக்கின்றனர். எதிர்கால சமுதாயத்தை ஏதுமற்ற வெளிகளில் தள்ளிவிடுவதற்கு இவர்கள் எப்போதும் தயாராகவே உள்ளனர்.

தமிழ் மக்களுடன் நிரந்தரமான உறவொன்றை பேணுவதன் மூலம் இவ்வாறான சலுகைகளூடாக விலை கொடுத்து வாங்கிவிட முடியும் என்பது அரசின் நோக்கமாக உள்ளது.




இராணுவத்தினருக்கும் தமிழ் மக்களுக்குமிடையில் நல் அபிப்பிராயம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலமே இது சாத்தியமாகும் என்பதுடன் சலுகைகளுக்குக் கட்டுப்பட்டவர்கள் தமக்கு எதிராக கிளர்ந்து எழ மாட்டார்கள் எனவும் அரசு நம்புகின்றது.

ஆடம்பரங்களுக்காக தமது இருப்பை இழந்த சிலர் அரசின் இந்த முயற்சிக்கு தூண்டுகோலாக இருக்கின்றனர். அவர்களே இந்த எல்லாத் திட்டங்களுக்கும் சூத்திரதாரிகள்.

தமிழ் மக்களுக்கும் அரசுக்கும் இடையில் மீண்டும் ஒரு எதிர்ப்பு நிலை தோன்றாது என்பதற்கு இதுவரை எந்த உறுதிப்பாடும் இல்லை. இராணுவத்தினருக்கோ அரசுக்கோ எதிராக தமிழ் மக்கள் இனி ஒருபோதும் கிளர்ந்தெழவே மாட்டார்கள் என்று கூறுவதற்கு உலக நாடுகள் கூட இதனை உறுதியளிக்கவில்லை.

தமிழ் மக்களுக்கு உரிய எந்த உரிமைகளும் இதுவரை வழங்கப்படவில்லை. அவர்களது அபிலாசைகளும் கருத்தில் கொள்ளப்படவில்லை. அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படியாக அரசு இதுவரை நடந்து கொள்ள வில்லை.

இவ்வாறான சூனியமாக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் இடையில் மீளவும் ஒரு முறுகல் நிலை தோன்றாது என்று அரசு உறுதியளித்திருக்கிறதா? இப்போதும் புலிகளைத் தேடிக்கொண்டேயிருக்கும் அரசு, தமிழ்ப் பெண்களை ஏன் படையில் சேர்த்துக் கொள்கிறது? இளைஞர்கள் இராணுவத்தில் இணையக் கூடாது என்பதற்கு என்ன அடிப்படைகளை வைத்திருக்கிறது? என்றெல்லாம் கேள்விகளை தொடுத்துக் கொண்டே செல்லலாம். விடை திட்டமிட்ட இன அழிப்பிலேயே சென்றுமுடிகிறது.


அப்படி ஒரு முறுகல் நிலை தோற்றுவிக்கப்பட்டால் முதலாவது இலக்கு யாராக இருக்கும்? இதற்கு விடை உங்களிடமே விடப்படுகிறது. இதுவரையில் வினைகள் எம்மைத் தேடிவந்தன. இப்போதும் வினைகளைத் தேடி நாம் சென்று கொண்டிருக்கிறோம். கவர்ச்சியான அந்தக் கொடூர எண்ணப்பாடுகள் எம்மை ஆசைக் குட்பட்டவர்களாக எண்ணி ஏமாற்ற முற்படுகிறது.

ஒரு கட்டம் முடிந்து அடுத்த கட்டத்துக்கு தமிழ்ப் பெண்களை படையில் சேர்த்துக் கொள்வதற்கு ஏவல் பேய்கள் உங்கள் வாசலைத் தட்டிக் கொண்டிருக்கின்றன. எதிர்கால விளைவுகளைக் கருத்தில் கொண்டு உங்கள் கதவுகள் நிதானிக்க வேண்டியிருக்கின்றன.

பிரதேசத்தில் உள்ள பாடசாலை அதிபர்கள், பொது அமைப்புக்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், கிராமத்தின் முன்மாதிரியானவர்கள் போன்றோரே உங்கள் முன் வந்து உங்கள் பிள்ளைகளை இராணுவத்தில் இணைக்கக் கோரலாம். இது குறித்து விழிப்பாக இருக்க வேண்டியது பெற்றோராகிய உங்களது கடமையாகிறது.

உங்களையும் தாண்டி கட்டுப்பாடுகளையும் தாண்டி தொடரும் இந்த மாய வலையில் இருந்து தப்பித்துக்கொள்வதன் மூலமே எதிர்காலத்தில் தமிழினத்தின் இருப்பை அடையாளப்படுத்தி தக்கவைத்துக்கொள்ள முடியும். இது ஒவ்வொரு தமிழனதும் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ ஜெரா

# உச்சத்தில் இருக்கும் சனீஸ்வரன்

இலங்கை இனப்பிரச்சினை உலகில் நீண்ட ஆயுள் கொண்ட சிக்கல்களுள் ஒன்று. இந்த நாடு காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற காலம் முதல் பிடித்துக்கொண்ட சனீஸ்வரன் இன்னமும் உச்சத்திலேயே சஞ்சரிக்கின்றது. பல லட்சம் உயிர்களை ஆகுதியாக்கிக் கொண்ட போதிலும் அதற்கு தீர்வு வழியே இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. கண்டுபிடிக்கப்பட்ட வழிமுறைகளும் இதயச்சுத்தியற்ற பற்றிப்பிடித்தல்களால் இடையிலேயே கைநழுவிப் போயின. இதற்கு எந்தத் தரப்பு முக்கிய காரணம் என்பதை 2009 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் ஆளும்தரப்பு இந்த விடயம் குறித்து முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை ஆராய்ந்தால் கண்டுகொள்ளலாம். அதற்குப் பின்னர் ஜனநாயக வழியில், உலகம் எதிர்பார்க்கும் வகையில் இலங்கை இனப்பிரச்சினை தீர்க்கப்படுமா என்ற முடிவை இலவாக எடுத்துக் கொள்ளலாம்.

## 2009 ஆம் ஆண்டுக்கு முன் சொல்லப்பட்ட தீர்வு

இந்த ஆண்டில் இலங்கை சர்வதேச ஊடகங்களில் அடிக்கடி தலைப்புச் செய்தியாக வலம் வந்தது. இந்த நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரைமுடிவுக்குக் கொண்டுவர அரச படைகள் போராளிக் குழுக்களுடன் மோதும் காட்சிகள் என அறிமுகப்படுத்தப்பட்ட விடயங்கள் காட்சித் தொகுப்பாக பல ஊடகங்களையும் நிறைத்தது. அநேகமாக காட்டப்பட்ட சடலங்கள் அனைத்துமே போராளிகளினுடையதாகவே அர்த்தமும் கொடுக்கப்பட்டது. எறிகணை தலையில் விழுந்து சிதறிப் போன ஐந்து வயதுப் பாலகனும் இலங்கையில் ஆயுதம் தூக்கி போராடினானா? என்ற கேள்வியை கேட்காமலே அந்தக் கொடூரப் போரை உலகம் வரவேற்றுக் கொண்டிருந்த காலமது. யாருமே போரை நிறுத்தச் சொல்லிக் கேட்கவில்லை. நிறுத்தச் சொல்லிக் கேட்டவர்களும் உரத்துச் சொல்லவில்லை. இலங்கை அரசு அதற்கு வலுவான காரணம் ஒன்றை முன்வைத்திருந்தது. இது மனிதாபிமானப் போர்.மக்களை பயங்கரவாதிகளிடமிருந்து மீட்பதற்கான ஆயுதப்போர். புலிகள் அழிக்கப்பட்டு, மக்கள் மீட்கப்பட்டால் இலங்கையில் சமாதானம் மலர்ந்து விடும். உலகத்தவராகிய நீங்கள் எதிர்பார்க்கும் இனப்பிரச்சினை தீர்வு ஏற்பட்டு விடும். அதற்கு நீங்கள் உதவுங்கள், என்று கூறி பல லட்சம் உயிர்களின் அழிவுகளையும் உலகம் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது அரசு.

## இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டதா?

உடனடியாக 13 ஆம் சீர்திருத்தச் சட்டத்தின் பிரகாரம் தீர்வு நிச்சயம் எனக் கூறி அடுத்த கட்டத்துக்கு தயாரானது அரசு. அதனடிப்படையில் மாகாணசபைகள் வடக்கு- கிழக்கு என பிரிக்கப்பட்டன. அதாவது தமிழரின் பலம் இரண்டுபடுத்தப்பட்டது. கிழக்கு மாகாணத்துக்கு அரச கைக்கூலி முதலமைச்சரானார். இவையெல்லாம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முதல்கட்ட நடவடிக்கைகளே என பிரசாரமும் முன்னெடுத்தது அரசு. அதையெல்லாம் தெளிவாகப் புரிந்து கொண்டு இலங்கையிடம் தோற்றுப்போனோம் எனப் புலம்பிய சர்வதேச நாடுகளுக்கு இன்னொரு தீர்வை முன் வைத்தது இலங்கை. பொறுப்புக்கூறும் கடமையை அக்கறையோடு ஏற்றுக் கொள்கிறோம் எஜமானர்களே என்ற உறுதி மொழியுடன் ஐ.நாவிலிருந்து இலங்கை அதிகாரிகள் தாய்நாடு திரும்பினர். அதாவது போரில் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணப்படி இனப்பிரச்சினைக்குத்தீர்வு என்று சொல்லி அடுத்த காலங்கடத்தும் நாடகத்தை ஆரம்பித்தது. நல்லிணக்க ஆணைக்குழு ஒவ்வொரு மாவட்டம் மாவட்டமாக மக்களை சந்தித்து ஆய்வு நடத்தியது. கருத்துக் கேட்டது. மக்களும் ஆர்வமாய் பதிலளித்தனர். ஆறுமாதங்களின் பின் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையும் வெளியிடப்பட்டது. "நீங்களே தயாரித்த அறிக்கையையாவது நடைமுறைப்படுத்துங்கள்" என உலகம் கெஞ்சியது. அதிலும் சில குறைபாடுகள் உள்ளன. சிலவற்றை நடைமுறைப்படுத்துகின்றோம் என வாக்குறுதி கொடுத்து ஒரு வருடம் கடந்து விட்டது. இன்னமும் எதுவுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால் விரைவில் நடைமுறைப்படுத்துவோம். விரைவில் வடக்குத் தேர்தல் நடத்தப்படும் என கால நீடிப்பு இழுத்தடிக்கப்படுகின்றது.

## இப்படித்தான் தீர்க்கப்படுகின்றது இனப்பிரச்சினை

உலகிற்கு இவ்வாறானதொரு நிலாச் சோற்றைக் காட்டிக் கொண்டே கிழக்கில் பெரும்பாலான தமிழரின் பூர்வீக நிலத்தை அரசு சிங்கள மயப்படுத்திவிட்டது. அதனை முடித்துக் கொண்டு வடக்கில் தனது கவனத்தை செலுத்தியது. வடக்குப் பகுதியில் அதிகளவு நிலைகொண்டிருக்கும் இராணுவம் இன்னும் அந்த நடவடிக்கைகளுக்கு சாதகமாய் அமைந்தது. இராணுவம் பிடித்து வைத்திருக்கும் பல ஏக்கர் தமிழரின் நிலமும் இராணுவத்துக்கே சொந்தம் என மக்களை மிரட்டியது. ஊடகங்களில் செய்திகள் பரவவே அந்தப்பிரச்சினை சிறு தீர்வுக்கு வந்ததாகக் காட்டப்பட்ட போதிலும் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப் படுவதற்கான சாத்தியங்கள் அருகில் தெரியவில்லை.

தமிழரின் ஆலயங்கள், பண்பாட்டிடங்கள் இருந்த இடங்களில் புத்தர் விரைவாக முளைக்கின்றார். இராணுவ வாகனங்களில் வந்திறங்கும் புத்தர் வடக்கில் அதிக இடத்தை கைப்பற்றிக் கொண்டுள்ளார். வடக்கில் இருக்கும் ஒவ்வொரு அரச மரத்துக்கு கீழும் புத்தர் அமர்ந்தே இருக்க வேண்டும் என்ற சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. திருப்பிக் கேட்க யாருமில்லை என்ற துணிவிலும், யாருக்கும் பதில்சொல்லத்தேவையில்லையென்ற மமதையிலும் சிங்கள மயமாக்கம் விரைவு பெற்றுவருகின்றது.

சர்வதேசமும், இந்தியாவும் வடக்கில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தைக் குறைக்கும் படி பல தடவைகள்கேட்டுக்கொண்ட போதிலும் அதற்கான தீர்வை அரசு வழங்கவேயில்லை. நாளுக்கு நாள் இராணுவப் பிரசன்னம் வடக்கில் அதிகரித்துக் கொண்டே போகின்றது. ஒவ்வொரு கிராமத்திலும் இராணுவமுகாம்கள் முளைக்கின்றன. அவை அந்தக் கிராமத்தின் நிர்வாகத்தையே தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கின்றன.

## காணாமல் போனோர் தொடர்பில் அக்கறையே இல்லை

இலங்கையில் அடிக்கடி ஒரு ஆர்ப்பாட்டம் நடக்கும். அன்னையர், சகோதரிகள், மனைவிமார், பிள்ளைகள் கண்ணீரை நிரப்பிய கண்களுடனும், காணாமல் போனோரின் படத்துடனும் அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வர். இறுதியில் வெளியிடப்படும் அறிக்கை ஜனாதிபதிக்கும், ஐ.நா சபைக்கும் அனுப்பி வைக்கப்படும். அத்தோடு காணாமல் போனோரின் கதை முடிந்து விடும். அரசு இந்த விடயத்தில் இதுவரை எந்தவிதமான ஆக்கபூர்வ நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இறுதிப் போரில் இராணுவத்துக்கு முன்னாலேயே காணமால் போனவர்கள் குறித்து இன்னமும் அரசு மௌனத்தை மட்டுமே பதிலாக வழங்கிவருகின்றது. அவ்வப்போது நடக்கும் ஆர்ப்பாட்டங்கள் மட்டுமே இலங்கையில் காணாமல் போனவர்கள் பற்றிய பிரச்சினையும் இருக்கின்றது என்பதை நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றது.

## தெரிவுக்குழுப் பூச்சாண்டி

இவ்வாறு இனப்பிரச்சினை தீர்வுக்கு முன்னால் பல பிரச்சினைகள் இருக்கின்ற போதிலும் அரசிடம் இப்போது இன்னொரு பூச்சாண்டித் திட்டம் இருக்கின்றது. அதுவும் ஒரு கால இழுத்தடிப்பு குண்டு தான். ஆனால் அது மிகப்பரந்தளவு காலத்தை இழுத்துச் செல்லக் கூடியது. நல்லிணக்கஆணைக்குழுஅறிக்கை வெளியிட முன்னதாகவே அறிமுகப்படுத்தப்பட்ட தெரிவுக்குழு தான் அது. அனைத்துக் கட்சிகளும் ஓர் அணியாக இணைந்து இனப்பிரச்சினை தீர்வு குறித்து பேசித் தீர்த்தல் என்ற நோக்கில் தான் இந்தத் தெரிவுக் குழு யோசனை முன்வைக்கப்பட்டது. அந்த யோசனை முன்வைக்கப் பட்டபோதே பலருக்குத்தெரியும் அது சாத்தியமாகாத ஒன்று என்பது. இனவாதக் கட்சிகள் அதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. அவை ஏற்றுக் கொண்டாலும் தமிழர் தரப்பில் அதில் கலந்து கொள்வதற்கான பிரச்சினைகள் உண்டு. காலங்காலமாக இழுத்தடிக்கும் தீர்வுப் பொதி மாதிரியானதே இதுவும் என உண்மையைக் கூறி தமிழர் தரப்பு அதனை இன்னமும் நிராகரித்தே வருகின்றது. ஆகவே அரசு இப்போது கையில் வைத்திருக்கும் தெரிவுக் குழு பூச்சாண்டியும் இனப்பிரச்சினை தீர்வுக்கான ஒன்றல்ல. அதுவும் காலங்கடத்தும் பொருளே.

## கடைசி நம்பிக்கையும் கரையத் தொடங்கியது

எல்லாமே முடிந்து விட்டது. இப்போது இனப்பிரச்சினை தீர்வுக்கான இறுதி அத்தியாயத்தில் வந்து நிற்கின்றது அரசு. அரசைப் பொறுத்தவரையில் அது இறுதி அத்தியாயம். இந்த நாட்டில் பாதிக்கப்பட்ட சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரையில் மறு தொடக்கம். அதாவது இனப்பிரச்சினை ஆரம்பத்தின் இரண்டாம் பாகம். முதற்பாகத்தை விட சுவாரஸ்யமான பாகம். புலிகளை அழித்து 13 ஆம் அரசியலமைப்பு சட்டத்தின் படியோ அல்லது 13ஆவது சட்டத்துக்கு மேலாகச் சென்றோ இனப்பிரச்சினையை தீர்த்தல் என 2009 இன் இடைப்பகுதியில் கூறப்பட்டது. தமிழர் தரப்பும் உலகமும் இதில் பெரும் அக்கறையெடுத்தது. ஆனால் இந்த வருடத்தில் 13 ஆம் அரசியலமைப்பு சட்டமே தேவையில்லை என தீவிர அரச ஆதரவு இனவாதிகள் கோஷமிடுகின்றனர். பொதுக்கட்டமைப்பு நீக்கம், வடக்கு கிழக்கு பிரிப்பு, போன்றவற்றுக்கெல்லாம் காரணமாக இருந்த இனவாதிகளே 13 நீக்கத்தைப் பற்றியும் பிரசாரம் செய்யத் தொடங்கியிருக்கின்றனர். அவர்கள் இதுவரையில் இனப்பிரச்சினை தீர்வுக்கு முட்டுக்கட்டை போடும் விதத்தில் நீதிமன்றத்தை நாடிய எந்த விடயங்களும் தோல்வியில் முடிந்ததில்லை என்ற கடந்த கால வரலாற்றுப் பதிவுகளிலிருந்து 13 ஆவது அரசியலமைப்புச் சட்டமும் நீக்கப்படலாம் அல்லது வேறுவிதமாக மாற்றப்படலாம். அவ்வாறு எது நடந்தாலும் அது இனப்பிரச்சினை தீர்வுக்கு சாதகமானதாக அமையாது. இனப்பிரச்சினையை மேலும் மேலும் ஆழப்படுத்தியே செல்லும். இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டதற்கு அமைவாக, அரசு இதய சுத்தியுடன் செயற்படும் வரையில் இந்தப் பிரச்சினைக்கான தீர்வு இப்போதைக்கு சாத்தியமாகாது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> இவ்வாறு தமிழர் தாயகக் கடற்பரப்பில் இந்திய மீனவர் ஊடுருவலுக்கு சமாந்தரமாக இப்போது தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறலும் இடம்பெறுகின்றது.

# சுரண்டப்படுகிறது தமிழரின் கடலும்

■ அதிரன்

வடக்குக் கடலில் தமிழர்களின் கடல் வளங்கள் இப்போது தென்னிலங்கை மீனவர்களால் சூறையாடப்படும் சம்பவங்கள் குறித்துக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பலவும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளன.

குறிப்பாக முல்லைத்தீவு, கொக்கிளாய், நாயாறு, வடமராட்சி கிழக்கு மற்றும் புங்குடுதீவு கடற்பரப்புகளில் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறிய அட்டகாசம் அதிகரித்துள்ளமை குறித்து அப்பகுதி மீனவர்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இதுவரை காலமும் வடக்கு மீனவர்களுக்கு இந்திய மீனவர்களின் அத்துமீறலே ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வந்தது. அவர்களின் 'இழுவைப் படகுகள் குடாக் கடலுக்குள் பிரவேசித்து இங்குள்ள கடல் வளங்களை வாரி அள்ளிச் சென்றுவிடுகின்றன. அத்துடன் இங்குள்ள மீனவர்களால் போடப்படும் பெறுமதிமிக்க வலைகளையும் இவை அறுத்து நாசமாக்கி விடுகின்றன. இதனால் அவர்கள் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. வடக்குக் கடலில் அரிய கடல்வாழ் உயிரினங்களும் வேகமாக அழிவடைகின்றன. இந்தப் பிரச்சினைக்கு இதுவரை உரிய தீர்வு எட்டப்படவில்லை. அது நிலுவையிலேயே இருக்கிறது.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் இப்போதும் தொடர்கிறது. இரு நாட்டு அரசுகளும் பேசித் தீர்க்க வேண்டிய இந்தப் பிரச்சினை குறித்து எந்தவொரு உருப்படியான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந்தப் பிரச்சினை இவ்வாறு இருக்க இப்போது வடக்கு மீனவர்களுக்கு மற்றொரு பிரச்சினை தலையெடுத்திருக்கிறது. அதுதான் தென்னிலங்கை மீனவர் வடக்குக் கடலில் தொழிலில் ஈடுபடும் விடயம்.

நன்கு திட்டமிட்ட அரசியல் பின்னணியுடனேயே இந்த தென்னிலங்கை மீனவர்கள் வடக்குக் கடலில் தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

குறிப்பாக முல்லைத்தீவிலும், நாயாறிலும், கொக்கிளாயிலும், வடமராட்சி கிழக்கிலும் இவர்களின் அத்துமீறலுக்கு அளவேயில்லை. இராணுவம் மற்றும் கடற்படையினரின் பூரண ஒத்துழைப்புடனேயே தென்னிலங்கை மீனவர்கள் வடக்குக் கடலில் தொழிலை மேற்கொண்டுள்ளனர் என இங்குள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் குற்றம் சாட்டியுள்ளன. இவர்களின் இந்த அத்துமீறலை தடுத்து நிறுத்த முடியாதுள்ளதாகவும் அவ்வாறு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தால் சீருடையினரின் அச்சுறுத்தலுக்கு ஆளாக வேண்டியுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

தெற்குக் கடலில் கடல் வாழ் உயிரினங்கள் அருகிப் போயுள்ளன. இதனால் அங்கு மீனவர்களுக்கு போதிய கடலுணவுகள் பிடிபடுவதாக இல்லை. முல்லைத்தீவுக் கடலில் கடந்த பல வருடங்களாக மீன்பிடித் தொழில் தடைப்பட்டுள்ளதால் அங்கு கடலுணவுகள் பெருகிக் காணப்படுகின்றன. முல்லைத்தீவுக் கடற்கரையோரங்களில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அண்மையிலேயே அனுமதி வழங்கப்பட்ட போதும் அவர்கள் சுதந்திரமாகக் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதி அளிக்கப்படவில்லை. அவர்களுக்குக் கட்டுப்பாடுகளும் அச்சுறுத்தல்களும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. தற்போது மீளக்குடியமர்ந்துள்ளதால் படகுகளையும் வலைகளையும் பெறுவதற்கான பொருளாதார வளம் அவர்களிடம் இல்லை. அதனால் சிறிய வலைகளைப் பயன்படுத்தியே அவர்கள் தொழிலில் ஈடுபட முடிகிறது. இந்தச் சந்தர்ப்பத்தைத் தென்னிலங்கை மீனவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர்.

அத்துமீறி வந்து மீன்பிடியில் ஈடுபடுவது மட்டுமல்லாமல் குடும்பங்களுடன் வந்து அந்தப் பகுதிகளில் தங்கியிருந்தும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த மீனவர்களை அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன ஏற்கனவே உத்தரவிட்டிருந்த போதும் அவர்கள் அங்கிருந்து வெளியேறவில்லை என முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 5ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறிச் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுகின்றமை குறித்துக் காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

முல்லைத்தீவு நாயாறுப் பகுதியில் 153 படகுகளுடன் 80 தென்னிலங்கை மீனவர்கள், தொழில் செய்து வருகின்றனர். அத்துடன் கொக்கிளாய் பகுதியில் 300 தென்னிலங்கை மீனவக் குடும்பங்களும், புலிபாய்ந்த கல் பகுதியில் 15 தென்னிலங்கை மீனவக் குடும்பங்களும் தங்கியிருந்து தொழிலில் ஈடுபடுகின்றன.

முன்னர் மீனவர்கள் மட்டுமே தற்காலிகக் கொட்டகைகள் அமைத்து மீன் பிடியில் ஈடுபட்டு வந்தனர். தற்போது அவர்கள் குடும்பங்களுடன் வந்து தங்கியிருந்து தொழில் செய்கின்றனர். இந்த மீனவர்கள் தாம் பிடித்த மீன்களைக் 'கூலர்' வாகனங்களில் தென்னிலங்கைக்குக் கொண்டு சென்று பெரும் தொகைப் பணத்துக்கு விற்பனை செய்து அதிக லாபம் ஈட்டுகிறார்கள். இவர்களின் இந்த நடவடிக்கைக்குப் படையினரும் நன்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர். இதனால்தான் அவர்கள் அங்கு துணிவாகத் தங்கி நின்று மீன்பிடிக்க முடிகிறது.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட தமிழ் மீனவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். சிறிய படகு, வலைகள் ஆகியவற்றையே மீன் பிடிக்கு இவர்கள் பயன்படுத்துகின்றனர். இவர்களால் பெருமளவில் தொழிலில் ஈடுபட முடியவில்லை. அதற்கான பொருளாதார வளம் அவர்களிடமில்லை. அதனால் பெரிய படகுகளையோ வலைகளையோ அவர்களால் கொள்வனவு செய்ய முடியாத நிலை உள்ளது. தமது அன்றாட சீவியத்தை நகர்த்துவதில் கூட இந்த மீனவர்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

தென்னிலங்கை மீனவர்கள் சட்டவிரோதமான முறையில் மீன் பிடிப்பதால் உள்ளூர் மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதற்கு அஞ்சுவதாகக் கடற்றொழிலாளர் சங்கங்கள் தெரிவிக்கின்றன. தென்னிலங்கை மீனவர்கள் உள்ளூர் மீனவர்களை அச்சுறுத்துவதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. முல்லைத்தீவு மாவட்டத் [illegible] ராஜித சேனாரத்ன அண்மையில் சென்றிருந்தார். இதன்போது நாயாறு, கொக்கிளாய் ஆகிய பகுதிகளில் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல் குறித்து அமைச்சரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

இது குறித்து கவனம் செலுத்திய அமைச்சர் அனுமதி பெறாத தென்னிலங்கை மீனவர்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டிருந்தார். ஆயினும் அந்த உத்தரவைப் பொருட்படுத்தாமல் அவர்கள் தொடர்ந்தும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அமைச்சரின் உத்தரவும் உதாசீனம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, புங்குடுதீவு கடற்பகுதியிலும் சட்டவிரோதமான முறையில் தென்னிலங்கை மீனவர்கள் கடல் அட்டை பிடித்து வருகின்றனர் எனப் புங்குடுதீவு மீனவர் சங்கத்தினரால் யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்திடம் முன்னர் முறையிடப்பட்டிருந்தது. புங்குடுதீவுக் கடற்பகுதியில் மீன்பிடித் தொழிலுக்கு மீனவர்கள் இன்னும் அனுமதிக்கப்படவில்லை. எனினும் தென்னிலங்கை இருந்து வரும் மீனவர்கள் சிலிண்டரினைப் பயன்படுத்தி கடல் அட்டை பிடித்து வருகின்றனர்.

இவர்கள் கடந்த 2 மாத காலமாகக் கடற்படையினரின் உதவியுடன் அங்கேயே தங்கியிருந்து தொழிலில் ஈடுபட்டு வருவதாகப் புங்குடுதீவு மீனவர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

தென்னிலங்கையில் உள்ள பல நிறுவனங்கள் இலங்கைக் கடற்பரப்பில் அட்டை பிடிப்பதற்கு அனுமதியைப் பெற்றுள்ளன. எனினும் குறித்த பகுதியில் அட்டை பிடிப்பதற்கு மீனவர் சங்கம் அனுமதிக்கவில்லை.

ஆனால் சங்கத்தினரின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் சட்டவிரோதமான முறையில் தென்னிலங்கை மீனவர் கடலட்டைகளைப் பிடித்து வருகின்றனர். தற்போது கற்கோவளம், சுண்டிக்குளம் ஆகிய பகுதிகளில் தொடர்ந்தும் தென்னிலங்கை மீனவர்கள் கடலட்டை பிடித்து வருவதாக தெரியவருகின்றது. அத்துடன் வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பிலும் தென்னிலங்கை மீனவர்களின் இந்த அத்துமீறல் தொடர்கிறது.

இவ்வாறு தமிழர் தாயகக் கடற்பரப்பில் இந்திய மீனவர் ஊடுருவலுக்கு சமாந்தரமாக இப்போது தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறலும் இடம்பெறுகின்றது. அரசியல் சக்திகளின் ஆசீர்வாதத்துடனேயே இந்த அத்துமீறல்கள் இடம்பெறுகின்றன. தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை அமைப்பதற்கான அத்திபாரமாகவும் இந்தத் தென்னிலங்கை மீனவர்களின் வருகை நோக்கப்படுகின்றது.

குறிப்பாக முல்லைத்தீவில் அவர்கள் குடும்பங்களாக வந்து குடிசைகள் அமைத்துத் தங்கித் தொழிலில் ஈடுபடுகின்றமை இதனை நன்கு புலப்படுத்துகின்றது.

இந்த நிலை இவ்வாறு தொடர்ந்தால் தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக் குறியாகும் என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்த அத்துமீறல்களுக்கு எதிராக வலுவான - உறுதியான எதிர்ப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படாது விட்டால் விரைவில் தமிழர் தாயகக் கடற்பரப்பும் தென்னிலங்கையின் கட்டுக்குள் வந்துவிடும் என்பது நிச்சயம்.

இது விடயத்தில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் இணைந்து ஓர் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய நேரம் இப்போது வந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பனின் படைப்புக் கலை

புலவர் புகழேந்தி

சவரியைக் கண்டவுடன் இராமன், "தீன்று இருந்தனை போலும்?" என்று அவளை விசாரிப்பதாக கம்பன் சொல்வதைக் கண்டோம். வால்மீகத்திலோ, சவரியை இராமன் கேட்ட கேள்வி சற்று விஸ்தாரமானது. இராம-இலக்குவரைக் கண்ட சவரி, முறைப்படி அவர்களுடைய தாள்களில் வணங்கி, பாத்திய ஆசமனீயங்களை வழங்குகிறாள். அப்பொழுது இராமன் அவளைப் பார்த்து, "தவச் செல்வமே! உன்னுடைய இல்லறப் பற்றுக்கள் ஒழிக்கப்பட்டனவா? உனது தவம் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறதா? உனது கோபம் நீக்கப்பட்டதா? உணவைச் சுருக்கிக் கொண்டாயா? பணிமொழியாளே, உனது விரதங்கள் முடிவு பெற்றனவா? மனத்திருப்தி உனக்கிருக்கிறதா? பெரியோர்களுக்கு நீ செய்த தொண்டு பயன் அடைந்ததாக இருக்கிறதா?" என்று கேட்கிறான்.

### சவரியின் உபசாரமும் பேச்சும்

இராமனுடைய சுருக்கமான கேள்விக்கு ஏற்பவே சவரியுடைய நடத்தையும் பதிலும் இருப்பதாக கம்பன் கூறுவான். இப்படி இராமன் கேட்டவுடன் அவள் அவனிடத்துக் கொண்ட அன்பினால் பக்தியோடு இராமனைப் புகழ்கிறாள். "அழுது இழி அருவிக் கண்ணள்" ஆகிவிடுகிறாள். "மாண்டது என் மாயப் பாசம்; வந்தது, வரம்பு இல் காலம்; பூண்ட மாதவத்தின் செல்வம்; போயது பிறவி" என்று கூறுகிறாள். கேள்வியும் பதிலும் இரத்தினச் சுருக்கமாக அமைந்திருப்பதை அனுபவிக்கிறோம்.

வந்தவுடன் இராமன் கேட்ட கேள்விக்கு இவ்வாறு பதிலிறுத்துவிட்டு வந்த விருந்தினருக்குச் செய்ய வேண்டியதைச் செய்கிறாள். "வேண்டிய கொணர்ந்து நல்கி விருந்து செய்திருந்தாள்" என்று கம்பன் கூறுவான். அதாவது நல்லவை என்று எண்ணி, தான் சேர்த்து வைத்திருந்த கனி கிழங்கு முதலியவற்றை அவர்களுக்கு உண்ண அளித்தாள் என்பது இதன் பொருள். வந்தவர்கள் சிரமம் தீர்ந்து களைப்பாறிய பிறகு தானே பேசவேண்டியதைப் பேசவேண்டும்? விருந்துண்டு இனிதிருக்கும் பொழுது தான் வந்த விருந்தினர் நோக்கத்தைப் பற்றி வினவுவதோ அல்லது தன் கருத்தையோ, குறையையோ எடுத்துக் கூறுவதோ மரபாகலின் இராம- இலக்குவருக்கு விருந்தளித்துவிட்ட வேளையில் சவரி தன் நிலையை எடுத்துக் கூறுகிறாள்.

மிக எளிய பெண்ணொருத்தி, தன் தவ வலிமையால் எத்துணை உயர்ந்த நிலையை அடைந்து விட்டாள் என்பதைக் கம்பன் இங்கே மிக அற்புதமாகக் காட்டுவான். "சிவபெருமானும், பிரம்மதேவனும் தேவர்கள் அனைவரும் இந்திரனும் நான் இருக்கும் இடம் வந்து என்னைப் பார்த்து, 'உனது குற்றமற்ற தவத்துக்குச் சித்தி பெறும் காலம் நெருங்கி விட்டது; இராமபிரான் வரவை நோக்கியிருந்து, அவனுக்கு தக்க உபசாரங்களை விரும்பிச் செய்து, பின்னர் எமது உலகுக்கு வருவாயாக' என்று கூறினார்கள். "நீ ஈண்டு எய்தப்போவதை எதிர்நோக்கி நான் இருந்தேன். நீ இப்போது எழுந்தருளினாய். இன்று தான் என்னுடைய புண்ணியம் பூத்தது. அதாவது, தவம் பலித்தது"என்று கூறுகிறாள்.

### இராமனின் வாழ்த்து

அவளுடைய கூற்றுக்கு ஒப்பாக இருக்கிறது, இராமனுடைய சொல்லும் செயலும். அரிய தவத்தில் சிறந்த அந்தச் சவரியை இராமன் அன்புடன் நோக்குகிறான். நோக்கிக் கூறுவான். "தாயே! எங்கள் வழிநடையினால் நாங்கள் அனுபவித்த துன்பத்தை நீ உன் உபசாரத்தால் தீர்த்தாய்" என்று கூறி "வாழி!" என்று வாழ்த்துகிறான். இந்த நிகழ்ச்சியைக் கம்பன் இரண்டு அழகிய பாடல்களில் வடித்துக் காட்டுவான்.

"ஈசனும், கமலத் தோனும், இமையவர் யாரும், எந்தை!
வாசவன் தானும், ஈண்டு வந்தனர் மகிழ்ந்து நோக்கி,
"ஆசுஅறு தவத்திற்கு எல்லை அணுகியது, இராமற்கு ஆய
பூசனை விரும்பி, எம்பால் போதுதி" என்று, போனார்.
(கம்பன்- 3702)

"இருந்தனென், எந்தை! நீ ஈண்டு எய்துதி என்னும் தன்மை
பொருந்திட; இன்றுதான் என் புண்ணியம் பூத்தது" என்ன,
அருந்தவத்து அரசி தன்னை அன்புற நோக்கி, "எங்கள்
வருந்துறு துயரம் தீர்த்தாய்; அம்மனை! வாழி" என்றார்.
(கம்பன்-3703)

இவ்விரு



பாட்டுக்களிலும் அமைந்திருக்கும் நயங்கள் பல.

### அருந்தவத்து அரசி

"அருந்தவத்து அரசி" என்று சவரி குறிப்பிடப்படுவது கவிக் கூற்றினால். பிரம்மதேவனும், சிவபெருமானும், அமரர் யாவரும், இந்திரனும் அவள் இருக்குமிடம் தேடி வந்து, 'எம்முலகங்களுக்கு வந்து சேருவாய்' என்று அழைக்கும் நிலையைச் சவரி பெற்றிருந்ததனால், "அருந்தவத்து அரசி" என்று எவ்வளவு பொருத்தமாகக் கவிஞன் அவளைக் குறிப்பிடுகிறான்! "இராமனுக்கு உபசாரம் செய்துவிட்டு எங்கள் உலகங்களுக்கு நீ வந்து சேருவாய் என்று அவர்கள் சொல்லிச் சென்றார்கள்" என்றும், "நீ இங்கு வந்து அருளுவாய் என்று எதிர்நோக்கி நான் இருந்தேன்" என்றும், "இன்றுதான் என் புண்ணியம் பூத்தது" என்றும் சவரி கூறுவதில் "இராமனைப் பிரம்மனும், சிவனும் தேவர்களும் இந்திரனும் சவரியும் எப்படிக் கொண்டாடினார்கள் என்பது தெளிவாகிறது. 'எந்தை' என்று இராமனைச் சவரி விளிப்பதில் இது மேலும் வலுப்பெறுகிறது. "முன் இவற்கு இது என்று எண்ணலாவதோர் மூலமில்லான்" என்று இராமனைக் கவி குறிப்பிட்டதை முன்னர் கண்டோம். சவரியின் சொல்லும் செயலும் இந்தக்கூற்றினை வலியுறுத்துவனவாக அமைகின்றன.

### இராமனுடைய சொல்லும் செயலும்

ஆனால் இராமனுடைய சொல்லும் செயலுமோ வேறுவிதமாக அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். தான் பரம்பொருள் என்பதைச் சிறிதும் உணர்த்தாத நிலையில் சாதாரண மனிதனாகவே பேசுகிறான்; செயற்படுகிறான். [illegible] விளித்த சவரியின் [illegible]யும் தவத்தின் சிறப்பையும் மனத்தில் கொண்டு, அம்மனை'- அதாவது, தாயே! என்றே விளிக்கிறான்.

தெய்வம் தன்னுடைய பக்தனுக்கோ பக்தைக்கோ அருள் புரிகின்ற முறையிலல்லாமல், 'வாழி!' என்று வாழ்த்துகிறான். இந்த அடிப்படையிலேயே, தங்கள் வழிநடைக் களைப்பையும் சிரமத்தையும் விருப்புடன் விருந்தளித்துத் தீர்த்ததற்காகச் சவரியை அன்புடன் நோக்குகின்றான்.

### கவிஞன் செய்யும் அற்புதம்

எல்லாவற்றும் மேலாகக் கவிஞன் செய்யும் வேறோர் அற்புதமும் இங்கு நோக்கத்தக்கது. மிகச் சாதாரணமான பெண் தன்னுடைய தவமகிமையினால் மிக உன்னதமான நிலையை எய்திவிட்டாள் என்பதை மிக்க அழுத்தமாகக் கம்பன் நிலைநிறுத்தி விடுகிறான். இங்கும் கூட கம்பனுக்கும் வால்மீகத்துக்குமிடையேயுள்ள ஒரு சிறு வேறுபாட்டினைக் காணலாம். பிரம்மனும், சிவனும் தேவர்களும், தேவேந்திரனும் சவரியை அணுகி, இராமனுக்கு உபசாரம் செய்து விட்டுப் பின்னனர் எமது உலகங்களுக்கு வந்து சேருவாய் என்று அவளிடம் சொன்னதாக அவள் இராமனிடம் சொன்னாள் என்று கம்பனில் காணப்படுகிறது.




### வால்மீகத்தில் வரும் சவரி

ஆனால் வால்மீகத்தில் சவரி இராமனிடம் அடியில் கண்டவாறு சொன்னதாகக் காணப்படுகிறது:- 'எவர்களுக்கு நான் தொண்டு புரிந்து வந்தேனோ அவர்கள் இந்தவிடத்திலிருந்து தேவரீர் சித்திரகூடத்தில் எழுந்தருளிய பொழுது ஒப்பற்ற ஒளி கொண்டு விளங்கும் தெய்வ விமானங்களில் ஏறிக்கொண்டு சுவர்க்கத்துக்கு எழுந்தருளி விட்டார்கள். தர்மஞானம் உடையவர்களும் மகா புண்ணியாத்மாக்களும் முனிவர் பெருமான்களுமான அவர்களாலேயே நான் பின்கண்டவாறு ஆக்ஞாபிக்கப்பட்டேன்: 'இராமர் மகா புனிதமான இந்த உனது ஆசிரமத்தில் எழுந்தருளப் போகின்றார். இலச்சுமணரோடுகூட இருக்கும் அவர் உனது அதிதியாய் பூஜிக்கப்பட வேண்டியவர். நீயும் அவரைத் தரிசித்துவிட்டு சாஸ்வதமான சிறந்த உலகங்களை அடைவாய்.''

### துளசிதாசர் தரும் பக்தி வடிவம்

கம்பனுக்குப் பின்னால் வந்த துளசிதாசரோ [illegible] முழுக்கப் பக்தி வடிவமே இதற்குக் கொடுத்து விடுகிறார். சவரி இராமனை மிக்க மரியாதையுடன் வரவேற்று, அடிக்கடி அவன் பாதங்களில் விழுந்து வணங்குகிறாள். அவள் தேடி வைத்திருந்து கொடுத்த கனி கிழங்குகளை இராமன் புசிக்கிறான்.

இராமன் முன்னால், கூப்பிய கைகளோடு நின்று கொண்டு அவனை அன்புடன் பார்க்கிறாள். "மிக இழிந்த ஜாதியிலே பிறந்தவளாகிய நான், மிகத் தாழ்ந்த நிலையிலே இருக்கிற நான், அதிலும் பெண்ணாக இருக்கிற நான் குற்றமற்ற தங்களுடைய புகழை எப்படிப் பாடுவேன்" என்று கூறி நிற்கிறாள்.

அதற்கு இராமன், "நீ என் வார்த்தைகளைக் கேள். என் மீது வைக்கும் நம்பிக்கை என்பதைத் தவிர வேறு எந்த உறவையும் நான் பாராட்டுவதில்லை. குலம், கோத்திரம், சமயம், அந்தஸ்து, செல்வம், அதிகாரம், சொந்தம், குணம், திறம் எதையுமே நான் பாராட்டுவதில்லை.

நீரில்லாத மேகத்தைப் போல, உறுதியும்,நம்பிக்கையுமில்லா மனிதன் எதையுமே சேர்ந்தவனல்ல. கவனமாகக் கேள். ஒன்பதுவித பக்தி பாவங்களை உனக்கு நான் விளக்குகின்றேன்" என்று ஒன்பது வித பக்தி பாவங்களை விளக்கிவிட்டு,"பெண்ணே! நிச்சயமாக இந்த பக்தி பாவங்களில் ஒன்றை யார் பெற்றிருக்கிறார்களோ, ஆணாயினும் சரி பெண்ணாயினும் சரி, பகுத்தறிவு உள்ளவராயினும் சரி, இல்லாதவராயினும் சரி, அவரே என் அன்பர்; நீயோ அவையனைத்தையும் பூரணமாகப் பெற்றிருக்கிறாய். மிகப் பெரிய முனிவர்களும் மிக அருமையாக அடையைக் கூடிய பரமபதம் உனக்கு எளிமையாக கிடைக்கிறது. என்னைப் பார்ப்பதன் பலனோ மிக அற்புதமானது. என்னைத் தரிசிக்கும் எந்தப் பிராணியும் அதனுடைய லட்சியத்தை உடனே அடைந்து விடுகிறது" என்று கூறுகிறான்.

### ஜானகியைப் பற்றி இராமன் வினவச் சவரியின் பதில்

இப்படிச் சொன்ன பிறகு சவரியிடத்தில், 'ஜானகியைப் பற்றிய செய்தி உனக்கு ஏதாவது தெரியுமா? தெரிந்தால் சொல்" என்று கேட்கிறான். அதற்குப் பதிலாகத் தான்,"பம்பைக்குச் செல். அங்கே சுக்கிரீவனொடு நட்புக் கொள்.

அவன் உனக்கு யாவற்றையும் சொல்வான். உனக்கு இது தெரிந்ததே. இருந்தாலும் நீ என்னிடத்தில் கனிவுடன் கேட்கிறாய்" என்று சொல்கிறாள். அப்படி அவள் சொல்லிவிட்டு, திரும்பத் தலை வணங்கி, இராமனுடைய பாதங்களைப் பணிந்தாள். அப்பொழுது தனக்குத் தெரிந்தது முழுவதையும் சொல்லிவிட்டு, இராமனுடைய முகத்தையே பார்த்துக் கொண்டு அவனுடைய முகமாகிய தாமரையைத் தன்னுடைய இதயத்தில் பதித்துக் கொண்டு, அக்கினியில் தன் உடலை விட்டு பரமனுடைய பாதங்களை அடைந்தாள் என்று துளசிதாசர் கூறுவார்.

அப்படிக் கூறிவிட்டு, மிகக் கேவலமானவளும் பாபத்தில் பிறந்தவளுமான சவரி போன்ற பெண்ணுக்கே மோட்சமளித்த அப்பெருமானை மறந்துவிட்டு மன அமைதி பெற நினைப்பது எவ்வளவு மடமையானது?" என்று கூறி முடிப்பார். முழுக்க முழுக்க இராமனைப் பரம்பொருளாக்கி அவனை அப்படியே பேசவும் செயற்படவும் செய்து விடுகிறார் துளசிதாசர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கி சிதறிய புனை



■ ஆதங்கன்

தமிழ் வணிக சினிமா, சில நட்சத்திரங்களை மையமாக வைத்தே தனது பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கின்றது. சாதாரண மனிதர்களைவிடவும் இந்த நட்சத்திர விம்பங்கள் அதியுன்னதமானவர்கள் என்ற மாயையை உருவாக்க, நிறைய சித்து வேலைகளில் சினிமா உலகம் இறங்குகின்றது. அதில் வெற்றியும் காண்கின்றது. நடிகர்களின் விம்பம் எந்தளவு தூரத்துக்கு பெருக்கின்றதோ அந்தளவுக்கு வணிக சினிமாக்காரர்கள் பணத்தை வாரிக்கொள்ள முடியும். எனவே உச்ச நடிகர்களின் ஒளிவட்டங்களின் பிரகாசம் குறைந்து போகாதபடி சினிமா வணிகர்கள் பார்த்துக்கொள்கின்றனர். அதையும் மீறி நடிகர்களின் திரை விம்பங்கள் ஒளியிழக்கத் தொடங்கும்போது, செத்த மாட்டிலிருந்து கழரும் உண்ணிகள் போல இந்தச் சினிமா வணிகர்கள் நகர்ந்து விடுகின்றனர். நகர்ந்தவர்கள் அப்படியே இருப்பதில்லை. இன்னொரு நடிகருக்கு இறக்கைகளைப் பொருத்தி, தமது புதிய பொன்முட்டையிடும் வாத்தை உற்பவிக்க முயன்றுகொண்டே இருப்பார்.

தமிழ்ச் சினிமா வணிகர்களின் ஆராதனைக்குரியவர்களின் பட்டியலில் ரஜனிக்கு அடுத்த இடத்தில் இருந்த நடிகர் விஜய். கோடிகளில் தான் இவரின் விலை தீர்மானிக்கப்பட்டது. மென்மையான காதல் நாயகனாக சினிமா உலகில் புகுந்து, பின்னர் வன்முறைகளின் அதிபதியாக்கப்பட்டார். நடமாடும் கடவுளாகவே அநேக திரைக்கதைகளில் விஜயின் பாத்திரம் வடிவமைக்கப்பட்டது. 100 பேரென்ன ஆயிரம் பேர் வந்தாலும் ஒற்றை அடியில் அடித்து வீழ்த்தக்கூடிய அசுர பலத்தை திரையுலகம் விஜய்க்கு வழங்கியிருந்தது. ''ஏய் .....'' என்ற காட்டுக் கத்தலுடன், 'பஞ்ச்' வசனங்களை படம் நெடுகப் பேசியபடி, எதிரிகளை சங்காரம் செய்யும் விஜய் திருவிளையாடல்கள், பாமர ரசிகர்களையும், இளைஞர்களையும், குழந்தைகளையும் வெகுவாகக் கவர்ந்தன. திருமலையில் விஜய் திரையில் ஓடவிட்ட குருதிதோய்ந்த வன்முறை நதி வற்றாமல் கில்லி, திருப்பாச்சி, மதுர, சிவகாசி, ஆதி, குருவி, வில்லு, சுறா, வேட்டைக்காரன் என்று ஒரேமாதிரியே பாய்ந்துகொண்டிருந்தது.

யாராலும் அசைக்கமுடியாத எதிர்நிலைப் பாத்திரங்கள் விஜயின் ஒற்றை 'பஞ்ச்' வசனத்துக்கே பதறியடித்து ஓடின. விஜயின் அதிநாயக விம்பத்தை இன்னும் உருப்பெருக்க வைப்பதற்காக நாலைந்து அள்ளக்கைகள்,

''அண்ணனைப் பற்றித் தெரியுமா?''

''அவர் பார்த்தாலே பாரதமே பத்தி எரியும். தமிழ் நாடே கொந்தளிக்கும்''

''இன்னிக்கு அவர் வீட்டில் தான். ஆனால் நாளைக்கு அவர்தான் நாட்டோட தலைவிதியைத் தீர்மானிக்கப் போறவர்''

என்றெல்லாம் துதிபாடி, ஏறக்குறைய பார்வையாளர்களிடத்தில் விஜய் கடவுளர்களுக்கு நிகரான தன்மையோடு பதியச்செய்தனர். ஆனாலும் எத்தனை நாளைக்குத்தான் குண்டுச்சட்டிக்குள் குதிரையோட்ட முடியும்? ஒளிர்ந்துகொண்டிருந்த இளைய தளபதியின் ஒளிவட்டம் தொடர்ந்து 5 படங்களின் சரிவால் மங்கத் தொடங்கியது. மலட்டு வாத்து யாருக்கு உதவும்? சினிமா வணிகர்கள் வேண்டாப் பொருளாக விஜயை ஒதுக்கத் தொடங்கினர். சூர்யாவுக்கு விஜயின் மணிமகுடத்தை சூட்ட ஏற்பாடுகள் நடந்தன.

ஹிந்தியில் அமீர்கானின் நடிப்பில் வந்த திரைப்படத்தின் தமிழாக்கத்தில் விஜய்தான் முதலில் ஒப்பந்தம் செய்யப்பட்டார். ஆனால் தொடர் தோல்விகளால் விஜய் மீது நம்பிக்கை யற்றுப்போன தயாரிப்பாளர்கள் தடாலடியாக அந்தப் படத்திலிருந்து அவரைத் தூக்கி எறிந்தனர். அந்த இடத்தில் சூர்யா அமர்த்தப்பட்டார்.

ஒரே இரவில் அரியணையில் இருந்து உதைத்துத் தள்ளப்பட்ட விஜய், தன்னுடைய எல்லா ஒளிவட்டங்களையும் பறிகொடுத்துவிட்டு, நடித்த 'காவலன்' வெளிவருவதை, சினிமா உலகில் ஏகபோக ஆட்சி நடத்திய சன் குழுமம் தடுத்தது. அதையும் தாண்டி வெளிவந்த காவலன் 100 நாள்கள் ஓடி மீண்டும் விஜயை பொன் முட்டையிடும் வாத்து என்று காட்டியது. அவ்வளவுதான். விலகிப் போன சினிமா வணிகர்கள் மீண்டும் விஜய்க்குப் பின்னால் வரிசை கட்டினர். '3 இடியட்ஸ்' தமிழாக்கத்தில் விஜய்க்குப் பதிலாக உட்கார வைக்கப்பட்ட சூர்யா துரத்தப்பட்டு மீண்டும் விஜய்க்கு அந்த இடம் ராஜ உபசரணையோடு வழங்கப்பட்டது. அதுவே 'நண்பன்' திரைப்படமானது. நண்பனுக்கு முதல் வெளியான வேலாயுதம் விஜயை அதிசாகச நாயகனாக காட்டியிருந்தது.

ஆனால் நண்பன், ஓரளவுக்கு யதார்த்த தளத்தில் விஜயை உலவவிட்டது. இதுவரைக்கும் வானத்தில் சஞ்சரித்த நாயகனின் கால்கள் தரையில் பட்டன. இந்தச் சஞ்சரிப்பு இன்னொரு விஜயை ரசிகர்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது. நண்பன் வரூவிலும் வெற்றிக்கொடி நாட்ட, இத்தனை நாளும் தனக்குப் பின்னால் புனையப்பட்டிருந்த அதீத விம்பங்களின் நிலையாமை பற்றி விஜய்க்குப் புரிந்திருக்க வேண்டும். அதன் விளைவே தொடர்ச்சியாக ஒரேவிதமான கதை, வித்தியாசமற்ற பாத்திரங்கள், காதைப் பிளக்கும் கத்தல்கள், நாயகப் பெருமைகளை பீற்றித் தள்ளும் ஆரம்பப் பாடல் என்பவற்றை தூக்கி எறிந்துவிட்டு, வித்தியாசமான தளத்தில் விஜய் பயணிக்க தொடங்கியிருக்கிறார். ஆனால் இன்னமும் அவரின் பயணிப்பு வணிக சினிமாவுக்குள் மட்டுமே இருக்கிறது. மாற்று சினிமாவுக்குள் வருவதற்கு அவருக்கு இன்னும் துணிவில்லை.



காவலன், நண்பன் என்ற வித்தியாசமான திரைக்கதைத் தேர்வில் இப்போது சேர்ந்திருப்பதுதான் 'துப்பாக்கி'. ஏற்கனவே 34 படங்களில் விஜயகாந்தும், 17 படங்களில் அர்ஜுனும் அடித்து, துவைத்து, பிழிந்து, காயப்போட்ட முஸ்லிம் தீவிரவாதத்தை ஒழிக்கும் இந்திய தேசபக்திக் கதைதான். ஆனாலும் 2.55 மணி நேரத்தில் இந்தக் கதையை, தொய்வின்றி, நகர்த்திச் சென்ற இயக்குநர் ஏ.ஆர். முருகதாஸ் இலக்கை நோக்கி மிகச் சரியாக துப்பாக்கியை வெடிக்க வைத்திருக்கிறார்.

இந்திய இராணுவத்தில் கடமையாற்றும் விஜய் விடுமுறைக்காக ஊருக்கு வரும்போது, பஸ்ஸில் வெடிகுண்டை வைக்கும் ஒரு தீவிரவாதியைத் தற்செயலாகப் பிடிக்கிறார். அவன் மூலம் நாட்டில் ஒரே நேரத்தில் 12 குண்டுகளை வெடிக்க வைக்கும் சதித்திட்டம் தெரியவர அதை தனது இராணுவ நண்பர்களின் துணையோடு முறியடிக்கிறார் விஜய். பின்னர் அந்தக் கும்பலின் தலைவன் விஜயை பழிவாங்க அலைய, விஜயோ அவனைப் பிடிக்கப் புறப்பட, பரபரப்போடு நகர்கிறது திரைக்கதை.

# வெளியே செல்வது யார்?


## ஜென் தத்துவக் கதை

ஜென் குருவிடம் நிறையச் சீடர்கள் கல்வி கற்றுவந்தனர். அதில் ஒரு சீடன் ஏனைய சீடர்களின் உணவுகளைத் திருடிச் சென்று, வெளியில் போய் விற்று காசாக்குவதை வழமையாகச் செய்துவந்தான். குறித்த சீடன்தான் தம்முடைய உணவை திருடுகிறான் என்ற விடயம் ஒருநாள் மற்ற சீடர்களுக்குத் தெரியவந்தது. உடனே அவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து குருவிடம் சென்றனர். குறித்த சீடனின் உணவு திருட்டுப் பற்றிக் குருவிடம் அம்பலப்படுத்தினர். அதைக்கேட்ட ஜென் குரு,

''அப்படியா ? அவனை நான் பார்த்துக்கொள்கிறேன் நீங்கள் இது பற்றிக் குழம்பாமல் வழமைபோல வகுப்புகளுக்குச் செல்லுங்கள்'' என்று கூறிவிட்டு குரு போய்விட்டார். திருட்டுச் சீடனை ஜென் குரு நிச்சயம் தண்டிப்பார் என்று எதிர்பார்த்து வந்த ஏனைய சீடர்கள் இதனால் ஏமாற்றமடைந்தனர்.

குருவிடம் முறையிட்ட பின்னரும் அந்தத் திருட்டுச்சீடன் தனது அட்டகாசத்தைத் தொடர்ந்து நிகழ்த்திக் கொண்டுதான் வந்தான். அவனது திருட்டுத் தனத்தை பொறுக்க முடியாத சீடர்கள் மீண்டும் குருவிடம் சென்றனர்.

'' குருவே! அவன் உணவுகளைத் திருடுவது முன்பைவிட இப்போது அதிகமாகிவிட்டது. எனவே இங்கிருந்து அந்தத் திருட்டுச் [illegible] விடுங்கள்'' அவரிடம் [illegible] போதும் ஜென் குரு முகத்தில் எதுவித சலனத்தையும் வெளிப்படுத்தாது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# னவின் சிறகுகள்

வழமையான பிரமாண்ட விம்பங்களை உதறிவிட்டு, கதைக்கு எது தேவையோ அதைமட்டும் விஜய் துப்பாக்கியில் கொடுத்திருக்கிறார். விஜயின் உடல்வாகு ஒரு படை வீரனுக்கு உரியதல்ல. ஆயினும் கொஞ்சம் சிரத்தை எடுத்து பார்ப்போர் இராணுவ வீரனென்று நம்பும் வகையில் முதல் முறையாக உழைத்திருக்கிறார்.

துப்பாக்கி படத்தில் உண்மையான நாயகன் இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ் தான். பழக்கப்பட்ட கதையை, எவருமே ஊகிக்க முடியாத சம்பவங்கள், காட்சிகளோடு நகர்த்திச் செல்கிறார். மிக நீண்ட நேரம் படம் ஓடுவதே தெரியாமல் ரசிகர்களை இருக்கைகளில் கட்டிப்போட்ட இறுக்கமான திரைக்கதையே படத்தின் முதுகெலும்பு.

இருண்மையும், ஒளியும் கலந்து வணிகத் திரைப்படத்துக்குக்கூட அழகியல் மிக்க ஒளிப்பதிவைத் தரமுடியும் என்பதை ஒவ்வொரு காட்சியிலும் நிரூபித்திருக்கிறார் ஒளிப்பதிவாளர் சந்தோஷ்சிவன்.


பின்னணி இசையிலும், பாடல்களிலும் தன்னுடைய வழக்கமான தன்மையிலிருந்து மாறாமல், பழைய மொந்தையிலிருந்து பழைய கள்ளையே இசைமூலம் புகட்ட முனைந்திருக்கிறார் இசையமைப்பாளர் ஹரிஸ்ஜெயராஜ்.

ஆனாலும் வேகமாகப் பயணிக்கும் திரைக்கதையில் கவனத்தை குவியவிடாமல் இடையிடையே குறுக்கிடுகின்றன பாடல்கள். அநேக பாடல்கள் பொருத்தமற்ற இடங்களில் வலிந்து திணிக்கப்பட்டுள்ளன. இந்தத் திரைப்படத்தில் எந்தவொரு பாடலும் இல்லாவிட்டால் திரைக்கதையின் வேகம் இன்னும் அதிகரித்திருக்கும். ஒரு வணிகப் படத்துக்குரிய அத்தனை அம்சங்களையும் எப்படியாவது புகுத்திவிட வேண்டும் என்ற நினைப்பில் தனது திரைக்கதைக்கு தானே ஊறு விளைவித்திருக்கிறார் ஏ.ஆர்.முருகதாஸ்.

துப்பாக்கியில் இன்னொரு தவறான வெடிப்பு, எல்லா வணிகப் படங்களிலும் வருவது போன்ற தீவிரவாத அடையாளப்படுத்தல்.

இலங்கையில் பயங்கரவாதிகள் என்றால் பட்டென்று தமிழர்கள் தான் என்று சொல்வதைப் போன்று இந்தியாவில் தீவிரவாதிகள் என்றால் அது முஸ்லிம்களாகத்தான் இருக்க வேண்டும் என்பது சினிமா உலகின் எழுதப்படாத விதி. அந்த விதியை தவறவிடாது துப்பாக்கியும் ஏந்தியிருக்கிறது. ஆனால் உண்மையில் முஸ்லிம்களின் மக்கள் விரோத செயல்களை விடவும் இந்துத்துவ வாதிகளின் கொடூரங்களே இந்தியாவில் அதிகம். சிறுபான்மை இனம் என்பதால் வம்புக்கு வரமாட்டார்கள் என்ற நினைப்பில்தான் இந்திய சினிமாக்கள் தீவிரவாதிகளுக்கு தாடியையும், குல்லாவையும், அரபு மொழியையும் இறுகப் பிணித்து விடுகின்றன. ''அல்லாஹ் அக்பர்'' என்றபடி வரும் முஸ்லிம் தீவிரவாதிகளே மனித குலத்தின் ஒரே விரோதிகள் என்ற அமெரிக்க மற்றும் இந்துத்துவ ஏகாதிபத்திய சிந்தனையின் எச்சங்களையே தமிழ் சினிமாவும் சுமந்து கொண்டிருக்கிறது. அதனாலேயே முஸ்லிம் தீவிரவாதிகளை துப்பாக்கி திரை முழுக்க நிறைத்திருக்கிறது.

ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்று, வணிக ரீதியில் துப்பாக்கி இலக்கை பிசகின்றி தாக்கி, விஜயின் பொன் முட்டைகளின் எண்ணிக்கைகளில் ஒன்றை அதிகமாக்கியுள்ளது. ஆனாலும் தொடர்ந்தும் ஒளிவட்டங்களை இழந்து, கதாநாயகனாக இல்லாமல் கதை நாயகனாக எவ்வளவு காலத்துக்கு விஜய் துணிச்சலோடு பயணிப்பார் என்பதே இப்போதுள்ள கேள்வி. மீண்டும் அவர் ஒளிவட்டங்களையே விரும்புவாரானால் இன்னொரு முறை வணிக சினிமாக் காரர்களால் அவர் தள்ளிவிடப்படக்கூடும். ஆனால் அப்போது அவர் இப்போது மீண்டெழுந்ததைப் போல பீனிக்ஸாக முடியாது. காலம் எப்போதும் ஒரே திசையில் பயணிப்பதில்லை.





ஏற்கனவே 34 படங்களில் விஜயகாந்தும், 17 படங்களில் அர்ஜுனும் அடித்து, துவைத்து, பிழிந்து, காயப்போட்ட முஸ்லிம் தீவிரவாதத்தை ஒழிக்கும் இந்திய தேசபக்திக்கதைதான். ஆனாலும் 2.55 மணி நேரத்தில் இந்தக் கதையை, தொய்வின்றி, நகர்த்திச் சென்ற இயக்குநர் ஏ.ஆர். முருகதாஸ் இலக்கை நோக்கி மிகச் சரியாக துப்பாக்கியை வெடிக்க வைத்திருக்கிறார்.

"அப்படியா ? அவனை நான் பார்த்துக்கொள்கிறேன் " என்று கூறி அப்பால் சென்றுவிட்டார். இதனால் மீண்டும் இந்த முறையும் பெரிய ஏமாற்றமடைந்தனர் சீடர்கள்.

'ஏன் இந்தக் குரு அந்தத் திருட்டுச் சீடனைத் தண்டிக்கத் தயங்குகிறார்?' என்று அவர்கள் குழம்பத் தொடங்கினர்.

கொஞ்ச நாள்களின் பின்னர்,திருட்டுச் சீடனின் உணவு அபகரிப்பு லீலை முன்னரை விட அதிகமாயிற்று. சீடர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

"இதுதான் கடைசி முறை. அந்தத் திருட்டுச் சீடனை தண்டித்து இங்கிருந்து வெளியே அனுப்பும்படி குருவிடம் கோருவோம். அதற்கு அவர் செவி சாய்க்காவிட்டா நாம் எல்லோரும் இந்தக் குருகுலத்தை விட்டு வெளியே செல்வோம்." என்று தமக்குள் கூறி முடிவெடுத்துவிட்டு குருவிடம் சென்றனர் சீடர்கள்

அவரிடம் போய் வழமைபோலவே திருட்டுச் சீடன் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்ற உணவுத் திருட்டுப் பற்றி விரிவாகச் சீடர்கள் விளக்கினர். அத்தோடு அவனை வெளியேற்றாவிட்டால் தாம் குருகுலத்தை விட்டு வெளியேறப்போகும் முடிவையும் அறிவித்தனர்.

அவர்களின் முடிவைக் கேட்ட குரு,

"அதுதான் நல்ல முடிவு. நீங்களெல்லாம் வெளியே சென்றுவிடுங்கள். அவன் இங்குதான் இருப்பான்" என்று அமைதியாகச் சொன்னார். இவ்வாறு குரு சொன்னதும் சீடர்களுக்கெல்லாம் கொதிப்பேறிவிட்டது.

" நீங்கள் ஏன் எப்போதும் அவனுக்குச் சார்பாகவே கதைக்கிறீர்கள்? அவன் என்ன உங்களுக்குச் சொந்தமா? ஒரு திருடனுக்குப் போய் இவ்வளவு சலுகைகள் வழங்குகிறீர்களே." என்று கேட்டனர்.

அதற்கு ஜென் குரு,


"சீடர்களே உங்கள் உணவுகளை திருடுவது அவனுக்குத் தவறாகத் தோன்றவில்லை. இப்படிப்பட்டவனை உங்களுக்காக குருகுலத்தில் இருந்து வெளியே அனுப்பினால் அவன் மிகப்பெரிய திருடனாகிவிடுவான். அவனை நல்வழிப்படுத்தத்தான் என்னைப்போன்ற குரு தேவை. அவனுக்குத்தான் இன்னும் போதனைகள், அறிவுரைகள் தேவை. ஆகவே அவன் இங்கிருப்பதுதான் சரியானது. திருடுவது தவறென்பதை உணர்ந்துள்ள நீங்கள் வெளியே சென்றால் நல்லவழியில் பிழைத்து முன்னேறிக் கொள்வீர்கள்.

அதுதான் உங்களை வெளியேறச் சொன்னேன்." என்று விளக்கம் சொன்னார். அதன் பின்னர் குழப்பம் நீங்கப் பெற்ற சீடர்கள் தொடர்ந்தும் குரு குலத்திலேயே தங்கி கல்விகற்று பிற்காலத்தில் பெரும் ஞானிகளாக மாறினர். காலப்போக்கில் திருட்டுச் சீடனும் தன் தவறைத் தானே உணர்ந்து திருந்தினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்



நெடுந் தொடர்

பா.உண்மை

26

இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன. இந்த இடைப்பட்ட காலத்தில் லிங்கனும் மேரியும் சந்திக்கவேயில்லை. லிங்கன் கொஞ்சம் கொஞ்சமாக மேரி டாட்டை மறக்க விரும்பினார். ஆனால் முடியவில்லை.

'ஸ்பிரிங்ஃபீல்ட் ஜேர்னல்'' என்ற பத்திரிகையின் ஆசிரியர் சிமியன் ஃப்ரன்ாஸிஸ் ஆபிரஹாம் லிங்கனின் நெருங்கிய நண்பர்களில் ஒருவர். அடிக்கடி சிமியன் ஃப்ரான்ஸிஸின் வீட்டுக்குப் போய்வருவார் லிங்கன்.

ஒரு நாள் ஃப்ரான்ஸிஸின் மனைவி தேநீர் விருந்துக்கு வரச்சொல்லி லிங்கனை அழைத்திருந்தார். அந்த அழைப்பை ஏற்று லிங்கன் சிமியன் ஃப்ரான்ஸிஸின் வீட்டுக்குப்போனார். ஃப்ரான்ஸிஸின் மனைவி லிங்கனை வரவேற்றார்.

''உங்களுக்கு ஒரு முக்கியமான நபரை அறிமுகப்படுத்தப் போகிறேன்'' என்றார்.

''முக்கியமான நபரா? அப்படி யாரும் தென்படவில்லையே?'' என்று கூறிக்கொண்டே சுற்றிலும் கண்களால் தேடினார் லிங்கன்.

''அந்த நபர் இங்கே இல்ல. அந்த அறையில் இருக்கிறார்'' என்று ஓர் அறையைக் காட்டினார் திருமதி ஃப்ரான்ஸிஸ். சொன்னதோடு நில்லாமல் லிங்கனை அந்த அறைக்கு அழைத்துப்போனார்.

''உள்ளே செல்லுங்கள்'' என்று லிங்கனை அறைக்குள் அனுப்பிக் கதவைச் சாத்தினார் அவர். உள்ளே மேரி டாட் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார். மேரியைப் பார்த்ததும் அதிர்ந்து போய்விட்டார் லிங்கன். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். கட்டிக் கொண்டு கண்ணீர் வடித்தார்கள்.

''ஏன் அப்படி செய்தீர்கள்?'' என்ற கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்டார் மேரி.

''என்னை மன்னித்துவிடு'' என்று திரும்பத் திரும்பச் சொன்னார் லிங்கன்.

இருவரும் மறுபடியும் இணைந்தார்கள். அடிக்கடி சந்தித்துக் கொண்டார்கள். திருமணத்துக்கு மீண்டும் நாள் குறித்தார்கள்.

1842 ஆம் ஆண்டு, நவம்பர் 4 இல் லிங்கன்- மேரி டாட்டைத் திருமணம் செய்து கொண்டார். திருமணம் எளிமையாக, எட்வர்ட்ஸ் என்ற நண்பரின் வீட்டில், நண்பர்களின் முன்னிலையில், சார்ள்ஸ் டிரஸ்ஸர் என்ற மதகுருவின் தலைமையில் நடந்தது.

மணவாழ்க்கை, லிங்கனுக்கு அவ்வளவு உவப்பாக இல்லை. பிற்காலத்தில் தம் இல்லற வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிடும் போது, ''மணவாழ்க்கை மலர்ப்படுக்கை அல்ல: போர்க்களம்'' என்று லிங்கன் குறிப்பிட்டார்.

லிங்கனுக்கு நேர் எதிரான குணம் படைத்தவராக இருந்தார் மேரி டாட். லிங்கனைப் பற்றி எப்போதும் ஏதாவது குறை சொல்லிக் கொண்டே இருந்தார். அவருடைய குறையெல்லாம் பெரும்பாலும் லிங்கனின் தோற்றம் பற்றியதாகவே இருக்கும்.

லிங்கனும் அவர் குறை சொல்வதற்கேற்ற மாதிரித்தான் இருந்தார். அவர் சரியாக முடிவெட்டிக் கொள்ளமாட்டார். பற்றைக்காடாக வளரும் வரை அப்படியே விட்டு வைத்திருப்பார். நாள் கணக்கில் தாடி வளர்ப்பார். நேர்த்தியாக உடை உடுத்த மாட்டார். பெண்களைப் பார்த்தால் ஓடி ஒளிந்து கொள்வார். இன்னும் சொல்லப் போனால் லிங்கனுக்குச் சரியாகச் சாப்பிடக் கூடத் தெரியாது. அவருக்குத் தெரிந்ததெல்லாம் சதா சர்வகாலமும் ஏதாவது புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிப்பதுதான்.

ஓர் எளிமையான வீட்டில் லிங்கனும் மேரி டாட்டும் வாடகைக்குக் குடியிருந்தார்கள். மணவாழ்க்கையின் பயனாக அவர்களுக்கு நான்கு குழந்தைகள் பிறந்தன. ராபர்ட், எட்வர்ட் பேகர், வில்லியம் வோலஸ், தோமஸ் என்பனவே நான்கு குழந்தைகளினதும் பெயர்கள். மேரி டாட் குழந்தைகளுக்குக் கூட தன் இஷ்டப்படிதான் இந்தப் பெயர்களை வைத்தார். லிங்கன் மிகவும் வேண்டிக் கேட்டதற்குப் பிறகு தான், நான்காவது குழந்தைக்கு லிங்கனின் தந்தையின் பெயரை வைக்க ஒப்புக்கொண்டார்.

நான்கு குழந்தைகளில் ராபர்ட் மட்டும் தான் உயிர் பிழைத்து முதுமை வயது வரை வாழ்ந்தார். எட்வர்ட், ஸ்பிரிங்ஃபீல்டில் நான்கு வயதிலும், வில்லியம் பன்னிரண்டாவது வயதில் வெள்ளை மாளிகையிலும், தோமஸ் 18 ஆவது வயதில் சிக்காகோவிலும் மரணமடைந்தனர்.

ராபர்ட் பிறந்த ஐந்து மாதங்கள் கழித்துக் கொஞ்சம் வசதியான வீட்டுக்குக் லிங்கன் குடும்பத்தோடு குடிபெயர்ந்தார். குழந்தைகளை அன்பாக வளர்த்தார் லிங்கன். கண்டிப்போடு, அடித்து வளர்க்க ஆசைப்பட்டார் மேரி. அதனால் அடிக்கடி இருவருக்கும் சண்டை, சச்சரவு மூண்டது.

நீதிமன்றம் நடக்கும் நாள்களில், பக்கத்து ஊர்களிலிருக்கும் நீதிமன்றத்துக்கு லிங்கன் செல்லவேண்டியிருக்கும்.

அப்போதெல்லாம் வழக்கு முடிந்ததும் ஏனைய வழக்கறிஞர்கள் தங்களது வீடுகளுக்குப் போகப் பரபரத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் லிங்கனுக்கு மட்டும் வீட்டுக்குப் போகவே பிடிக்காது. ஊரில் இருக்கும் நாள்களில் கூட பெரும்பாலான நேரத்தைத் தனது வழக்கறிஞர் அலுவலகத்திலேயே அவர் கழித்தார். திடீரென்று வீட்டிலிருந்து கிளம்பி, அதிகாலையிலேயே அலுவலகத்துக்கு வந்துவிடுவார். சில சமயங்களில், வேலை முடிந்த பிறகும் கூட, நள்ளிரவுக்கும் மேல் அலுவலகத்திலேயே கழிப்பார். அதற்குக் காரணம் மேரிடாட்தான்.

லிங்கன் திருமணம் செய்துகொண்டபோது, அவருடைய ஆண்டு வருமானம் சராசரியாக 1,500 டொலர்கள். வழக்குகளுக்கு வேதனமாக எப்போதுமே பணம் வரும் என்று எதிர்பார்க்க முடியாது. சில சமயங்களில் பணத்துக்குப் பதிலாகத் துணிகள், தானியங்கள், காய்கறிகள், கோழிகள் ஆகியவற்றைக் கூட கொடுப்பார்கள்.

லிங்கனுக்கு வருகிற வழக்குகளும் சொல்லிக் கொள்ளும்படியாக இருக்காது. வாய்த்தகராறு, அடிபிடிச் சண்டை, வயலில் மேய்ந்த ஆடு, மாடுகள் காரணமாக அவற்றின் உரிமையாளர் மீது தொடரப்பட்ட வழக்கு, கடன் வழக்குகள் இப்படியாகத்தான் இருக்கும். லிங்கன் வழக்கறிஞராக இருந்த மாவட்ட நீதிமன்றத்தின் அதிகார எல்லை, 12,000 சதுர மைல், பரப்பளவைக் கொண்டதாக இருந்தது. லிங்கன் வழக்குகளுக்காக, சுற்றிலுமுள்ள ஊர்களுக்குக் (கிட்டத்தட்ட 35 மைல் கூட) குதிரையில் செல்வார்.

லிங்கன் ஆரம்பத்தில் ஸ்டூவர்ட்டுடன் கூட்டாக வழக்கறிஞர் தொழிலைச் செய்தார். ஸ்டூவர்ட்டுக்கு அரசியல் ஈடுபாடு அதிகம். பிரசாரம், கூட்டம் என்று பெரும்பாலான சமயங்களை வோஷிங்டனிலும் வேறு ஊர்களிலும் அவர் கழித்தார். அவரோடு கூட்டாக இருந்தவரை லிங்கனும் ஸ்டூவர்ட்டும் சட்ட அறிவை விட, தங்களது பேச்சுத் திறமையால்தான் வழக்குகளை நடத்தி வந்தார்கள். அப்போது மாநில உச்ச நீதிமன்றமும், மத்திய அரசின் மாவட்ட நீதிமன்றமும் ஸ்பிரிங்ஃபீல்டில் செயற்பட்டுக் கொண்டிருந்தன. இந்த நீதிமன்றங்களில் வாதாட, ஆழ்ந்த சட்ட அறிவு தேவைப்பட்டது. ஸ்டூவர்ட்டுடன் கூட்டாகத் தொடர்ந்து இருந்தால் சட்டத்துறையில் முன்னேற முடியாது என்று லிங்கன் உணர்ந்து கொண்டார். 1841 ஆம் ஆண்டு லிங்கன் ஸ்டூவர்ட்டுடன் கூட்டுத் தொழில் செய்வதில் இருந்து விலகிக் கொண்டார். இருவரும் சுமுகமாகப் பிரிந்தார்கள்.

(மீட்பர் வருவார்)

# "சின்னமாமி எனக்கே சொந்தம்"

நேர்காணல் - ஔரீஷ்

28.10.2012 சூரியகாந்தியில் பொப்பிசைப் பாடகர் நித்தி கனகரத்தினத்தின் நேர்காணல் வெளியான பின்னர் ஒரு பொழுதில் ஒலித்தது தொலைபேசி.

''தம்பி! நித்தி அந்தப் பேட்டியில நிறைய பொய் சொல்லி இருக்கிறார். சின்ன மாமி பாட்டுக்கு நான் தான் சொந்தக்காரன். ஒருக்கா என்னைச் சந்திக்க முடியுமோ?'' என்று சர்ச்சை வெடியை தொலைபேசி ஊடாக கொளுத்திப் போட்டார் எம்.எஸ். கமலநாதன். வதிரியைச் சேர்ந்தவர். அவரின் அழைப்புக்கு செவி சாய்த்து சந்தித்தோம்.

கண்களில் வேதனை கொப்பளிக்க தன் மனக் கதவுக்குள் பூட்டப்பட்டிருந்த குமுறல்களைக் கொட்டித் தீர்த்தார்.

''அந்தப் பேட்டியில 'பச்சைத் துாசணமாக' தனக்குக் கிடைச்ச பாட்டை, தான் நல்ல சொல்லுகளைப் போட்டு மேடையில பாடுற மாதிரி ஆக்கினதாக நித்தி கனகரத்தினம் சொல்லியிருக்கிறார். உண்மையாக நான் எழுதின பாட்டில ஒரு எழுத்துக் கூட மாத்தாமல் தான் பாடிக்கொண்டிருக்கிறார். ஆனால் ஏனோ அது என்ர பாட்டு எண்டு ஒத்துக்கொள்ளாமல் அடம்பிடிக்கிறார் என்று சொன்னவர் பாடல் பிறந்த கதையை விவரிக்கத் தொடங்கினார்.

''எனக்கு சின்னனில இருந்து இசையில ஆர்வம் கூட. நிறைய பைலா பாட்டுகள் கேக்கிற பழக்கம் எனக்கு இருந்தது. அப்ப பிரபலமாக இருந்த சிங்கள பைலா பாடகர் எம்.எஸ்.பெர்னாண்டோவின் இசை நிகழ்ச்சி ஒண்டை கொழும்பு பார்க் வீதிக்கு கிட்ட பாத்தன். அப்ப தான் தமிழில இப்பிடி பாட்டுக்கள பாடிச்சால் என்ன எண்ட யோசினை எனக்கு வந்திச்சு.

எம்.எஸ்.பெர்னாண்டோவின் இசையை தழுவலாக வைச்சு ஒரு பாட்டு எழுதினன். அது தான், 'சின்ன மாமியே. உன் சின்ன மகள் எங்கே?'. ஆனால் அந்தப் பாட்டால என்னை விட நித்திக்குத் தான் பிரயோசனம்.''

**சின்னமாமி பாடல் கமலநாதனுடையது தான் என்பதை, இப்போது உறுதிப்படுத்த வலுவான ஆதாரங்களை கண்டுபிடிப்பது கடினமே. நீண்டகாலம் கடந்துவிட்டதே இதற்குக் காரணம். ஆனாலும் அவரது கருத்துக்கள் இங்கே பகிரப்பட்டுள்ளன.**

பெருமூச்சோடு பேச்சில் ஒரு இடைவெளி எடுத்துக் கொண்டு மீண்டும் தொடர்ந்தார்.

''1962 ஆம் ஆண்டு சின்ன மாமி பாட்டை வதிரியில தமிழ் மன்றம் நடத்தின போயா நிகழ்ச்சியில பாடினன். நல்ல வரவேற்பு. பிறகு என்ர ஒன்றுவிட்ட சகோதரனான பாலச்சந்திரன் சென்.ஜோன்ஸ் கல்லூரியில நடக்கிற ஒரு நிகழ்ச்சியில இந்தப் பாட்டை என்னட்ட இருந்து எழுதி வாங்கிக்கொண்டு போய் பாடினார். அங்கையும் எல்[illegible]

[illegible] பாலச்சந்திரன் தன்ர பள்ளிக்கூட சினேகிதரோட ட்றம் அடிச்சு பாடினார்.



சென்.ஜோன்ஸ் கல்லூரியில நடந்த விழாவிலேயோ இல்லாட்டி பிக் மட்ச்சிலேயோ பாலச்சந்திரன் பாடேக்க, சின்னமாமி பாட்டை நித்தி கனகரத்தினம் கேட்டிருக்க வேணும். பிறகு அவர் அதை தன்ர பாட்டெண்டு பாடி, உலகப் பிரபல்யம் அடைஞ்சிட்டார். நான் எழுதினதில ஒரு சொல்லுக்கூட மாத்தேல. மெட்டுக்கூட நான் போட்டதுதான்.

ஒருக்கா வேறையொரு பேட்டியில நான் தான் (கமலநாதன் தான்) இந்தச் சின்னமாமி பாட்டை எழுதினவர் எண்டு நித்தி ஒத்துக்கொண்டவர். பிறகு இப்ப, 'பச்சை துாசணமா' கிடைச்ச பாட்டை தான்

(18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவின் கடைசிக் காணி



தி.மயூரகிரி

> “ புறக்றரின் அலுவலகத்துக்கு நாங்கள் வந்த போது அங்கே விபூதிக் குறியோடு சண்முகம் உட்கார்ந்திருந்தார். வாயெல்லாம் பல்லாக எங்களை வரவேற்றார். இருக்காதா பின்னே? பத்து லட்சம் பெறுமதியான காணியை இரண்டு லட்சத்துக்கு அமத்தினால் வாய் மட்டுமென்ன முகம் முழுக்க பல்லாகும் தானே.

கட்டிலில் படுத்திருந்த அம்மா என் குரலைக் கேட்டதும் எழுந்து உட்கார்ந்திருந்தாள். உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருந்த பெரியண்ணாவின் குழந்தைகள் எச்சில் கைகளுடன் ஓடிவந்து என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டனர்.

சின்னண்ணாவிடம் கேட்டேன் ''நீங்கள் எப்ப வந்தீங்கள்?''

''நான் வந்து மூண்டு நாளடா.'' சொல்லி விட்டு நகர்ந்து சென்றார் அவர்.

அப்போது அங்கே வந்த பெரியண்ணா ''நீ ஏன்டா இவ்வளவு லேட்? இரண்டு நாளுக்கு முதலே வந்திருக்கலாமே..'' என்றார்.

''கொம்பனியில் லீவு கிடைக்கேல..'' என்றேன் அமைதியாக.

''நீ நல்லாச் சாட்டுச் சொல்றாய். இவன் உன்ர சின்னண்ணனும் தான் வேலை பாக்கிறான். ஆனா அவன் மாசத்துக்கு ரண்டு தரம் வந்து போறான். உன்னை ரண்டு மாசமாகவே காணேல்லை. உனக்கென்ன குடும்பமோ..? குட்டியோ..? அடிக்கடி வந்து போகலாம்தானே?'' அண்ணா சொல்லிக் கொண்டே போனார்.

நான் ஒன்றும் சொல்லவில்லை . எனக்காக சின்னண்ணா 'சப்போட்டுக்கு' வந்தார்.

''எனக்குக் கவர்மென்ட் வேலை.. சேவிங்ஸ் வேற இருக்கு.. இவன் பாவம். புதிசா பிறைவேட் கொம்பனியில் வேலைக்குச் சேர்ந்திருக்கிறான். அதோட கொழும்பு என்ன கிட்டவோ இருக்கு..?''

உள்ளே அண்ணி வெங்காயத்தைக் கடித்துக் கொண்டே பழஞ்சோறு சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். இப்படி மிஞ்சுவதையும், பழையதையும் தான் சாப்பிட்டு விட்டு, பிறர்க்கென விதவிதமாக சமைத்துப் போடும் மனதை அவள் பெற்றிருக்கிறாள்.

என் தந்தையார் மறையும் போது நான் அவ்வளவு விவரம் தெரியாத பத்து வயதுப் பாலகன்.

என்னை விட பன்னிரெண்டு வயது அதிகமான பெரிய அண்ணன் அப்போது தான் காதலித்து, அண்ணியை கல்யாணம் செய்திருந்தான். அன்றிலிருந்து என்னைப் பேணி வளர்த்ததெல்லாம் அண்ணாவும் அண்ணியும் தான். அம்மா, சின்னண்ணா, அண்ணி, பிறகு பிறந்த குழ்ந்தைகள், விசாலம் மாமி என்று ஒரு பெரிய குடும்பப் பொறுப்பையே பெரியண்ணா பாசத்தோடு பேணிப் பாதுகாத்தான்.

அவன்தான் சின்னண்ணாவுக்குக் கல்யாணமும் செய்து வைத்தான். கொஞ்சமாக அப்பா சம்பாதித்து வைத்த முதிசமான நிலம் தான் அவ்வப்போது கை கொடுத்திருக்கிறது. அதை ஈடு வைத்துத் தான் இக்கட்டான நேரங்களில் அண்ணன் மூச்சு விட முடிந்தது. பெரியண்ணா எங்கள் வீட்டு சுமைதாங்கி. இன்றும் பெரியண்ணா தான் குடும்பத்தில் நல்லது கெட்டது, மானம் அவமானம் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டிருக்கிறான். அம்மாவுக்கும் தீராத வியாதி... கடன் தொல்லையும் ஏறிக்கொண்டிருக்கிறது. எனக்கும் சம்பளம் மாதம் பத்தாயிரம் தான். லோன் ஒன்றுக்கு விண்ணப்பித்திருந்தேன். ஆனால் அது இன்னமும் வந்தபாடாக இல்லை. லோன் கிடைத்தால் கார் ஒன்றை தவணை முறையில் வாங்க வேண்டும். கொழும்பில் காரில் வேலைக்குப் போனால் தான் மரியாதை. இன்னமும் கார் வாங்கும் திட்டத்தை பெரியண்ணாவுக்கு நான் சொல்லவில்லை.

கொழும்பில் நான் உழைக்கும் பணம் என்னுடைய செலவுக்கே போதாமல் தான் இருக்கிறது. இடைக்கிடையே பெரியண்ணாவும் பணம் அனுப்புவதால் சமாளிக்க முடிகிறது. ஒரு புறமோஷன் கிடைத்தால் எனது சம்பளம் இரு மடங்காகி விடும். அதுக்குப் பிறகு அண்ணாவுக்கும் அம்மாவுக்கும் ஏதாவது செய்ய வேண்டும்.

பெரியண்ணா கொஞ்சக் காலமாக தலைக்கு மேல் போய்விட்ட கடனால் துவண்டு போயிருந்தார்.

''குமரா.. என்னால சமாளிக்க ஏலாமல் கிடக்குது. எங்கட கடைசித்துண்டுக் காணியையும் விக்கிறதாக இருக்கிறன்..'' தளதளத்த குரலில் போன கிழமை அண்ணாவின் குரல் தொலைபேசியூடாக வந்தது. அண்ணா அப்படிச் சோர்வாக முன் எப்போதும் கதைத்ததில்லை.

''சரி அண்ணா ! அப்பிடியே செய்யுங்கோ. எதுக்கும் சின்னண்ணாட்டையும் ஒருசொல்லு கேட்டால் நல்லது.'' நான் மேலே பேசவில்லை.

பெரியண்ணா தடுமாறிக் கொண்டே '' உங்களை எல்லாம் கேட்காமலேயே இப்படி ஏற்பாடு செய்திட்டன். எனக்கு வேற வழிதெரியேல்லை.'' தளர்ந்த குரலில் சொன்னான். பிறகு அவர் சின்னண்ணைக்கும் போன் எடுத்திருக்கிறார்.

''என்ன இப்படிச் சொல்லிட்டாய்.. நீ எது செய்தாலும் சரிதான். இது தான் எங்கட கருத்தும் [illegible] அடைச்சாத்தான் பிரச்சினை தீரும்.''

சின்னண்ணாவும் பெரியவனின் முடிவுக்கே தன் ஆதரவை வெளிப்படுத்தினான்.

சில வேளைகளில் சின்னண்ணா ஏதாவது ஏடாகூடாமாக சொல்லி விடுவானோ என்று தான் நான் கவலைப்பட்டேன். ஆனால் அவனும் பெரியண்ணாவின் முடிவுக்கு கட்டுப்பட்டு இவ்வாறு சொன்னது திருப்தியாக இருந்தது.

என்னைக் கண்டவுடன் அம்மா கண்களைத் துடைத்துக்கொண்டே ''அது அப்பா சம்பாதிச்ச கடைசிச் சொத்து... அதுவும் இப்ப போகப்போகுது...'' என்று அழுதாள். பெரிய அண்ணா இடிந்து போயிருந்தார். ஒருவாறு அன்றிரவு கடந்தது.

மறுநாள் புறக்றரின் அலுவலகத்தில் சென்று அப்பாவின் கடைசித் துண்டுக் காணியை, பெரியண்ணாவுக்கு வட்டிக்குக் பணம் கொடுத்த சண்முகத்தின் பெயருக்கு மாற்ற வேண்டும்.

காலையில் 'கிளார்க்கர் மகாதேவன் வந்து சேர்ந்தார். அவர்தான் புறக்றரின் எழுதுநர்.எங்கட ஊர்க்காரர்.

'காலைமையே சண்முகம் வீட்டுக்குப் போனனான். இழுபட்டுத்தான் காசு தந்தான். உங்கட காணி ரண்டு பரப்புத் தானே. வாங்கிறவன் தான் எழுத்துக் காசு தரவேண்டும். இரண்டு லட்சம் ரூபாவுக்கு விக்கிறதால புறக்றர் பீஸ் பத்தாயிரம் தரச் சொல்லிக் கேட்டனான் ஆனால் அவன் ஆறாயிரம்தான் தந்தவன். உவன் வட்டிக்கு வட்டி வாங்கியே மாசத்துக்கு மூண்டு காணி எழுதிறான். கழுதைப் பயல்.. இவங்கள கடவுள் தான் கேக்கவேணும்..' புறுபுறுத்துக் கொண்டிருந்த சண்முகத்துடன் சேர்ந்து புறக்றரின் அலுவலகத்துக்கு பஸ்ஸில் பயணமானோம்.

எங்கட ஊரிலிருந்து நகரை அடையவே ஒன்றரை மணி நேரம் போயிற்று.

''தம்பி! நீ இனிமேல் பொறுப்பாக நடக்க வேணும். அப்பாவின் காணியில் ஒரு துண்டு கூட மிஞ்சவில்லை.என்னை இனியும் நம்பாதேங்கோ. நான் உழைச்சு உழைச்சு களைச்சுப் போட்டன். என்னால இதுக்குமிஞ்சி உழைக்க இயலாது. நான் உங்களை ஆளாக்கினதுக்கு கைமாறா நீங்கள் ரண்டு பேரும் தான் இந்தக் காணியை மீட்க வேணும்''

கண்ணீரோடு அண்ணா புலம்பிக் கொண்டே வந்தார். அந்தக் கண்ணீரை எவ்வளவு நேரம் தான் நாங்களும் துடைத்துக் கொண்டே இருக்க முடியும்.

புறக்றரின் அலுவலகத்துக்கு நாங்கள் வந்த போது அங்கே விபூதிக் குறியோடு சண்முகம் உட்கார்ந்திருந்தார். வாயெல்லாம் பல்லாக எங்களை வரவேற்றார். இருக்காதா பின்னே? பத்து லட்சம் பெறுமதியான காணியை இரண்டு லட்சத்துக்கு அமத்தினால் வாய் மட்டுமென்ன முகம் முழுக்க பல்லாகும் தானே.

காணியைக் கைமாற்றும் பத்திரத்தில் நடுங்கும் கையோடு பெரியண்ணா கையெழுத்து வைக்க போன நேரத்தில் தான் என் செல்பேன் சிணுங்கியது. அம்மாவின் அழுகையால் உள்ளே கதைக்க முடியாது அலுவலகத்துக்கு வெளியே வந்தேன். தொலை பேசியின் மறுமுனையில் எனது நிறுவன முகாமையாளர்.

''குமரன்! ஒரு குட் நியூஸ். உம்மட லோன் சாங்சன் ஆயிற்று. முழுத்தொகையையும் உம்மடை எக்கவுண்டுக்கு போட்டுட்டம். இனி நீர் கார்ல வரலாம்.''

அவரின் வார்த்தைகள் காதில் விழுந்தவுடன் எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. காரா? காணியா? மனம் குழப்பத்தில் தவித்தது. காரை வாங்கினால் பகட்டுக்கு ஓடித்திரியலாம். இந்தக் காணியை போகவிடாமல் சண்முகத்தின்ர கடனை அடைச்சால் பெரியண்ணா, அம்மா, சின்னண்ணா, அண்ணி இவையின்ர கண்ணீருக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

ஒரு முடிவோடு அலுவலகத்துக்குள் வந்தேன். இன்னமும் பெரியண்ணா கையெழுத்து வைக்கவில்லை. ''அண்ணா! நாங்கள் காணியை விற்கத் தேவையில்லை. இண்டைக்குப் பின்னேரமே நீ வாங்கின கடனை வட்டியோட நான் குடுக்கிறன்.'' நான் சொல்லச் சொல்ல நம்ப முடியாதவனாக நிமிர்ந்து பார்த்தார் பெரியண்ணா. லோன் கிடைத்த விடயத்தை எல்லோருக்கும் சொன்னேன்.

''அப்ப பின்னேரம் கடனையும் வட்டியையும் கொண்டு வந்து தாங்கோ'' என்று தனக்கு வரவிருந்த கொழுத்த இரை பறிபோன கவலையோடு வெளியேறினார் சண்முகம்.


பெரியண்ணா ஆனந்தத்தில் என்னைக் கட்டியணைத்தார். அப்பா என்னை கட்டியணைப்பது போல இருந்தது. ''கடைசித் துண்டு காணியை பெரியண்ணான்ர பெயரில எழுதுங்கோ'' என்று புறக்றருக்கு சொன்னேன். சின்னண்ணாவும் தனக்குச் சம்மதம் என்பது போல என்தோளை ஆதரவாகப் பற்றினான். பெரியண்ணா, சின்னக்குழந்தை போல தேம்பி அழத் தொடங்கினார். மெல்ல மெல்ல அந்த இடம் ஆனந்தத்தால் நிறையத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவித்திறன் கொண்ட நாடகக் கலைஞர்

## செந்தமிழ்ச் சுடர் செ.அ.அழகராஜா

■வயாவிளான் தவமைந்தன்



மரபுவழியான தமிழர் கலைகளுள், தென்மோடிக் கூத்துக்கள் தனித்துவமான பண்புகளைக் கொண்டவைகளாக விளங்கி வருகின்றன. இந்தக் கூத்துக்கள் மிகவும் இனிமையான சந்தத் தமிழ்ப் பாடல் வகைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றமை யாவரும் அறிந்ததே. அழகு தமிழில் இயற்றப்பட்ட ஈழத்தின் தென்மோடிக் கூத்துக்கள் பல நூற்றுக்கணக்கில் எம்மிடம் இருக்கின்றமை எமது கலைச் செழுமையை உலகுக்கு எடுத்துக்காட்டி நிற்கின்றன என்பதில் ஐயமில்லை.

இத்தகைய சிறப்புக்கொண்ட தென்மோடிக் கூத்துக்களைத் தமிழ் யாப்பிலக்கண விதிமுறைகள் தவறாமல் இயற்றி வருகின்ற கவிஞராகவும் கூத்துநடிகராகவும் நாடக நெறியாளராகவும், சிறுவர் நாடகஎழுத்தாளராகவும், ஓவியராகவும், பத்திரிகைத் துறையின் பல்சுவை எழுத்தாளராகவும், தற்புகழ்ச்சியற்ற சிறந்த மனிதராகவும் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் கலைப் பணியாற்றி வருபவர் கவித்தென்றல் செ.அலோசியஸ் அழகராஜா.

மறைந்தசெபஸ்ரியாம்பிள்ளை-றெஜினாருக்மணி ஆகியோரின் மகனாக 04.03.1955இல் சுண்டுக்குளியில் இவர் பிறந்தார். புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற இவர் தனது பள்ளிப் பருவத்திலேயே நாடக நடிகனாகவும், எழுத்தாளனாகவும் புகழ்பெற்று விளங்கி வந்தார். அத்துடன் தமிழ்ப் பாலபண்டிதர் கற்கை நெறியையும் நிறைவு செய்து தனது தாய்மொழியறிவை மேம்படுத்திக் கொண்டார்.

ஈழத்தின் தென்மோடிக் கூத்து மரபில் பெரும் வரவேற்பைப் பெற்றுக் காலத்தால் அழியாத கூத்துப் பிரதிகளாக விளங்குகின்ற விசயமனோகரன், மரியதாசன் போன்ற கூத்துக்களை இயற்றியவர் இவரது பேரனார் வெ.மரியாம்பிள்ளை ஆவார். தனது பேரனாரின் கூத்துப் பயிற்சிகளையும் ஆற்றுகைகளையும் சிறு வயதிலேயே பார்த்தும் கேட்டும் கூத்துக் கலையின் அனைத்து விதமான நுட்பங்களையும் உள்வாங்கிக் கொண்ட இவர் ஏராளமான கூத்துக்களில் நடிகராகவும் அந்தக் காலத்தில் நடித்து வந்தார்.

எடுப்பான, அழகான தோற்றம் கொண்ட இந்த நடிகர், நவரச நாட்டுக்கூத்துக் கலாமன்றத்தால் நாட்டுக்கூத்துக் கலாநிதி புகுந்தான் யோசேப்பு வின் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்ட சங்கிலியன், எஸ்தாக்கியார், தேவசகாயம்பிள்ளை, சஞ்சுவான், விசயமனோகரன், சம்பேதுரு சம்பாவிலு போன்ற கூத்துக்களில் முக்கிய பாத்திரங்கள் ஏற்றுச் சிறப்புடன் நடித்து வந்தார்.

தினகரன், வீரகேசரி, தினபதி, பாதுகாவலன், நான், புதிய உலகம், செங்கதிர், அமிர்தகங்கை போன்ற பத்திரிகைகளில் கவிதை, கட்டுரை போன்ற ஆக்கங்களை யாழூர் அழகன் என்னும் புனைபெயரில் பல ஆண்டுகளாக வழங்கி வந்த இவர் 1970இல் சடாயு என்னும் கூத்தினை முதல் முதலாக எழுதி மேடையேற்றியதுடன் இது வரையில் பதினைந்துக்கும் அதிகமான சிறந்த தென்மோடிக் கூத்துக்களைப் புதிதாக இயற்றியுள்ளமை போற்றுதற்குரியதாகும்.

**69**

**சாதனைக் கலைஞரைச்**

**சந்திப்போம் சிந்திப்போம்**

சந்தத் தமிழில் இலக்கியம் தவறாமல் ஓசை குன்றாமல் கருத்துச் செறிவுடன் பாடல்களை இயற்றும் வல்லமை கொண்ட சிலருள் முதன்மையான புலமையாளராக எம்மிடையே விளங்கும் இவர் ஐம்பதுக்கும் அதிகமான சிறுவர் நாடகங்களைப் பல பாடசாலைகளில் நெறிப்படுத்தி மேடையேற்றியும் மாணவர்களைப் போட்டிகளில் வெற்றிபெறச் செய்தும் தனது சிறுவர் நாடக அரங்கப் பணிகளையும் விரிவுபடுத்தி வந்துள்ளார்.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரின் அருளாசியைப் பெற்றுக்கொண்ட இவர் யாழ். திருமறைக் கலாமன்றத்தால் ஆற்றுகை செய்யப்பட்ட இரத்தக்கடன், செந்துது, நீயொரு பாறை, அனைத்தும் அவரே போன்ற கூத்துக்களில் நடித்ததுடன் இம்மன்றத்தின் இசைநாடகப் படைப்புக்களிலும் ஏனைய கலைச்செயற்பாடுகளிலும் ஈடுபட்டும் 2007இல் வெளியிடப்பட்ட தென்மோடி நாட்டுக் கூத்து மெட்டுக்கள் என்னும் இறுவட்டிலும் பல பாடல்களைப் பாடியும் சிறப்பித்துள்ளார்.

வளையாபதி, காலையும் மாலையும், மண்ணே சாட்சி, வேதனுக்கு வேள்வி போன்ற கூத்துக்களை நூலுருவில் வெளியிட்டிருக்கும் இவர் எண்ணற்ற நாட்டிய நாடகங்களையும் கத்தோலிக்க பக்திப் பாடல்களையும் இயற்றியுள்ளார். காத்தவராயன் சிந்து நடைக்கூத்து மெட்டில் நீதி காத்தான் என்னும் பெயரில் மனு நீதி கண்ட சோழனின் வரலாறானது சிந்து நடைக் கூத்தாக இவரால் எழுதப்பட்டு ஆற்றுகைப் படுத்தப்பட்ட போது பலராலும் வியந்து பாராட்டப்பட்டவர்.

யாழ்.நகரில் கடந்த இருபத்து மூன்று ஆண்டுகளாக இயங்கி வருகின்ற அன்னை அச்சகத்தின் இயக்குநராக விளங்குகின்ற இவர் எந்த விதமான சன்மானத்தையும் எதிர்பாராமல் முழுமனதுடன் கலைப் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் மனைவி, பிள்ளைகளின் அன்பான நல்லாதரவைப் பெற்றிருக்கும் இவர் மிகுந்த உற்சாகத்துடன் இன்று வரை கலைச்செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்.

ஓர் மனித இனக் குழுமத்தின் உயிர் மூச்சாய் விளங்குவது அந்த இனத்தின் தாய் மொழியாகும். ஏனெனில் மனிதனின் அடிமனத்துச் சிந்தனை என்பது தாய்மொழியில் தான் தோன்றுகின்றது. அந்தத் தாய் மொழியில் காலம் காலமாக இருந்து வருகின்ற கலைப்படைப்புக்களே அந்த இனத்தின் பண்பாட்டினைத் தனித்துவம் கொண்டதாக உலகில் நிலை நிறுத்திக் கொள்கின்றது,

ஆனால் தமிழர்களாகிய நாம் தொன்மையான எமது தாய் மொழியின் பெருமைகளை உணராதவர்களாகவே தற்காலத்தில் வாழ்ந்து வருகின்றோம். கல்விமான்களாகவும் பேராளர்களாகவும் எம்மிடையே விளங்குகின்ற எவரும் தமிழில் பேசுவதும் இல்லை, எழுதுவதும் இல்லை. துர்ப்பாக்கியம் என்னவென்றால் தமிழில் பேசுவதை நாகரிகக் குறைவாகவும் அந்நிய மொழியாகிய ஆங்கிலத்தில் சில சொற்கள் பேசுவதை மிக உயர்ந்த நாகரிகமாகவும் கருதுவதுடன் தமது பிள்ளைகளையும் ஆங்கிலேயப் பண்பாட்டில் வளர்த்து வருகின்றனர்.

தாய்மொழியை ஏளனம் செய்தல் பெற்ற தாயை விலை கூறி விற்பதற்குச் சமமாகும். தற்காலத்தில் எமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாயின் கல்வியாளர்கள் எனத் தம்மைக் கூறிக் கொள்ளும் தமிழர்கள் உயிரினும் மேலான எமது தாய் மொழியை வணங்கி, மதிப்புக் கொடுத்துப் பாதுகாக்கத் தூயமனதுடன் முயற்சிக்கவேண்டும் என தனது கருத்துக்களை இவர் ஆணித்தரமாகக் கூறுகின்றார்.

# நீர்க்கடுப்புக்குத் தீர்வாகும் நெருஞ்சில்

## நலம் தரும் தெய்வீக மூலிகைகள்



**நெருஞ்சில்**

*வேறுபெயர் - திரிகண்டம், கோகண்டம், யாணைவணங்கி, சிறுநெருஞ்சில், செப்பு நெருஞ்சில்*
*தாவரவியற்பெயர்- Tribulus terrestris (றிபிலஸ் ரெரெஸ்ரிஸ்)*
*குடும்பம்- ZygophyLLaceae (ஸைகோபைலேசியே)*
*சிங்களப் பெயர்- நெரெஞ்சி*
*சமஸ்கிருதப் பெயர்- கோக்சுரா*
*ஆங்கிலப்பெயர்- Small CaLtrops*

இது உலர் வலயத்துக்குரிய, நிலத்தில் படர்ந்து காணப்படும் ஒரு முட்செடி அல்லது பூண்டு. இதன் முள்கள் மாட்டின் கொம்புகளைப் போல பிரிவுடையதாகக் காணப்படுவதால் கோகண்டம் என அழைக்கப்படுகிறது. சதைப்பிடிப்பான தண்டு. கூட்டிரைகள் சிறைப்பிரிப்பானவை. தனிப்பூக்கள் மஞ்சள் நிறம், நெருஞ்சியில் சிறுநெருஞ்சில், பெருநெருஞ்சில் என பேதங்களுண்டு. பெரு நெருசிலை யானை நெருங்சில் எனவும் அழைப்பர்.

**நீர்க்கடுப்புக்கு**

நெருஞ்சிவேர், காய் என்பவற்றுடன் ஒரு பிடி பச்சையரிசி சேர்த்து கஞ்சியாகக் காய்ச்சி, வடித்துச் சீனியுடன் சேர்த்துப் பருகிவர நீர்க்கடுப்பு நீங்கும்.

**சல எரிவுக்கு**

நெருஞ்சில்காய், கொத்தமல்லி சமன் எடுத்து 8 பங்கு நீர்விட்டு ஒரு பங்காக வற்றக்காய்ச்சிக் குடித்துவர சலஎரிவு, கல்லடைப்பு, நீரடைப்பு என்பன நீங்கும்.

**யானை நெருஞ்சில்**

*வேறுபெயர் - பெரு நெருஞ்சில், ஆனை நெருஞ்சில்*
*தாவரவியற்பெயர்- PedaLium Murex (பெடேலியம் மியூரெக்ஸ்)*
*குடும்பம்- PedaLiacea (பேடலியேசியே)*
*சிங்களப் பெயர்- மஹாநெரெஞ்சி, அந்நெரெஞ்சி*
*சமஸ்கிருதப் பெயர்- கஜ கோக்சுரா*

இதுவும் உலர் வலயத்துக்குரிய பூண்டு. நிலத்திலிருந்து நிமிர்ந்த தண்டு சதைப்பிடிப்பானது. வெளிறிய மஞ்சள் நிறம் தனியிலைகள், எதிரான இலை ஒழுங்கு, தனிப்பூக்கள், மஞ்சள் நிறம்.

**சிறுநீர் எரிவு, சலக்கட்டுக்கு**

யானை நெருஞ்சில் இலையை இளம் சூட்டு நிலையில் உள்ள நீரில் போட்டு நன்கு பிசைவது போலக் கலக்கும் போது அந்த நீர் தடிப்பாக பாணி போல் வரும் ([illegible]) 1/2 கோப்பையளவில் காலை, மாலை பருகி வர சிறுநீர் எரிவு, சலக்கட்டு நீர்ச்சூடு என்பன மாறும். இதை உடனுக்குடன் தயாரித்துப் பயன்படுத்துவதே சிறந்தது.

**வட்டத்துத்தி**

*வேறுபெயர் - துத்தி*
*தாவரவியற்பெயர்- AbutiLon indicum (அபிற்றிலோன் இண்டிக்கம்)*
*குடும்பம்- MaLvaceae (மல்வாசியே)*
*சிங்களப் பெயர்- அநோத*
*சமஸ்கிருதப் பெயர்- அதிபல*
*ஆங்கிலப்பெயர்- Indian MaLLow*

துத்தியில் சிறுதுத்தி, பெருந்துத்தி, காட்டுத்துத்தி, கொடித்துத்தி என்று பல பேதங்களுண்டு, வட்டத்துத்தியானது உலர், ஈரவலயங்களில் காணப்படும் ஒரு பூண்டு/செடியாகும். தண்டு பச்சை நிறம் தனி இலைகள், இதய வடிவானவை ஒன்றுவிட்ட இலை ஒழுங்கு, தனிப்பூக்கள் செம்மஞ்சள் நிறம். கக்கத்திலிருந்து உருவாகும்.

**மூலநோய்க்கு**

வட்டத்துத்தி இலையை நெய்விட்டு வதக்கி சோற்றுடன் சேர்த்துச் சாப்பிட்டுவர ஆரம்ப நிலையிலுள்ள மூலநோய், மூலச்சூடு என்பன குணமாகும்.

**ஆசனக் கடுப்புக்கு**

துத்தி இலையைக் குடிநீர் செய்து சீனி சேர்த்துப் பருகிவர ஆசனக்கடுப்பு, மலச்சிக்கல், மூலச்சூடு என்பன நீங்கும்.

**பல் வலிக்கு**

துத்திவேரைக் குடிநீர் செய்து வாய் கொப்புளித்துவர பல்வலி, பல்லீறுகளில் இரத்தம் வடிதல் நீங்கும்.

**கட்டிகளுக்கு**

அரிசி மாவுக்குத் துத்தியிலைச் சாறு விட்டுக் களியாகக் கிண்டி வீக்கம், கட்டிகளுக்குக் கட்டிவர வீக்கம் வற்றும். கட்டி பழுத்து உடையும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செதுக்குக முதலில் உங்களை

த.அஜந்தகுமார்

இலக்கியம் என்பது சமூகக் காரணிகளின் விளைவு மாத்திரமன்றி சமூக விளைவுக்கான காரணமாகவும் அமைந்துவிடுகின்றது என்பர். அதனால்தான் இலக்கியம் வரலாற்றின் ஆவணமாகவும் வரலாற்று எழுச்சியின் தூண்டலாகவும் பயன்பட்டுவருகின்றது. இலக்கியத்தின் 'பிரசாரம்' என்பதில் உள்ள சாத்தியம் என்பது இலக்கியம் ஓர் ஆயுதம் என்பதையும் காட்டுகின்றது.

இலக்கியம் தனியே ஓர் பொழுது போக்கு ஊடகம் அல்ல படைப்பாளியின் மன எழுச்சியையும் வாசகனின் மன எழுச்சியையும் சந்திக்கவைக்கும் மையம். இருவருக்கும் இடையிலான தொடர்பு என்பது சமூக முக்கியத்துவ நிகழ்ச்சியாகி விடுகின்றது.

வாசகனின் 'பூரணத்துவம்' பற்றிய கேள்வி, தேடல் பற்றிய ஆற்றுப்படுத்தல், படைப்பாளிகளின் ஏக்கம் என்பவற்றை விட படைப்பாளிகளின் இயங்குமுறை பற்றிய கேள்வி அவசியமாக இருக்கின்றது. யார் படைப்பாளியாகின்றான்?

சமூகத்தில் தனக்கோ அல்லது யார்க்குமோ அல்லது பொதுவாக நடக்கும் ஓர் நிகழ்வால் பாதிக்கப்பட்டு உந்தப்பட்டு மொழியின் சாத்தியத்தோடு தன் அனுபவத்தை வெளிப்படுத்தும் போது அவன் படைப்பாளியாகின்றான்.

**யார் நல்ல படைப்பாளி?**

அனுபவத்தை நல்ல மொழியில் எழுதி அந்த அனுபவத்தை எம்மில் தொற்ற வைப்பவன்.

**படைப்பாளி முக்கியம் இல்லையா?**

படைப்பு - படைப்பாளி என்பதில் படைப்பையே பார்க்கச் சொல்கிறார்கள் 'படைப்பு இருக்கிறது படைப்பாளி இறந்துவிட்டான்' என்று ரொலான் பார்த்தின் கருத்தைக் கூறுகிறார்கள். சாப்பாட்டைப் பாருங்கள் - சமைத்தவன் யாரென்று தேவையில்லை என்று உதாரண விளக்கமும் தருகின்றார்கள்.

**படைப்பையும் படைப்பாளியையும் உண்மையில் பிரிக்க முடியுமா?**

இன்று வழங்கப்படும் விருதுகளும் படைப்பாளி பற்றிய மிகைப்படுத்தல்களும், வகைகளும் படைப்பாளியை முதன்மைப்படுத்துவதைத்தானே காண்கின்றோம். படைப்பு மேன்மையால் படைப்பாளி கவனிக்கப்படுதல், படைப்பாளியின் 'தகுதி' யால் படைப்பு கவனிக்கப்படுதல், படைப்பின் பலவீனத்தால் படைப்பாளி நிராகரிக்கப்படுதல், படைப்பாளியின் 'தகுதி'யின்மையால் படைப்பு நிராகரிக்கப்படுதல் என்று பல சந்தர்ப்பங்களை நாம் கண்டுதானே வருகின்றோம்.

**படைப்பாளிக்கு இன்னொரு படைப்பாளி கருப்பொருளாக முடியுமா?**

சங்க இலக்கியங்களில் உவமைகளில் கூட சமகாலப் புலவர்களின் பெயர்களை புலவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். பாரதியார் தாயுமானவரை, ரவிவர்மாவை, உ.வே. சாமிநாதஐயரை புகழ்ந்து பாடியிருக்கிறார். பாரதிதாசன் பாரதியாரை புகழ்ந்து பாடியிருக்கிறார். 'இன்று தம்மை உயர்த்தி வைத்த படைப்பாளிகளைப் போற்றும் தன்மைகளை நேர்காணல்களில் காண்கிறோம். சில அஞ்சலிக் கவிதைகளில் காண்கின்றோம்.

தமக்குப் பிடிக்காத எழுத்தாளரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை கற்பனையும் கலந்து 'கிசு கிசு' தன்மையில் கிளர்ச்சி பயக்க எழுதும் படைப்புகளையும் காண்கின்றோம்.

ஒரு படைப்பாளி சக படைப்பாளியை அல்லது தனக்கு முந்திய கால படைப்பாளியை மதிப்பீட்டுக்கு உள்ளாக்குவது குற்றம் இல்லை. ஆனால் படைப்பை மதிப்பிடாமல் படைப்பாளியின் தனிப்பட்ட வாழ்க்கையை 'கற்பனையுடன் கலந்து மதிப்பிடுதல்' பொருத்தமானதா?



ஒரு சோம்பேறியின் பக்கம்

படைப்பாளியும் சமூக உறுப்பினன்தானே? அவனது நடத்தைகள் இன்னொரு படைப்பாளிக்கு படைப்பு உந்துதலை அளித்தால் அதை எழுதுவது தவிர்க்க முடியாததே. ஆயினும் அவனது நடத்தை என்பது சமூக விரோதமானதாக இருக்கிறதா? அல்லது அவனுக்கு விரோதமாக இருக்கிறதா? என்ற கேள்விகளே இங்கு பிரதானமானவை.

தனக்கு விரோதமான படைப்புகளின் மதிப்பீட்டில் இப்போது தனக்கு விரோதமாக இருக்கும் அந்த படைப்பாளியுடனான கடந்து வந்த நட்பின் தருணங்களைப் புறங்கையால் தள்ளிவிட்டு தன்னுடன் பகிர்ந்து கொண்ட நட்பின் ஆழத்தினால் சொன்ன அனுபவங்களையும் கதைகளையும் மிகைப்படுத்தி கேலிக்கு உட்படுத்துவது பொருத்தமானதா?

நட்பின் தருணங்களை கேள்விக்குள்ளாகி ஒரு படைப்பாளியையும் கேலிக்குள்ளாக்கி அவருக்கு எதிரானவர்களுக்கு 'பரவச அனுபவத்தை' கொடுப்பதுதான் ஒரு படைப்பாளியின் கடமையா? இவ்வாறு நட்பாக இருக்கத் தகுதியில்லாதவனாகவும் மனிதனாக இருக்கக் கூட அருகதையில்லாதவனாகவும் மாறும் ஒருவனது படைப்பினால் என்ன விளைந்து விடப் போகிறது? 'தீவிர இலக்கியம்' என்று இயங்குபவர்கள் தான் 'மூன்றாம்தர இலக்கியத்திலும்' கேவலமாக இயங்குகின்றார்கள்.

எல்லோராலும் படிக்கப்படுவதால் ஒருபடைப்பு உயர்ந்ததாகி விட முடியாது. பிரபல்யத்துக்காக இன்னொருவரின் இதயத்தைக் கிழித்து ரணப்படுத்தி 'எழுத்துத் தூள்' கொட்டுதல் கொலையும் கற்பழிப்பும் செய்துவிட்டு பத்திரிகையில் பெயர்வருவதற்கு ஒப்பானதே.

படைப்பாளிக்கு இருக்கவேண்டிய சமூக அங்கீகாரம் கிடைக்கப் பெறாமல் அவன் ஒதுக்கப்படுவதற்கு வேறுயாரும் காரணம் இல்லை. படைப்பாளியே காரணம் ஆகின்றான். மூத்த படைப்பாளிகளைச் சந்திக்கின்ற போது சிலர் இன்னொருவர் பற்றிய அவதூறுகளை சொல்லியே தம்மைப் புனிதப் படுத்துகிறார்கள்.

படைப்பாளியைப் புனிதப் படுத்துவதும் அவதூறுக்கு உள்ளாக்குவதும் காலமே.

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
புமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
**உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.**

**என்று பாரதி மதிப்பிட்டான். அது காலத்தினால் நிலைத்துவிட்டது.**

**இதே போல், என்கேள்வியெல்லாம் அவதூறுகளை கிசு கிசுப் பாணியில் எழுதும்படைப்புக்கள் (?) நிலைக்குமா? அந்தப் படைப்பாளி நிலைப்பானா?**

படைப்பைச் செதுக்கமுன் படைப்பாளிகளே உங்களைச் செதுக்குங்கள். செதுக்கும் போது உடைந்து விழும் கற்களால் ஏன் வேறு எழுத்தாளர்களின் இதயத்தைத் தேவையற்று கிழிக்கிறீர்கள்?

# வெற்றி பெறலாம் வாங்க!

ராகவன் அல்பி

உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

24

**ஆரோக்கியமும் உடல் உறுதியும்**

நீங்கள் ஆரோக்கியத்துடனும் நல்ல உடல் தகுதியுடனும் இருக்கும் போது அதிகமாகச் சாதிப்பீர்கள் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை. அதற்காக நீங்கள் தடகள வீரரின் உடல் பலத்துடன் அல்லது முழு உடல் ஆரோக்கியத்துடன் இருக்கும்போது தான் சாதிக்க முடியும் என்று சொல்லவில்லை. வெற்றி என்பது ஆரோக்கியத்தையும் உடல் தகுதியையும் சார்ந்தது இல்லை. ஆனால் வெற்றிபெற இவை நிச்சயம் உதவியாக இருக்கும். இலக்கை அடைய உங்கள் உடம்பும், உடம்பின் செயற்பாடும் நன்றாக இருக்க வேண்டும். உடல் நிலையினால் நமக்கு கவனச்சிதறல் ஏற்படக்கூடாது.

ஆரோக்கியத்தையும் உடல்திறனையும் மேம்படுத்துவதை வாழ்க்கையில் முதன்மையான இலக்காகத் தேர்ந்தெடுக்கலாம். அது போன்ற சமயத்தில் சுயமுன்னேற்றத்தைப் போலவே ஆரோக்கியம் மற்றும் உடல் திறன் மேம்படுத்துவதையும் சிறு சிறு அடிகளாக எடுத்துவைத்துப் படிப்படியாக முன்னேற வேண்டும். தடாலடியான மாற்றம் செய்வது சமயத்தில் தீமையாகக்கூட முடியும்.

**நீண்ட ஆயுள்**- மரணம் என்பது பற்றி இளமையில் நாம் அதிகம் யோசிக்க மாட்டோம். இருப்பினும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வருடமும் நாம் வாழும் வாழ்க்கை ஆயுளில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஆரோக்கியத்தைப் பற்றி சிந்திப்பதற்கு இது வெகு தாமதமும் அல்ல, வெகு சீக்கிரமும் அல்ல. அதனால் உங்கள் வாழ்க்கைத் திட்டத்தில் ஆரோக்கியம் என்பதை முதன்மையானதாக வையுங்கள்.

**நன்றாக செயல்படுங்கள்**- நல்ல உடல்தகுதியுடன் இருக்கும் வகையில் தான் மனித உடல் அமைந்துள்ளது நம் அனைத்து உடல் உறுப்புகளும் ஆரோக்கியத்துடன் இருக்கும் போதுதான் வாழ்க்கையானது குதூகலம் நிறைந்ததாக இருக்கும். உங்கள் உடம்பில் எந்த விடயத்தை மாற்ற விரும்புகிறீர்கள் என்பதைத் தீர்மானியுங்கள்.

**வேகமாக ஓடுங்கள்**- சரி.. நீங்கள் மரதனில் ஓடுவதற்காகப் பயிற்சி செய்யவில்லை தான் , ஆனால் சுறுசுறுப்பாக இயங்குகிற அளவுக்கு உடல் வேண்டுமல்லவா, கால் வலுவான முட்டிகள் வேண்டுமல்லவா!



**நன்றாகத் தூங்குங்கள்** - தூங்கி எழுந்தவுடன் உடற் பயிற்சி செய்யுங்கள், [illegible] படிக்கட்டு களைப் பயன்படுத்தி ஏறுங்கள். இதனால் உடல் களைப் படைவதால் இரவில் நன்றாகத் தூங்குவீர்கள்.

**சிறப்பான தோற்றம்**- உடல் வடிவத்திலிருந்து உடல் நிறம் கேசம் வரை முழு ஆரோக்கியமாக வைத்திருங்கள். ஆரோக்கியமான மக்கள் வெற்றியாளர்களைப் போலத் தெரிவார்கள். கண்ணாடியில் நீங்கள் எப்படித் தெரிகிறீர்கள்.

**விவேகத்துடன் வேலை செய்யுங்கள்**- விவேகத்துடன் வேலை செய்யும் போது விடயங்கள் அனைத்தும் உங்கள் கட்டுப்பாட்டில் இருப்பதோடு, நீங்கள் விழிப்புணர்வுடன் இருப்பீர்கள். விவேகமாகச் செயல்படுபவர்கள் நிறைய வேலைகளைக் குறைந்த நேரத்தில் முடித்துவிடுவதுடன் விரைவாகவும் வீடு திரும்பி விடுவார்கள்.

**மகிழ்ச்சியுடன் இருப்பதாக உணருங்கள்**- துடிப்புடனும் அதிகசக்தியுடனும் இருக்கும் போது உங்களுக்கு மனச் சோர்வு ஏற்படாது. மேலும் அச்சமயத்தில் உலகமும் நாமும் அதிக மகிழ்ச்சியுடன் இருப்பது போலத் தோன்றும்.

**மருத்துவர் தேவையில்லை**- மருத்துவரைப் பார்க்கப் போவது மகிழ்ச்சிதரும் விடயம் அல்ல. நீங்கள் ஆரோக்கியத்துடன்இருக்கும் போது மருத்துவரின்உதவி தேவைப்படாது.

**நல்ல தாம்பத்தியம்**- இந்தப் புத்தகம் தாம்பத்தியத்திற்கான கையேடு இல்லை. ஆனால் நீங்கள் நல்ல உடல் தகுதியுடனும் ஆரோக்கியத்துடனும் இருந்தால் இதைப் பற்றிப் படிப்பது பயனுள்ளது தான் என்று நினைப்பீர்கள்.

**நோய்க்கு ஆளாவதைத் தவிருங்கள்**- ஆரோக்கியமான நபர்களுக்கு, நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் இருக்கும் அதனால் நோய்க்கிருமிகள் அண்டாது. அவ்வாறே நோய்க் கிருமிகள் தாக்கினாலும் மற்ற எதிர்ப்புச் சக்தி திறன்கள் அதைத் துரத்தியடிக்கும்.

**நோய் ஏற்படுவதைத் தவிர்த்தல்**

உலகின் அறுநூறு கோடி பேர் இருக்கும் போது நோயானது எப்படி காட்டுத்தீ போன்று பரவும்என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். ஆள்கள் நிறைந்து கிடக்கும் பள்ளிகள், தொழிற்சாலைகள், போன்றவற்றில் தொற்று நோய் பரவுவதைத் தடுப்பதென்பது சவாலான விடயம்.

நோயால் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க நம் சுற்றுப்புறத்தை நாம் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். நாம் இருக்குமிடம் அதிக காற்றோட்டமுள்ளதாக இருக்க வேண்டும். ஜன்னலைத் திறந்து வைப்பதால் தூய காற்று உள்ளே வரும்,அத்துடன் அறையில் உள்ளிருக்கும் வெப்பமும் குறையும்.

நீங்கள் அலுவலக வேலையில் புலியாக இருக்கலாம் ஆனால் கடுமையான ஜலதோஷத்துடன் வேலைக்குப் போகிறீர்கள்.ஆனாலும் ஜலதோஷத்தால் வேலை செய்வதில் இடையூறு ஏற்படுகிறது. அது போன்று செய்வதில் நன்மையை விடக் கெடுதலே அதிகம். இதற்குப் பதில் நோய் தீரும் வரை வீட்டில் இருந்து ஓய்வெடுப்பது நல்லது. இல்லையேல் உங்கள் நோய்க்கிருமிகள் சக பணியாளர்களைத் தாக்கி விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணுக்கு அவசியம் பொறுமை

'பொறுமை' என்பது அடிமைத்தனமல்ல. அது பெண்களின் அணிகலன் என்பதையுணர்ந்து பொறுமையைக் கடைப்பிடித்து வாழ்வதன் மூலம் தீமைகளை வெற்றிகொள்ள முடியும். மற்றவர்களுடைய கருத்துக்களையும் பொறுமையுடன் கேட்டறிவதன் மூலமே எதிர்வரும் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

'பொறுமை' எனும் நற்பண்புக்கு இலக்கணமாகத் திகழ்பவர்களும் திகழ வேண்டியவர்களும் பெண்களே. ''பொறுத்தார் பூமி ஆழ்வார்'' என்னும் முதுமொழிக்கிணங்க எந்த விடயத்திலும் எடுத்தெறிந்து செயற்படாது. பெண்கள் பொறுமையைக் கடைப்பிடித்து வாழ்வதன் மூலம் தீமைகளை வெற்றிகொள்ள முடியும்.

அதிகரித்து வரும் விஞ்ஞான மாற்றங்களாலும் வளர்ச்சியினாலும் அவசர வாழ்க்கை வாழ வேண்டிய நிலையில் பெண்களும் உள்ளனர். பெண்களுக்கெதிரான வன்முறைகளும் அடக்குமுறைகளும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களும் அதிகரித்து வரும் இவ்வுலகில் பெண்கள் எச்சரிக்கையுடனும் பொறுமையுடனும் சிந்தித்து செயற்பட வேண்டியது முக்கியமானதாகும்.

கோபப்படுவதைக் குறைத்து ஒவ்வொரு விடயங்களிலும் சிந்தித்து ஏற்படும் நன்மை, தீமைகளை ஆராய்ந்து முடிவெடுப்பதன் மூலம் மற்றவர்களிடத்தில் நன்மதிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். நாம் அன்றாடம் சந்திக்கும் நபர்களிடத்தில் பழகும்போது சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

முன்னைய காலங்களில் வீட்டினுள்ளேயே அடங்கிக் கிடந்துவீட்டு வேலைகளையும் குடும்பத்தையும் மட்டும் பராமரித்து வந்த பெண்கள் தற்போது சகல கல்வி அறிவுகளையும் பெற்று வெளியே சென்று பல சவால்களுக்கு முகம்கொடுத்து வேலை செய்து குடும்பத்தை வழிநடத்த வேண்டிய பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள்.

இந்தப் பொறுப்புக்களையெல்லாம் நல்லமுறையில் நிறைவேற்றுவதற்கு பொறுமை அவசியம். மற்றவர்களுடைய கருத்துக்களையும் பொறுமையுடன் கேட்டு பேசுவதன் மூலமே எதிர்வரும் சவால்களை வெற்றி கொள்ள முடியும். எனவே 'பொறுமை' என்பது அடிமைத்தனமல்ல. அது பெண்களின் அணிகலன் என்பதையுணர்ந்து நல்ல சிந்தனைகளுக்கு இடம்கொடுத்து வாழப்பழக வேண்டும்.

## ஊர்ச்சிநேகிதி

சின்ன வயதில் பார்த்த
இரு மை விழிகள்
நான் பட்டம் ஏற்றும் போது
பட்டாம் பூச்சி
பிடித்து திரிவாய்
வெள்ளையும் கறுப்பும்
கலந்த ஆட்டுக்குட்டியின்
பின்னால் ஓடி விளையாடுவாய்
அந்திப்பொழுது தொலைய
வெண்ணிலா முகம் காட்ட
உன் தந்தை மடியிலிருந்து
கடற்கரையோரம் வருவாய்
ஞாபகம் இருக்கிறதா
உனை வேனில் காலத்தில்
பார்க்கின்றேன் நிலத்தைப்
பார்த்து புன்னகைக்கும்
பூவைப்போல
கல்லூரிக்கு போகிறாய்
கலைமாணி பட்டம் தேடி...



## பெண்ணுக்கு அழகு....

★பெண்ணுக்கு அழகைக் கொடுப்பது புன்சிரிப்பு. எப்போதும் முகத்தை சந்தோசமாக வைத்திருங்கள்.

★மற்றவர்களிடத்தில் அமைதியாய் பேசுங்கள்.

★ஆத்திரப்படாமல் பொறுமையாய் பேசுங்கள்.

★எல்லா விடயத்திலும் கோபப்படாமல் மற்றவரிடத்தில் அன்பை வெளிக்காட்டுங்கள்.

★விட்டுக் கொடுத்து வாழுங்கள்.

★'நான் என்ற அகங்காரத்திலிருந்து விடுபட்டு சகோதரத்துவத்துடன் பழகுங்கள்.

★தனிப்பட்ட விடயங்களை எல்லோரிடமும் பேசாதீர்கள்.

★உங்களுக்குத் தெரிந்த நல்ல விடயங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.



பே.மேரிசுமித்திரா
'யூலனூர்'

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் ''திலகம்'', உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி

# கணவருடன் சண்டையா சமாதானமாக சில வழிகள்



கணவன், மனைவி என்று இருந்தால் சண்டையில்லாமல் இருக்காது. சண்டை போட்டால் சமாதானம் ஆகும் வழியைத் தான் பார்க்க வேண்டுமே தவிர பிரச்சினையைப் பெரிதுபடுத்த முயற்சிக்கக் கூடாது.

தவறு உங்கள் மீது தான் இருக்கிறது என்று தெரிந்தால் நீங்களாகவே முன்வந்து மன்னிப்புக் கேட்கலாம். தெரியாமல் பேசிட்டேன், மனசில வெச்சிருக்காதீங்க என்று கூறலாம். அவர் கண்டிப்பாக மன்னித்துவிடுவார். மாறாக ஈகோ பார்த்தால் பிரச்சனை தான் பெரிதாகும். கணவன் மனைவிக்குள் ஒருபோதும் ஈகோ பார்க்கக் கூடாது.

சண்டை போட்டால் ஆளுக்கொரு அறையில் இருக்காதீர்கள். கணவர் அருகில் அமர்ந்து அவரது கையை எடுத்து உங்கள் கையில் வைத்துக் கொண்டு ஏதோ திடீர் என்று கோபம் வந்துவிட்டது. அதனால் கத்திட்டேன். அதையெல்லாம் கண்டுக்காதீங்க. என் கோபம் 5 நிமிடம் தான் என்று சொல்லிப் பாருங்கள். அவருக்குத் தானாகவே சிரிப்பு வந்து விடும்.

நீங்க மட்டும் என்னவாம், கோபம் வந்துச்சுனா தாட், பூட்னு குதிக்கிறீங்களே என்று அவர் சமாதானம் ஆன பிறகு கூறுங்கள். அடுத்த முறை அவர் கோபத்தை அடக்க முயற்சிப்பார். அதைவிட்டுவிட்டு அவர் கோபத்தில் இருக்கையில் ஏட்டிக்குப் போட்டியாக பேசினீர்கள் என்றால் உறவு தான் கெடும். பொறுமையாக இருப்பதால் நீங்கள் ஒன்றையும் இழந்துவிடப் போவதில்லை.

நான் அன்றைக்கு கோபப்பட்டு என் மனைவியைப் பேசிவிட்டேன். ஆனால் அவ ஒரு வார்த்தை கூட பதில் பேசாமல் பொறுமையா இருந்தா. இதே வேற ஒருத்தியா இருந்தா வீட்டையே இரண்டாக்கியிருப்பா என்று உங்கள் கணவர் பெருமையாகக் கூறுவார்.

என் கூட சண்டை போட்டீங்கள், இன்றைக்கு உங்களுக்கு சாப்பாடு கிடையாது என்று சமைக்காமல் இருக்காதீர்கள். அன்றைக்கு கணவருக்கு பிடித்த உணவை சமைத்து முடிந்தால் உட்கார வைத்து ஊட்டி விடுங்கள். சமைக்கும் எண்ணம் இல்லையா அவருடன் சேர்ந்து வெளியில் சென்று சாப்பிட்டு வாருங்கள். வெளியே எங்கும் செல்ல விருப்பமில்லையா வீட்டிலாவது சற்று நேரம் உலாவச் செல்லுங்கள். மனம் லேசாகும். கோபத்தைக் குறைத்துச் சாந்தமாக, கணவருடன் கைகோர்த்து வாக்கிங் போகலாம்.

சண்டை போட்டால் பெண்கள் ஒரு ஓரமாகப் போய் உட்கார்ந்துகொள்வார்கள். கணவர் தன்னை சமாதானப்படுத்த வருகிறாரா என்று ஓரக்கண்ணால் பார்ப்பார்கள். அதேநேரம் நீங்கள் உங்கள் மனைவி அருகில் சென்று அவர் தோளில் கையைப் போட்டு அன்பாகப் பேசினாலே போதும் அவர் கோபம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். கணவன், மனைவிக்குள் அடிக்கடி சண்டை வருவது சகஜம் தான். ஆனால் அதை அப்பொழுதே மறந்துவிடுவது உங்கள் உறவுக்கு நல்லது. சின்னச் சின்ன விட்டுக் கொடுத்தல்கள், கெஞ்சல்கள், பாச மழை எனப் பல்வாறு உத்திகளைப் பயன்படுத்தி ஊடல்களை விரட்டி விட்டு கூடல்களுக்கு வித்திட முடியும்.

காதலர்கள் தான் மணிக்கணக்கில் கடலை போட வேண்டும் என்று விதி ஒன்றும் இல்லை. கணவனும், மனைவியும் கூட மணிக்கணக்கில் காதல் மொழி பேசலாம். பேசப் பேசத்தான் உறவுகள் பலமாகும், வலுவாகும். அப்புறம் என்ன, வீட்டிலே சண்டையா, பேசிப் பிரச்சினையை சரி செய்யப் பாருங்க...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

18.11.2012 முதல் 24.11.2012 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- ஆரம்பிக்கும் முயற்சி நிறைவேற, தேவையான நடைமுறையை மனஉறுதியுடன் பின்பற்றுவீர்கள். வெற்றி கிடைத்து மன மகிழ்வைத் தரும். இளைய சகோதரர், சிறு விவகாரம் எதிர்கொண்டு மனக்குழப்பம் அடைவர். உங்கள் உதவி, ஆலோசனை அவர்களுக்கு உத்வேகம் தரும். புத்திரர் ஞாபகத்திறன் குறைந்து படிப்பில் பின்தங்க நேரிடும். உரிய பயிற்சியும், சந்தோஷமான சூழ்நிலையும் நன்மை பெற உதவும். உங்கள் தொழிலதிபர்கள் அதிக கண்காணிப்பால் உற்பத்தி, தரம் இலக்கை அதிகரிப்பர். பணவரவு சீராகும். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அதிக பணிபுரிவர். மாணவர்கள், இலட்சியமனதுடன் படித்து நல்ல தேர்ச்சி பெறுவர்.

**இடபம்**- கடந்த தினங்களில் தாமதமான பணிகளை நினைவுபடுத்தி நிறைவேற்றுவீர்கள். பணவரவு எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். உடல்நலம் ஆரோக்கிய பலத்துடன் இருக்கும். எதிரியால் தொந்தரவு அணுகாத நல்ல வாழ்வியல் சூழ்நிலையைப் பெறுவீர்கள். இல்லறத்துணையின் அன்பு, பாசம் உங்கள் மனதை நெகிழவைக்கும். உறவினர்களின் வருகையால், சில நன்மை தரும் பலன் பெறுவீர்கள். பணியாளர்கள் அதிக வேலைவாய்ப்பு கிடைத்து, சம்பள உயர்வு பெறுவர். மாணவர்கள், உயர்ந்த தேர்ச்சி பெறுவர்.

**மிதுனம்**- கருத்து பேதங்களால் விலகிச்சென்ற உறவினர், தன் குறை உணர்ந்து, உங்களிடம் அன்பு பாராட்டுவர். பேச்சில் மென்மையையும் செயல்களில் பொறுப்புணர்வையும் பின்பற்றுவீர்கள். தேவையான நன்மை எளிதாக வந்து சேரும். புத்திரரின் சிறியளவிலான கவனக் குறைவான செயல்களை பெரிதுபடுத்திக் கண்டிக்கவேண்டாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனையை அதிகரிக்க கவனமுடன் பணிபுரிவீர்கள். முயற்சிக்கு உரிய பலன் சிறப்பாகக் கிடைக்கும். பெண்கள், புத்திரர், படிப்பு, நற்குணங்களில் உயரத் தேவையான கவனம் கொள்வர். மாணவர்கள் சகமாணவர்களுடன் அதிருப்தி மனப்பாங்கு தவிர்க்கவும்.

**கடகம்**- பிறர் கருத்தில் உள்ள நியாயங்களை மதித்து பேசுகிற, மனப்பான்மை கொள்வீர்கள். இதனால் சமூகத்தில் நல்ல மதிப்பு, மரியாதை ஆகியவற்றைப் பெறுவீர்கள். குடும்பத் தேவைகளை நிறைவேற்ற தாராள பணவசதி கிடைக்கும். எதிரியின் பகை உணர்வால் வரும் செயல்களை எளிதில் முறியடிப்பீர்கள். நிலுவைப் பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்தி நிம்மதி பெறுவீர்கள். நண்பர்களிடம் நெகிழ்வான நட்புறவு தொடரும். தொழில் நுட்பப் பணியாளர் கூடுதல் பயிற்சி பெற நல்வாய்ப்பு வரும். மாணவர்கள், வெளிவட்டாரப் பழக்கம் குறைத்து, படிப்பில் ஆர்வம் கொள்வர்.

**சிங்கம்**- எல்லோரிடமும் இனிமையாகப்பேசி நற்பெயரைப் பாதுகாத்துக் கொள்வீர்கள். அயலில் உள்ளவர்கள் உங்கள்மீது இருந்த கருத்து பேதம் நீங்கும். அன்றாடப் பணிகளில் முழுக்கவனம் செலுத்தித் தேவையான நற்பலன் பெறுவீர்கள். பணவரவு அதிகரித்து குடும்பத்தின் முக்கிய தேவைகளுக்குப் பயன்படும். வாழ்வில் எதிர்மறை பலன்குறைந்து, அதிக நன்மை பெறுவீர்கள். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து உற்பத்தி, விற்பனை அதிகரித்து உபரி பணவரவு கிடைக்கும். மாணவர்கள் தமது குறைகளைச் நிவர்த்திசெய்து படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

**கன்னி**- இடம், சூழ்நிலை உணர்ந்து பேசுவதால் சிரமம் அணுகாத சூழ்நிலை இருக்கும். குடும்பத்தின் சுபச்செலவுகளுக்காக கொஞ்சம் பணக்கடன் பெறுவீர்கள். இல்லறத் துணை, உங்களின் கருத்துக்களுக்கு உரிய முக்கியத்துவம் தருவர். தொழில் வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்க சில நடைமுறை மாற்றங்களைப் பின்பற்றுவீர்கள். பணியாளர்கள், ஆர்வமுடன் உழைத்து கிடைக்கிற பணவரவில், குடும்பத்தேவைகளை மனமுவந்து வாங்கித்தருவர். மாணவர்கள் கல்வியில் தகுந்த ஆர்வமும், விளையாட்டு பயிற்சிகளில் கூடுதல் கவனமும் கொள்வது நல்லது.

**துலாம்**- உங்களின் அன்றாடப் பணிகளில் தவிர்க்க இயலாத வகையில் சில குளறுபடி உருவாகலாம். புத்திரர் செயல்களில் உருவாகிற சில மாற்றங்களை ஒழுங்குபடுத்துவதால் நன்மை உருவாகும். இல்லறத்துணை தமது சேமிப்பு பணத்தை குடும்ப செலவுக்கு தாராள மனதுடன் பயன்படுத்துவர். உத்தியோகத்தர் நிர்வாகத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற அதிக கவனம் கொள்வது நல்லது. குடும்பப் பெண்கள், கணவரின் கருத்துக்களை மதித்து நடந்து மகிழ்ச்சிகரமான வாழ்வு நடத்துவர். மாணவர்கள் படிப்பில் அக்கறையும், விளையாட்டு பயிற்சியில் கூடுதல் கவனமும் கொள்வது நல்லது. பெற்றோரின் அன்பு, பாசம் எப்போதும்போல கிடைக்கும்.

**விருச்சிகம்**- உங்கள் நேர்மை, சமூக அக்கறை நிறைந்த செயல்களால் நன்மதிப்புப் பெறுவீர்கள். உறவினர், நண்பர்களின் குடும்ப விவகாரப் பேச்சுக்களில், நீங்கள் நல்ல கருத்துச் சொன்னாலும் சரிவராது. சொந்தப் பணியில் மட்டும் ஆர்வம் கொள்வது நன்மை பெற உதவும். புத்திரர் படிப்பிலும் திறமை வளர்த்து கூடுதல் தர தேர்ச்சி பெறுவர். இல்லறத்துணை உங்களிடம் கருத்துக்களை சகஜமாகப் பகிர்ந்து கொள்வர். ஒருவருக்கொருவர் புரிதல் திறன் வளர்ந்து குடும்ப ஒற்றுமை பலம்பெறும். மாணவர்கள் தமக்குரிய கடமைகளை உணர்ந்து கல்வியில் முன்னேற்றம் காண்பர்.

**தனுசு** - எந்தச்செயலையும் சவாலாக ஏற்றுக்கொண்டு செயற்படுகிற மனநிலை பெறுவீர்கள். விவேகம் நிறைந்த பேச்சுக்களைப் பேசி, நண்பர்களிடத்தில் தனிமுத்திரை பதிப்பீர்கள். எதிரியின் தீமையான செயலால் ஏற்படும் துன்பத்தை புதிய யுக்தியால் தடுத்திடுவீர்கள். இல்லறத் துணை, குடும்பநலம் சிறக்க தேவையான பணிகளை உங்களின் கருத்துக்களை அறிந்து செயற்படுவர். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான முன்னேற்றமும் தாராள பணவரவும் பெறுவீர்கள். பணியாளர்கள் கூடுதல் வேலைவாய்ப்புக் கிடைத்து அதிக சம்பளம், சலுகைப்பயன் பெறுவர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர்.

**மகரம்**- ஆரம்பிக்கும் நற்செயல்கள் அத்தனையும் முழு அளவில் வெற்றியைத் தரும். பெருந்தன்மையுடன் நடந்து நீங்களும் நட்பைத் தொடருவீர்கள். உங்களின் வாழ்வியல் முன்னேற்றம் கண்டு உறவினர்களும் தம்மால் இயன்ற உதவி, ஆதரவைத்தருவர். இல்லறத் துணை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை அதிகம் பின்பற்றி, குடும்ப வாழ்வுக்கு பெருமை சேர்த்திடுவர். உத்தியோகஸ்தர்களுக்கு நிர்வாகத்திடம் எதிர்பார்த்த சலுகைப்பயன் கிடைக்கும். மாணவர்கள், ஆசிரியரின் கண்டிப்பைத் தவிர்க்கும் வகையில் பொறுப்புணர்வுடன் படித்து சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**கும்பம்** - உங்களின் ஆர்வம் நிறைந்த உழைப்பால் நடைமுறைச் செலவுக்குத் தேவையான பணவரவை தாராளமாகப் பெறுவீர்கள். இடம், சூழ்நிலை உணர்ந்து பிறரிடம் பேசுவதால் மட்டுமே அதிருப்தி வராமல் தவிர்க்கலாம். பணக்கடன் செலுத்துவதில் கால தாமதம் வராமல் நடந்து கொள்வதால், தேவையற்ற சிரமம் எதிர்கொள்வதைத் தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்க, கூடுதல் உழைப்பு புதிய யுக்தியைப் பயன்படுத்துவீர்கள். மாணவர்கள், சூழ்நிலைக்கேற்றவாறு படித்து முன்னேற்றம் காண்பர்.

**மீனம்**- மனதில் ஆன்மிக எண்ணம் வளர்ந்து, ஏற்கனவே இருந்த குழப்ப சிந்தனைகளை விலக வைக்கும். அறிமுகம் இல்லாத எவரிடமும் பொது விடயம் பற்றி பேச வேண்டாம். கடந்த தினங்களில் நண்பருக்கு உதவக் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். இல்லறத்துணை, உங்கள் வாழ்வியல் நடைமுறையில் எதிர்வரும் சிரமத்தைத் தவிர்க்கத் தேவையான ஆலோசனை, உதவி வழங்குவர். தொழில், வியாபாரத்தில் உருவாகும் குளறுபடியைச் சரிசெய்ய தேவையான பணிகளைச் செய்வது அவசியமாகும். உத்தியோகத்தர்கள், பணியாளர்களை ஊக்கப்படுத்தி திட்டமிட்ட இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர்.

# குருதிக் கதிர்கள்



எம்.நேதா
நெடுந்தீவு

என் கிராமத்தின்
வயல்களில் இம்முறை
அமோக விளைச்சல்
ஏராளமாக
கதிர்களின் வடிவில்
உறவுகளின்
ரத்தங்கள்

என் வயல் நிலங்களில்தான்
புதைக்கப்பட்டிருப்பார்களோ?
இரவோடு இரவாக
எழுதப்படுகிறது
காற்றுக்கும், கதிர்களுக்கும்
இடையிலான
ரத்த சாட்சியங்கள்

யுத்தமொன்று விதைத்ததை
நாங்கள் ரத்தமாக
அறுவடை செய்யப் போகிறோம்

பயிர்களே உங்களிடையே
களைகளை காணவில்லையே
எம்மக்கள் செத்து விழுந்த
வேதனையின் உஷ்ணத்தில்
கருகிவிட்டீர்களா?

என் தேசத்தில்
பூக்கள் நறுமணத்தை
தொலைத்து
விதவைகளாகி விட்டன


நாங்கள் இப்போது
கன்னி வெடிகளாகவே
புதைக்கப்பட்டு
அடையாளப்படுத்தப்பட்டு
இருக்கிறோம்

எம் அமைதியை
கிழித்த
அரசியற் காட்டேறிகளே
நின்று பாருங்கள்
உங்கள் நிர்வாணமும்
என் உறவுகளின்
ரத்த வெடிப்பில் விசும்புகிறது

அந்த அஸ்தமனத்தில்
என் வயல் நிலங்களின்
வெளிகளை வெறித்துப் பார்த்தேன்
அன்று நான்
பிணங்களை கடந்து போன
நிலங்களாய் இருந்தது வானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 241




அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1. மிதவாதம் தாண்டி, மிக ஆக்ரோஷமாகச் செயற்படுபவன்
5. திரவப் பொருள் சூடாகும் போது இந்த நிலையை அடைகிறது
7. பாடலை இசை
8. வெளியே தெரியாமல் ஒன்றை எடுத்துச் செல்லுதல்
9. இல்லம்
11. ஒன்றைப் பிடிக்கப் பின்னுவது
12. நாங்கள்
13. முன் அல்ல
14. கழித்தல் குறி
15. பிழை அல்ல
17. நவமணியில் ஒன்று
18. நினைவிலிருந்து அகற்று
19. அழித்து இல்லாமல் செய்
20. சாதகமானது அல்ல
22. குத்து விழுந்தால் இப்படித்தான் இருக்கும்
23. கூடியது.

### மேலிருந்து கீழ்

1. ஒரு பண்டிகை நாள்
2. தங்குமிடம்
3. மருந்து
4. உறுதி
5. சூரியன்
6. குளிகை
10. பிள்ளையார்
13. வேறுபடுத்து
14. தேசப்பிரிவு (தமிழகத்தில் பயன்படுத்தப்படுகிறது)
15. உழை
16. தர்மம்
17. வீதிக்கு குறுக்கே நீர் பாய்வது இதன் வழியாக
18. ஒரு நட்சத்திரம்
21. இணங்க

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 239 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) நடுநிசி (4) பசுமை (6) தாரகம் (7) பாசனம் (9) பகு (11) சைவம் (12) பிரம்பு (14) குணம் (15) சம்பளம் (17) துர் (18) தம் (19) கருத (20) குழம்புதல்

### மேலிருந்து கீழ்

(1) நப்பாசை (2) நிதானம் (3) சிரம் (4) பம்பரம் (5) மைல் (8) சவரம் (10) கும் (12) பிணம் (13) புலர்தல் (14) குளம்பு (15) சருகு (16) பதம் (17) துரு (19) கல்

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 241**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (28.11.2012 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.241 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 02.12.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 239 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**செல்வி சரவணபவன் லஜிதா,**
இல.13, பாரதி வீதி, கூமாங்குளம், வவுனியா.

**2 ஆம் பரிசு**
**ஜெ.சசிகலா,**
தச்சன்தோப்பு, கைதடி

**3 ஆம் பரிசு**
**எம்.எப்.எம். இர்ஷாத்,**
இல.55, மட்டக்களப்பு வீதி, கிண்ணியா -01.

**4 ஆம் பரிசு**
**ந.லக்ஷகி,**
சிவகுரு வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**5 ஆம் பரிசு**
**சி.ஸ்ருதி,**
இல.47/15 கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, நல்லூர்.


**பாராட்டுப் பெறுவோர்**

**சாம்பவி ராஜகுலசிங்கம்,**
மந்துவில் வடக்கு, கொடிகாமம்.

**றோ.மே.அ.சந்திரபாஸ்,**
அ.த.க.பாடசாலை, முருகனூர், வவுனியா.

**கு.துளசிகா,**
மே/பா - இ.குமரேசன்,
இல.06, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*



# நம்பிக்கை

குட்டிக்கதை

ச.புனிதவதி

ஒரு விதவைப் பெண் அவளுக்கு 8 வயதில் ஒரு மகன் இருந்தான். அவன் பள்ளிக்கூடம் செல்வதற்கு சிறு காட்டைக் கடந்துதான் செல்ல வேண்டும். அவனுக்கு போவதற்குப் பயமாக இருந்தது. தன் தாயிடம் எனக்கு காட்டினால் செல்வதற்குப் பயமாக இருக்கிறது. என்ன செய்வது என்று கேட்டான்?

தாயும் விளையாட்டாக காட்டில் உன் அண்ணன் மாடு மேய்த்துக்கொண்டு இருப்பான். அழைத்தால் வருவான். உனக்குத் துணையாக இருப்பான் என்று கூறினாள் அந்தத் தாய்.

அந்தப் பையன் அதை நம்பி காட்டு வழியாகச் செல்லும் போது ...ம் அண்ணா நீ எங்கு நிற்கிறாய்'' எனக்குப் ... பெரும் சத்தமிட்டான். அவன் முன் பகவான் கிருஷ்ணர் வந்து அவன் கூடவே பள்ளிக்கூடம் வரை கூட்டிப்போவது மாலை ஆனதும் திரும்பிக் கூட்டி வருவதும் ஆகிவிட்டது. இருவரும் நட்புடன் பழக ஆரம்பித்தனர்.

இப்போ தனது மகன் பயம் என்று சொல்வதே இல்லை என யோசித்து; தாய் ஒரு நாள் அவன் பின் தொடர்ந்து சென்றாள். அங்கே தன் மகனுடன் ஒரு அழகான சிறுவன் போவதைக் கண்டு அவளுக்கு அதிசயமாக இருந்தது. தாய் கூறிய வார்த்தையும் நம்பிக்கையும் வீண்போகவில்லை. அந்தக் கண்ணனே அவனுக்கு காவலனாகவும், விளையாட்டுத் தோழனாகவும் கிடைத்த பாக்கியம் யாருக்குக் கிடைக்கும்?


# நீங்களும் மிருகங்களே...



தி.சுரேஸ்,
சண்டிலிப்பாய்

நீங்களும் மிருகங்களே...
பூப்படையாத சிறுமிகளின்
பூப்போட்ட பாவாடைகள்
கிழிக்கப்படும் ஒவ்வொரு நொடிகளும்
உங்களுக்கான பாடைகள்
கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன
மன்னிக்கவேண்டும்–நீங்கள்
மனிதர்களே இல்லை
பிறகேன் பாடை
உங்கள் பாகங்கள்
நாய்களுக்கும் பருந்துகளுக்குமே
விருந்தாகும்
ஏனெனில்
நீங்களும் மிருகங்களே!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்ல தீர்ப்பு

நான்கு திருடர்கள் கூட்டாக பொன்னும் பொருளும் திருடிக்கொண்டு வந்தார்கள். அவைகள் அனைத்தையும் ஒரு பானையில் போட்டு நிரப்பி வைத்தார்கள். அதைப் பத்திரமாக ஓர் இடத்தில் வைக்க ஆசைப்பட்டார்கள்.

ஒவ்வொருவரும் ஒவ்வோர் இடத்தைச் சொன்னார்கள். ஒருவர் கூட மற்றொருவர் யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் ஒருவருக்கொருவர் நம்பிக்கை இல்லாமல் இருந்தனர். கடைசியாக நால்வரில் ஒருவன், ''நாம் வழக்கமாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோமே ஒரு கிழவி வீட்டில் அவளிடம் அதைக் கொடுத்து வைப்போம். நல்ல கிழவி. பத்திரமாகக் காப்பாற்றி வைப்பாள். நாம் நால்வரும் ஒன்றாகச் சேர்ந்து போய் கேட்டால் மட்டுமே பானையைக் கொடுக்கச் சொல்லி அவளிடம் சொல்லுவோம்'' என்றான்.

மற்ற மூவரும் நாலாமவன் சொன்ன கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். நால்வரும் பாட்டியிடம் போனார்கள். ''பாட்டி, நாங்கள் நால்வரும் பல நாள்களாக உழைத்துப் பாடுபட்டுக் கொஞ்சம் பொருள் சேர்த்திருக்கிறோம். அதை இந்தப் பானையில் போட்டு வைத்திருக்கிறோம். இன்னும் சிறிது காலம் இந்த ஊரில் தங்க வேண்டியுள்ளது. அதற்குப் பிறகு இந்த ஊரை விட்டு நாங்கள் சென்று விடுவோம். அதுவரை இந்தக் குடத்தைப் பத்திரமாகக் காப்பாற்றி வைத்திருந்து நாங்கள் போகும் போது கொடுக்கவும். ஆனால் ஒரு நிபந்தனை. நாங்கள் நால்வரும் வந்து கேட்டால் தான் நீ இந்தத் தோண்டியைத் தர வேண்டும். தனியாக யார் வந்து கேட்டாலும் நீ கொடுக்கக் கூடாது. ஏனென்றால் இதில் உள்ள பொருள் அனைத்தும் எங்கள் நால்வருக்கும் சொந்தம்'' என்றார்கள்.

பாட்டியும் தோண்டியை வாங்கி வைத்துக் கொண்டு அவர்கள் சொன்னவாறே நால்வரும் வந்து கேட்கும் போது பானையைத் தருவதாகக் கூறினாள். சில நாள்கள் சென்றன. ஒரு நாள் பாட்டி வீட்டில் நால்வரும் சாப்பிட்டு விட்டுச் சற்று தூரத்தில் இருந்த ஒரு மரத்தடியில் இளைப்பாறிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அந்த வழியாக மோர் விற்கும் பெண்மணி ஒருத்தி மோர்ப் பானையுடன் வந்தாள். அவளைப் பார்த்ததும் திருடர்களில் ஒருவன், ''அண்ணை தாகமாக இருக்கிறது. மோர் சாப்பிடலாமா?'' என்று கேட்டான். மற்றவர்கள் சரி என்று கூறவே மோர்க்காரியைக் கூப்பிட்டு ஆளுக்கு ஒரு குவளை வாங்கிச் சாப்பிட்டனர். ''அண்ணை, மோர் நன்றாக இருக்கிறது. இந்த அம்மாளிடம் இருக்கும் மொத்த மோரையும் வாங்கி வைத்துக் கொண்டால் தாகம் எடுக்கும் போது கொஞ்சம் கொஞ்சமாகக் குடிக்கலாம்'' என்றான் ஒருவன். ''அது சரி, மொத்த மோரையும் வாங்குவதற்கு நம்மிடம் பானை எதுவும் இல்லையே!'' என்றான் ஒரு திருடன்.

''ஏன் நாம் வழக்கமாகச் சாப்பிடும் பாட்டியிடம் ஒரு பானை வாங்கி வரச் சொல்லுவோம்'' என்று சொல்லிய மற்றொரு திருடன் தன் பக்கத்தில் இருந்த திருடனிடம், ''நீ போய்ப் பாட்டியிடம் ஒரு பானை வாங்கி வா'' என்றான். அந்த நொடியில் பாட்டி வீட்டிற்குச் சென்ற திருடனின் மனதில் ஒரு சூழ்ச்சி தோன்றியது. பாட்டியிடம், ''பாட்டி நாங்கள் உன்னிடம் கொடுத்து வைத்தோமே, அந்தத் தோண்டியை வாங்கி வரச் சொன்னார்கள்'' என்றான்.

''உன்னிடம் எப்படித் தர முடியும்? நீங்கள் நால்வரும் வந்து கேட்டால் தானே கொடுக்கச் சொன்னீர்கள். இப்போது நீ மட்டும் தனியாக வந்து கேட்கிறாயே!'' என்றாள் பாட்டி. (தொடரும்)

## றோஜா



முட்கள் செறிந்த செடியினிலே
முத்தாய் மிளிரும் றோஜாவே
முகரும் போது உன் இதழ்கள்
முழு மனதையும் ஈர்க்கின்றதே

குளிர்ச்சியான உள்ளத்தைத் தரும்
குளிர்மையான உடம்பைத் தரும்
குறும்பான றோஜாக் கன்றே
குதூகலிக்கும் இன்பத்தை தருகின்றாய் நீயே

பலவண்ண நிறத்தைக் கொண்டு
சிரிப்பு எனும் அழகைக் கொண்டு
சின்னக் குருவிக்கு நிழல் கொடுத்து
சின்னஞ் சிறார்களின்
மனதில் இடம் பிடித்தாய் நீயே

க.கீர்த்தன்

## பொது அறிவு துணுக்குகள்

1. படகு வடிவில் அமைந்துள்ள நாடு
இத்தாலி
2. உலகில் மிகவும் மதிப்புள்ள ஓவியம்
மோனாலிசா
3. உலகிலேயே மிகப் புகழ்பெற்ற பானம்
தேநீர்
4. பத்திரிகை வெளிவராத நாடு
திபெத்
5. மிக நீண்ட ஆயுள் கொண்ட உயிரினம்
திமிங்கிலம்
6. இந்தியாவின் மிகப் பெரிய பாலம்
மகாத்மாகாந்தி சேது [6 km]
7. இரவும் பகலும் மிகத் துல்லியமாக வரும் நாள் மார்ச் 21
8. கலிங்கப்போர் நடைபெற்ற வருடம்
கி.மு 261

கா.மதுரா, தரம்–6
யா/நீர்வேலி
றோ.க.த.க.பாடசாலை

## விவேகானந்தரின் பொன்மொழிகள்



1. நீ செய்த தவறுகளை வாழ்த்து. அவைகள் நீ அறியாமலே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருக்கின்றன.
2. அன்பின் மூலம் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்து தந்தே தீரும்.
3. உங்களால் யாருக்கும் உதவி செய்ய முடியாது. மாறாக சேவைதான் செய்ய முடியும்.
4. கீழ்ப்படியக் கற்றுக்கொள், கட்டளையிடும் பதவி தானாக உன்னை வந்து அடையும்.
5. உற்சாகமாக இருக்க தொடங்குவதுதான் வெற்றிகரமான வாழ்க்கை வாழ தொடங்குவதற்கான முதல் அறிகுறி.
6. சுடுகாட்டுக்கு அப்பாலும் எம்மைத் தொடர்ந்து வருகிற ஒரே நண்பன் நல்லொழுக்கம். மற்றவை யாவும் மரணத்துடன் முடிந்துவிடும்.
7. பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்.
8. பிறர் முதுகுக்குப் பின்னால் நாம் செய்ய வேண்டிய வேலை, தட்டிக்கொடுப்பது மட்டும் தான்.
9. நேரத்தை வீணாக்கும் போது கடிகாரத்தைப் பார். ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை.
10. தூய்மையாக இருப்பதும், பிறருக்கு நன்மை செய்வதும் தான் சர்வமத வழிபாடு.

சி.டினோஜா, யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரி,
2 ஆம் வருடம்.

## விடை தெரியுமா? 186

### உங்களுக்கும் பரிசில்கள்

1. உலகில் தேசியக் கொடி இல்லாத நாடு எது?
2. மிகச் சிறிய தேசிய கீதத்தைக் கொண்ட நாடு எது?
3. மனித உடலில் மிகப் பெரிய சுரப்பி எது?
4. அண்மையில் செவ்வாய்க்கிரகத்தை ஆய்வு செய்த விண்கலத்தின் பெயர் என்ன?
5. கியூபாவின் தேசிய தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?

### விடைகள் 183

1. கேடானியல், டொமினிக் ஜீவா
2. பூபாளம்
3. சிலப்பதிகாரம்
4. ஒல்லாந்தர் காலம்
5. பாக்தாத்


### வெற்றி பெற்றோர் விவரம் (184)

* செ.விஜித்தா, தரம் -8, கிளி/கிராஞ்சி அ.த.க.பாடசாலை.
* சி.பிரவீன், தரம் -9சி, யா/ இந்துக் கல்லூரி.
* தி.சுஜீவன், தரம் -7பி, ஹாட்லிக் கல்லூரி.
* சூ.புவித்தா, யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
* சூ.பிரியதக்ஷி, தரம்-8சி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 24 .11.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.


சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.




கு.சக்திஹரன், தரம்–3,
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி



ச.ரதுசன், தரம்–3,
மு/ உடுப்புக்குளம் தமிழ் வித்தி.



எம்.றம்மியா, தரம்–3,
மு/ உடுப்புக்குளம் தமிழ் வித்தி.






இ.சுவேந்தினி, தரம்–8பி,
யா/ சங்கானை சிவப்பிரகாச ம. வித்தி.



நி.சஞ்ஷயன், தரம்–3பி,
யா/ யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை



அ.அனுசியா, தரம்–8,
கிளி/ வன்னேரிக்குளம் ம.வி.




[illegible], தரம்–8ஏ,
யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
18/11/2012

# எட்டும் கனியாக்குங்கள் வெற்றியை



விண்ணன்

அண்மைக்காலமாக விளையாட்டுத் துறையில் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்கள் தமது ஆற்றல்களை தேசிய மட்டம், சர்வதேச மட்டம் என்று வெளிப்படுத்த தொடங்கியுள்ளனர். போர் நடைபெற்ற போது வாய்ப்புகள் பலவும் இந்த மாணவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்தன. பயிற்சி செய்ய நேரம் கிடையாது. போக்குவரத்தும் சீராக இல்லை. இதைவிட மாகாண மட்டம், தேசிய மட்டம் போன்ற போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டுமாயின் படைத்தரப்பில் பாதுகாப்பு அனுமதி பெற்று யாழ்ப்பாணத்தை விட்டு வெளியே செல்ல முடியும் என்ற நிலை. தற்போது இத்தகைய இடர்கள் அற்ற வாழ்வு கிடைத்துள்ளதால் அதனை மிகச் சரியாகப் பயன்படுத்தி சர்வதேசம் வரை தமது திறமைகளை யாழ்.மாவட்ட மாணவர்கள் விளையாட்டுத் துறையில் நிரூபித்து வருகின்றனர்.

ஆனால் யாழ்.மாவட்ட மாணவர்களை விட உடற்பலமும், மனோபலமும் அதிகமாகக் கொண்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்ட வீர, வீராங்கனைகள் போருக்குப் பின்னான காலத்தில் இவ்வாறு தமக்குள் ஒளிந்திருக்கும் திறமைகளை வெளிப்படுத்த முடியாமல் தவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்கள் நீண்ட தூர, குறுந்தூர ஓட்டங்களில் சாதிக்கக் கூடிய வல்லமை கொண்டவர்கள்.

அதே போன்று ஏனைய களப்போட்டிகளிலும் கூட அவர்களின் ஆற்றல் ஏனைய மாவட்ட மாணவர்களை விட எந்தவிதத்திலும் குறைந்தது அல்ல. இன்னும் சொல்லப் போனால் உண்மையில் விளையாட்டுத்துறையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாணவர்களே அதிகம் சாதித்திருக்க வேண்டும். அந்தளவுக்கு சக்தி கொண்டவர்கள் அவர்கள்.

ஆனால் குறித்த இரு மாவட்டங்களையும் சேர்ந்த மாணவர்கள் இன்று பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளும் உள்ளாகி தவிக்கின்றார்கள். அவர்களிடம் உறங்கிக் கொண்டிருக்கும் ஆற்றல்களை தட்டி எழுப்ப வேண்டிய பொறுப்பைக் காலம் விளையாட்டு அதிகாரிகளின் கையிலும், பாடசாலை விளையாட்டு பொறுப்பாசிரியர்களிடமும் ஒப்படைத்திருக்கிறது.

முதலில் இந்த மாணவர்களிடம் இருக்கும் தாழ்வு மனப்பான்மையை நீக்குவதற்கு முயற்சிக்க வேண்டும். "இந்தப் போட்டிகளில் எங்களால் எப்படி வெல்லமுடியும்? நாங்கள் என்ன முயற்சி செய்தாலும் ஆகக் குறைந்தது மாகாணம் வரை மட்டுமே செல்ல முடியும். தேசிய மட்ட வெற்றிகள் எல்லாம் எங்களுக்கு எப்போதுமே எட்டப் போவதில்லை. அவை எட்டாக் கனிகள் தான்" என்ற நினைப்பே கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மாணவர்கள் மத்தியில் இருப்பதை அவர்களுடன் கலந்துரையாடியதன் மூலம் அறிய முடிந்தது. எனவே மனோரீதியாக அவர்களிடம் தன்னம்பிக்கையை வளர்க்கச் செய்து அதனூடாக சாதிக்கும் ஆற்றலை வெளிப்படுத்துதற்கு ஆற்றுப்படுத்தல்கள் அவசியமாகின்றன.

குறிப்பாக மைதானங்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாணவர்கள் ஏனைய மாவட்ட மாணவர்களைப் பார்த்து மிரண்டு போகும் சந்தர்ப்பங்களில் ஆற்றுப்படுத்தப்படுவது அந்த மாணவர்களின் பயத்தைப் போக்கி, விளையாட்டில் தடைகளைத்தாண்டும் உத்வேகத்தை அளிக்கும்.

**யாழ்.மாவட்ட மாணவர்களை விட உடற்பலமும், மனோபலமும் அதிகமாகக் கொண்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்ட வீர, வீராங்கனைகள் போருக்குப் பின்னான காலத்தில் இவ்வாறு தமக்குள் ஒளிந்திருக்கும் திறமைகளை வெளிப்படுத்த முடியாமல் தவிக்கின்றனர்.**

மைதானங்களில் போட்டி நடைபெறும் போது ஏனைய மாவட்ட வீரர்கள் பெறுமதி மிக்க, உயர்தரம் கொண்ட உபகரணங்கள், உடைகள், காலணிகள் என்பவற்றோடு, 'கலர்ஸ்' காட்டும் போது பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாணவர்கள் மனதில் இயல்பாகவே ஒருவித தாழ்வு மனப்பாங்கு உருவெடுக்கும். ஆனால் பெறுமதி மிக்க காலணியோ, ஆடம்பரமான உடைகளோ ஒரு போதும் வெற்றிக்கு உதவப் போவதில்லை. மன உறுதியும், பயிற்சியும், வெல்லும் வழி பற்றிய நுணுக்கமும், ஆற்றலும் தான் அவர்களை வெற்றியின் படிகளில் ஏற்றி வைக்கும் சாதனங்கள். இதனை அத்தகைய தருணங்களில் மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும். நம்பிக்கையூட்டும் சொற்களைக் கொண்டு ஆசுவாசப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் பட்சத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களும் சர்வதேசம் வரை சென்று சாதிக்கும் நிலையை உருவாக்கமுடியும்.

அண்மையில் இடம்பெற்ற தேசிய மட்டத்திலான பாடசாலை அணிகளுக்கு இடையேயான மெய்வன்மைப் போட்டிகளில் வடமாகாணத்துக்கு 18 தங்கப்பதக்கங்கள் கிடைத்தன.

இவற்றில் 16 தங்கப் பதக்கங்களை யாழ். மாவட்டப் பாடசாலைகளும், மிகுதி இரண்டை வவுனியா மாவட்டப் பாடசாலைகளும் பெற்றிருந்தன.

மறுபுறத்தே பெரு விளையாட்டுப் போட்டிகளிலும் கூட மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா மாவட்ட அணிகள் பதக்கங்களை தேசிய மட்டத்தில் வென்றிருந்தன. எனினும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் இந்தப் பதக்கப்பட்டியலிலும் தமது பெயரைப் பொறிக்கத் தவறிவிட்டன.

இதன் பின்னர் வடமாகாண கல்வித் திணைக்களம் மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே அரைமரதன் ஓட்டப் போட்டி ஒன்றை நடத்தியிருந்தது. இதில் முதல் பத்து இடங்களைப் பெற்றவர்களில் சுமார் நாற்பது வீதம் வரையான வீர, வீராங்கனைகள் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஆயினும் இந்த வெற்றியாளர்கள் குறித்த போட்டியில் உரிய பயிற்சியின்றியும், மரதன் ஓட்டத்தில் நிபுணத்துவம் பெற்ற பயிற்சியாளரின் வழிகாட்டல் இன்றியுமே பங்குபற்றியிருந்தனர். வெற்றியும் பெற்றனர்.

இவர்களிடம் இயற்கையாகவே அமைந்த ஆற்றலும், 'எம்மாலும் சாதிக்க முடியும்' என்ற ஆர்வமுமே இந்த வெற்றியை அவர்களுக்குக் கொடுத்துள்ளது.

எனவே சுய ஆர்வமும் திறமையும் கொண்ட ஒரு தலைமுறையை விளையாட்டுத் துறையில் இன்னமும் பிரகாசிக்கச் செய்ய முனைவதில் சிக்கல்கள் எதுவும் ஏற்படப் போவதில்லை.தானாகவே முளைத்து தரையில் படரும் ஒரு கொடியை, பந்தல் கட்டி அதில் படர விடுவது போன்ற இலகுவான காரியமே.

இத்தகையவர்களை வளப்படுத்தவும், வளர்த்தெடுக்கவும் விளையாட்டு அலுவலர்களிடமும் உடற்பயிற்சி ஆசிரியர்களிடமும் அர்ப்பணிப்பு இருக்க வேண்டியது அவசியம்.

தற்போது கிளிநொச்சி முல்லைத்தீவில் உள்ள சில பாடசாலை மாணவர்களை தமது படைமுகாம்களில் வைத்தோ அல்லது பாடசாலை மைதானத்தில் வைத்தோ படையினர் விளையாட்டுப் பயிற்சிகளை வழங்கத் தொடங்கியுள்ளனர். இவ்வாறு படையினரிடம் பயிற்சி பெற்ற மாணவர்கள் முன்னரைக் காட்டிலும் பன்மடங்கு திறமையை வெளிப்படுத்துகின்றனர்.

படையினர் வழங்கும் பயிற்சிகளை பாடசாலை விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள், விளையாட்டுத் திணைக்கள அதிகாரிகள் பயிற்றுநர்கள் என்போரும் வழங்கினால் எல்லா மாணவர்களும் புடமிடப்பட்டு மிளிர்வார்கள் என்பது திண்ணம். ஆனால் அவர்களிடம் இத்தகைய அர்ப்பணிப்பு உணர்வு இருக்கின்றதா என்பதே இப்போதுள்ள கேள்வி. எதற்காகவோ நிலை கொண்டுள்ள படைத்தரப்பு மாணவர்களை சிறந்த வீரர்களாக்க முயற்சி எடுக்கையில், விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு பாடுபடுகிறோம் என்று சொல்லி ஒவ்வொரு மாத முடிவிலும் வேதனத்தைப் பெற்றுக் கொள்ளும் இந்தத் துறைசார்ந்தோர், என்ன செய்தார்கள், என்ன செய்கிறார்கள் என்பது தெரியாமல் இருக்கிறது.

வடமாகாணக் கல்வி அமைச்சும், விளையாட்டுத்திணைக்களமும் ஒரே செயலாளரின் கட்டுப்பாட்டின் கீழேயே இயங்குகின்றன.

இதனால் உயர் அதிகாரிகள் உடற்பயிற்சி ஆசிரியர்களையும் விளையாட்டு அலுவலர்களையும் ஒன்றிணைத்து சீரான செயல்திட்டங்களை தீட்டுவதன் மூலம் கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களின் விளையாட்டுத் தரத்தை மேம்படுத்த முடியும்.

பெயருக்கு நாலைந்து விளையாட்டு நிகழ்வுகளையும், ஓரிரண்டு பயிற்சி முகாம்களையும் நடத்துவதோடு தமது கடமை முடிந்து விட்டதாகவே விளையாட்டுத்துறை சார் உத்தியோகத்தர்களும், பொறுப்பாசிரியர்களும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.அந்த மனோநிலையில் மாற்றம் வந்தால் மாத்திரமே கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களின் விளையாட்டு ஆற்றல்களும் குன்றின் மேலிட்ட விளக்காக பிரகாசிக்க முடியும்.

# அவனுக்கும் ஆசை....



ஆ.முல்லைதிவ்யன்

அவன்ர அம்மா
ஊன்று கோலோட
நடந்து திரியிறா...

தம்பி
[illegible]
சாப்பிடுகிறான்

அப்பான்ரபடம்
கிடுகு செத்தையிலே
தொங்குது

தங்கச்சி
அதைப் பார்த்து
நெடுக
அழுகிறாள்

பள்ளிக்கூடம்
மீண்டும் இயங்கத்
தொடங்கிற்று
அவனுக்குப் பள்ளிக்குப்
போக ஆசை தான்
ஆனால்...

அம்மாவின்
கண்ணீர்த் துளிகள்
பாடப்புத்தகத்தின்
வரிகளை
மறைத்து விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ்போஸ்: வலியறியும் வார்த்தைகள்...

■ ந. மயூரரூபன்



கவிஞன் எப்போதும் உண்மையின் பின்னால் மறைந்திருக்கும் கவிதையை கண்டுபிடிக்க வேண்டும். பதிலாக வெளித்தெரியும் உண்மைக்குப் பணிந்து சேவகம் செய்தால் கவிதையின் குறிக் கோளில் இருந்து விலகியவனாவான்.

90 களில் கவிதைத் தளத்தில் இயங்கிய வர்களில் எஸ்போஸ் எனப்படும் சந்திர போஸ் சுதாகரும், உமாஜிப்ரானும் எனக்கு மிகவும் பிடித்தமானவர்கள். மற்றைய எழுத் தாளர்களில் இருந்து இவர்கள் தனித்துத் தெரிந் தார்கள்.

குறிப்பாக சுதாகரனின் கவிதைகள் துடிப்பும் சுய விசாலிப்பும் காயடித்துப் போகும் அந்த நேரச் சூழலைப் பேசின.

"கவிஞர்கள் கவிதைகளைப் புனைவதில்லை
கவிதை எங்கோ பின்புறத்தில் உள்ளது.
அது அங்கு மிக நீண்ட காலமாய் உள்ளது.
கவிஞன் வெறுமனே அதைக் கண்டுபிடிக்கிறான்"

எனக் கவிஞன் ஜோன் செக்கல் எழுதுவது போல சுதாகரின் கவிதைகள் அவனைச் சுற்றியே கிடந்தன. அவன் கண்டுபிடித்தான்.

தனது மரணத்தையும் அவனே கண்டுபிடித்தான். 'சூரியனைக் கவர்ந்து சென்ற மிருகம்' எனும் கவிதை, சுதாகரன் இறப்பதற்கு முன்பாக எழுதப் பட்டது.

"என் அன்புக்கினிய தோழர்களே!
எனது காதலியிடம் சொல்லுங்கள்
ஆயிரக்கணக்கான மனிதர்கள் குழுமியிருந்த
வனாந்தரத்திலிருந்து
ஒரு மிருகம் என்னை இழுத்துச் சென்று விட்டது"

தத்துவார்ந்த நிலையிலும் உணர்வு கிளர் நிலை யிலும் கவிதை பற்றியும் கவிஞன் பற்றியும் கூறிச் செல்லும் வார்த்தைகள் சில கணங்களில் வெறுமை யானவையாய் புலப்படும்.'

கவிஞன் எப்போதும் உண்மையின் பின்னால் மறைந்திருக்கும் கவிதையை கண்டுபிடிக்க வேண்டும். பதிலாக வெளித்தெரியும் உண்மைக்குப் பணிந்து சேவகம் செய்தால் கவிதையின் குறிக் கோளில் இருந்து விலகியவனாவான்.

முன் தீர்மானிக்கப்பட்ட எதுவாக இருந்தாலும், கவிதையின் உண்மையை கண்டுபிடிக்காமல் மற்றையவைக்கு அடிபணிந்தால் அடிவருடியானால் அங்கு போலித்தனமே எஞ்சி விடுகிறது.

"அதிகாரத்தைச் சிலுவையிலறைவதா
அதிகாரத்திற்கெதிரான நமது இருதயங்களை
சிலுவையில் அறைவதா"

அதிகாரத்தின் மீதான எதிர்வினைகள் சுதாகரின் கவிதைகளில் உயிர்ப்புள்ள சுத்திகளை மறைந்துள்ளன. ஃபூக்கோ சொல்லுவது போல் நம்முடைய சிந்தனை, செயல் அனைத்தும் அதிகாரத்தால் கட்டமைக்கப் பட்டன. அதிகாரத்தை துதிப்பதாகவோ மாறாக அதிகாரத்தை எதிர்ப்பதாகவோ இரு தளங்களில் அல்லது இருவகைப்பட்ட நிலையில், எங்கள் மனம் வாழும். அதிகாரம் தனக்கான உரையாடலை நிகழ்த்திக்கொண்டே இருக்கிறது.

சுய தரிசனம் மிக்கவர்கள் அந்த உரையாடலில் தண்டிக்கப்படுகிறார்கள். ஃபூக்கோ சொல்லுவது போல கட்டுப்படுத்தப்பட்ட உடல்களே இன்றைய அமைவிற்குத் தேவை.

இன்றோ நாளையோ வாழ்வு முடிந்து விடும் என மீன்கள் ஓலமிடுகின்றன. அலைகள் அதை ஓங்கிய றைந்து செல்லுகின்றன. எனக்குமது புரிகிறது. என் வாழ்வும் மீனைப் போல தான்.


சுதாகரின் "வலியறியாத வார்த்தைகள்" எனும் கவி தையின் சில வரிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

"நீ சிரித்தபடியிருக்கும் ஒரு நாளில்
அலையை வெறித்திருக்கும் எனது கண்களில்
மீன்களின் ஓலம் தெரிகிறது
................
கவிதையின் ஒளிமிகு நாள்களை நான் இழந்துவிட்டேன்.
ஒரு பிச்சைக்காரன் தனது கவனங்களை இழக்கும் துயரோடு
என்னுள் அது நிகழ்ந்தது.
எல்லாம் மிகப் பழைய வார்த்தைகளாகின
மிகப்பழைய வார்த்தைகள்
இப்போது உனது மண்பானை உடைந்து விட்டது. அது
தேனால் நிறைக்கப்பட்டிருந்தாலும்
கள்ளில் ஊறிக்கிடந்தாலும்
இசையின் வலியை சிதறல்கள் தரா
நீ உணர்கிறாயா
காற்றிலிருந்து இறக்கும் ஒரு கழுகின் இரையாய்
வலியறியாது காத்திருக்கின்றன உனது வார்த்தைகள்"

மனிதர்கள் சுதந்திரமானவர்கள் அல்ல. அவர்கள் எப்போதும் அதிகாரத்தின் உரையாடலால் கட்டுப் படுத்தப்பட்டவர்கள் என்று ஃபூக்கோ கூறினாலும் கட்டுப்படுத்தப்படாத மனிதர்களும் இருக்கிறார்கள், சுதாகரைப் போல. எனினும் அதிகாரம் எம்மைச் சூழ அசைந்து கொண்டே இருக்கிறது.

# மழையால் கரையும் ஏர்ப்பு

■ டிலீப்



இலங்கை, நியூஸிலாந்து அணி களுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடர் ஒருவாறு மழை யின் எதிர்ப்பையும் சமாளித்து நடந்து முடிந்து விட்டது. ஐ.சி.சியி னால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய விதிகளின் பிரகாரம் இந்தத் தொடர் இடம்பெற இருந்தபோதும் மழை யால் அந்த விதிகளின் ஆழத்தை அறியமுடியாமல் போயுள்ளது.

இலங்கையில், நியூஸிலாந்து தொடர், ஆஸ்திரேலியா – தென்னா பிரிக்கா டெஸ்ட் தொடர் இரண்டும் மழையால் பாதிப்பை எதிர் கொண் டுள்ளன.

மழை காலங்களில் போட்டியை வைக்கின்றனரா? அல்லது போட்டி நடைபெறும் காலங்களில் மழை பெய்கின்றதா? அந்தளவு தூரம் மழையால் கிரிக்கெட் சுவாரஸி யமே கெட்டு விட்டது.

இலங்கை, நியூஸிலாந்து அணி களுக்கிடையிலான ஒரே ஒரு 'ரி-20' ஆட்டம் மழையால் கைவிடப்பட் டது. அதனைத் தொடர்ந்து 5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடர் ஆரம்பமானது. முதலாவது ஆட்டமும் இறுதி ஆட்டமும் மழை யால் கைவிடப்பட, எஞ்சிய மூன்று ஆட்டங்கள் நடைபெற்றது.

இந்த மூன்று ஆட்டங்களும் கூட மழையின் பாதிப்பிலிருந்து தப்பவில்லை. மழையின் கருணை யால் அந்த ஆட்டங்களை 'டக்வேர்த் லூயிஸ்' முறைப்படி நடத்தி முடித் திருந்தார்கள்.

மழை வருவது – ஆட்டத்தை குழப்புவது – தவிர்க்க முடியாதது. ஆனாலும் மழையில்லாத காலப் பகுதிகளில் ஆட்டங்களை நடத்தி னால் இவ்வாறான எதிர்மறையான விளைவுகளை தவிர்க்க முடியும். இலங்கையில் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் மழை பெய்வது வழமை யானது. இந்தக் காலப் பகுதிகளில் ஆட்டத்தை நடத்துவதா இல்லை யான என்பது தொடரில் முதலி லேயே தீர்மானித்திருக்க வேண்டும்.

மேலும் இலங்கை – நியூஸி லாந்து டெஸ்ட் தொடர் காலியில் இடம்பெற்று வருகின்றது. இரண்டு ஆட்டங்களைக் கொண்ட இந்த டெஸ்ட் தொடர் கூட மழையால் பாதிக்கப்படலாம். நாட்டின் பல பாகங்களிலும் தொடர்ச்சியாகப் பெய்து வருகின்ற கன மழை மற் றும் பனிப் பொழிவு காரணமாகப் பாதிக்கப்படலாம்.

மேலும் நடை பெற்ற ஒரு நாள் தொடரைக்கூட இலங்கை ரசிகர்கள் பெருமளவில் நேரில் சென்று பார் வையிடவில்லை. இது தொடரில் மஹேல, மழை காலங்களில் போட் டியின் நிச்சயமற்ற தன்மையால் ரசி கர்களை எதிர்பார்க்க முடியாதது தான். மழை காரணமாகவே குறைந்தளவு ரசிகர்கள் இந்தத் தொடரைப் பார்வை யிட்டனர் என்று தெரிவித்திருந்தார்.

இவ்வாறு மழையினால் ரசிகர் கள் வரவு குறைந்தமையால் இலங்கை கிரிக்கெட் சபை இந்தத் தொடரை நடத்துவதனால் உரிய லாபத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஏற் கனவே பெரும் நஷ்டத்தை எதிர் கொண்டுள்ள இலங்கை கிரிக் கெட் சபை இந்தத் தொடரினால் மேலும் நஷ்டத்தையே எதிர்கொள் கின்றது.

எனவே இவ்வாறான தொடரை நடத்த தீர்மானித்தது இலங்கை கிரிக்கெட் சபை செய்த மிகப்பெரிய பிழையே. இந்தத் தொடரை மழை யில்லாத காலப் பகுதியில் நடத்தி யிருந்தால் கிரிக்கெட்சபை எதிர் பார்த்தளவு வெற்றிகளைப் பெற முடிந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை நிதானம்



**கண்டிப்பு அல்லது அறிவுறுத்தல் அவர் மீதான மன ஈடுபாடு, அக்கறை என்பவை காரணமாக வெளிப் படுத்தப் படுபவையே பொறுமை காக்க இயலாத பல சந்தர்ப்பங்கள் எமது வாழ்க்கையில் குறுக்கிடுவதுண்டு.**

■ *தானா*

"கட்டையிலை போற வயசிலை இதெல்லாம் தேவைதானா?'' என்று கிழ வயதடைந்த ஒருவரை அவரது பிள்ளைகளோ, நெருங்கிய உறவினர்களோ, அல்லது அந்த வயது முதிர்ந்தவருடன் தோழமை கொண்டவர்களோ கடிந்து கொள்வதை அவதானிக்கும் வாய்ப்பு உங்களில் சிலருக்குக் கிட்டியிருக்கும்.

அத்தகைய கண்டிப்பு அல்லது அறிவுறுத்தல் அவர் மீதான மன ஈடுபாடு, அக்கறை என்பவை காரணமாக வெளிப்படுத்தப்படுபவையே.

தள்ளாத வயதிலும், நாட்டு நடப்பைத் தெரிந்து கொள்ளும் ஆவலில் வாசிகசாலைப் பக்கம் தட்டுத்தடுமாறிச் சென்று திரும்பும் தமது தந்தையை, அவரைத் தன்னுடன் வைத்துப் பராமரிக்கும் மகனோ மகளோ வாஞ்சையுடன் கண்டிப்பதுண்டு.

தனது குடும்ப பாரத்துடன், வயதான தனது தாயையோ, தந்தையையோ பொருளாதாரக் கஷ்டத்தின் மத்தியிலும், பெற்று வளர்த்த நன்றிக் கடனுக்காகத் தன்னுடன் வைத்துப் பராமரிக்கும் மகள், தனது சொல்லையும் மீறித் தனது தந்தை வெளியில் உலவி வரச் சென்று வழியில் கல் தடுக்கி விழுந்து காயப்பட்டுக் கொண்டால், ஆத்திர மேலீட்டால் கட்டையிலை போற வயசிலை... என்ற வார்த்தையை வாய் தடுமாறி வெளியிட்டு விட நேர்கிறது.

இவை யாவும் தம் பெற்றோரின் உடல் நலம் மீதான அக்கறையின் பாற்பட்டதாயினும், அந்தச் சூடான வார்த்தைப் பிரயோகம் சில வேளைகளில் அந்த முதியவர்களது மனங்களைக் காயப்படுத்தி விட நேர்கிறது.

தீயினால் சுட்டபுண் ஆறுமே, ஆறாதே -நாவினால் சுட்ட வடு என்கிறது வள்ளுவம். எந்தவொரு பொருளைத் தானும் கைதவறி நிலத்தில் கொட்டி விட்டால், மீண்டும் பொறுக்கி எடுத்துக் கொள்ளலாம். ஆனால் உணர்ச்சி வசப்பட்டு பண்பாடற்ற வார்த்தையை வெளிப்படுத்தி விட்டுப் பின்னர் அதற்காக மன்னிப்புக் கோருவதால் நொந்த மனதுக்கு அது ஒரு போதும் ஒத்தடம் ஆக மாட்டாது.

மாணவப் பருவத்தில், நகர்ப்புறப் பாடசாலைக்கு பஸ்ஸில் சென்று கல்வி கற்ற அந்தக் கால கட்டத்தில், பஸ் நிலைய நேரக்கணிப்பாளர் கூண்டுக்குள் நேரக்கணிப்பாளரைக் காண்பதே அபூர்வம்; அங்குமிங்கும் அலையும் அவரைத் தேடிப்பிடித்து நாம் பயணிக்க வேண்டிய பஸ் வண்டி எப்போது பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் எனக் கேட்டால் அலட்சியத்துடன் பட்டும் படாமலும் "பஸ் வரவேண்டும். வந்ததும் புறப்படும்'' என்பார். எப்போது வரும் என்று திருப்பிக் கேட்டால் "வாற நேரம் தான்; வரும்'' என்பார். பொது மக்களுக்கு உதவ வேண்டிய அவரது பணியை அலட்சியத்துடன் மேற்கொள்ளும் அவரது நடத்தை அந்த மாணவப் பருவத்திலேயே எமது மனதைச் சுட்டதுண்டு. இத்தகைய அனுபவங்களை மனதில் கொண்டுதான் பிற்காலத்தில் சினிமாப் பட நகைச் சுவைக் காட்சியொன்றில் "வரும்; ஆனா வராது'' என்ற வார்த்தையைப் புகுத்தியிருப்பார்களோ?

அரச சேவையோ தனியார் சேவையோ, செயற்திறன் மிக்க பணியாக அமைய வேண்டுமானால், தொழிலில் பற்றுறுதி அவசியம். அதிலும் பொதுமக்களுடன் நேரடியாகத் தொடர்புபடும் பணியானால் அர்ப்பணிப்பு உணர்வும், உதவும் மனப்பாங்கும் அமைதல் மிகமிக அவசியம், வருமானம் திருப்திகரமாக இல்லாவிட்டாலும், போதுமானதாக அமையாவிட்டாலும், அத்தகைய பணியில் மனநிறைவும், திருப்தியும் கிட்டும்.

கால ஓட்டத்தில் வர்த்தகத்துறையில் போட்டி அதிகரித்து விட்டதால், வாடிக்கையாளர்களைக் கவர வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் புதுப்புது உத்திகளைக் கைக்கொள்ளும் அதேவேளை, தமது வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களும் வாடிக்கையாளர்களுடன் சுமுகமாகவும், சிநேக பூர்வமாகவும் நடந்து கொள்ள வேண்டுமென்பதில் அக்கறை காட்டிச் செயற்படுவது வழக்கமாகி விட்டது.

கொழும்பின் பிரபல வர்த்தக நிலையங்களில் உள்நுழையும் போதே (Can I help you?) நான் உங்களுக்கு உதவ முடியுமா? என்ற கேள்வியுடன் எதிர்கொள்ளும் விற்பனையாளரின் பேச்சே வாடிக்கையாளரைக் கவர்ந்து விடுகிறது. போதாதற்கு, நிர்ணய விலை நம்பிக்கை ஊட்டுகிறது. அதற்கும் மேலாக, வாங்கும் பொருளுக்கு குறிப்பிட்ட கால உத்தரவாதம் என்ற (Gurantee) சலுகை நம்பிக்கையை மேலும் அதிகரிக்க வைக்கிறது. இவை அந்த வர்த்தக நிறுவனத்துக்கு வர்த்தக முயற்சியில் குறிப்பிட்ட அளவு வெற்றியை ஈட்டிக் கொடுக்கிறது. மாறாக தவித்த முயல் அடிக்கும் போக்கில் வாடிக்கையாளருக்கு இல்லாத பொல்லாத கதையெல்லாம் கூறி வாடிக்கையாளரின் தலையில் பொருளைக் கட்டி அடிக்கும் முயற்சி நீண்டகால்ம் நிலைத்து நின்று பயன் அளிப்பதில்லை.

கொழும்பு ஜந்துலாம்படிச் சந்தியிலுள்ள யாழ்ப்பாணத்தவர் ஒருவருக்குச் சொந்தமான பலசரக்கு வர்த்தக நிலையம் அது. யாழ்ப்பாணத்து குக்கிராமமொன்றில் சிரமமான நிலையில் வாழ்க்கையை ஓட்டும் ஒரு தம்பதியரின் மூத்த மகனை, அவர்களது வேண்டுகோளின்பேரில் அந்தக். கொழும்பு வர்த்தக நிலையத்தின் நிர்வாகி மூலம் வேலைக்குச் சேர்த்து விடுகிறார் அவர்களுக்கு வேண்டிய ஒருத்தர். பையன் வயதில் சிறுவனான போதிலும், துடிப்பும் சுறுசுறுப்பும் கொண்டவன். வேலைக்குச் சேர்ந்த முதல் நாளே அந்த வர்த்தக நிலையத்தின் செயற்பாடுகள், சூழல் குறித்து அவதானித்துக் கொள்கிறான்.

அடுத்தநாள் காலை வேளையில், கடைக்கு வந்த ஒருவரை இன்முகத்தோடு வரவேற்று அவரது தேவை குறித்து பவ்யத்துடன் விசாரிக்கிறான். வந்தவரும் தாம் அரிசி வாங்க வந்ததாகக் கூறுகிறார். அரிசி விலை, தரம் குறித்தெல்லாம் விசாரித்துக் கேட்டறிந்து, கடைசியில் திருப்தியின்றி அரிசி வாங்காமலே வெளியேற முயல்கிறார். ஆனால் அந்தப் பையனோ அவரை விட்ட பாடாயில்லை. சாதுரியமாகப் பேசி கடைசியில் பத்துக்கிலோ அரிசியை வாங்க வைத்து விடுகிறான்.

அதுவரையில் கடைக்கு வந்தவரின் கண் சைகைக்குக் கட்டுப்பட்டு, ஏதுவுமே பேசாது நடப்பதை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்த கடையில் பணிபுரியும் ஏனைய ஊழியர்கள் அங்கிருந்து அகன்று தத்தம் வேலைகளில் கவனம் செலுத்துகின்றனர். கடைக்கு வந்த, தான் தனது பேச்சுத் திறமையால் பத்துக்கிலோ அரிசியை விற்பனை செய்த அந்த மனிதர் தான் அந்தக் கடையின் முதலாளி என்பது, முதுகில் தட்டிக் கொடுத்து அவனை அவர் பாராட்டிய போதே அந்தச் சிறுவனுக்குத் தெரிய வந்தது.

இந்த வியாபார நுணுக்கத்தை, திறமையை அந்தச் சிறுவன் முன்பின் எங்கும் கற்றுக் கொண்டிருக்க வாய்ப்பில்லை. சிலருக்கு அது இயற்கையாகவே அமைந்த தொன்று; பிறப்பிலேயே வாய்ந்த கொடை அது. விசுவாசமாக அந்தக் கடையில் பணிபுரிந்த அந்தச் சிறுவன் பின்னாளில் அதே முதலாளியின் அனுசரணையுடன் தானுமொரு கடை ஆரம்பித்து முதலாளியாகியமை கால ஓட்டத்தில் நடந்தேறிய நிகழ்வு. அந்த வகையில் மனிதர்களாகப் பிறந்து விட்ட நம் அனைவருக்கும் எங்கும், எதிலும், எப்போதும் தேவையானவை நிதானம்; பொறுமை; முயற்சி ; நல்லொழுக்கம்.

பொறுமை காக்க இயலாத பல சந்தர்ப்பங்கள் எமது வாழ்க்கையில் குறுக்கிடுவதுண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களிலெல்லாம் நாம் எம்மைக் கட்டுப் படுத்தி, சினத்தை மட்டுப்படுத்தி எமது பேச்சால், செய்கையால் அடுத்தவர் மனதைப் புண்படுத்தாது வாழப் பழகிக் கொண்டால் மட்டுமே மனித வாழ்க்கை, விருத்தெரிந்த நாள் முதல் இறப்புவரையான குறுகிய எமது வாழ்க்கை வட்டம் அர்த்தமுள்ள தொன்றாக அமையும்.

கோபப்பட வேண்டிய இடத்தில் கோபமடையாமலும், கடும் வார்த்தைப் பிரயோகம் மேற்கொள்ள வேண்டிய, எதிர்த்து வாதிட வேண்டிய, வேளையில் வாய் மூடி மௌனம் காத்தாலும் எம்மை உணர்ச்சியற்ற மரக்கட்டை என்று மற்றையோர் எடைபோட்டு விடுவார்களே என்கிறீர்களா? பரவாயில்லை. வேண்டுமானால் அப்படியே எடை போட்டுக் கொள்ளட்டும்; விமர்சித்துக் கொள்ளட்டும்.

நீங்கள் மனிதத்துவத்துக்கு மதிப்பளிக்கும் ஒருவர் என்பதை உங்கள் மனது நம்பினால் அதுவே உங்கள் வாழ்க்கையில் நீங்கள் ஈட்டிய வெற்றியாகக் கொள்ளத்தக்கது.

# "சின்னமாமி எனக்கே சொந்தம்"

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாத்தி பாடினதெண்டு சொல்லுறார்.

உண்மையில நித்தியாலதான் இந்தப் பாட்டு இவ்வளவு பிரபல்யம் அடைஞ்சுது. அதை நான் மறுக்கேல்ல. ஆனா நான் எழுதின பாட்டை இப்பிடி, தூசண வார்த்தைகளால் எழுதப்பட்ட பாட்டெண்டு சொல்லுறதும், நான் எழுதினதை மறைக்க நினைக்கிறது தான் தாங்கேலாமல் இருக்கு.

என்ர பிள்ளையை ஆரோ சொந்தம் கொண்டாடினா எப்பிடி இருக்கும்? அது மாதிரி தான் இதுவும். சின்ன மாமி பாட்டு நான் எழுதினது தான் எண்டது எழுத்தாளர் முருக பூபதி, இசையமைப்பாளர் கண்ணன், அந்தப் பாட்டை சென்.ஜோன்ஸில படிச்ச பாலச்சந்திரன், அதை விட நீர் கொழும்பில இருக்கிற என்ர சிநேகிதர்கள் எல்லாருக்கும் தெரியும். உண்மைக் கலைஞனுக்கும், அவன்ர படைப்புக்கும் ஒரு நாளும் அழிவில்லை.'' என்றவர், தான் சின்ன மாமி பாட்டை எழுதியதற்கு ஆதாரமாக அதுபற்றிய தகவல்கள் வெளிவந்த பத்திரிகை நறுக்குகளையும், மூலப் பிரதியையும் எம்மிடம் காண்பித்தார்.

''இவ்வளவு நாளும் இந்தப் பாட்டுக்கு சொந்தம் கொண்டாடாமல் இப்ப ஏன் அதுக்கு உரிமை கோருகிறேன் எண்டு நீங்கள் நினைக்கலாம். ஆனால் உண்மை என்னவெண்டால் இது என்ர பாட்டுத்தான் எண்டு நிரூபிக்க நான் 74ஆம் ஆண்டில இருந்து போராடிக்கொண்டிருக்கிறன்.

ஒருக்கா சின்ன மாமி பாட்ட என்ர அனுமதி இல்லாமல் நித்தி எடுத்து பாடுறார் எண்ட கருத்துப் பட இன்னொரு பொப்பிசைப் பாட்டை எழுதி இசையமைச்சன். ஒரு பாட்டுப் போட்டியில இதைப் பாடப் போக, அதுக்குப் பொறுப்பா இருந்த இசையமைப்பாளர் கண்ணன் பாட்டை வாங்கிப் பார்த்தார். பிறகு இப்படி ஆக்களின்ர பெயரை நேரடியா தாக்கி பாட முடியாது' எண்டு சொன்னார். நான் பாடாமல் வந்திட்டன்.

கன காலத்துக்குப் பிறகு சி.ரவீந்திரன் எண்டவர் இந்தப் பாட்டை கமலநாதன் தான் எழுதினார் எண்டு ஒரு கட்டுரை எழுதினார். அதுக்குப் பிறகு நித்தி எனக்கு ரெலிபோன் எடுத்து "உங்களை நேர வந்து சந்திக்கிறன்'' எண்டு சொன்னார். ஆனால் இது வரைக்கும் அவர் வரவே இல்ல.'' சொல்லி முடித்துவிட்டு, கண்கள் கலங்க "சின்னமாமியே உன் சின்ன மகள் எங்கே?'' என்று 74 வயதிலும் கணீரென்று பாடத் தொடங்கினார் எம்.எஸ்.கமலநாதன்.

★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலாலாவுக்காக இரங்கிய ஐ.நா

■ ரம்யன்



"15 வயதே ஆன இச்சிறுமி நடத்தியுள்ள துணிச்சல்மிக்கப் போராட்டமானது உலகம் முழுவது முள்ள இலட்சக் கணக்கான மக்களின் இதயங்களைத் தொட்டிருக்கிறது.




ஊர்மெச்சவேண்டும், உலகம் புகழ வேண்டும், பட்டங்கள் கிடைக்க வேண்டும், பவிசான பதவிகளில் அமரவேண்டும் போன்ற எவை பற்றியும் அவள் அறிந்திருக்கவில்லை. அறிந்திருந் தாலும் அக்கறை கொண்டதில்லை. தன்னைப் போன்ற பெண்கள் அனைவரும் கல்வி பெற்று சிந்திக்கக் கூடியவர்களாய் சிறந்த பெண்களாய் வளரவேண்டும் என்றுதான் நினைத்தாள் அதற்காகவே பேசி வந்தாள்- துணிச்சலுடன் பாடுபட் டாள்.

அதற்காக அவளுக்குத் தலிபான்கள் தந்த பரிசு அவள் மீது நடத்திய துப்பாக்கிச் குண்டு தாக்குதல். தலையில் படுகாய முற்ற சிறுமி மலாலாயூசுப்சாய் இன்று லண்டன் மருத்துவ நிலையமொன்றில் சிகிச்சை பெற்று வருகிறாள். நிலைமை பரவாய் இல்லை. அவள் உடல்நிலை தேறி வருகிறாள் என்று செய்தி வந்துள்ளது.

பெண் பிள்ளைகள் கல்விபெற வேண் டும் என்பதற்காகவே மலாலா பாடுபட் டாள். ஒரு மாதகாலத்துக்கு முன் மலாலா தனது கிராமத்தில் பயணிகள் பஸ் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த போது சுடப் பட்டாள். தலிபான்களின் கொலை முயற்சி யிலிருந்து அவள் தப்பியிருப்பது பேரதிர்ஷ்டம் என்று கருதப்படுகின்றது.

இப்பெண்பிள்ளை பாகிஸ்தானில் பெண் கல்வியை வலியுறுத்தியமைக்காக வும், உயிர் ஆபத்தையும் பொருள்படுத் தாமல் போராடி வந்தமைக்காகவும் ஐ. நா. சபை செயலாளர் நாயகம் பான் கீ மூன் நவம்பர் 10 ஆம் திகதியை உலக மலாலா தினமாக அறிவித்தார். அத்தினம் உலகம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப் பட்ட போதிலும், பாகிஸ்தானில் உள்ள அவளது சொந்தவூரிலுள்ள சிறுமிகளால்- பள்ளித்தோழியர்களால் கொண்டாடப்பட முடியவில்லை. காரணம் தலிபான்களின் அச்சுறுத்தல். பாகிஸ்தானில் வடமேல் ஸ்வாட்சமவெளிப்பகுதியிலுள்ள மிங்கோரா என்பது மலாலாவின் சொந்த ஊராகும்.

பாடசாலைக்குச் செல்லவேண்டியது சிறுமிகளின் அடிப்படை உரிமை என்பது அவளது உறுதிமொழியாக இருந்தது.

15 வயதே ஆன இச்சிறுமி நடத்தியுள்ள துணிச்சல்மிக்கப் போராட்டமானது உலகம் முழுவதுமுள்ள இலட்சக்கணக்கான மக்களின் இதயங்களைத் தொட்டிருக்கிறது.

உலகம்முழுவதும் பாடசாலைகளுக்கு செல்லாதிருக்கும் 3 கோடி 20 லட்சம் சிறுமிகளும் கல்விகற்பதற்கு இடமளிக் கப்பட வேண்டும் என்ற கோஷம் கடந்த சனிக்கிழமை உலக நாடுகள் பலவற் றிலும் எதிரொலித்தது. மிங்கோராவில்- அவள் பிறந்த ஊரில் அவள் கல்வி கற்கும் குஷால் பொது பாடசாலையில் மாணவர் களால் இச்சிறுமிக்கு கௌரவம் அளித்து கொண்டாட்டம் நடத்த முடியவில்லை. தலிபான்கள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற பயத்தில் தனிப்பட்ட முறையில் அவ ளுக்காக மாணவர்கள் பிரார்த்தனைகள் நடத்தி மலாலா தினத்தை கொண்டாடி யிருக்கிறார்கள்.

அப்பாடசாலையின் அதிபர் மரியாம் காலிது கூறுகையில், எமது பாடசாலை யின் பொது வைபவமொன்றில் மலாலாவுக் காக நாங்கள் சிறப்புப் பிரார்த்தனைகளை நடத்தினோம் என்றார்.

எமது பாடசாலையும், மாணவர்களும் இன்னமும் அச்சுறுத்தலை எதிர்நோக்கி வருவதால் பகிரங்கமான நிகழ்ச்சி ஒன்றையும் ஏற்பாடு செய்யமுடியாமல் போய்விட்டது என்றார் அதிபர்.

மலாலாவைக் கொலை செய்யமுடி யாமல் போனாலும், தங்களை எதிர்க்கும் எந்த ஒரு பெண்ணையும் தாக்காமல் விடமாட் டோம் என்றுதாலிபான்கள் அறிவித்துள்ளனர்.

மலாலா தாக்கப்பட்ட போது, அவரு டன் இருந்து காயமடைந்துள்ள 16 வயது கயினாத் றியாஸும், 13 வயது ஷாஸியா றம்சானும் இன்னமும் அதிர்ச்சியிலிருந்து விடுபடவில்லையாம்.

"நான் அதிர்ந்து போயுள்ளேன். அந்த நிகழ்வை எண்ணும் போது கண்ணீர் பெருக்கெடுக்கிறது என்று கூறியுள்ளார். மலாலா எனக்குமுன்னால் இரத்தவெள்ளத் தில் கிடப்பதை நான் பார்த்தேன். என்று றம்சான் தெரிவித்துள்ளார். அவர் தோளில் காயமுற்று ஒரு மாதமளவில் சிகிச்சை பெற்று திரும்பியுள்ளார். இருந்தாலும் அந்த சம்பவமானது தான் தொடர்ந்து பாடசாலைக்கு போகவேண்டும் என்ற உந்துதலைக் கொடுத்துள்ளது என்றார் அவர்.

மலாலாவைக் காயப்படுத்திய தலிபான் களை வேட்டையாடித் தண்டிப்போம் என்று ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமிட் கர்ஷாய் அறிவித்துள்ளார். தலிபான் ஆயுததாரிக ளுக்கு ஆயுதம் வழங்கி பயிற்சி கொடுத்த வர்கள் இஸ்லாமாபாத் அதிகாரிகள்தான் என்று குற்றஞ்சாட்டிய அவர், பயங்கரவாதம் ஒரு பாம்பைப்போன்றது. அதற்கு பாலூட்டி வளர்த்துவிட்டால் அடுத்த வீட்டுக்குள் மட்டும்தான் அது போகும் என்று எதிர்பார்க்க முடியாது என்றார்.

பெண் உரிமைக்காகப் போராடி உயிரை யும் கொடுக்கத்தயாராய் இருந்துள்ள இச்சிறுமிக்கு நொபெல் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று உலகம் முழுவதிலு மிருந்து கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

# காலக்கறையான்

உயிர் பள்ளங்களில் திறந்து கிடக்கும்
ஞாபகப் புத்தகத்தின் குருதிப்பக்கங்களை
எவ்வளவு விரைவாக தின்று
தீர்த்திருக்கிறது இந்த காலக்கறையான்

கைகாட்டி மரத்தின் ஆட்காட்டி விரல்
சுடுகாட்டின் திசையை சுட்டுவதை
அறிந்தும் அறிந்தும்
மனக்கூஜாவின் விளிம்புவரை
கானல் நீரையல்லவா நிரப்பி
பயணப்பட்டிருக்கிறோம்.

ஓ... வென்று அலறி அழும்
காற்றின் ஒவ்வொரு கூறுகளிலும்
தோல்வியின் விம்பங்கள்
துகிலுரிந்து ஊசலாடியதை
தெரிந்தும் தெரிந்தும்
சகுனியின் வார்த்தைக்கு
சத்தியமென்று பெயர் வைத்தோம்.

அந்த அக்னி புத்திரர்கள்
தீயின் நாக்குகளால்
ஊஞ்சல் கட்டி ஆடினார்களாம்
மழையின் விழுதுகளால்
மாயமான்களைக் கட்டி
மாரீசர்களுக்கே பரிசளித்தார்களாம்
முடிவில் மரணம் கொன்ற
உயிர்களின் சுமையை தாங்க முடியாமல்
தாமும் மரணத்திடம் மண்டியிட்டார்கள்.

இந்தக் கடற்கரைக்காற்றும்
அநாதரவாய் வீசுகிறது
தேவதூதர்களின் எச்சிலில் நனைந்த
மணல்வெளி தனித்து விடப்பட்டிருக்கிறது
அருவுருவங்களின் நிழல் விழுந்தும்
அசரீரிகளின் ஒலி நிறைந்தும்
காண்டாவனமாயிற்று ஒரு கடல்மடி.

தேவதைகள் எறிந்துவிட்டுப்போன
புன்னகை விதைகளில் முளைத்த
கள்ளிச் செடிகளுக்கும்
எருக்கலம் பூக்களுக்கும்
காலனின் கைத்தடிகள்
நீரூற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் எங்களது
குயில்களின் குரல் நரம்பறுத்து
வெற்றிக்கான இசை மீட்டுகிறார்கள்
மஞ்ஞைகளின் கால்களைக் களவாடி
களிநடனம் புரிகின்றார்கள்
உதிரம் ஒழுக ஒழுக
தோகைகளைப் பிடுங்கி
சாவகாசமாய் சாமரை வீசுகிறார்கள்
பசுக்களின் பால்மடியறுத்து
ஜய முழவு ஆர்க்கப்படுகிறது
காளைக் கன்றுகளை விரையடித்து
கொல்களங்களுக்கு விரட்டிப் போகையில்
உயிர் அழுத ஓலத்தை
மனக்காதுகளால் மட்டுமே கேட்க முடிந்தது.

[illegible]
அநாதைக் குழந்தையாக




வருகிறது தேய்கிறது போகிறது
தன்னைக் கைபிடித்து அழைத்துப்போகும்
காந்தர்வ புருஷனுக்காக
யுகம் யுகமாய் காத்திருக்கப்போகிறது
இந்த பேதமைக் கடற்காற்று.

இப்படியாக எங்களின்
உயிர் பள்ளங்களில் திறந்து கிடக்கும்
ஞாபகப் புத்தகத்தின் குருதிப்பக்கங்களை
எவ்வளவு விரைவாக தின்று
தீர்த்திருக்கிறது இந்த காலக்கறையான்.

வேல்.லவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுதபிள்ளையே பால் குடிக்கும்

Dr.சிவசங்கர்

''தன்னைத் தன்னால் உயர்த்திக் கொள்க. ஏனெனில் தானே தனக்கு நண்பனும், பகைவனும் ஆவான்''
*(பகவத் கீதையின் கூற்று)*

தன்கையே தனக்குதவி, அழுதும் பிள்ளையை அவளே பெற வேண்டும், இவை கூறி நிற்கும் செய்தி என்ன? எமக்கான நன்மைகளை வளர்ச்சிகளை நாம் முனைந்தால் பெற்றுக் கொள்ளலாம், ஏனையோரால் எமக்கு உதவிட முடியாது என்பதே உண்மை. நாம் எமக்கான வாழ்வியல் சூழ்நிலைகளை உருவாக்க முனைகின்றோமோ, அல்லது மற்றவர்கள் எமக்காக செயற்படுவார்கள், செயற்பட வேண்டும் என்று எதிர்பார்த்து காத்திருக்கின்றோமோ நாம் செயற்படாமல் நமக்கானது எதுவும் நிகழ்ந்து விடப்போவதில்லை.

1.பெரும்பான்மை இனத்தவர் தமக்கு கெடுதலாக அமையலாம் எனக் கருதுகின்ற எமது உரிமைகளை தாமே மனமுவந்து தந்து விடப் போவதில்லை.

2.தத்தமது வாழ்வுக்கும், பாதுகாப்புக்கும் போராடிக் கொண்டிருக்கும் சர்வதேச நாடுகளுக்குப் பயந்து எமக்கு தரமறுக்கும் எமது உரிமைகளைப் பெற்றுதர அவர்களால் இயலப்போவதில்லை.

3.இலங்கை வாழ் தமிழர்களின் வாழ்வுக்கான சூழ்நிலைகளைப் புலம்பெயர்ந்த தமிழர்களோ தமிழ் நாட்டு தமிழர்களோ பெற்றுத் தருவது என்பதும் சாத்தியமானதல்ல எனவே அழுத பிள்ளை பால் குடிக்கும்.

பாதுகாப்பின்மை உணர்வினால் ஏற்பட்ட பயந்த நிலையே அவர்களின் சிந்தனைச் செயற்பாடுகளைத் தீர்மானிக்கிறது. தம்மை வலுப்படுத்தலும், ஏனைய அனைத்து சுதேச இனங்களை பலவீனப்படுத்துதலுமே அவர்களின் நிகழ்ச்சி நிரலாக இருக்கின்றது. யதார்த்தத்தில் இதைவிட வேறுவகை அணுகுமுறையை எதிர்பார்க்க முடியாது. எதிர்பார்ப்பது எமது மதியீனமே.

பண்டாரநாயக்கா, டட்லிசேனநாயக்கா, பீற்றர் கெனமன், கொல்வின் ஆர்டி சில்வா போன்ற கனவான்களாலேயே எதுவும் முடியவில்லை.

இலங்கை மக்கள் போரின் உச்ச அழிவை சந்தித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் கூட, சந்திரிகா, ரணில் விக்கிரமசிங்கவினாலோ சூழ்நிலையை மாற்றியமைக்க முடியவில்லை.

போர்ச் சூழல் அற்ற அரசியல் பலமுள்ள நிலையாகிய கடந்த மூன்று வருட நகர்வுகளும் தமிழர்களின் நலனுக்குரியதாக அமையவில்லை. போருக்கு பயன்படுத்தப்பட்ட இராணுவ பலம், தற்போது தமிழ் தேசிய இனத்துக்குள் சிங்கள குடியேற்றமும், பௌத்த விஸ்தரிப்புக்கும் பயன்படுத்தப்படுகின்றது. போருக்கு பின்னரான அமைதி, சமாதானச்சூழல் என்று வெளியில் கூறிக் கொண்டு தமிழ் இனச் சிதைப்பினூடான அழிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து செயற்படுத்தப் படுகின்றன. இது சமாதான அமைதிக் காலம் அல்ல, மாறாக எதிர்ப்புகள் அற்ற நிலையில் 'இனஅழிப்பு' காலமென்பதை கண்டு தெளிந்து கொள்வோம்.

இச் சூழ்நிலையில் இலங்கை வாழ் தமிழர்களின் பிரதிபலிப்பு என்னவாக அமைய வேண்டும். புத்தி ஜீவிகளும், அறிஞர்களும் அதிகமுள்ள சமூகம் தனது வளத்தையும் தனது இருப்பையும் உறுதி செய்வதில் கவனம் செலுத்த வேண்டும் இதுவே அறிவுடைமை.

உலகநாடுகள் தத்தமது வாழ்வு சூழலை உறுதிசெய்யும் முயற்சிகளில் ஈடுபடும் தேவையில் உள்ளன. தமது வாழ்வுத் தேவையை விலக்கி வைக்கும் நாடுகள் எதுவும் இல்லை.

ஒரு கிராம அலகாக மாறிவிட்ட உலகில், ஒரு நாட்டில் நடக்கும் விடயம் ஏனைய நாடுகளின் நலன்களில் செல்வாக்கு செலுத்துகின்றது. எனவே தமது இருப்புக்கான தமது சுய நகர்வுகள் தத்தமது நாட்டுக்கு ஏற்படுத்தும் பாதிப்புக்களைத் தவிர்ப்பதனையே நாடுகள் கவனத்தில் கொண்டுள்ளன. எமது பிரச்சினையைத் துருப்புச் சீட்டாகப் பாவித்து இலங்கையைத் தமது நாட்டு நலனுக்கு சாதகமாக்கும் நடவடிக்கையே காணப்படுகின்றது. இலங்கையைத் தத்தமது நாட்டு நலனுக்கு சாதகமாக்குவதற்காக இலங்கையுடன் சேர்ந்து தமிழருக்கு எதிரான செயல்களிலும் பங்கெடுக்கும் யதார்த்தமே உள்ளது. நடந்து முடிந்த போரிலும், அதற்கு பின்னரான காலகட்டத்திலும் இத்தகைய அணுகுமுறையே நிகழ்ந்தது. ஐ.நா. அமர்வுகளிலும், சர்வதேச நாடுகளின் அணுகுமுறை இந்த வகையிலேயே அமையும்.

நிலைமை இவ்வாறு இருக்க ஐ.நா. அமர்வுகளை இறைவனின் நீதிமன்றமாக எண்ணி, பார்த்து காத்திருத்தல் எமது மதியீனமாகவோ, பொறுப்பற்ற சோம்பேறித் தனமாகவோ அமையும்.

எமது செயற்பாடு அணுகுமுறையால் சர்வதேச நாடுகள் எமக்கான எமது தீர்வை நோக்கி நகர்வதற்கான பொறிமுறை வகுக்கப்பட வேண்டும். வகுக்கப்படும் பொறிமுறை புலத்தில் மையப்பட்டே செயற்பட வேண்டும். அப்பொழுதே அதற்கு சக்தி இருக்கும். அண்மைக் காலங்களில் தீர்வுகளில் வெற்றி கண்ட இனங்களும், நாடுகளும் எமக்கு வழிகாட்டி உதவவும், பக்க பலமாக செயற்படவும் முன்[illegible] எமது தீர்வைச் சாதகமாக்கும் [illegible] நகர்வுகளுக்குத் தேவையான வியூகம் அமைக்கப்பட வேண்டும். சர்வதேச நாடுகளிடம் ஒப்பாரி வைத்து விட்டு, வெறுமனே எதிர்பார்த்து காத்திருத்தல் எமக்கு தேவையான நகர்வுகளை ஏற்படுத்தப் போவதில்லை.

புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழர்கள் எமக்கான மானசீக பலத்தையும், அதையும் தாண்டிய பங்களிப்பையும் நல்குபவர்கள். எனினும் இவர்களின் பங்களிப்பு எல்லை எதுவரை அமையக்கூடியது என்பதைக் கண்டு கொள்வது நன்மை பயக்கும். இவர்களின் பங்களிப்புக்கான சாத்திய பரிமாணங்களைக் கண்டு கொள்வோம். சர்வதேச வியூகங்கள், பொருளாதார பங்களிப்புக்கள் சாத்தியம். சர்வதேச அழுத்த செயற்பாடுகளிலும் புலம்பெயர்ந்த மக்களின் பங்களிப்புக்கள் அற்ற நிலை பயன்நிலையைப் பெரிதாக தந்துவிடப் போவதில்லை என்பதை கடந்த கால அனுபவங்கள் காட்டி நிற்கின்றன. புலம்பெயர்ந்த தமிழர் வாழும் நாடுகளிலே நடக்கும் செயற்பாடுகளிலும் இவர்களின் நேரடியான பங்களிப்பும்,பிரசன்னமும் நிகழவில்லை.

பல்வேறு சமூக மீள் கட்டுமானங்களின் தேவை அதிகரித்துள்ள இந்தக் காலத்தில் புலம்பெயர் சமூகத்தின் மீள் வருகை அவசியமாகின்றது.மீள் வருகைக்கான தேவையும், வாய்ப்பும் இருக்கின்றது. அவை ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் புலம்பெயர்ந்த சமூகத்தினரின் நடைமுறை அந்நியப்பட்ட நிலையில் செயற்பட்டதைப் போன்ற தவறுகள் மாற்றப்பட்டு ஒரு முக முன்நகர்வை ஏற்படுத்த தவறியமை புலம்பெயர் சமூகத்தின் நிலைப்பாடுகளால் ஏற்பட்டவைகளே. தீர்வை தீர்மானிக்கும் முக்கிய காரணியான இவர்கள் இவற்றைப் புரிந்து கொண்டு செயற்படுதல் அவசியமாகின்றது.

ஒரு சமூகத்தின் சுய அடையாளம் என்பது அதன் இருப்பை உறுதி செய்வதிலும், சமூகத்தின் தேவையையும், நலனையும் அடையாளம் கண்டு கொள்ளப்படுவதிலும் முக்கிய காரணியாக அமைகின்றது. சுய அடையாளம் இழக்கும் சமூகம் அழிவுப் பாதையில் சென்று விடும். சுய அடையாளம் என்பதில் கலாசாரம், சமயம் என்பவை ஆழ்ந்த அடிப்படைப் பங்களிப்பை செய்கின்றன. எனவே தான் ஒரு சமூகத்தைச் சிதைப்பதற்கு கலாசார, சமய மாற்றங்கள் நிகழ்த்தப்படுகின்றன. ஒவ்வொரு சமயமும் தனக்கான கலாசார பண்புகளைக் கொண்டிருக்கும். அவை சமய கலாசாரம் என்று கூறப்படும். பொதுவாக ஒரு சமயம் எந்தப் பிரதேசத்தில் வேரூன்றி வளர்ந்ததோ அந்தப் பிரதேசத்தின் கலாசாரமே அந்தச் சமயத்தின் கலாசாரமாகிவிடும். சாதாரண பெரும்பான்மையின அரசியல் வாதிகளால் பிரச்சினைக்கான தீர்வைக் கண்டு கொண்டு நடைமுறைப் படுத்த முடியாமை கடந்த காலங்களின் நிகழ்வாகும். சுயநலமற்ற ஆன்ம வீரம் பெற்றவர்களாலேயே நல்லிணக்கத்துடன் கூடிய தீர்வை நடைமுறைப்படுத்தும் திறன் அமையும். எனவே மதம் சார்ந்தோரின் ஒன்றிணைப்பு அல்லது புரிந்துணர்வு பரவலாக்கல் மூலம் நமக்குரிய தீர்வை நோக்கி நகர வேண்டும்.


எமது தீர்வை அரசியல் வாதிகளோ! அடுத்தவர்களோ! பெற்றுத்தர முடியாது. எமது செயற்பாடுகளாலேயே அதை அடையலாம் ஒவ்வொருவரினதும் பங்களிப்பும் அவசியமாகும்.

அப்பொழுதே தீர்வில் உண்மைத் தன்மை இருக்கும். தீர்வுப் பாதையில் நகர்வுகளை ஏற்படுத்துவதற்கு இது அவசியம். அத்துடன் மனிதர்களுக்கிடையேயுள்ள திறன்கள், வளங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒருமுகப்படுத்தப்பட வேண்டும்.

தீர்வானது அனைத்து சமூகங்களின் மீதும் பாதுகாப்புணர்வை ஏற்படுத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்தி அனைத்து சமூகங்களின் நலன் விருத்திக்கும் வாய்ப்பை வழங்குவதாக அமைய வேண்டும். பாதுகாப்பின்மை உணர்வின் வெளிப்பாடாக அமையும். குரோதவுணர்விலிருந்து வெளியே வருவதுடன் அன்புணர்வின் அடிப்படையில் யதார்த்தம் ஏற்றுக் கொள்ளப்படும் போதே இலங்கைத் தீவு அமைதியையும் சுபீட்சத்தையும் தனதாக்கி மகிழும். ★

மனிதன் பூமியில், சமூகத்தில் பிறந்து வளர்ந்து வாழ்கிறான். அதன் போது அவன் பல்வேறு நன்மைகளை பௌதிக, உயிர் சூழல்களிலிருந்து பெற்றுக் கொள்கிறான். வளர்ந்த நிலையிலும் தனது நாளாந்த வாழ்வுக்கு பலரின் உழைப்பின் பலனை நம்பியுள்ளான். தனக்கு தன்னாலான நன்மையை செய்வது அவனது கடமையாகும். மேலும் தனக்கு வாழ்வு தரும் சூழலுக்கு வழங்கப்படும் சூழலினால் அவனது வாழ்வும் பாதிக்கப்படும். ஆகவே, தான் சார்ந்த சூழலை ஒழுங்குபடுத்தும் தேவையும் அவனுக்கு உண்டு. அது அவனது வாழ்வியல் உரிமையாகும் யாராலும் எக்காலத்திலும் எவ்விடத்திலும் தடுக்க முடியாத நிலையாகும்.

எமது வாழ்வுச் சூழலை ஆரோக்கியமாக்குவதற்கான கடமையையும் உரிமையையும் செயலுருவாக்க முன்வருவோம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போரின் இறுதி நாள்களில் ஐக்கிய நாடுகள் சபை




■ சந்திரசேகர ஆஷாத்

இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதி நாள்களில் ஐக்கிய நாடுகள் சபை மக்களைப் பாதுகாப்பதில் தன் கடமையைச் செய்யத் தவறிவிட்டது. இதை நாம் ஒரு பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனைய நாடுகள் விடயத்திலும் இப்படியான தவறுகள் நிகழாமல் ஐ.நா. சபை தன் கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டும். இது ஐ.நா. பொதுச்செயலர் பான்கி மூன் இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதி நாள்களில் ஐ.நா. சபை தனது பொறுப்பை நிறைவேற்றத் தவறியமை தொடர்பாக சாள்ஸ் பற்றி அவர்களால் தயாரிக்கப்பட்ட உள்ளக அறிக்கை தொடர்பாக வெளியிட்ட கருத்தாகும்.

இந்த அறிக்கை வெளியிடப்பட்டதை அடுத்து ஐ.நா.வின் சிரேஷ்ட அதிகாரியான கோல்டன் வாய்ஸ் தாம் போர் இடம்பெற்ற பகுதியிலிருந்து வெளியேறிய சம்பவம் தொடர்பாக அவர் தன் வாழ்நாளிலேயே மிகக் கூடிய அவமானத்தை அடைந்த நாள் அது எனத் தெரிவித்துள்ளார்.

போர் இடம்பெற்று மூன்றரை வருடங்கள் கடந்த நிலையில் இப்படியான காரசாரமான கருத்துக்கள் வெளியாகியுள்ளன. காலம் கடந்துவிட்ட போதிலும் கூட பல உண்மைகள் அம்பலத்துக்கு வருவதும், இலங்கை அரசின் இன அழிப்புக் கொள்கை வெளிவருவதும் நல்ல விடயம்தான். அது 2008 ஆம் ஆண்டில் போர் மும்முரமாக நடந்த நாள்கள். நாச்சிக்குடாக் களமுனையில் விடுதலைப் புலிகளின் தடையரண்களை உடைத்துக் கொண்டு இராணுவம் முன்னேறிய நேரம் அது. கண்ணில் பட்டவர்களையெல்லாம் கொல்வது, கண்ணில் பட்டவை அனைத்தையும் அழிப்பது என்ற அடிப்படையில் மிலேச்சத்தனமான முறையில் விமானக் குண்டுகளும், எறிகணைகளும் பொழியப்படுகின்றன. மக்கள் உயிர் காக்க வேண்டி ஆயிரக் கணக்கில் இடம்பெயர்கின்றனர். கடும் உழைப்பின் மூலம் கட்டப்பட்ட வீடுகளும் சேர்க்கப்பட்ட சொத்துக்களும் அழிக்கப்படுகின்றன.

எங்கும் கந்தகப் புகையும் மரண ஓலங்களும் நிறைந்திருந்த சந்தர்ப்பத்தில் ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டக் காரியாலயத்துக்கு அண்மையில் விமானக் குண்டு வீசப்படுகிறது. கட்டடத்தில் ஒரு பகுதி சேதமடைகிறது.

இலங்கை அரசு ஐ.நா. சபையின் நிறுவனங்களுக்குப் பாதுகாப்பு வழங்க முடியாது எனத் திட்டவட்டமாக அறிவித்து விடுகிறது. அதை அடுத்து ஐக்கிய நாடுகள் நிறுவனம் கிளிநொச்சியை விட்டு வெளியேறுவதாக முடிவெடுக்கிறது. தமது சொந்த இடங்களை விட்டும் சொந்தத் தொழில்களை விட்டும் இடம்பெயர்ந்த மக்கள் ஐ.நா. உலக உணவுத் திட்ட நிறுவனம் வெளியேறினால் பெரும் பட்டினியை எதிர்நோக்க வேண்டிய நிலை. அதுமட்டுமன்றி ஐ.நா. நிறுவனங்கள் வெளியேறினால் எவ்வித சாட்சிகளுமற்ற நிலையில் இன அழிப்பு மேலும் மோசமடையும். அந்த நாள்களில் ஊடகங்கள் கூட வன்னிக்கு வர அனுமதிக்கப்படவில்லை.

இப்படியான ஒரு நெருக்கடியான சூழலில் மக்களைக் கைவிட்டுப் போக வேண்டிய நிலைமை ஏற்பட்டமையையே கோல்டன் வாய்ஸ் அவர்கள், தான் உச்சகட்ட அவமானத்தை உணர்ந்த நேரம் எனக் கூறுகிறார்.

ஐ.நா. சபை வெளியேறுவதால் ஏற்படப் போகும் ஆபத்தைத் தெரிந்துகொண்ட மக்கள் ஐ.நா.வை வெளியேற வேண்டாம் எனக் கோரி மறியல் போராட்டம் நடத்துகின்றனர். முதியோர், பெண்கள், சிறுவர், சிறுமியர் என ஏராளமான மக்கள் திரண்டு ஐ.நாவை வெளியேற வேண்டாம் எனக் கோருகின்றனர்.

மக்களின் கோரிக்கைகளும், குரல்களும், கண்ணீரும் எவ்வித பலனையும் கொடுக்கவில்லை. ஐ.நா. நிறுவனங்கள் கிளிநொச்சியை விட்டு வெளியேறுகின்றன. எமது மக்கள் பேரழிவுகளைச் சந்தித்த பின்பு, மூன்றரை வருடங்கள் கடந்த நிலையில் ஐ.நா. சபை தனது தவறை ஒப்புக் கொண்டுள்ளது. மேலும் இலங்கையில் போரின் இறுதி நாள்களில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு விரோதமான நடவடிக்கைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அதன் பொதுச் செயலரிடம் அறிக்கை சமர்ப்பித்து நீண்ட காலமாகியும் இன்னும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

போரால் ஏற்பட்ட உயிரிழப்புகளும், சொத்திழப்புகளும் திரும்பக் கிடைக்கப் போவதில்லை என்பது உண்மைதான். ஆனால் அவற்றுக்கான நியாயங்களைக் கோரும் உரிமை எமது மக்களுக்கு உண்டு என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. அதுமட்டுமன்றி தொடர்ந்து இன ஒடுக்குமுறையும் இன அழிப்பும் தமிழ் மக்கள் மேல் திணிக்கப்படுவதைத் தட்டிக் கேட்கும் கடப்பாடு ஐ.நா. சபைக்கு உண்டு.

ஐ.நா. சபையின் உள்ளக அறிக்கை தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஐ.நா. பொதுச் செயலர் பான் கி மூன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி இலங்கை வெளிவிவகார அமைச்சரை அண்மையில் சந்தித்தபோது பொதுச் செயலர் போரின் காரணங்கள் இனங் காணப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்ய இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். மேலும் ஐ.நாவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பாகத் தம்மிடம் வலுவாக ஆதாரங்கள் உண்டு எனத் தெரிவித்திருந்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் நகர்வுகள் மெல்ல மெல்ல நம்பிக்கைக்குரிய பாதையை நெருங்கிக் கொண்டிருக்கும்போது இலங்கை அரசின் நடவடிக்கைகள் நேரெதிர்த் திசையில் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கும் வகையில் மேற்கொள்ளப்படுவதை ஐ.நா. சபை கவனத்தில் எடுக்கத் தவறக் கூடாது. உள்நாட்டு விவகாரங்கள் என்ற போர்வையில் ஒரு பெரும் இன அழிப்பு அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்கத் தவறக் கூடாது. பொய்யான அறிக்கைகள் மூலம் இலங்கை அரசு சர்வதேசத்தையும் ஐ.நா. சபையையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறது என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் பங்கு கொண்டு திரும்பிய அமைச்சர் மஹிந்த சமரசிங்க இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகள் பற்றிப் பல உலக நாடுகள் பாராட்டியுள்ளதாகத் தெரிவித்தார். இலங்கை விவகாரங்கள் தொடர்பாகப் பரிச்சயமற்ற நாடுகள் இலங்கை அரசின் பொய்யான அறிக்கைகளின் அடிப்படையில்தானே கருத்துகளை வெளியிட முடியும்.

மேலும் தங்கள் சொந்த நாடுகளில் மனித உரிமை மீறல்களை மேற்கொண்டு வரும் சில நாடுகள் இலங்கைக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கி வருவதை உலகறியும். ஏற்கனவே நடந்து முடிந்துவிட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அக்கறை செலுத்தும் ஐ.நா. சபை தற்சமயம் இலங்கையில் இடம்பெறும் கொடிய மனித உரிமை மீறல்கள் தொடர்பான உண்மைகளையும் கண்டறிய வேண்டும் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாகும்.

போரின்போது சரணடைந்த போராளிகளில் 99 வீதமானவர்களைப் புனர்வாழ்வளித்து விடுவித்து விட்டதாக இலங்கை அரசு தம்பட்டமடிக்கிறது. ஆனால் இலங்கைப் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் பற்றி எவ்வித தகவலும் இல்லை. இன்னும் ஏராளமானோர் நீதிமன்றில் முன்னிறுத்தப்படாமலும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமலும் வாடுகின்றனர். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கியதாகக் கூறப்பட்டுக் கைது செய்யப்பட்ட பலர் எவ்வித குற்றமும் சுமத்தப்படாமல் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் இதுவரை வழக்குத் தொடுக்கப்படாமலே 15 வருடங்கள் சிறைவாசம் அனுபவிக்கிறார். இதுவரை இவர் 429 தடவைகள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார். 5 பேர் 10 வருடங்களுக்கு மேலும் 7 பேர் 5 வருடங்களுக்கு மேலும் சிறையில் வாடுகின்றனர். இப்படி ஏராளமானோர் எவ்வித மனிதாபிமானமுமின்றிக் கொடுமைப்படுத்தப்படுகின்றனர். தம்மை விடுவிக்கக் கோரி உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நடத்தும் கைதிகள் அடித்து நொருக்கப்படுகின்றனர். அப்படித் தாக்குதலுக்கு உள்ளான ஒருவர் கைதிகளைத் திட்டிய வசதி வழங்கப்படாமல் உயிரிழந்துள்ளார். இன்னொருவர் கோமா நிலைக்குள்ளாக்கப்பட்டு இறந்துள்ளார்.

அரசு 100 வீதம் மீளக்குடியேற்றத்தை முடித்துவிட்டதாகக் கூறி நிவாரண முகாம்களை மூடிவிட்டது. ஆனால் நிவாரண முகாம்களிலிருந்து அகற்றப்பட்ட பலர் காட்டுப்பகுதிகளில் விஷஜந்துகள், மிருகங்கள் என்பன மத்தியில் கொண்டு போய்விடப்பட்டுள்ளனர். அவர்களுக்கு குடிதண்ணீர் மலசல கூட வசதி கூட வழங்கப்படவில்லை. அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த காணிகள் இராணுவத்தால் அபகரிக்கப்பட்டு முகாம்கள் அமைக்கப்படுகின்றன. இன்னும் ஏராளமானோர் உறவினர் வீடுகளிலேயே தங்கியுள்ளனர்.

அதுமட்டுமன்றி புதிய இடங்களில் தங்கள் தொழில் வசதிகளையும் இழந்து தவிக்கின்றனர். மேலும் மக்களின் சொந்தக் காணிகள் பெறுமதிமிக்க வீடுகள் போன்றவற்றை படையினர் ஆக்கிரமித்துக் கொண்டு வெளியேற மறுக்கின்றனர்.

இந்த நிலையில்தான் இலங்கை அரசு புனர்வாழ்வு மீளக்குடியேற்றம், அபிவிருத்தி என்பன தொடர்பாக உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டு உலகை ஏமாற்றி வருகிறது. எனவே போரின் இறுதி நாள்களைப் போன்று ஐ.நா. சபை தூர விலகி நில்லாது நேரில் வந்து உண்மைகளைக் கண்டறிந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாகும். ★

> **போரால் ஏற்பட்ட உயிரிழப்புகளும், சொத்திழப்புகளும் திரும்பக் கிடைக்கப் போவதில்லை என்பது உண்மைதான். ஆனால் அவற்றுக்கான நியாயங்களைக் கோரும் உரிமை எமது மக்களுக்கு உண்டு என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிக்கடையின் பின்னணியில் யார்?

தில்லாலங்கடி

“ சிறைச்சாலையிலுள்ள மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் பெரும்பாலும் கொலை - கொள்ளை குற்றச்சாட்டில் ஈடுபட்டவர்களே. இவர்கள் பலர் அரசியல்வாதிகளின் அடியாள்களாவே இந்தக் கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டிருப்பர்.



வெலிக்கடைச் சிறைச்சாலையில் மோதல் இடம்பெற்று ஒரு வாரங்கள் அகலும் நிலையிலும் அங்கு இடம்பெற்ற சம்பவங்களால் ஏற்பட்ட சலசலப்பு இன்னமும் குறையவில்லை. நாட்டின் தலைநகரில் அமைந்துள்ள இந்தச் சிறைச்சாலையில் ஏற்பட்ட திடீர் கலவரம் தொடர்பாக இன்னமும் பதில் தெரியாக் கேள்விகள் உலாவிக் கொண்டேயிருக்கின்றன.

இந்த நிலையில் சிறைச்சாலையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பில் முழுமையான - உண்மையான தகவல்களை அரசு மறைத்து விட்டது. இதனால் இந்தச் சம்பவங்கள் அரசினுடைய ஏதோவொரு நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே நடத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

இலங்கையின் தலைநகரில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்திலேயே வெலிக்கடைச் சிறைச்சாலை அமைந்துள்ளது. இந்தச் சிறைச்சாலையில் பல்வேறுபட்ட கைதிகளும் சிறை வைக்கப்பட்டுள்ளனர். பாதாள உலகக் கோஷ்டி முதல் தமிழ் அரசியல் கைதிகள் வரை சுமார் 3 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான கைதிகள் உள்ளனர். இதில் பல்வேறுபட்ட கொலைகளைச் செய்த மரண தண்டனைக் கைதிகள், போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற கைதிகள் என்று அபாயகரமானவர்களும் ஒரே சிறைச்சாலையிலேயே தங்க வைக்கப்பட்டிருந்தனர். இதில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளும், போதைப் பொருளுடன் தொடர்புடைய குற்றங்களைப் புரிந்த கைதிகளும் சிறைச்சாலையினுள்ளே இருந்து தொடர்ச்சியாகத் தமது குற்றச் செயல்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

சிறைக்குள் கைத்தொலைபேசிகள் தாராளமாக இவர்களது கைகளில் உலாவருகின்றன. அத்துடன் இணைய வசதிகள் என்பனவும் அவர்களிடம் இருப்பதால் உள்ளிருந்தே அவர்கள் வெளியுலகத்தை இயக்குகின்றனர். அந்தளவுக்கு அவர்கள் பயங்கரமானவர்களாவே இருக்கின்றனர்.

இப்படிப்பட்டவர்கள் உள்ள சிறைக் கூடங்களை அரசு - சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சு சோதனை செய்ய வேண்டும் என்று எடுத்த முடிவே வில்லங்கமானது. சிறைக் காவலர்களின் துணையுடனேயே சிறைச்சாலைக்குள் கைத்தொலைபேசிகளும், போதைப் பொருள்களும் கொண்டு செல்லப்படுகின்றன. எனவே சிறைக் கைதிகள் தமது கூடாரங்களைச் சோதனை செய்வதற்குச் சிறைக்காவலர்களைத் தவிர வேறு யாரையும் அனுமதிக்க மாட்டார்கள் என்பது தெரிந்த விடயம். அப்படியிருக்கையில் ஏன் விசேட பொலிஸ் அதிரடிப்படையினரைச் சோதனை நடவடிக்கைகளுக்கு களமிறக்க வேண்டும்?

சிறைக் கைதிகள் சிறைக்காவலர்கள் சோதனை செய்வதற்கே அனுமதிக்கமாட்டாத நிலையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரைக் களமிறக்கினால் அவர்கள் கட்டாயம் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள் என்பது தெரிந்திருக்கும், பொலிஸாரைக் களமிறக்கியதன் மூலம் திட்டமிட்டே மோதலை உருவாக்கும் முயற்சியின் ஒரு வெளிப்பாடாக இருக்கலாம்.

சிறைச்சாலையிலுள்ள மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் பெரும்பாலும் கொலை - கொள்ளை குற்றச்சாட்டில் ஈடுபட்டவர்களே. இவர்கள் பலர் அரசியல்வாதிகளின் அடியாள்களாவே இந்தக் கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டிருப்பர். அதனால்தான் சிறையினுள்ளும் அவர்கள் சுகபோகங்கள் அனுபவிக்கும் அளவுக்கு வசதி - வாய்ப்புக்கள் இருந்தன.

கைதிகளுக்கும், விசேட அதிரடிப்படையினருக்கும் இடையிலான மோதல் தொடங்கியதும் கைதிகள் ஆயுதக் களஞ்சியத்திலிருந்து இலகுவாக ஆயுதங்களைக் கைப்பற்றி விட்டனர். பெரும் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய கைதிகளை வைத்திருக்கும் சிறைச்சாலை மற்றும் இலங்கையின் தலைநகரில் அமைந்திருக்கும் சிறைச்சாலையில் ஆயுதக் களஞ்சியம் பாதுகாப்பில்லாமல் வைக்கப்பட்டிருந்ததா?

ஆயுதங்களைக் கைதிகளால் எவ்வாறு இலகுவாக கைப்பற்ற முடிந்தது? கைதிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் அவர்கள் செயற்பட்டு ஆயுதக் களஞ்சியத்தைக் கைப்பற்றினார்களா அல்லது கலவரம் தோன்ற வேண்டும் என்பதற்காகப் பொலிஸார் கைதிகள் ஆயுதக் களஞ்சியத்தை கைப்பற்றும் வரையில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்களா? இவை இப்போது எழும் சந்தேகங்கள். இதனைவிட பல்வேறு பெரிய கொலைக் குற்றங்களினால் மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் உட்பட 11 பேர் முச்சக்கர வண்டியில் பிரதான வாயில் வழியாகத் தப்பிக்க முயன்றதாகவும் அவர்கள் அதிரடிப்படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் அதனாலலேயே அவர்களைப் படையினர் சுட்டுக் கொன்றதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாருக்கு டிமிக்கி கொடுத்துப் பலகாலம் தண்ணி காட்டும் கைதிகளுக்கு இந்தக் கலவரத்தில் எப்படி தப்பித்துப் போகலாம் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிந்திருக்கும். பிரதான வாயிலூடாகச் சென்றால் சிறையை முற்றுகையிட்டுள்ள அதிரடிப் படையினர் தாக்குவார்கள் என்று தெரிந்திருந்தும் அவர்கள் பிரதான வாயிலூடாகச் செல்ல முடிவு எடுத்தமைக்கு பின்னால், அரசியல்வாதிகளின் கழுத்தறுக்கும் திட்டங்கள் இருந்திருக்க வேண்டும். [illegible] தொடர்ச்சியாக [illegible] பாதுகாக்கும் அரசியல்வாதிகளுக்கு அவர்கள் ஒழிந்தால் தாம் செய்த குட்டுகளும் வெளியில் வராது. அத்துடன் அவர்களுக்காக மாதாந்தம் லட்சக் கணக்கில் செலவு செய்ய வேண்டியதில்லை. எனவே அவர்களை எப்படியாவது இந்தக் கலவரத்தைப் பயன்படுத்தி போட்டுத் தள்ள முடிவு செய்திருக்க வேண்டும்.

அந்த அரசியல்வாதிகளே கைதிகளுக்கு, பிரதான வாயிலூடாகத் தப்பியோடுங்கள், அதிரடிப்படையினர் உங்களை ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்று நம்ப வைத்து அவர்களைப் போட்டுத் தள்ளியிருக்கலாம்.

எனவே அரசியல்வாதிகளே முக்கிய புள்ளிகளைத் தப்பவிடுவது போன்று போட்டுத் தள்ளியிருக்கலாம்.

இதில் 27 கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக அரசு உத்தியோகபூர்வமாக அறிவிக்கின்ற போதும் உண்மையில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 62 என்று தெரிவிக்கப்படுகின்றது. கொல்லப்பட்டவர்கள் அனைவரும் கைதிகள் என்றும் அதிரடிப்படையில் எவருமே கொல்லப்படவில்லை என்றும் அரசு தெரிவிக்கின்றது. ஆனால் அதிரடிப்படை மீது கைதிகள் மூர்கத்தனமான துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டதாலேயே அவர்களைப் பதிலுக்குச் சுட்டதாகத் தெரிவிக்கின்றது. கைதிகளின் மூர்க்கத்தனமான தாக்குதலில் அதிரடிப் படையினர் எவருமே கொல்லப்படவில்லை என்றால் கைதிகளை ஏன் இவ்வாறு மோசமாக சுட்டுக் கொல்ல வேண்டும் ?

மேலும் சிறைச்சாலைகள் ஆணையாளர் ஐந்து கைதிகள் வரையிலேயே தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கின்றார். ஆனால் 100 கைதிகள் வரையில் தப்பித்துள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏன் ஏனைய கைதிகள் தப்பிய விடயத்தை சிறைச்சாலைகள் ஆணையாளர் மறைக்க முற்படுகின்றார்? அவர்களை வைத்து அரச தரப்பினர் வேறு சதித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளனரா ?

இதனைவிட இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தியிருந்தால் இந்தக் கலவரத்தை தவிர்த்திருக்கலாம் என்று மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாயளர் ஈ.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார். இவ்வாறுதான் நல்லிணக் ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் அரசு நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றது. இதனால் மீண்டும் நாட்டில் மோதல் உருவாகலாம்.

இலங்கை அரசு வெலிக்கடைச் சம்பவத்தைப் பயன்படுத்தி தனக்கு லாபம் தேட முற்பட்டு கடைசியில் வில்லங்கத்தை விலை கொடுத்து வாங்கிய நிலையில் வந்து நிற்கின்றது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலி வரும்; கவனம் பாருங்கோ!

■ சுகந்தன்

அண்டைக்கு ஞாயிற்றுக் கிழமை லீவு நாள். நிம்மதியாக ரி.வியில் ஒரு படம் பார்ப்பமெண்டு ஒரு ஐடியா.

சரி என்ட பிறண்டுக்கு போன் எடுத்தன். "எட மச்சான் ஏதாவது சி.டி இருந்தா குடு. படம் பார்க்க நேரம் கிடைச்சிருக்குடா"

அவனும் கொண்டந்து தந்தான். ஏதோ 'துப்பாக்கி'யாம். விசய் நடிச்சவராம்.

எனக்கு உந்தத் துப்பாக்கீன்ட பேரக் கேட்டாலே வயித்தக் கலக்கும். போன கிழமை உந்த வெலிக்கடைச் சிறையில நடந்தது தெரியும் தானே.

'குரங்கின்ர கையில பூமாலை கிடைச்ச மாதிரி' எதையும் பிளான் பண்ணி பண்ணணும். சுடணும்னு நினைச்சா சுட்டுடணும். பேந்து யாரு? என்ன? நொன்ன எண்டெல்லாம் கேக்கப்படாது.

அதத்தான் சொல்றன் வெலிக்கடை கைதிகளிட்ட துப்பாக்கி மாட்டீட்டுதாம்.

உந்த மீடியாக்களில வந்த படங்களையும் பாத்தன், சும்மா வெற்றிக் களிப்பில நிக்கிறமாரி துப்பாக்கியோட போஸ் குடுத்திருக்கினம் வெலிக்கடை தாதாக்கள்.

என்ன ஆணழகன் போட்டியே நடத்துகினமாம்.

அட நான் என்னத்தச் சொல்ல வாரனென்டா. அண்டைக்கு மாலையில வெடிக்க ஆரம்பிச்சவையாம். விடிய விடிய வெடிச்சினமாம்.

பிறகு பாத்தா செத்தது முழுக்க கைதிகள் தானாம். நேம் லிஸ்டில போட்டிருந்தாங்கள். பாத்தன்.

உதான் சொல்லுறது எதயும் பிளான் பண்ணிப் பண்ணணும் எண்டு. எங்கட பொடியளப் பாத்தாவது பழகி இருக்கலாம். ம்...ம்...ம்....

உதால தானுங்கோ போன கிழமையில இருந்து துப்பாக்கி என்ட பேரக் கேட்டாலே எனக்கு மண்டேக்கால போயிடும்.

சரி! படம்தானே எண்டு பார்க்க வெளிக்கிட்டன். ரி.வியைப் போட்டன். அதுவேற வேலை செய்யல அட, அப்பதான் நினைவுக்கு வந்தது.

உந்தத் துலைவார், யாழ்ப்பாணத்துல இப்ப ஒவ்வொரு சனி, ஞாயிறும் கரண்ட நிப்பாட்டுறாங்களெண்டுறது.

பாழாப்போன கரண்டால கிடைச்ச பிறீட்ரைமும் போச்சு.

சரி, என்ன பண்ண. பக்கத்துத் தெருவில ஒரு வாசிகசாலை இருக்கு. உந்த பேப்பருகளில என்ன போட்டிருக்காங்களெண்டு பாக்கலாம் என்று கிளம்பினன்.

வாசல்ல ஒரு பழுத்த பழம், அட ஒரு வயதுபோன முதியவரச் சொன்னன்.

என்னட்ட கதை குடுத்தார்.. அட தம்பி! புதினங்கள் கேள்விப்பட்டியே.

உந்த ஐய்யன்னா, நாவன்னா இருக்கெல்லோ தம்பி அது தாண்டா. ஐக்கிய நாடுகள் சபை எண்டு ஒண்ட வச்சிருக்கிறாங்களே!

அவங்கட விளையாட்டைப் பாத்தியோடா. எங்கட விசயத்தில விளையாடி விட்டாங்களாமே!

சனமே அவங்களைத்தான் மலையா நம்பி இருந்திச்சு. உவளவு சனம் சாகட்டுமெண்டு பாத்துக் கொண்டு தானே இருந்திருக்கிறாங்கள்!

எனக்கென்னமோ உவங்களுக்கெல் லாம் எங்கட பொடியள் வந்து ஒரு காட்டுக் காட்டினாத்தான் சரி எண்டு தோணுது.

நீ பாரண்டா மோனே! வருவாங்கள். வெளிநாட்டில இருக்கிறாங்களாம். ஒரு நாளைக்கு வரத்தானே போறாங்கள்.

நான் என்னத்தப் பேச சைலண்டா வந்த வேலையை முடிச்சிட்டு கிளம்பிட்டன்.

ஐயான்ட நம்பிக்கையைப் பார்க்க உற்சாகமா இருந்தது. ஆனால் அவரின் அறியாமைக்கு என்ன காரணம் எண்டு சிந்திக்க வேண்டிய தேவை எனக்கு இருந்தது.

அதுதான் உந்த இந்தியாவில தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு தடையை மேலும் நீடிச்சிருக்காங்களாமே.

தடையை மேலும் மேலும் நீடிக்க வேண்டுமெண்டா புலியள் இருக்கிறாங்களெண்டு ஆதாரம் காட்ட வேணும்.

அப்படிக் காட்டாட்டி தடை செல்லுபடி அற்றதாகிவிடும். இந்த நிலையில புலிகளின் செயற்பாடுகள் நடக்கிறதாய் ஒரு மாயையைக் காட்டுறாங்க.

கடந்தவாரம்கூட ஒரு கதை வந்தது. அதுதானுங்கோ, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட வழக்கில கைது செய்யப்பட்டிருக்கிற முருகன் என்ட கைதியிட்ட, ஏதோ புலிகளின்ட ஆவணங்கள் மீட்டவையாம்.

அதில இலங்கையின்ட வரைபடங்களாம், உலகத்துண்ட வரை படங்களாம், போன்ல போட்டு பாட்டுக் கேப்பாங்களே! அந்த மெமறிக் காட்டாம், போதாக் குறைக்கு சி.டிக்குள்ள பிரபாகரனின் படங்களாம்.

அதக் கேட்ட உடனே ஏதோ! முருகனே ஜெயிலுக்க இருந்து ஒரு நீலமேப் ரெடி பண்ணுறார் போல என்ட மாதிரி தான் அவங்கண்ட கதையில சனம் யோசிக்கப்போகுது.

இதப்போலதான் கடந்த வாரத்துக்கு முதல் வாரம் வெளிநாட்டில் உள்ள புலம்பெயர் தமிழர் ஒருவரால இந்தியத் தீர்ப்பாயத்தில வழக்கு தொடரப்பட்டது.

அதுதான் உந்தப் புலித்தடைய இந்தியாவில நீக்குங்கோ, இல்லாத அமைப்பைத் தடை செய்வதன் நோக்கமென்ன எண்டு கேட்டு.

தீர்ப்பாயத்தின் தலைமை நீதிபதி ஜெயின் தலைமையில் விசாரணைக்கு வந்த இந்த வழக்கில சென்னையைச் சேர்ந்த இரண்டு பொலிஸார் ஆயராகி சாட்சி சொல்லிச்சினமாம்.

"நாங்கள் ஆயுதம் கடத்தின புலிகளைப் போன கிழமையும் கைது செய்தனாங்கள். நீங்கள் தடையை நீக்கிப் போடாதீங்கோ" எண்டு அவையள் கேட்டவையாம்.

இதேபோலத்தான் போன கிழமை முருகனிட்ட கைப்பற்றின ஆவணங்கள் என்ற செய்தியும் புலித் தடையை நீடிக்க இந்தியா தீட்டி அரங்கேற்றிய நாடகமா எண்டுதான் எண்ணத் தோணுது.

நாலு சுவருக்குள்ள அடைபட்டுக் கிடக்கிற ஒரு கைதிக்கு எப்படி இதுகள் கிடைக்கும்.

உந்தப் பொலிஸ்காரருகள் தானே சிறு கையூட்டுக்கள வாங்கீட்டு குடுத்திருப்பினம்.

உந்த இந்தி யாவுக்கு புலிகள் இருக்கிறாங்க எண்டு காட்டுறதுக்கு இப்பென்ன அவசரம். அதுதான் எனக்கொண்டும் புரியல. ஆனால் ஒண்டு, புலிகள் வந்தால் எல்லாச் சனத்துக்கும்சந்தோஷம்தான். பாப்பம்! ★



உந்த ஐயன்னா, நாவன்னா இருக்கெல்லோ தம்பி. ஐக்கிய நாடுகள் சபை எண்டு ஒண்ட வச்சிருக்கிறாங்களே! அவங்கட விளையாட்டைப் பாத்தியோடா. எங்கட விசயத்தில விளையாடி விட்டாங்களாமே!

# "யானே கள்வன்"

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது, பெரிய சட்டம்பி போல, இலங்கையை ஜெனிவாவில் இருந்தி எழுப்பும் இதே ஐ.நாதான் அப்போது அரசு வன்னியில் இருந்து "வெளிக்கிடச் சொன்னதும்" களிசானால் சிறுநீர் வழிந்தோடப் பயத்தோடு, கொழும்புக்குப் பறக்கச் சொன்னது தனது பணியாளர்களை.

"போர் நடக்கும் இடத்தில் இருந்து எங்களை போகச்சொல்ல என்ன காரணம்?" என்று இலங்கையின் சட்டைக் கொலரைப் பிடித்து, கொஞ்சம் 'உறுக்கி' ஐ.நா. கேட்டிருந்தால் இலங்கை வெலவெலத்துப் போயிருக்கும். போரின்போது தம்மைக் கண்காணிக்கச் சர்வதேசப் பிரதிநிதிகள் போர்ப் பூமியில் இருக்கிறார்கள் என்ற பயத்தில் தன்னால் நிகழ்த்தப்பட்ட மனிதப் பேரழிவுகளை ஓரளவுக்கு மட்டுப்படுத்தியிருக்கும்.

வெள்ளைக்கொடிப் படுகொலைகளில் இவ்வளவு குருதி பாய்ந்திராது. கும்பல் கும்பலாக நிர்வாணமாக்கப்பட்டு, கண்களும் கைகளும் கட்டப்பட்டு, இத்தனை பேர் ஈர நிலத்தில் வெடி வாங்கிச் செத்திருக்கமாட்டார்கள். மிகக் குறைந்தோருக்கே அந்தப் 'பேறு' கிடைத்திருக்கும். தம்மை ஐ.நா. கைவிட்டுப் போனாலும் மக்கள் கடைசியில் தம்மை மீட்க அவர்கள் வருவார்கள் என்று நம்பினர். "இந்த நரகத்திலிருந்து மீட்டுச்செல்ல ஐ.நாவின் கப்பல் முள்ளிவாய்க்காலுக்கு வரும்" என்று நம்பியபடியே ஷெல்லுக்கும் குண்டுக்கும் இரையாகி மூச்சிழந்து போனவர்கள் பலர்.

ஆனால் பூம்பூம் மாடுபோல இலங்கை சொல்வதெற்கெல்லாம் தலையாட்டி, மக்களை உதறிவிட்டு, சென்ற ஐ.நாவுக்கு மனச்சாட்சி இப்போது உறுத்தத் தொடங்கிவிட்டது.

யேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைவித்த பாவம், தன்னைச் சாரந்துவிடக்கூடாது என்பதற்காக கைகளைக் கழுவிக்கொண்டான் பிலாத்து மன்னன். அவனைப் போலவே, தனது பாவங்களையும் கழுவி, எப்போதும் கரங்கள் கறைபடாத ஒன்றுதான் என்று நிரூபிக்கப் பாடுபடுகிறது ஐ.நா.. தன்னை வன்னியில் செய்த ஊழ்வினை வந்து உறுத்தக்கூடாது என்பதற்காகவே, 'தருஸ்மன்', 'பெற்றிக்' என்று நிபுணர்கள் தலைமையில் குழுக்களை நியமித்து, அறிக்கைகளை வெளியிடுகிறது.

இந்த அறிக்கைகளில் பெரும் பகுதி, மையிடப்பட்ட பின்னும் எஞ்சிக்கிடக்கும் சொற்கள் "குற்றவாளி நீயே" என்று ஐ.நா. நோக்கியே தமது சுட்டு விரல்களைப் பலமாக நீட்டுகின்றன. வேறு வழியின்றி, கண்ணகி முன் தலைகுனிந்த பாண்டிய மன்னனைப்போல, பான் கீ மூனும் "யானே கள்வன்" என்று உண்மையை முதன்முறையாக ஒத்துக்கொண்டிருக்கிறார்.

தவறை காலங்கடந்து உணர்ந்து கொள்வதால், முள்ளி வாய்க்காலில் மரித்துப் போனவர்களின் உயிர்களோ, சிதைந்துபோன ஆயிரம் ஆயிரம் குடும்பங்களின் ஆனந்த மயமான வாழ்வோ திரும்பப் போவதில்லை. ஆனாலும் ஐ.நாவும், போரின் பிரதான குற்றவாளிகளும் தமக்குரிய தண்டனைகளை அனுபவிப்பது இனிமேல், வேறொரு நாட்டில் இன்னொரு முள்ளிவாய்க்காலைத் தோற்றுவிக்காதிருக்க வழிவகுக்கும்.

ஈடிப்பஸ் மானமுள்ளவன். மாபாவி தானேதான் என்று தெரிந்ததும் கண்களைப் பிடுங்கி எறிந்து உயிர் விட்டான். பாண்டிய மன்னனும் அவனைப் போலத்தான். தவறு தன்னுடையதே என்று அறிந்த கணத்திலேயே ஆவி துறந்தான். ஐ.நாவுக்கு மானம் இருக்கிறதா இல்லையா என்பதனை இனி வரும் காலங்களே சொல்ல வேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிய உள்நாட்டுப்போர் எல்லை கடக்கும் அபாயம்

“ சிரியாவில் அதிபர் அசாத் அரசுக்கு எதிராக போராடி வரும் அமைப்புகள் யாவும் ஒன்றிணைந்து செயற்பட முடிவு செய்துள்ள அதே வேளை பிரான்ஸ் போன்ற வல்லரசு நாடுகளும் அவர்களை அங்கீகரிக்க முன் வந்துள்ளன.
சிரிய அதிபரை ரஷ்யா, சீனா மற்றும் சில நாடுகள் ஆதரிப்பதால் அவர் அசைந்து கொடுக்காமல் இருந்து வருகின்றார். என்றாலும் இப்போது தோன்றியுள்ள புதிய நிலைமையில் போர் இன்னும் தீவிரமடையலாம், அண்டை நாடுகளுக்கும் பரவலாம் என்ற அச்சம் தோன்றியுள்ளது.
★ புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சிரிய எதிர்தரப்பு கூட்டு முன்னணியை வளை குடாவிலுள்ள ஆறு நாடுகள் அங்கீகரிப்பதாக அறிவித்துள்ளன.

■ ரெங்கன்




உலக நடப்புகள் ஒரு பார்வை

சிரிய புரட்சியாளர்களும் அமைப்புகளும் தமக்கிடையில் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளார்கள். அதனால் அதிபர் பஷார் அல் அசாத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் தீவிரமடையக்கூடும் என்று கருதப்படுகின்றது. புரட்சிப் படைகளுக்கு ஆயுதங்கள் கிடைப்பதை உறுதி செய்வதிலும் அவர்கள் மும்முரம் காட்டுவதாகத் தெரிகிறது.

சிரியாவில் தோன்றியுள்ள போராட்டமானது இனி தீவிரமடைய வாய்ப்பு இருப்பதாகவும் உள்நாட்டு போர் நிலைமையில் திருப்பம் ஒன்று ஏற்படலாம் என்றும் கூட அவதானிகள் கூறுகிறார்கள்.

சிரியாவில் அதிபர் பஷார் அல் அசாத்தின் அரசுக்கு எதிராகப் போராடி வரும் அமைப்புக்கள் அண்மையில் கட்டாரில் சந்தித்து ஆலோசனை நடத்தினார்கள் அல்லவா? அந்தப் பேச்சுக்கள் வெற்றிகரமாக முடிந்திருப்பதாக இப்பொழுது செய்தி வந்திருக்கிறது. சிரியாவில் செயல்பட்டு வரும் எதிர் அமைப்புக்கள் அனைத்தும் இணைந்து கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதென்று கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

இந்தக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை அகமத் மோஆஸ் அல்-காதீப் என்ற சமயத்தலைவர் ஏற்று நடத்த வேண்டும் என்றும் கூட்டமைப்பினர் முடிவு செய்துள்ளனர்.

டமாஸ்கஸைச் சேர்ந்தவரான காதீப் ஒரு மிதவாதி என்று கருதப்படுகின்றது. சிரிய தேசிய சபை எடுத்த முடிவின் பிரகாரம் உருவாக்கப்பட்டுள்ள சிரியப் புரட்சி மற்றும் எதிர்தரப்பு தேசிய படைகளின் கூட்டமைப்புக்கு இவர் தலைமைவகிப்பார். எதிர்தரப்பினர் எல்லோரும் இணைந்து அசாத்தின் ஆட்சிக்கு எதிராக போராட வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தவரான றியாத் செயிப் மற்றும் பெண்கள் எதிர்தரப்பு முக்கிய பிரமுகர் சுகெயிர் அல்-அத்தாசி ஆகியவர்கள் இப்புதிய கூட்டமைப்பின் உபதலைவர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**ஒப்பந்தம் கைச்சாத்து**

கட்டார் பிரதம மந்திரி ஷெய்க் ஹமாட் பின் ஜாசெம் அல் - தானி தலைமையில் நடைபெற்ற வைபவரீதியான ஒரு நிகழ்வில் கூட்டமைப்புக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

சிரிய தேசிய சபையின் தலைவர் ஜோர்ஜ் சாப்ராவும் காதீப்பும் ஒப்பந்தத்தில் கையொழுத்திட்டனர்.

காதீப் அங்கு உரை நிகழ்த்தும் போது எமது மக்கள் திட்டமிட்ட வகையில் இனப்படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள். சர்வதேச சமூகம் எமக்கு அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்கவேண்டும் என்று கூறினார். அசாத்துக்காகப் போராடி வரும் படையினர் அனைவரும் எதிர்தரப்புக்கு வரவேண்டும் என்று கூறிய அவர் புரட்சிப்படைகள் பழிவாங்கலில் ஈடுபடலாகாது. மக்கள் எழுச்சியின் ஆரம்ப காலம் அமைதியாகவே இருந்தது. ஆயுதம் ஏந்தும்படி அரசாங்கமே அவர்களைத் தூண்டியது என்றார்.

ஜோர்ஜ் சாப்ரா தமது உரையில் புரட்சிப் படையினருக்கு றொட்டியும் தண்ணீரும் மட்டும் தான் தேவை என்றில்லை. எமக்கு ஆயுதங்கள் தேவை, அரசு ஏராளமான ஆயுதங்களை குவித்து வைத்துக் கொண்டிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் ஆயுதம் இல்லாமல் தவிக்கிறார்கள் என்று உணர்ச்சிகரமான ஓர் உரையை நிகழ்த்தினார். சிரியாவில் போராடும் எதிர்தரப்புகளுக்கிடையில் ஒருமைப்பாடு ஒன்று தோன்றியிருப்பதை அவர் வரவேற்றார்.

சிரிய புரட்சிவாதிகளுக்கிடையில் இப்படியான ஓர் ஒற்றுமை அவசியமே. அது தான் வெற்றியைக் கொண்டுவரும் என்றார் அவர்.

காதீப் முன்னர் சிரியத் தலைநகரிலுள்ள உமையாத் பள்ளி வாசலில் இமாமாக இருந்தவர். பின்னர் தொழுகைகளுக்குத் தலைமை வகிக்க வேண்டாம் என்று அரசினால் தடுக்கப்பட்டார். மக்கள் எழுச்சியை ஆதரித்தமைக்காக 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அவர் ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டிருந்தார். பின்னர் நாட்டை விட்டு வெளியேறினார்.

**எல்லை நாடுகளுக்கும் போர் பரவக்கூடும்.**

சிரியாவில் எதிர்தரப்புகள் ஒருங்கிணைந்து கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கி அதிபர் அசாத்தின் தாக்குதல்களை முறியடித்து முன்னேறத் திட்டமிட்டுக் கொண்டிருக்கும் அதேசமயம் சிரியாவின் எல்லையிலுள்ள நாடுகளும் இந்த சிக்கலில் மாட்டிக் கொள்ளக் கூடிய நிலைமை ஒன்று உருவாகி வருவதாக அஞ்சப்படுகின்றது.

லெபனான், துருக்கி மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகள் தம் எல்லைப் படைகளை உஷார் நிலையில் வைத்திருப்பதாகத் தெரிகிறது. அண்மையில் துருக்கியின் எல்லையில் சிரிய அரச படைகளின் ஏவுகணைகள் விழுந்து வெடித்ததனால் துருக்கிய படைகளும் எச்சரிக்கைக்காக திருப்பி குண்டுகளை சிரிய படைகளை நோக்கி வீசியிருந்தன.

**இஸ்ரேலும் தலையிடலாம்**

அதுமட்டுமன்றி சிரியாவில் உள்நாட்டு போர் தீவிரத்தன்மையை எட்டியிருப்பதால் அங்கிருந்து ஏராளமானமக்கள் பக்கத்திலுள்ள நாடுகளுக்கு எல்லைகளைக் கடந்து அகதிகளாக சென்றுகொண்டிருக்கிறார்கள். இந்த நாடுகளுடனான பிணக்கும் அசாத்துக்கு சிக்கலைக் கொடுக்கத் தொடங்கியுள்ளது. இதற்கிடையில் சிரிய படைகளின் ஏவுகணைக் குண்டுகள் இஸ்ரேல் எல்லைப் பகுதியில் தற்செயலாக விழுந்ததை அடுத்து இஸ்ரேல் சிரிய நிலைகள் மீது குண்டு வீசித் தாக்கியுள்ளது. 1973 ஆம் ஆண்டு மத்திய கிழக்கு போருக்குப் பின்னர் கோலான் முனைக்கு அப்பால் சிரிய துருப்புகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியிருப்பது இதுமுதல் தடவையாகும். 40 வருட காலமாக இவ்வாறான ஒரு தாக்குதலை இஸ்ரேல் நடத்தாமல் இருந்து வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சிரியபடைகள் மேற்கொண்டும் இஸ்ரேல் நிலைகள் மீது குண்டுவீசுமானால் இஸ்ரேல் மீண்டும் எதிர் நடவடிக்கையில் இறங்கும் என்பதையே இது காட்டுகின்றது. 1967 ஆம் [illegible] போரில் கோலான் மலைப் பகுதியில் மிக முக்கிய கேந்திரப் பகுதியை இஸ்ரேல் கைப்பற்றி வைத்துக்கொண்டுள்ளது.

இப்பொழுது சிரியாவிலிருந்து ஏழு தடவைகள் இஸ்ரேல் பகுதியில் குண்டுகள் விழுந்ததையடுத்தே தாம் திருப்பி நடவடிக்கை எடுக்க வேண்டி வந்ததாக இஸ்ரேல் அதிகாரிகள் கூறியுள்ளார்கள்.

இப்போது ஏற்பட்டுள்ள இந்த மோதல் தீவிரமடையுமானால் சிரியாவின் நட்புநாடான ஈரானும் தலையிடக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம். சிரியா மீது எவரும் தாக்குதல் நடத்தினால் தாம் பார்த்துக்கொண்டிருக்கப் போவதில்லை என்ற வகையில் ஈரானிய முக்கிய தலைவர்கள் அண்மையில் கூறியிருந்தமை நினைவு கொள்ளத்தக்கது.

ஈரானின் அணு உலைகள் மீது இஸ்ரேலுக்கு ஒரு கண் உண்டு. அவைகள் மீது தாக்குதல் நடத்தும் இஸ்ரேலின் நோக்கத்தை அமெரிக்க அதிபர் ஒபாமாவே தடுத்து வருகிறார் என்பது பகிரங்கம். அதிபர் தேர்தலில் ஒபாமா மீண்டும் வெற்றிபெற்றமை இஸ்ரேலுக்கு சங்கடமாக இருக்கலாம். எனவே சிரியாவுக்கு உதவுவதற்கு ஈரான் தலையிடும் பட்சத்தில் இஸ்ரேல் அதனை சாட்டாக எடுத்துக்கொண்டு ஈரானின் அணு உலைகள் மீது தாக்குதல் நடத்தும் அபாயமுண்டு.

இஸ்ரேல் நாட்டை இந்த மண்ணில் இருந்தே ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற கொள்கையைக் கொண்ட ஈரான் சிரியாவின் சார்பில் போரில் இறங்கினால் அது மத்திய கிழக்கை மீண்டும் பெரும் குழப்பத்துக்குள்ளாக்கிவிடும். இதற்கிடையில் சிரியாவில் போரிடும் புரட்சிப் படைகளை அங்கீகரித்து அவர்களுக்கு ஆதரவளிக்க பிரான்சும் முடிவுசெய்துள்ளது.

இவை எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு ஐ.நா தொடர்ந்தும் அமைதிகாக்கப் போகின்றதா என்ற கேள்வி எழுகின்றது. எனவே பெரும் ஆபத்தான நிலைமை ஏற்படாத வகையில் ஐ.நா. இப்போது தீவிரமான ஒரு முயற்சியில் இறங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இல்லையெனில் ஐ.நாவினால் உலகுக்கு என்ன பயன் என்று உலகம் கேட்கும்நிலைஏற்படலாம்.

மிகப் பிந்திக் கிடைத்துள்ள செய்தியொன்றின்படி புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சிரிய எதிர்தரப்பு கூட்டணியை குடாக் கடல் பகுதியிலுள்ள ஆறு நாடுகள் அங்கீகரித்திருப்பது தெரிய வந்துள்ளது. சிரிய மக்களின் சட்டபூர்வமான பிரதிநிதித்துவ ஸ்தாபனம் இதுவென அந்த நாடுகள் அறிவித்துள்ளன. இருபது மாத கால உள்நாட்டுப் போரானது வளைகுடாவின் ஏனைய பகுதிகளுக்கும் அபாயத்தை உருவாக்கியுள்ளதாக அவதானிகள் அச்சம் தெரிவிக்கிறார்கள்.

இதேவேளை சிரிய எதிர் அணியில் நாட்டில் எஞ்சியுள்ள எதிர்ப்பு அமைப்புகளும் சேர்ந்துகொள்ள வேண்டும் என்று அரபுலீக் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை உருவாக்கப்பட்ட எதிரணி கூட்டமைப்பு அதி உயர் இராணுவ கட்டளை பீடம் ஒன்றை அமைத்து போர் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துவதென்றும், மக்கள் புரட்சியை திசைதிருப்பும் வகையில் ஆயுதங்கள் ஜிகாதிஸ் குழுக்களிடம் சென்றடைவதாக அமெரிக்கா கொண்டுள்ள கவலையைத் தீர்த்து வைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்தரப்பு கூட்டணியை முதன் முறையாக அங்கீகரித்துள்ள நாடுகள் பஹ்ரேன், குவைத், ஓமான், கட்டார், சவூதிஅரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## தவழும் குழந்தையின் ஆரோக்கியத்துக்கு புதிய மாப் ஆடை வடிவமைப்பு



லண்டனில் தவழும் குழந்தைகளின் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு ஆடை வடிவமைக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் செல்லும் இடத்தைச் சுற்றி எப்போதும் இந்த ஆடை மாப் போட்டு சுத்தமாக வைத்திருக்கும். இந்த புதிய மாப் உடைக்கு தற்போதே ஏகப்பட்ட கிராக்கி உள்ளதாக லண்டன் மாப் ஆடை வடிவமைப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த உடையைத் தவழும் குழந்தைகளின் கை மற்றும் கால்களில் அவர்கள் உடையின் மீது கட்டி விட்டால் போதும். அவர்கள் செல்லும் இடங்களில் மாப் போடுவது போல் சுத்தப்படுத்திவிடும். இதனால் குப்பைகள் அகற்றப்படும். தேவையற்ற பொருள்களை குழந்தைகள் வாயில் போட்டுக் கொள்ள முடியாது. இதனால் அவர்களது உடல்நிலை நோயால் பாதிக்கப்படாமல் ஆரோக்கியமாக இருக்கும் என்று மாப் ஆடை தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. விரைவில் சந்தைக்கு வரவுள்ள இந்த ஆடையை, வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்ப மாற்றம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MACKSONS PAINTS WORLDWIDE

**Multilac®**
PREMIUM PAINTS






**உணவு மற்றும் தங்குமிட வசதி இலவசம்**

**கப்பல் மற்றும் விமானப் பயணச்சீட்டு இலவசம்**

**4 நாள்கள், 3 இரவுகள் சவாரி**

**கைச்செலவுக்கு 250 சிங்கப்பூர் டொலர்**

## வெற்றிப்பெற நீங்கள் செய்யவேண்டியது

மல்டிலெக் பிரீமியம் இமல்ஷன், மல்டிலெக் வெதர்காட், மல்டிலெக் வோட்டர் புரூவிங் சீலர், மல்டிலெக் நொன் யெலொவிங் எனமல் பிரிலியன்ட் வைட் பெயின்ட் அல்லது அறிமுகப்படுத்தப்பட்ட புத்தம் புதிய மல்டிலெக் ப்ளேட்டினம் பெயின்ற் வகைகளில் 4 லீற்றர்களைக் கொள்வனவு செய்யுங்கள்.
விற்பனை முகவரிடம் இருந்து பெற்ற பரிசுக்கூப்பனை நிரப்பி, மேலுறைகளுடன், மல்டிலெக் பெயின்ற் கொள்வனவு செய்த பற்றுச் சீட்டையும் இணைத்து இன்றே அனுப்பி வையுங்கள்.

மல்டிலெக் உல்லாசப் பயணக் கப்பல் சவாரி, த.பெ. இல.2024, கொழும்பு.

**மல்டிலெக் உல்லாசப் பயணக் கப்பல் சவாரி போட்டிக் காலம் நவம்பர் 01, 2012 முதல் ஜனவரி 15, 2013 வரை இடம்பெறும். வாராந்தம் மூன்று வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.**




www.multilac.com
Hotline 0772 222555

லீற்றர் ரூபா 755/- முதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூர்த்தி டிஜிற்றல் சிற்பாலயம்


சிற்ப வேலைகளில் புதிய அத்தியாயம்

புகைப்படத்துறையில் முன்னோடிகளான நாங்கள் மற்றுமொரு கலைப்படைப்பாக

## இலங்கையில் முதன்முறையாக

## ROBO - X5

அதிநவீன டிஜிற்றல் இயந்திரத்தின் மூலம் கணினி வடிவமைப்பில் புத்தம்புதிய டிசைன்களில் உங்கள் இல்லங்களிற்கான கலைநயத்துடன் கூடிய கதவுகள், தளபாடங்கள் , பெயர்ப்பலகைகள் மற்றும் கேடயங்கள் போன்றனவற்றை மிகத் துல்லியமாக வடிவமைத்து மூன்று நாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.



62/20, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 1358





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடும் காணியும் விற்பனைக்கு

நல்லூர் முருகன் ஆலயத்துக்கு அண்மையில் பண்டாரக்குள ஒழுங்கையில் 3 ½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:0776016357
(25379)(5-7-6)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

SITZSUI இன (Dulux paint விளம்பரத்தில் வரும்) இரண்டு மாதத் தடுப்பூசி ஏற்றப்பட்ட நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
(25417)(5-6-7) தொடர்பு: 077 419 9903

## பணியாளர் தேவை

சம்பளம் 18000/=,25000,30000 ரூபா வரை எங்கள் தனியார் வியாபார நிலையத்திற்கு கிளீனர், பாதுகாப்பு உத்தியோகத்தர், சாரதிகள் உடனடியாகத் தேவை. 18 வயது தொடக்கம் 50 வயது வரை உணவு, தங்குமிடம் உண்டு.
(24317)(5-6-7) அநுராதபுரம்- 077 456 8264

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம்,4ஆம் குறுக்குத் தெருவில் சகல வசதிகளுடன் மாடி வீட்டின் கீழ் வீடு வாடகைக்கு உண்டு. அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு உகந்தது
(25375)(5-6-7) தொடர்பு: 072 944 9769

## வீடு வாடகைக்கு உண்டு

வைத்தீஸ்வரா சந்திக்கு அருகில் பெண்களுக்கான அறைகள், வீடு வாடகைக்கு உண்டு.
(25436)(5-6-7) தொடர்பு: 077 179 4567

## வீடு வாடகைக்கு உண்டு

1). பிரதான வீதி, மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகில்,2). யாழ்ப்பாணம் கோயில் வீதி (Temple Road) இல் சகல வசதிகளுடன் கூடிய வீடுகள் வாடகைக்கு உண்டு.
(25418)(5-6-7) தொடர்பு: 071 838 1119

## வாகன விற்பனை

வெள்ளைநிற ரொயாட்டா, முதல்பதிவு 1998, புல் ஏசி இல252 xxxx.DX சோற்மொடல் (1994) டொல்பின் தொடர்பு: 077 667 9617
வவுனியா
(24312)(5-6-7)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் இருபாலை வீதியில் ஆசிரியர் கலாசாலைக்கு அருகில் 2¾ பரப்பு காணி உடன் விற்பனைக் குண்டு.
தரகர் தேவையில்லை
தொடர்பு:021 320 9171, 077 527 3961
(25344)(5-6-7)

## காணி விற்பனைக்கு

கைதடி,நுணாவில் வைரவர் கோயிலுக்கு பின்பக்கம் கண்டி வீதிக்கு அண்மையில் குடியிருப்புக்கு ஏற்றதுமான 5 பரப்பு காணி உடன் விற்பனைக் குண்டு.
(25368)(5-6-7) தொடர்பு: 077 972 5779

## காணி விற்பனைக்கு

மீசாலை வடக்கு,சியாமளாமில் ஒழுங்கை யில் ஏ 9 வீதியிலிருந்து 150 மீற்றர் தூரத்தில் 25தென்னை மரங்கள் உள்ளதும் வீடு கட்டுவதற்கு ஏற்றதுமான 9 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.(½ பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.)
(25931)(5-6-7) தொடர்பு: 077 244 5706

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் (பிறவுண் றோட், ஆனைப் பந்தி,மனோகரா சந்திக்கும் பரு.வீதிக்கும் இடைப்பட்ட நாவலர்றோட், கந்தர்மடம், திருநெல்வேலி,நல்லூர்) சகல வதிகளும் கொண்ட மூன்று அறைகளுக்கு குறையாத தனிவீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு:077 925 1048
(23378)(5-6-7)

## காணி விற்பனைக்கு

அளவெட்டி, கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் அருகில் 5¾ பரப்புக் காணி பங்கு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
(25365)(5-6-7) தொடர்பு:077 973 2477

## மணமகள் தேவை

1975 அச்சுவினி,2இல் செவ்வாய் 27 பாவம் உள்ள கனடா மணமகனுக்கு சைவ போசனமுள்ள மணமகள் தேவை
(25357)(5-6-7) தொடர்பு:077 129 1544

## விலைக்கு வாங்கப்படும்

பழைய பத்திரிகைகள், காட்போட்மட்டைகள் என்பன விலைக்கு வாங்கப்படும்.
தொடர்பு:077 448 2964
(25349)(5-6-7)

## சேவை

சகல விதமான அலுமினிய பிற்றிங் வேலைகளும் செய்து கொடுக்கப்படும். வீட்டு அலுமாரி,குசினி அலுமாரிகள்,சோக்கேஸ் என்பன வந்து செய்து கொடுக்கப்படும்.
Temper Glass பிற்றிங்
தொடர்பு:077 448 2964
(25448)(5-6-7)

## காணி விற்பனைக்கு

நாவற்குழி கிழக்கில் பொது நோக்கு மண்டபத்துக்கு அருகில் 23¼பரப்பு காணி விற்பனைக் குண்டு. (தொழிற்சாலை கோழிப்பண்ணைக்கு உகந்த காணி) தொடர்பு:077 344 6035, 077 704 0290
(25454)(5-6-7)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி சந்தியில் இருந்து 150 யார் தூரத்தில் பலாலிப் பக்கமாக நிலப்பரப்பு 3 ½ இரண்டு வீடுகளும்விற்பனைக்கு உள்ளது. இது பிரதான வீதியில் அமைந்துள்ளது. மேலும் இவ்வாதனத்தில் பிரதான வீதியில் இருந்து ஒரு பக்கமாக ஒழுங்கையும் உண்டு.
தொடர்பு கொள்ளும் முகவரி
தம்பையா குணசிங்கம், ஈவினை
புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
புன்னாலைக்கட்டுவன்.
(25272)(5.6) தொடர்புகளுக்கு- 0777246892

## SANKEN CONSTRUCTION(PVT)LTD

உங்களுக்கு
தேவையான தரமான
கொங்கிறீற்களுக்கு
சங்கன் கொன்ஸ்
ரக்சனை நாடுங்கள்
விவரங்களுக்கு :
தவநிருபன்- 077 773 2863
நிரஞ்சன்- 077 534 9916
(25202)(5-6-7)

## கட்டடத் தொகுதி வாடகைக்கு

மன்னார், புகையிரத வீதியில் (ரெலிகொம் முன்) அமைந்துள்ள மகாதேவன் கட்டடத் தொகுதியின் முதலாம் மாடி கட்டடத்தொகுதி வாடகைக்கு விடப்படும். 2400 சதுர அடி கொண்டது. வங்கி மற்றும் நிறுவனங்களுக்கு உகந்தது.
உடன் தொடர்புகளுக்கு:
மகாதேவன்: 071 6118768,
023 222 2569.
(வி/4797)(5-6-7)

## விற்பனைக்கு

உபயோகத்தில் உள்ள 2 சோலர்கள் (40w)பற்றியுடன் (90Amb) விற்பனைக்குண்டு.
தொடர்பு:021 222 2537, 075 041 3579
(25456)(5-6-7)

# பதவி வெற்றிடம்

**பயிலுநர் விற்பனை பிரதிநிதி - யாழ்ப்பாணம்**

தேயிலையை சந்தைப்படுத்தலில் முத்திரைபதித்த பிரபல்யமடைந்த நிறுவனம். பயிலுநர் விற்பனை பிரதிநிதி பதவிக்கு சுறு சுறுப்புள்ள பாடசாலையில் இருந்து விலகியவர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பாக்கிறது

**தேவைப்படும் தகைமைகள்**

★ ஆங்கிலப் பாடத்தில் திறமைச்சித்தி உள்ளடங்கலாக க.பொ.த. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
★ 18-25 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். (திருமணமாகாதவர் விரும்பத்தக்கது)
★ மோட்டார் சைக்கிள் செலுத்தக்கூடிய சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
★ யாழ்ப்பாணம் அல்லது அதனை சுற்றியுள்ள பிரதேசங்களில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
★ சம்பளம்- பேசித் தீர்மானிக்கப்படும்.
★ ஆர்வம் உள்ள விண்ணப்பதாரிகள் தங்களுடைய சுயவிவரங்களை இரண்டு உறவினர் அல்லாத நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு hassansiddique@zaidtea.com எனும் E.mail லுக்கு அல்லது பின்வரும் முகவரிக்குத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

**Head of Marketing, Zaid Tea Co. (pvt) Ltd, 183, K.K.S Road, Jaffna.**

விண்ணப்பங்கள் யாவும் இம் மாதம் 24 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வி உத்தரகுமாரி துரைராசசிங்கம்

(B.A.Tamil Hons, Dip.in.,Education,M.E.D)
(நல்லூர் ஆனந்தா வித்தியாலயம், யாழ்ப்பாணம்)

அன்னை மடியில்
21.05.1964

அரக்கனின் அழிப்பில்
18.11.2010



பாரிலெமக்குத் தங்கையாகி
பண்புடைய ஆசிரியையாகி
உத்தம குணமுடைய
எங்கள் உறவுமாகி
பாதகரால் உயிரைத் துறந்து
பரிதவிக்க விட்டு விட்டு
போனதுவும் நீங்கள் எங்கே
எப்போ இப்பிறவியிலே
காண்போம் இனி
கண் இமைப்பதுபோல் இருந்தது
இரண்டாண்டுகள் ஓடி மறைந்து விட்டனவே.

குடும்பத்தினர்
49/4, கோதுல வீதி, கோண்டாவில் வடக்கு.

# UK இல் கல்வி

**Teesside University**

UK பல்கலைக்கழகங்களில் 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி ஆரம்பமாகும் பல்கலைக்கழகக் கல்விக்கு நேர்முகத் தேர்வும் உடன் அனுமதிகளும்.

**ஆண்டு தோறும் £ 1,500 பெறுமதியான சர்வதேச புலமைப்பரிசில்கள்**

## கற்கை நெறிகள்

**Accounting and Finance, Advanced Manufacturing Systems, Advanced Sports, Therapy and Rehabilitation Science, Physiotherapy, Animation and Games, Art and Design, Biotechnology, Nursing and Public Health, Civil Engineering, Computing Control and Electronics, Electronics and Communications, Business Administration (MBA), Forensic Science, Human Resources Management, Media and Journalisam, IT Management, Engineering Management, Law, Marketing, Mechanical Engineering, Networks and Communication, Networld Systems, Petroleun Technology, Project Management**

Dr. Dimitri Nicolaou ( உதவி பீடாதிபதி / விஞ்ஞானமும் பொறியியல் பாடசாலை) அவர்களும் Mr. Viraj Pendharkar (Country முகாமையாளர்) அவர்களும் கீழ்க் குறிப்பிடப்படும் திகதியில் கொழும்புக்கு வருகை தந்து தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொருவரையும் சந்தித்து உடன் அனுமதிகளும் வழங்கப்படும்.

*திகதி 28 நவம்பர் 2012 - நேரம் மாலை 4.00 மணி - 6.00 மணி*
இடம் - **Overseas Education Centre Office**

**Overseas Education Centre. Contact No : 077 3013060, 071 4345125**
**No. 102 A, Horton Place, Colombo . 07.**

# Ceylon Business Appliances Ltd.
# விநியோகஸ்தர்கள் தேவை

கொழும்பு, சிலோன் பிஸ்னெஸ்அப்லையன்ஸஸ் லிமிடெட் (Ceylon Business Appliances Ltd.) நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழு இன்று 18 ஆம் திகதி ஞாயிறு முதல் 21 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பிரதான நகரங்களான யாழ்நகர், சாவகச்சேரி, கொடிகாமம், பருத்தித்துறை, சுன்னாகம், பண்டத்தரிப்பு, ஊர்காவற்றுறை உட்பட யாழ் மாவட்டத்துக்கான விநியோகஸ்தர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளது. நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட ஸ்டேஷனரி வகைகள் (Stationery), பைல் (File), ஸ்டேப்ளர் (Stapler), பஞ்சர் (Puncher), பணப் பெட்டிகள் (Cash Box), நோட் புத்தகங்கள் (Note Books) ஆகியவை உட்பட பாடசாலைகள், காரியாலயங்களுக்குத் தேவையான ஸ்டேஷனரி வகைகளையும் விற்பனை செய்ய விநியோகஸ்தர்கள் தேவை. ஆர்வமும் வியாபாரப் பின்னணியும் கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு: 0777 038738**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org